562

ஸ்ரீ
கிருஷ்ணபகவான் துணை.

# பெரியயெழுத்து

# அபிமன்னன் சுந்தரிமாலை.

DIGITIZED



...த்தகிராப் படங்களுடன்

விலை அணா, 8.

...க்ட்ரிக்பிரஸ்ஸில் பதிப்பிக்கப்பெற்றது.
1924.

O-194,9849,A
N24
59069

ஸ்ரீ கிருஷ்ண சகாயம்.

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப் புலவரவர்க ளியற்றிய

25 OCT 1924

# அபிமன்னன் சுந்தரிமாலை.



## டி. கோபால் நாயகரது

சென்னை, கோல்டன் எலெக்ட்ரிக் பிரஸ்ஸில்,

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] **1924.** [அணா 8.

ஸ்ரீராமஜெயம்.

# அபிமன்னன் சுந்தரிமாலை.

## விநாயகர் தோத்திரம்.

2 OCT 1924

அத்திமுகத்தோனே ஆயன்மருமகனே
ஆரணியும்வேணி அரனார்திருமகனே
நீறணியுங்கங்கை நீள்சடையோன்புத்திரனே
வானவர்கள்பூசைசெய்யும் மதயானைக்கண்ணானே
ஆனைமுகத்தோனே ஐங்கரனே நான்சரணம்
ஓரானைக்கண்ணே உமையாள்திருமகனே
காரானைமாமுகனே கண்ணன்மருமகனே
மூவருக்குமுன்பிறந்த மூர்த்தியேமுன்னடவாய்
தேவருக்குத்தேவனே தெவிட்டாததெள்ளமுதே
அபிமன்னன்தன்கதையை அடைவாகயான்படிக்க
கவிமுன்னேவந்துதவும் கற்பகமேமுன்னடவாய்
சுந்தரிதன்கலியாணம் சொந்தமாய்ப்பாடுதற்கு
எந்தனுடநாவில் இருந்தருள்விநாயகரே
பாட்டினிசையறியப் பாலனுரைத்ததமிழ்
ஏட்டினிடமாக இருந்தருள்விக்கினரே
சிறுபெண்கள்வேண்ட தீம்பால்மிகப்படைப்பார்
மறுபெண்கள்வேண்ட மாங்கனிமிகப்படைப்பார்
மன்னவர்கள்வேண்டி மகாபூசைசெய்வார்கள்
இன்னமொருமுகமாய் இலங்கும்பெரியோனே
சொர்க்கமேபோவோர்க்குத் துணையாயுதவிசெய்வீர்
வர்க்கமேபலகாரம் வாங்கும்பெரியோனே
அப்பமெழுநூறும் அதிரசங்கள்தொண்ணூறும்
செப்பரியவெள்ளுருண்டை சேரநூறாயிரமாம்
உடைக்கநல்லதேங்காய்கள் ஒன்பதுநூறாயிரமாம்
படைக்கநல்லபச்சரிசி பதினாயிரங்கலமாம்
கூனோடேபாக்கும் குடத்தோடேசர்க்கரையும்

தேனோடேசெந்தினைமா தேவர்அமுதமுடன்
செங்கரும்புராஸ்தாளி சீனிபலாப்பழமும்
தேங்காய்கொழுக்கட்டை திரளானபாணக்கமும்
மாங்காய்விளாங்கனியும் மாதுளநற்கனியும்
ஓங்காரமாகவே ஒளிவானஐங்கரற்கு
பாங்காகநீர்சொரிந்து பத்தியுடனேங்கான்முன்
தீங்கில்லாசாம்பிராணி தீபதூபந்தான்கொடுத்து
அபிமன்னன்தன்கதையை அன்பாகயான்படிக்க
வந்தருளவேணுமையா மாயவனார்தன்மருகா
ஓரானைக்கண்ணே உமையாள்திருமகனே
காரானைக்கண்ணே கணபதியேமுன்னடவாய்

முருகர் தோத்திரம்.

சீரானமாமுகனே சிற்றடியேவேலவரே
மாயோன்மருமகனே வள்ளிமணவாளா
கந்தனேஎந்தனுட கவலையெல்லாந்தீர்த்தோனே
அபிமன்னன்தன்கதையை அறுமுகனேநான்பாட
புத்திகளை நீகொடுத்தால் புகழ்ச்சியாய்நான்படிப்பேன்

கதையின் வரலாறு.

பஞ்சவர்களைவரும் பாராளும்நாளையிலே
அஞ்சலுடன்பெருமாள் அவனியெல்லாமாளுகையில்
வஞ்சனைகள்செய்யும் மன்னன்திரியோதிரனும்
அஞ்சாதேமன்னவர்கள் அரசாளும்நாளையிலே
மாயன்பெருந்தேவி மங்கைஅலர்மேலும்
ஆணலழகன் அருச்சுனன்தேவியரும்
பெருமாளுடன்பிறந்த பெண்ணும்சுபத்திரையும்
துவாரகாபுரிதனிலே சூதகமாய்த்தானிருந்து
தலைமுழுகப்போக தாமிருவர்வருகையிலே
அந்தக்குளத்தருகே ஆலவிருட்சமுண்டு
விருட்சத்தருகாக விக்கினருந்தானிருக்க
மாடுகள்மடக்கிமாயன் மந்தையிலேவந்துநிற்க
சூட்சமாய்வார்த்தையொன்று சொன்னாள்சுபத்திரையும்
அண்ணனுடதேவியரை அவளைமிகவழைத்து
மதனியரே நாமிருவர் வந்தோந்தலைமுழுக
இந்தமுழுக்குடனே ஈஸ்பரனார்தன்செயலால்
அலர்மேலுமங்கையரே ஆண்பிறந்தாலுன்வயிற்றில்
உன்மகனுக்கென்மகளை உகந்துகொடுப்பேனன்



என்வயற்றிலாண்பிள்ளையும் உன்வயிற்றில்பெண்பிறந்தால்
என்மகனுக்குன்மகளை யீன்றிடவேணுமென்று
இப்படிக்குச்சம்மதியோ என்றாள்சுபத்திரையும்
அப்படியேசம்மதிதான் என்றார் அலர்மேலும்
நிட்சயமாய்ப்பேசி நிதானமிட்டாரந்நேரம்
சுபத்திரையும்லட்சுமியும் சொல்லிசபதமிட்டார்
இந்தசபதம் இனிதப்பிப்போகாது
சந்தோஷவார்த்தைக்கு சாட்சிவைக்கவேண்டுமென்றார்
இருவருஞ்சம்மதித்து இசைந்தார்கள்சாட்சிவைக்க
ஆலடிபிள்ளையாரே ஆனைமுகத்தோனே
இருவரும்நாங்க ளிசைந்துசொன்னவார்த்தைக்கு
சாட்சியாய் நீயிருந்து தற்காக்கவேணுமையா
ஐயனார்தன்னுடனே ஆலயம்சாட்சியென்றார்
ஆகாயவாணியரும் ஆட்டிடையா நீசாட்சி
ஐந்துபேர்சாட்சி அடைவாகவைத்தார்கள்
நாத்தியரும்நாத்தியரும் நலமாய்க்குளக்கரையில்
வார்த்தைகள்தான்பேசி வலக்கைகள்தான்போஉடு
ஆணையுஞ்சத்தியமு மதற்கேற்றபத்திரமும்
பூணிக்கையாகவேதான் பேசியவர்நிதானமிட்டார்
சம்மதம்பேசியங்கே சந்தோஷந்தானாகி
தலைமுழுகவேணுமென்று தான்வருவாரப்பொழுது
சுபத்திரையும்லட்சுமியும் சொகுசாய்தலைமுழுகி
விபூதிபூசியவர் வெண்ணீறுதானணிந்து
மாயனை அண்ணனை மனதிலேதானினைந்து
தோத்திரங்கள்பண்ணி நடந்தாள்சுபத்திரையும
தங்கையுபதேசந் தானறிந்தார்மாயவரும்
ஆயன்பெருமாளும் அப்படியேதானிருந்தார்
அப்படியேதான்போனார் ஆதிசிவன்பக்கலிலே
செப்பமுடன்போற்றிசெய்ய சிவனாரைத்தோத்தரித்து
என்-தங்கைசுபத்திரைக்குத் தானங்கொடுமென்றார்
மகாதேவர்தன்பாதம் வணங்கியேகேட்கலுற்றார்
அரனார்மிகநகைத்து ஆயன்முகம்நோக்கி
உம்முடையதங்கைக்கு சந்தானமில்லையென்றார்
மைந்தருமில்லையென்று மகாதேவர்தானுரைத்தார்
அப்போதுமாயவனார் அரனாரைப்போற்றிசெய்து
பதினாறுதன்வயது பாரினில்தாதானிருக்க

உகமையுடன்பாலனைத்தான் தருகவேவே ணுமையா
அதினளவுசக்கரத்தை அடைவாகவைக்கிறேனுன்
ஆண்பிள்ளையும்பெண்பிள்ளையும் அனுக்கிரகம்பண்ணு
மையா,என்றுசொல்லிசக்கரத்தைகொடுத்தார்பெருமாளும்
அடகுக்கடவாய் அபிமன்னன்தான்பிறக்க
அபிமன்னன்தேவியென்று அலர்மேலுதன்வயற்றில்
பெண்ணும்பிறக்க பெருமாள்வரங்கேட்டு
ஆதிசிவன்கையால் ஆனவரம்பெற்றுவந்தார்
இப்படியாயங்கே யிசைந்துவந்தநாளையிலே
துவாரகாபுரியைவிட்டு சுபத்திரையுமப்போது
ஆனைகுந்திபட்டணத்தே அந்நேரம்போய்ச்சேர்ந்தாள்
இந்தவிசேஷமெல்லாம் இளங்கொடியாள்சொன்னாளே
நல்லதென்று அருச்சுனரும் நாயகியுந்தானிருந்தார்
அதுவேகுளியாக அருச்சுனனுர்தேவியற்கு
சுபத்திரையாள்தன்வயிற்றில் சுவாமிகிருபையினுல்
கெற்பந்தரித்து கிளிமொழியாள்தன்வயற்றில்
அலர்மேலுமங்கையர்க்கு அப்போதரித்ததுகாண்
அர்ச்சுனர்தேவியர்க்கு ஐந்திரண்டுசென்றதுகாண்
பத்துமாதஞ்சென்றபின்பு பாலன்பிறந்தானே
அபிமன்னன்பிறந்தானே ஐந்துதிங்கள்முன்பாக
ஐவர்வனவாசம் போனுர்களப்பொழுது
வனவாசம்போனபின்பு வஞ்சிசுபத்திரைக்கு
பாண்டவர்கள்பூஷணங்கள் பண்டாரப்பெட்டியெல்லாம்
கணக்காகவப்போது களஞ்சியத்திற்போட்டார்கள்
பஞ்சவர்கள்நாடுவிட்டு வனவாசம்போனபின்பு
ஐந்தாம்மாதத்திலே அபிமன்னன்தன்னுடனே
அண்ணனுடமாளிகைக்கு வந்தாள்சுபத்திரையும்
வண்ணமுடனண்ணனிட மலர்ப்பாதந்தெண்டனிட்டு
மைத்துனன்மன்னனும் மலர்ப்பாதந்தெண்டனிட்டு
சாஷ்டாங்கதெண்டனிட சுவாமிஎடுத்தணைத்தார்
அபிமன்னராசாவே ஐயாவேவந்தீரோ
வந்தீரோவந்தீரோ மருமகனேவந்தீரோ
மருமகனைத்தான்வாழ்த்தி வரிசையுடமையெல்லாம்
பிரியமுடன்தான்பூட்டி பூரித்தார்மாயவரும்
அலர்மேலுமங்கை அரண்மனைக்குப்போமென்ருர்
சேலையழகியுஞ் சென்ருள்திருமனைக்கு



அண்ணனிடதேவியரே அலர்மேலுமங்கையரே
நன்றாயிருக்கிறீரோ நாயகியேஎன்றுசொல்லி
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
நாத்திருமுகம்நோக்கி நாயகியாள்லட்சுமியும்
பெற்றுபிழைத்தீரோ பொற்கொடியேநாயகமே
ஆண்பிள்ளைபெற்றீரோ ஆசையெல்லாந்தீர்ந்தீரோ
என்றுசொல்லிபேசி இருந்தாரேஇருவருமாய்
அபிமன்னராஜனுக்கு அனேகவுடமையெல்லாம்
சரசமுடனப்பொழுது தரித்தாளேலட்சுமியும்
இப்படியாய்தான்மகிழ்ந்து இருக்குமந்தநாளையிலே
அலமேலுமங்கையர்க்கு ஐயிரண்டுசென்றதுகாண்
பத்துமாதஞ்சென்று பைங்கிளிக்குப்போதாச்சு
சத்திக்கணபதியை சங்கரனைத்தோத்தரித்து
சாத்திரங்கள்யாவும் சகிரானலட்சணமும்
பார்த்துமகிழ்ந்திருக்க பஞ்சாங்கஞ்சொன்னார்கள்
தாதிகளுமூப்பிகளுந் தந்திரமாய்வந்துநிற்க
மருத்துவச்சிவண்ணாத்தி வந்துமகிழ்ந்துநிற்க
அரிவைசுபத்திரையும் அண்டையிலேவந்துநிற்க
இடுப்புழுதுகுதண்டு ஏகமாய்த்தான்பிடிக்க
பருவமாயெல்லோரும் பக்கத்தில்வந்துநிற்க
இப்படியாயங்கே இருக்குமந்தவேளையிலே
அலர்மேலுமங்கையரும் அரிவையைப்பெற்றாளே
பெற்றாளேபெண்ணை பெருமாள்பெருந்தேவி
அப்போசுத்தமுள்ளகன்னிச்சுபத்திரையுந்தான்மகிழ்ந்து
தொப்புள்கொடியறுக்க தோகைசுபத்திரையும்
கொடுத்தாளாமாயிரம்பொன் கொம்பனையாளப்பொழுது
வாய்த்துடைக்கஆயிரம்பொன் வைத்தாள்சுபத்திரையும்
பெண்ணைமுழுக்காட்டி பீதாம்பரப்பட்டுடுத்தி
அபிமன்னன்தேவியென்று அணிந்தாள்விபூதிதன்னை
ஆனையின்மேல்பேரிகை அடித்தாரேஅந்நேரம்
சுந்தரிக்கிம்பாலனுக்கும் சொன்னபடிவந்ததென்று
இந்திரரும்தேவரும் எங்குமறிந்தார்கள்
வந்தபிராமணர்க்கு மகாதானந்தான்கொடுத்தார்
வித்தைநெல்லுகோட்டைகளும் மெல்லியருந்தான்வழ[...]
கோதானம்பூதானம் கொடுத்தார்களனேகமெல்லாம்
[...]கர்புலவருக்கும் பரதேசிதாதருக்கும்

பட்டுபுடவைகளும் பாங்காகத்தான்கொடுத்தார்
பதினாறுநாளையிலே பைங்கொடிக்குதொட்டில்விட
நினைத்தாள்சுபத்திரையும் நிதானமிட்டாளன்னேரம்
பட்டணத்திலுண்டான பார்மன்னாவைவருக்கும்
வெற்றிலைபாக்கும் விரும்பியிடச்சொன்னாளே
அப்படியேதான்செய்தார் அன்னேரவேளையிலே
விருந்துசமையுமென்றாள் மேலானமங்கையரும்
பொருந்தும்பொரிக்கறியும் புத்துருக்குநெய்பாலும்
அறுபத்துநாலுவகை அதிரசமப்பளமும்
மாங்கனியும்தேங்கனியும் வாழைப்பலாக்கனியும்
சீனிமணற்பாகும் திராட்சபலாசர்க்கரையும்
சகலவகைநற்கறியும் சமைத்துவிருந்துமிட்டாள்
அறிவானசுந்தரிக்கு மாணிக்கத்தொட்டிலிட்டாள்
சுபத்திரையாளுடமைகளை சிங்காரித்தாள்சுந்தரிக்கு
மகாராசன்தேவியென்று மஞ்சநீராடிவைத்தாள்
அபிமன்னன்தேவியென்று அனைவருக்குஞ்சொன்னாளே
அபிமன்னன் சுந்தரியை பள்ளிக்கூடத்தில் வைத்தது.
வருஷமும்நாலாச்சு வயதுமேஐந்தாச்சு
உபாத்தியாயரைத்தானழைத்து வுகந்ததினம்பார்த்து
நல்லநாள்பார்த்து நல்முகூர்த்தந்தானுமிட்டார் [த்து
ஆடைசொர்ணம்வேணதெல்லாம் ஐயருக்குத்தான்கொடு
பள்ளிக்குவைத்தார்கள் பாலனையுஞ்சுந்தரியும்
ஓம்நமசிவாயாவென்று ஓதுநீமுன்னேஎன்று
அரிநமோத்துசிந்தம்என்று அன்பாயரியுமென்று
அய்யரும்சொல்லிசொல்லி அடவுடனேயானபின்பு
வடுகுதமிழ்கிரந்தம் மற்றுமுள்ளபாஷையெல்லாம்
தங்குதடையில்லாமல் சதிராகப்படித்தார்கள்
சுந்தரிக்குப்பாடமது சொல்லுவான்பாலனுமே
ட்டமெழுத்துநடை தப்பினால்தெண்டிப்பான்
ட்டகணக்குகளை வறப்புஎழுதிவிட்டால்
ட்டவழைத்துவந்து கிள்ளுவான்காதிரண்டும்
பூடுவதும்பாடுவதும் மமளியுடன்பேசுவதும்
ப்படிக்கெல்லா மெழுதிபடித்தபின்பு
ள்ளிக்கூடம்வந்து பாலனுஞ்சுந்தரியும்
சல்வச்சிலம்பங்கள் படிக்கவேசெய்தார்கள்
தால்வாருபோடுறதுந் துடைதட்டிப்பாயுறதும்

ஆனையைவிட்டுதான் ஆக்கரித்துகுத்துவதும்
தப்பாமல்கற்று சமர்த்தாகநின்றார்கள்
சிறப்பானபாஷைகளும் சகலவித்தையுள்ளதெல்லாம்
இருவருங்கற்று இருக்குமந்தவேளையிலே.

சுந்தரியும் அபிமன்னனும் கணையாழி மாற்றிக்கொண்டது.

மைவிழியாள்சுந்தரிதன் வலக்கையைத்தான்பிடித்து
கணையாழிமோதிரத்தைக் கழட்டியபிமன்னனுமே
பெண்சாதிகையிலிட்டு பேசியபிமன்னனுமே
மங்கையரேசுந்தரியே வரிசையிதுதாண்டி
அந்தமுள்ளசுந்தரியு மவள்கையின்மோதிரத்தை
இந்தாருமென்றுசொல்லி இட்டாளபிமன்னனுக்கு
இருவருஞ்சம்மதியாய் இருந்தார்களந்நேரம்
அப்படியாயங்கே அநேகநாள்சென்றபின்பு
வருஷமுமேழாச்சு வாளபிமனப்போது
அம்மாள்சுபத்திரையை அடிவணங்கித்தெண்டனிட்டு
ஆனைகுந்திபட்டணத்தே போவோம்வா அம்மாவே
சேனைநாளாச்சுது தந்தன் சித்தமிரங்காதோ
தாயாரைவாருமென்று தம்பியழைத்தானே
அப்படியேஆகுதென்று அண்ணனுடன்சொன்னானே
அண்ணனுடன்சொல்லி அனுப்பிவிடைபெற்றிடவே
பெண்பெருமாள்லட்சுமியும் போய்வாருமென்றாளே

சுந்தரிக்கு சுபத்திரை புத்திசொல்லுகிறது.

சுந்தரியைப்பார்த்து சுபத்திரையுமப்பொழுது
வாரியெடுத்து மருமகளைமுத்தமிட்டாள்
ஊருக்குப்போய்வாரேன் உகந்தமருமகளே
மைத்துனன்மேலாசை மறக்காதேவஞ்சியரே
ஆசைமருமகளே அபிமன்னன்தேவியரே
பாம்பின்மேற்பள்ளிகொள்ளும் பாளந்தோன்மகனே
அல்லவேபெண்மயிலே அன்னமேஆரணங்கே
இருவருங்கூடி இன்னாளிருந்தீர்கள்
ஆனைகுந்திபட்டணத்தே அமர்ந்திருக்கப்போய்வாரேன்
போய்வாரேனென்று புறப்பட்டாள்பூவையரும்
தோகைமிளமயிலாள் சுந்தரியாள்பாலனுமே
ஏகமாய்தான்பேசி எனக்கென்னபுத்தியென்றாள்
அந்தமுள்ளசுந்தரியை அணைத்துமுத்தந்தானுமிட்டு



போய்வாறேனென்றுசொல்லி பூவையற்குச்சொன்னனே
அந்தவிசேஷம் அதுகேட்டுசுந்தரியும்
சிந்தைகலங்கி சிவசிவாவென்றுசொல்லி
மைத்துனனைத்தான்பார்த்து மயங்கியழுதாளே
பாலனும்அப்பொழுது பார்த்துஅழுதானே
கண்டாள்சுபத்திரையும் கடுகெனவேஓடிவந்து
கண்ணைத்துடைத்து கனிவாயைமுத்தமிட்டு
தேறுதலையாக திட்டஞ்சொன்னாள்சுந்தரிக்கு
ஆதரவாய்ச்சொல்லி அனுப்பிவிடைபெறவே
மாமியார்காலில் மருமகளும்தெண்டனிட்டாள்
வாழ்த்திவிடைகொடுத்தாள் மாயனுடன்பிறந்தாள்

சுபத்திரையும் அபிமன்னனும் ஆனைகுந்தி
பட்டணம்போய்ச்சேர்ந்தது.

தாதிகளுமூப்பிகளும் தண்டிகைக்கொண்டுவந்தார்
பல்லக்கிலேறுமென்று பாங்கிமார்தெண்டனிட்டார்
உற்றாருறன்முறையோர் ஊரிலுள்ளமங்கையரும்
மெத்தமெத்தச்சொல்லி விடைகொடுத்தாரப்போது
ஏறினாள்பல்லக்கில் ஏலப்பசுங்கிளியும்
பாலனைத்தானெடுத்துப் பல்லக்கில்வைத்தார்கள்
கொட்டிமுழக்கினார்கள் கோடையிடிபோலே
வட்டமிட்டுக்கொட்டினார் வஞ்சியர்களெல்லோரும்
துரிதமுடனடந்தார் துவாரகாபுரியைவிட்டு
இஞ்சிவனங்கடந்தாள் எலுமிச்சையுட்புகுந்தாள்
மஞ்சள்வனங்கடந்து மாதுளையினுட்புகுந்தாள்
காடுகடந்து கரியமலைதான்கடந்து
பஞ்சவர்கள்நாட்டிலேதான் பைங்கிளியும்வந்தாளே
ஐந்துபேரரசாளும் ஆனைகுந்திபட்டணத்தை
வஞ்சிசுபத்திரை வந்தாளேமாளிகைக்கு
தம்பிஅபிமன்னனுக்குச் சலக்கங்கள்தான்முடித்து
பாலமிர்தமுண்டு பசிதீர்ந்தபிற்பாடு

அபிமன்னனுக்கு நூறுதோழன்மார்
அழைப்பித்து வைத்தது.

தானுமமழ்துகொண்டு சதிராயிருந்தாளே
பாலனுக்குதோழன்மார் பட்டணத்தில்தான்தேடி
பாலனைப்போல்நூறுபேர் பாங்கியழைத்துவந்தாள்

தோழன்மார்தங்களுக்கு சொன்னாள்சுபத்திரையும்
தம்பியைவிட்டுநீங்கள் தனியேபிரியாமல்
கவனமுடன்தம்பியைக் காத்திருங்கள் நீங்களுமே
அன்னமும்பாக்குமபி மன்னனுடன்கொள்ளுங்கள்
அவன்தரிக்கும்பூஷணங்கள் ஆடைபரிசைகத்தி
வகைவகையாய்ப்பிள்ளைகட்கு மாதாகொடுத்தாளே
தினம்தினம்தம்பியற்குச் சிலம்பங்கள்செய்யுங்கள்
இப்படியாய்ச்சொல்லி எடுத்துரைத்தாள்மாதாவும்
அப்படியேநல்லதென்று அமர்ந்தாரபிமன்னனுடன்
அபிமன்னருந்தோழருமாய் அமர்ந்திருந்தபிற்பாடு

## அஸ்தினாபுரத்தின் சிறப்பு.

---

அஸ்தினாபுரத்து அதிசயத்தைச்சொல்லுகிறேன்
துரியோதனப்பெருமாள் சிங்காதனச்சபையில்
பதியிழந்துகாடுறைந்தார் பாண்டவர்களென்றுசொல்லி
மதியையனுசரிக்கும் மன்னன்துரியோதனனும்
அஸ்தினாபுரிநகரில் அழகுமணிமண்டபத்தில்
புத்தியொருகோடி புகலரியமண்டபத்தில்
நிறைகோடிகால்நிறுத்தி நீலரத்தினமுந்தணிந்து
வகைவகையாய்வச்சிரங்கள் வாகாகத்தானமர்த்தி
கரையருகேதோரணங்கள் கவசவல்லிதொங்கலிட்டு
தூணுக்குத்தூணு தூண்டாவிளக்கெரிய
தூணுக்குத்தூணு துய்யமணிமண்டபத்தில்
ஆணிப்பவளமணி அணியணியாய்சோதிமின்ன
சங்கீன்றமுத்து சாதிமுத்துசோதிமின்ன
பாங்காகச்சோதிமின்ன பலதிசையுந்தான்தூக்கி
அல்லிமலர்முல்லைமலர் அழகுசிறுசண்பகமும்
மல்லிகைமுல்லை மலருமிருவாட்சிகளும்
கொத்தலரிகுங்குமமும் குளிர்ந்தசுகந்தமலர்
விஸ்தாரமான வெள்ளலரிப்பூவுகளும்
வெண்தாமரைமலரும் வேண்டியசெந்தாமரையும்
கண்காணப்பூச்சரங் கனகரத்னமண்டபத்தில்
பூச்சரங்கொண்டு புதிதாயலங்கரித்து
ஆச்சரியமாக அலங்காரப்பூச்சரங்கள்
வெள்ளித்தூணிடையிடையே விஸ்தாரமாய்நிறுத்தி

சிங்கமும்யாளியும் சிறக்கவணிசேர்த்து
சிங்கத்தின்பேரில் சிறக்கவே தூணிறுத்தி
ஆளியின்பேரில் அழகாகத் தூணிறுத்தி
நாலுகால்பீடம் நடுவாகஉண்டாக்கி
சிங்காதனமுமிட்டுச் சிங்கத்தைக்கால்நிறுத்தி
சங்கீன்றமுத்தும் தாவடமும்பூஷணமும்
இங்கிதமாகவே இயல்பாகத்தூணிறுத்தி
நாகக்கொடியும் நவரத்தினஞ்சோதிமின்ன
தென்னமுடிமன்னன் திரியோதிரன்சகுனி
கர்னன்விதூரன் காங்கையன்தேசத்தரசன்
குருக்கள் துரோணரும் கொற்றவருமன்னவரும்
கிருபன்கிருபாச்சாரி கீர்த்தியுள்ளவீஷ்மருடன்
அசுவத்தாமனுடனே ஆனதொருமன்னவரும்
துரியோதனன்சபையில் சேரக்கொலுவிருக்க
பதினெட்டு அக்குரோணி படைமன்னர்தானிருக்க

சகுனி இலக்குணனுக்கு விவாகஞ்செய்ய நினைத்துத்
திரியோதனனுக்குச்சொல்வது.

---

மாமன்சகுனி மருமகனைத்தான்பார்த்து
துரியோதனனுடனே செப்பலுற்றானப்பொழுது
அங்கிருந்தமன்னவர்கள் அனைவோருந்தானறிய
தேசமைம்பத்தாறும் திக்கெட்டும்ஆள்கிறையே
மேதினியிலெல்லவரும் வீடுகட்டிவாழ்வார்கள்
மைந்தருக்குக்கலியாணம் மகிழ்ச்சியாய்ச்செய்வார்கள்
அப்படியேஉம்முடைய அழகானலக்குணற்கு
கலியாணஞ்செய்யவே காலங்களிப்போது
நன்றாய்க்கலியாணம் ராசமுடிமன்னர்மெச்ச
இப்போதேசெய்தால் இயலாயிருக்குமென்றான்
செப்பமுடன்தேசமெல்லாம் சிறப்பாயிருக்குமென்றான்
ஒப்பமுடன்சொல்லி உரைத்தான்சகுனியுமே
சொன்னவுடன்மன்னன் துரியோதிரன்கேட்டு
ஆமென்றுசொல்லி அனைவருஞ்சொன்னார்கள்
மாமன்சொன்னபெண்பேச்சை மறவாமல்மன்னவனும்
பெண்ணெங்கேயென்று பேர்கேட்டானப்பொழுது
வண்ணமுடன்சகுனி துவாரகாபுரிதன்னிலே

சொன்னான்சகுனி துவாரகாபுரிதன்னிலே
மாயன்பெருமாள் மகளாரைக்கொள்ளுமென்றான்
லக்குணர்கருஞ்சுந்தரிக்கும் ராசிபொருத்தமுண்டோ
எப்படியிருந்தாலும்இசைந்துகொள்ளவேணுமென்றான்

துரியோதனன்மகிழ்ந்து தாயாரை உத்தரவு
கேட்கவந்தது.

---

அப்படியேசெய்வோமென்று ஆனதுரியோதனனும்
சிங்காதனத்தைவிட்டுத் திகழக்குதித்திறங்கி
பல்லக்குமேலேறி படைமன்னர்தான்சூழ
மாமன்சகுனியுடன் வந்தானேதாய்வீட்டில்
தாயாரைச்சுற்றிவந்து சாஷ்டாங்கதெண்டனிட்டான்
வாரியெடுத்து மகனைமடியில்வைத்து
முகந்துடைத்துமுத்தமிட்டு முடிமேலேகையைவைத்து
வந்தவகையென்மகனே வரிசையுடன்சொல்லுமென்று
தாயாராங்காந்தாரி தயவாகக்கேட்டாளே [ள்
அண்ணன்சகுனியைத்தான் அண்டையில்தானழைத்து
இருவரும்வந்தவகை என்னுடன்சொல்லுமென்றாள்
சகுனியுரைத்தானே தங்கையாள்தன்னுடனே
துரியோதனனும் சொன்னான்தெரியவேதான்
எட்டுதலைலக்குணற்கு இன்பமுடன்கலியாணம்
திட்டமுடன்செய்கைக்கு தெரியவேகேட்கவந்தோம்
என்னபுத்திதாயாரே எனக்கறியச்சொல்லுமென்றான்
பெண்ணுமிருக்குதம்மா பெருமாள்மகளாரும்
வண்ணமகள்சுந்தரியாள் மாயன்மகளாரும்
என்றுசொல்லியுங்களண்ணர் எனக்கறியச்சொன்னார்கள்
அந்தவிசேஷம் அதுகேட்டுஉந்தனிடம்
வாயாரவாழ்த்திவரம் வாங்கியேபோகவந்தேன்
சந்தோஷமானபடி தாயாரேசொல்லுமென்றான்

தாயார்மகிழ்ந்து கலியாணஞ்செய்ய
உத்திரவுகொடுத்தது.

---

தாயாராங்காந்தாரி சந்தோஷமாயுரைத்தாள்
மாயன்பெருமாள் மகளென்றுசொன்னயே
எனக்குமெத்தசந்தோஷம் என்மகனே ஆச்சுதடா

உனக்குமெத்தசம்மந்தி ஒருவரில்லையுலகத்தில் [பார்
பெண்ணுங்கிடையாதோ பெருமாள்மெத்த பொன்கேட்
கேட்டபொன்னை நீகொடுத்து கெட்டியாய்கொள்ளுமென்
போவென்றனுப்பி புகழ்ந்துவிடைகொடுத்தாள் [ருள்

துரியோதனன் தன் தகப்பனிடம் வந்துகேட்பது.

வந்தான் துரியோதனன் மன்னவர்கள் தங்களுடன்
கர்னன்விதுரன் காங்கையன் தன்னுடனே
மன்னர்குருக்களையும் மற்றுமுள்ளமங்கையரும்
தங்களுடன்கூடத் தகப்பனண்டைதான்போனன்
தகப்பனைச்சுற்றிவந்து சாஷ்டாங்கதெண்டனிட்டான்
அண்டையிலேதானழைத்து அப்பாமகனேயென்று
மற்றுமுள்ளமன்னவரே வகையாயிருங்களென்று
இத்தனைபேரும் என்மகனும்எங்குவந்தீர்
வந்தவகைதன்னுடனே வரிசையுடன்சொல்லுமென்று
தொழுது துரியோதனன் சொல்லுவானேர்வசனம் [ன்
லக்குணற்குநல்முகூர்த்தம் நான்செய்யவேண்டுமென்று
மாயன்பெருமாள் மகளானசுந்தரியை
நேயமுடன்கொள்வமென்று நினைந்துமேயிப்பொழுது
உம்முடையபுத்தி உயர்ந்தபுத்திநான்கேட்டு
சம்மதித்தால்போகவென்று தகப்பனேவந்தேன்நான்

திரிதராஷ்டிரன் வேண்டாமென்றுதடுத்தது.

தகப்பன்தயிலாடன் தான்கேட்டுஅவ்விசேஷம்
சித்தைகலங்கி சிவசிவாவென்றுசொல்லி
இந்தவிசேஷம் எனக்குசரிப்போகாது
பண்டொருநாள்லட்சுமிக்கும் பாவைசுபத்திரைக்கும்
பெண்ணொருவராணொருவர் பெற்றூரிருவருக்குள்
சம்மந்தங்கொள்வோமென்றுசபதங்கள்சொன்னதுண்டு
ஆயன்மகள்சுந்தரியும் அபிமன்னற்கானதினுல்
வில்லங்கமானபெண்ணைக் கொள்ளவேபோகாது
கொள்ளக்குடிகேடு குலத்துக்குமாகாது
கள்ளப்பெருமாள் கபடாய்க்குடிகெடுப்பார்
பெருமாள்தமக்குப்பொய்யன் பொல்லாதசம்பந்தி
ஆகாதுகாணும் அவர்வீட்டுப்பெண்நமக்கு
பின்னையொருவீட்டில் பெண்ணுக்கிடையாதோ
போங்களென்றுசொல்லிப் போகவிடைகொடுத்தான்

## துரியோதனன் துவாரகைக்குப் புறப்பட்டது.

அந்தவிசேஷம் அதுகேட்டுசுந்தரியும்
கொள்ளிநெருப்பதுபோல் கோபித்துக்கண்சிவந்து
துரியோதனனுமங்கு சொல்லுவானோர்வசனம்
குருடனுடபேச்சு நடக்குமோகொற்றவனே
தகப்பனென்றுசொல்லவந்தால் தடுத்தவன்சொன்னனே
வகையுடனேசொல்லாமல் மாராட்டஞ்சொன்னனே
கண்தெரியான்சொற்கேட்டு கலியாணம்பண்ணுமல்
பின்வாங்கப்போறேனே பெரியவரேவாருங்கள
என்றுசொல்லிமன்னவனும் யிருந்தவர்கள்தன்னுடனே
வந்தாராண்மனையில் மகாபேரிபோடுமென்ருன்
பட்டணத்திலுள்ள படைமன்னரத்தனைக்கும்
இட்டான்பயணம் இடும்பன்துரியோதனனும்
துவாரகாபுரியென்று சொல்லிபயணமிட்டான்
அடித்தார்கள்பேரிகையை ஐந்துலட்சம்கிங்கிலியர்
பிடித்தார்கள்பூரிகையை பிரியாமல்மூன்றுலட்சம்
டமாரங்கள்நாலுலட்சம் ராயகிடி ஆறுலட்சம்
கருமானம்போலாகக் கறுத்ததொரு ஆனைலட்சம்
செவ்வானப்போலாகச் சிவந்தபுரவிலட்சம்
மூத்துநிறம்போலசுவம் முழுவெள்ளைமூன்றுலட்சம்
பவழநிறம்போலசுவம் பத்துலட்சம்பயணமென்ருன்
பல்லக்குகாரர் பாளையராசாக்கள்
கொல்லர்களெல்லோரும் கூடப்பயணமென்ருர்
வீராதிவீரர்களும் வில்பிடிக்குமன்னர்களும்
ஆறுலட்சம்ராஜாக்கள் அப்போபயணமென்ருர்
துவாரகாபுரிதனிலே சுந்தரியைத்தான்கேட்க
பயணம்புறப்பட்டார் பத்துலட்சம்ராசாக்கள்
துரியோதனனுடனே சோப்பிறந்தோர்கள்
தம்பிமாரெல்லோருந் தானெழுந்தாரப்போது
ஆயுதசேவகர்கள் அமளியுடன்தானெழுந்தார்
ஆனைகுதிரைகளும் அனேகம்பேர்மன்னவரும்
தோணியுங்காலாளும் திரள்கோடிமன்னவரும்
தண்டிகையிலேறிவருந் தார்வேந்தர்கோடியுண்டு
ஒட்டகையிலேறிவரும் ஒருகோடிராசாக்கள்
இட்டசட்டைவாங்காத இடிமன்னர்தான்கோடி

போட்டசட்டைவாங்காத போர்மன்னரெண்கோடி
அருச்சுனபுரத்திலுள்ள ஆனதுரைமன்னரெல்லாம்
பரிச்சிதமாயெல்லோரும் பயணம்புறப்பட்டார்கள்
பேரிகைகொட்டப் பெரியசின்னமூதிவர
பூரிகைகோடிலட்சம் பூமியதிர்ந்துவிழ
பண்ணியடமாரங்கள் பத்துலட்சந்தான்முழங்க
வீரர்களாறுலட்சம் விருதுமேளந்தான்முழங்க
மத்தளவுடுக்கைகளும் வாய்வீணைதாளமெல்லாம்
மெத்தமுழங்கிவர மெல்லியர்களாடிவர
சித்தமகிழ்ந்து துரியோதனன்பார்க்க
வந்துதேபாளையங்கள் மலட்டாறுதன்னருகே
இறங்கிற்றுபாளையங்கள் எங்குங்கிடுகிடென்ன
பூமிநடுங்கவெங்கும் பூலோகந்தானதிர
அண்டங்கிடுகிடென்ன ஆகாயந்தானதிர
துண்டுமலைகளெல்லாம் தூளாகத்தான்பறக்க
கண்டபடைமன்னவர்கள் களைபட்டுதான்விழவே
துவாரகாபதியதிரத் தொடர்ந்துதேபாளையங்கள்
தென்கடல்பொங்கி திரண்டுவருவதுபோல்
நடந்துதேபாளையங்கள் நாலுதிக்குந்தானதிர
பெண்கேட்கவந்தானே போரானமன்னவனும்
ஆயன்பெருமாள் அரண்மனைக்கருகில்சென்று
துரியோதனன்கூட்டம் சேனைவருகுதென்று
ஆள்வந்துமாயனுக்கு அதிசயமாய்ச்செப்பிடவே
செப்பிடக்கேட்டவுடன் திடுக்கிட்டுத்தானெழுந்து
என்ன அலுவலிங்கே இவர்கள்வரக்காரியமேன்

கிருஷ்ணமூர்த்தி ஆற்றில்வெள்ளம்பெருக
கங்கையை அழைத்தது.

---

என்றுவிசாரமிட்டு எம்பெருமாளப்போது
ஞானதிருஷ்டியினால் நாரணனுந்தான்பார்த்து
பெண்கேட்கவாருனும் பேய்கொண்டபட்டிமகன்
தங்கையென்றுகங்கைதனைத் தானழைத்தாரப்பொழுது
மாயவரும்தானினைக்க வந்தாளேகங்கையவள்
கங்காபவானிவந்து கண்ணனையுந்தான்கேட்டாள்
அழைத்தவகையென்ன அண்ணாவேசொல்லுமென்றாள்

மாயன்பெருமாள் மறுவார்த்தைக்கூறுவாரும்
தங்கையரே நீகேளு தயவாகயென்வார்த்தை
போய்பிடித்த துரியோதனன் பெண்கேட்கவாருனும்
சேதமாயென்சீமை சில்லரைகள்செய்வானே
ஆகாததுன்மார்க்கன் அவனிங்கேவந்தாக்கால்
நம்பவும்போகாது நானவனை நாயகியே
வம்பன் துரியோதனனை வரச்சொல்லப்போகாது
தாயே நீதங்கையரே தண்ணீராய்ஆற்றிலேதான்
பாலாறுதண்ணீர்வரப் பார்க்கவேணுந்தாயாரே
பாராய்நீபசுங்கிளியேபடைமன்னர்வாராமல்
தண்ணீரைக்கண்டு தடையாகநிற்கவேணும்
வந்தேறவொட்டாமல் மாயவருஞ்சொன்னாரே

கங்கையானவள் ஆற்றில்பெருவெள்ளமாய்வந்தது.

---

நல்லது அண்ணாவே நன்றாய்வருகிறேனான்
மேகம்பரவியப்போ மின்னலிடிமுழங்க
மழைகள்பொழியவே வருகுது ஆற்றுவெள்ளம்
இருகறையும்தான்பிரண்டுஇறைந்தவெள்ளந்தான்வருக
வருகுதுதண்ணீரது வானமதுபூமியொன்றாய்
ஆற்றங்கரையோரமங்கிறங்கிப்பாளையங்கள்
தண்ணீரைக்கண்டு தலைவாறுகெட்டுநொந்து
வண்ணவண்ணக்கூடாரம் வகையுடனேபோட்டார்கள்
தென்னமுடிமன்னன் துரியோதனன்பார்த்து
என்னசெய்வோமென்று ஏங்கிமனந்தளர்ந்து
கூடாரம்போடுமென்று கோபமுடனிருந்தான்

துரியோதனன் துவாரகைக்கு ஆளனுப்பியது.

---

வந்ததொருமன்னவரை வாய்மொழிகேட்டானே
அக்கரைதாண்டவேதான் ஆளனுப்பவேணுமென்றான்
படகுமேல்மன்னவரை பதினைந்துமந்திரியை
அடவுடனேற்றிவிட்டான் அம்மொழிகேட்டுவா
போனார்துவாரகா புரியந்தபட்டணத்தே
மாயாரண்மனைக்கு மன்னவரும்போயிருந்தார்
சீரானமாயன் சிங்காதனத்துமுன்னே
தெண்டனிட்டுமன்னவர்கள் சீராகநின்றார்கள்
வந்தவரைத்தான்பார்த்து மாயனெடுத்துரைப்பான்

வந்தசெய்திசொல்லுமென்று மாயவருந்தான்கேட்க
சொன்னார்கள்மந்திரிகள் சுவாமியைத்தெண்டனிட்டு
பெண்கேட்கவந்தோமென்றுபெருமாட்குச்சொன்னார்கள்
துரியோதனனுமெத்த சேனைபரிகலமும்
வருகிறார்நம்முடைய மகளாரைக்கேட்கவென்று
லக்குணற்கும்சுந்தரிக்கும் ராசிபொருத்தம்பார்த்து
சகுனங்கள் துரியோதனன் தான்பார்த்துவந்தானே
ஆற்றில்வெள்ளம்வந்ததினால் அங்கேயிறங்கினார்கள்
ஆண்டவனேபெண்விசேஷம் ஆயனேசொல்லுமென்
மாயன்பெருமாளும் மறுவார்த்தைகூறுவார் [றார்
பெண்தாரோமென்றுசொல்லி பெருமாளுந்தான்கூறி
பெண்ணுக்குவந்தவர்கள் பின்னிடைந்துபோகாமல்
நான்கேட்டபொன்னை நமக்குக்கொடுத்தாக்கால்
கோபாலப்பெட்டி குறையாமல்பொன்கொடுத்தால்
நேர்ப்பாகசுந்தரியை நிதானமிட்டுநான்தாரேன்
என்றுசொல்லிமாயவரும் எடுத்துரைத்தாரப்பொழுது

பெருமாள்சொன்னதை மந்திரிகள் துரியோ
தனனுக்குச் சொன்னது.

---

அந்தவிஷேம் அதுகேட்டுமந்திரிகள்
நல்லதென்றுதெண்டனிட்டு நடந்தார்களப்பொழுது
ஆறுதனைக்கடந்து அக்கரையேபோனார்கள்
துரியோதனனுடனே சொன்னார்கள்செய்தியெல்லாம்
நல்லதென்றுசொல்லி நகைத்தான்துரியோதனன்
பொக்கிஷக்காரரை போர்மன்னரையழைத்து
அஸ்தினாபுரத்துக்கு அதிவேகமாய்நடந்து
ரொக்கக்களஞ்சியத்தை நோக்கமுடன்தான்திறந்து
ஏழுலட்சம்ஒட்டையின்மேல் ஏறியபொன்னையெல்லாம்
ஐந்துலட்சம்யானையின்மேல் ஆபரணமேற்றுமென்றார்
பெண்ணுக்குஉண்டான பூஷணங்களுள்ளதெல்லாம்
ஒன்றுங்குறையில்லாமல் ஏத்தென்றுசொன்னானே
அப்படியேதான்போய் அரண்மனைக்குட்புகுந்தார்
பொக்கிஷவாசல் புண்ணியர்கள் தான்திறந்து
ஒட்டகய்யானைகளும் ஒன்றாய்நிறைந்தது
வந்துபொதிபிடித்தார் மகாராஜன்பொன்னுகளை

வேணுமென்றபூஷணத்தை வெகுவாய் பொதிபிடித்தார்
ஏற்றிக்கொண்டுவந்து இறக்கினார்பாளையத்தில்
கண்டான்துரியோதிரன் களஞ்சியத்துப்பொன்னதனை
கொண்டாடிக்கொண்டுமெத்த குலுங்கநகைநகைத்து
அந்தவிபரமெல்லாம் அறிந்துபெருமாளும்
புத்திகெட்டுதுரியோதனன் பெண்கேட்கவாரானும்
முன்னாலேகொள்ளவந்து முனைகுலைந்துபோனானே
அருச்சுனன்தான்பறித்து ஆகாயம்போனானே
பெண்ணைக்கொடுத்துவிட்டு பேய்போல்விழுந்தானே
அருச்சுனன்தான்பறித்தான் அதுபோலிதாகுமென்று
சற்றுமிவனெண்ணாது தன்மகன்லக்குணற்கு
பெண்கொள்ளவேணுமென்று பேசிவரஆள்விடுத்தான்
வல்லமைசாலியபி மன்னனையும்பாராமல்
என்னையுந்தன்மனதி லீடாகப்பாராமல்
தன்னுடையசத்துவமும் தான்படைத்தஆண்மைகளும்
முன்பின்னும்மெண்ணாமல் முடிபுனைந்தகெருவத்தால்
பின்னேவருகிற பிழைகளறியாமல்
வந்தானேபெண்கொள்ள மடையனுடபுத்திரனும்
நல்லதுநல்லதென்று நகைத்தந்தமாயவரும்
பணத்தின்வலுமையைத்தான் பதருக்கயிப்பொழுது
எண்ணிமனதிலே எம்பெருமாள்தானுமப்போ
ஆற்றுநீர்வற்றிவா ஆயாவர்தானினைத்தார்
மாயமாய்ப்போக வரவழைத்தார்கங்கைதனை
அண்ணனழைக்க அறிந்துகங்கைதானடங்கி
மாரளவுகாலளவாய் வருந்தண்ணீர்தான்பார்த்து
துரியோதனப்பெருமாள் சொல்லுவான்சேனைகட்கு
நாளைப்பயணமென்று நகபத்தடியுமென்றான்
தேரும்ரதமும் திரளானாஆனுவமும்
ஆறுகடந்துஅப்போ அக்கரையில்வந்தார்கள்
மாயனுடபட்டணத்தில் வந்துதேபாளையங்கள்
ஆயனுடபட்டணத்தில் அருகாகத்தண்டிறங்கி
துரியோதனனுமவன் திரள்தம்பிமாருடனே
கர்னன்சகுனி கனமன்னர்தன்னுடனே
பெருமாளரண்மனைக்குப் பேணிநடந்தார்கள்
ஆயன்பெருமாள் அரண்மனையுட்புகுந்தார்

மன்னன் துரியோதனனும் மாயவற்குத்தெண்டனிட
ஆயனெழுந்திருந்து ஐயர்குருக்களைத்தான்
ஆசீர்வாதமென்று அவரவர்க்குச்சொன்னாரே
இருக்கச்செலவு கொடுத்தாரேஎம்பெருமாள்
துரியோதனனுக்குச் சிங்காதனமுமிட்டார்
குருக்கள்மார்தங்களுக்கு கூடசிங்காதனங்கள்
இருக்கவேயிட்டு இருமென்றாப்பொழுது
எங்கேவந்தீரென்று எம்பெருமாள்தான்கேட்டார்

துரியோதனன் பெருமாளை பெண்கேட்பது.

---

மன்னன் துரியோதனனும் வாய்திறந்துதானுரைப்பான்
பெண்கேட்கஉம்மிடத்தில்பெருமையுடன்வந்தேன்காண்
இலக்குணற்கும்சுந்தரிக்கும் இராசிப்பொருத்தமுண்டோ
எந்தன்மகன்லக்குணற்கு இசைந்திருக்குதையாவே
உந்தன்மகள்சுந்தரியை உகந்துதாவேணுமென்றார்

அதற்கிசைந்து பெருமாள் பொன்கேட்பது.

---

அப்படியேதாரோமென்றார் ஆயன்பெருமாளும்
பந்தியுடன்சுந்தரிக்குப் பரியமுமெத்தனைபொன்
அந்தப்பொன்னெந்தனுக்கு அளந்துதாவேணும்
கொண்டுவந்தபொன்னெல்லாம் கோபாலப்பெட்டியிலே
அளந்துகொடுக்கச்சொல்லியே அன்பாகச்சொன்னானே

திரியோதனன் பொன்னளக்கையில் பெருமாள்
காற்றடிக்கச்செய்தது.

---

கோபாலப்பெட்டியை கொண்டுவந்துவைத்தார்கள்
தெற்குவடக்குத் திசைநான்குயோசனையும்
தக்கசதுர்முகமாய்த் தலைப்பானைபோலிருக்கும்
அப்படிப்போலொத்த அளவானகூடையிலே
கொட்டினார்கள்பொன்னை கொற்றவரும்மன்னவரும்
ஏழுலக்ஷம்ஒட்டகத்தில் ஏற்றிவந்தபொன்னையெல்லாம்
பார்த்துப்பெருமாளும் பட்சமுடன்தானுரைப்பார்
பொன்பதாரயில்லாமல் தூத்தியளவுமென்றார்
தூத்திஅளவுமென்றார் துய்யப்பெருமாளும்
அப்படியேகொட்டி அம்பாரம்போட்டார்கள்
வாயுபகவானை மாயனுந்தானினைந்து

கர்றடித்துப்பொன்பதாய் கடலிலேபோயொளிக்க
நேர்த்தியுடன்காற்றடிக்க நினைத்தார்பெருமாளும்
அப்படியேகாற்று அகோரமாய்த்தானெழும்பி
சூருவலிகாற்று சுற்றியடித்ததுகாண்
பொன்னையள்ளித்தூற்றிடவேபோகுதுகாண்வெகுதூரம்
ஆகாயத்தானெழும்பி அப்போதனுமாரும்
அம்பாரந்தான் தூற்றி யங்குவெளிப்பட்டாரே
நெல்லுப்பதர்போலே பறக்குது அப்போது
வட்டப்பொதியிடவே மறுதேசம்போகுதுகாண்
நாகக்கொடியோனுமப்போ நகைத்துமிகப்பர்த்தான்
கொண்டுவந்தபொன்களெல்லா கூடையளையாகவில்லை
பின்னையுமுண்டான பொக்கிஷங்களுள்ளதெல்லாம்
முன்னிருந்தபொக்கிஷங்கள் மூத்தோர்கள்தேடினது
தென்னமுடிமன்னன் துரியோதனன்தேடினதும்
கர்னன்சகுனி காட்சியுடன்தேடினதும்
எல்லோருந்தேடியபொன் னெல்லாமெடுத்துவந்தார்
காற்றில்கழிந்து கடல்கொண்டுபோகுதுகாண்
ஆத்திதூத்திதானளக்க அரைகூடையாச்சுதுகாண்
மன்னன் துரியோதனனும் மனதுகலங்கிநின்றான்
துரியோதனன்கலங்கி சோர்ந்துமயங்கிறதை
மாயன்பெருமாளும் மனதிலேதானறிந்து
கூடைமுக்காலாகவென்று குறித்தார்பெருமாளும்
அப்படியேதானுமப்போ ஆச்சுது அக்கூடை
கால்கூடைபொன்னும் கலியாணமானபின்பு
தருகிறோமென்றுசொல்லி சமாதானம்சொன்னானே
நல்லதென்றுசொல்லி நகைத்தார்பெருமாளும்
நாள்முகூர்த்தம்தானிடவே நல்லபிராமணரை
அண்டையிலேதானழைத்து ஆலோசனைகள்செய்து
பஞ்சாங்கந்தான்பார்த்து பக்குவமாய்நாளுமிட்டு
ஜெயவருஷம்வைகாசி தேதிபனிரெண்டதினால்
நட்சத்திரம்அவிட்டம் நல்லதிதிபஞ்சமியும்
வெள்ளிக்கிழமையிலே விஷத்தைந்துநாழிகையில்
இன்றெட்டாநாள்முகூர்த்தம் என்றுமேபாக்குமிட்டார்
பகல்முகூர்த்தமென்றுசொல்லி பாக்குமிட்டார்ராசாக்கள்

பெண்கொள்ளதானிசைந்தான் பெருமை துரியோதனன்
கொடுக்கவேதானிசைந்தான் கோபாலக்கிருஷ்ண னுமே
எல்லோருக்கும்பாக்குமிட்டு இன்பமுடன்பேசினர்

துரியோதனன் பந்தலலங்கரித்தது,

---

போகிறோமென்றுசொல்லி புறப்பட்டான்னேரம்
அர்ச்சுனபுரத்திற்கு அனைவரும்பயணமானர்
வந்தார்கள்தங்களுட மாளிகையினுட்புகுந்தார்
பட்டப்பகலில் பகல்முகூர்த்தமென்றதுடன்
எட்டுநாளென்றுசொல்லி இட்டானும்பாக்குகளும்
சொல்லியிருக்கையிலே சுந்தரியாள்தன்தோழி
செங்கமலத்தாதியவள் செட்டிகடைக்காக
வெளியேபுறப்பட்டு வீதியில்போகையிலே
கடைகள்பெருந்தெருவே கன்னியரைக்கண்டவுடன்
பட்டணத்திலுண்டான பரிசனங்களத்தனையும்
தாதிமுகம்நோக்கி தனித்தனியேகேட்பார்கள்
சுந்தரிக்குகலியாணம் கூடிற்றோதோகையரே
இன்றெட்டாம்நாளோவென்று எல்லவருங்கேட்டார்கள்

தாதி சுந்தரிக்குச்சொல்வது.

---

இவ்விசேஷங்கேட்டு இடிவிழுந்தாள்தாதியரும்
அடித்துப்பிரண்டு அழுதுநடந்தோடி
திரும்பியேவந்ததொரு செங்கமலத்தாதியரை
கண்டாளேசுந்தரியும் காதலியாள்வாரதுக்கம்
செலவுகொள்ளபோனிடத்தில் செட்டியுன்னைவைதானே
சரக்குகொள்ளபோனிடத்தில் சண்டைமிகவுண்டாச்சோ
பின்னையொருவர் பிழைகள்மெத்தசொன்னரோ
திட்டியடித்தாரோ தீம்புமெத்தசெய்தாரோ
பஞ்சவர்க்குத்தாழ்வு பாங்கியரேவந்ததுண்டோ
மாதுதுரோபதைக்கு மனஸ்தாபம்வந்ததுண்டோ
அம்மான்மார்வார்த்தைக்கு அதிசயங்களுண்டோ
மைத்துனனர்தன்னுடையவார்த்தைகள்தானுமுண்டோ
என்னடிதாதியரே எனக்கறியச்சொல்லுமென்றாள்
தென்னமுடிவேந்தன் துரியோதிரன்பாவி
உன்னைமணப்புரிய உடம்படிக்கைகேட்டதுவும்
மன்னன்பெருமாள் வரச்சொல்லிச்சொன்னதுவும்

பரியங்கள்பேசி பணம்வாங்கிக்கொண்டதுவும்
சரியாகசம்பந்த தாம்பூலம்வாங்கினதும்
சம்மதித்தேயுன்தகப்பன் தனம்வாங்கிக்கொண்டதுவும்
கோபாலக்கூடையிலே கொட்டியளந்ததுவும்
இன்றைக்குஎட்டாநாள் இசைந்தமுகூர்த்தமென்று
பெண்கொள்ளவாறேனென்று போனான்துரியோதனன்
பாரத்தமுக்குமிட்டான் பட்டணங்களுள்ளதெல்லாம்
இந்தவிசேஷமெல்லாம் கேட்டேனேஎன்தாயே
என்றவளுஞ்சொல்லி இருந்தாளேதாதியரும்

சுந்தரி தன்தகப்பனிடத்திற்கு வந்தது.

அந்தவிசேஷம் அதுகேட்டுசுந்தரியும்
கதித்துக்கனலண்டி கண்கள்தனல்பறக்க
அவ்வலரிக்கண்கள்ரெண்டும் செவ்வலரிபூத்ததுவே
அடித்துப்பிரண்டழுது அனியாயமென்றுசொல்லி
மாயன்பெருமாள் மாளிகையில்போவோமென்று
பாங்கியரைத்தானழைத்து பல்லக்குசோடியுமென்றாள்
கோத்தமுத்துபல்லக்கு பிடியுமென்றாள்கொம்பனையும்
ஏறினாள்பல்லக்கில் எமலோகந்தானதிர
கோபமுந்தாபமும் கொண்டாளாமப்பொழுது
வாருளேசுந்தரியும் மாயனரண்மனைக்கு
காயாம்புமேனியனார் கண்ணருமப்பொழுது
தாயாருந்தானும் மகள்வாறசேதிகண்டு
தாஷ்டிகமானதொரு தங்கச்சிங்காதனத்தில்
நீட்டினார்காலை நெடுகவிட்டார்முக்காட்டை
பூட்டியேதானுறங்க பொய்யுறக்கங்கொள்ளவைத்தார்

சுந்தரி தன்தகப்பனையேசுகிறது.

பஞ்சணைமேல்பள்ளிகொண்டு படுத்திருக்குமாயவரை
பல்லக்குவிட்டிறங்கி பார்த்தாள்தகப்பனையும்
மாயன்பெருமாளே மன்னவனே நித்திரையோ
வெண்ணெய்திருடியுண்டாய் மிகவிடைச்சிகையாலே
கட்டுண்டபுத்திகளைக் காட்டாதேமாயவரே
துருசாயெழுந்திருடா துன்மார்க்கசண்டாளா
கோஷ்டக்குாலுமிட்டுக் கூப்பிட்டாள்
எம்பெருமானையாவே என்றலறிக்கூப்பிட்டாள்
செய்யபெருமாளுந் திருட்டுக்குறட்டை

மாயன்மகளாரும் வயிற்றிலறைந்துகொண்டாள்
இரணியனைக்கொன்ற இராகவா நித்திரையோ
மாமன்றனைக்கொன்ற மதிகெடா நித்திரையோ
இராவணனைக்கொன்ற இராமா நீ நித்திரையோ
கிராணியோ நூற்றுவர்க்கும் திருட்டையா நித்திரையோ
மலடன்துரியோதனன் வாய்த்ததிரவியத்தை
திருடினையோவையாவே திரள்கெட்டபுத்தியினல்
நெடியதொருவாலி நெஞ்சைபிளந்தானே
கடியதொருநித்திரையும் கனமாகத்தானறிவேன்
அடியாளுமுன்பிள்ளை ஐயா நான்மனம்பொறுத்தேன்
கடிதானவார்த்தையுண்டு கபடா நீஎழுந்திரடா
துடியாகப்பேசுவன்யான் சும்மாவிடுவதில்லை
அல்லவடாமாயா அறிவுகெட்டகோபாலா
இப்படியேசொல்லி எடுத்தெறிந்துகூப்பிடச்சே
ஆலித்தெழுந்திருந்தார் ஆயன்பெருமாளும்
தன்மகளைக்கண்டு தலைகுனிந்துகொண்டாரே
ஐயரையுங்கண்டு அடிவணங்கித்தெண்டனிட்டாள்
தெண்டனிட்டசுந்தரியை திடுக்கென்றுதானெடுத்து
பொன்னானமேனி புழுதிபடக்காரணமேன்
வந்ததொருகாரியத்தை வகையுடனேசொல்லுமென்றார்
எழுந்திருந்தசுந்தரிதான் எதிராகநின்றுகொண்டு
தகப்பனே நீயெனக்குத் தாயாதியல்லவோடா
பொன்னுக்குவீங்கியடா பொல்லாதமாட்டிடையா
பணத்துக்குவீங்கியடா பஞ்சிபழிகாரா
இடைப்புத்திபிதிரியிலே யென்பார்கள்வையகத்தில்
மடைப்புத்தியானாயோ மதிகெட்டுப்போனாயோ
துரியோதனன்பொன்னுக்கு செலவுகளில்லையடா
பொன்னும்பொருளும் புலையன்படைக்கிலையோ
பணமுந்தனமும் பறையன்படைக்கிலையோ
திரவியந்தான்வேணுமென்றால் தேவியரைக்கொடுத்து
அத்தைமகனிருக்க அசல்நாட்டான்வருவானோ [விடு
மாமிமகனிருக்க மறுநாட்டான்வருவதென்ன
குள்ளநரிகதைபோலே கொடிமன்னன்வீற்றிருப்பான்
அப்போதேமாயன் அகமகிழ்ந்துகொண்டாடி
அருமைமயிலே அழகானசுந்தரியே
குள்ளநரிக்கதையைக் கூறுமென்றுதானுரைத்தார்

## சுந்தரி தன்தகப்பனுக்கு உவமானமாகச்சொல்லிய குள்ள நரிக்கதை.

---

குள்ளநரிக்கதையைக் கூற ஞமோமாயவனே
கள்ளப்பெருமாளே கள்ளரேகேளுமென்று
மந்தைவழிதனிலே மாட்டிறைச்சிதானிழுக்க
(ஒரு)குள்ளநரிகண்டு குடுகுடென்றுவோடிவந்து
மாட்டிறைச்சிதன்னை வகையாகக்கௌவிக்கொண்டு
ஆற்றங்கரையோரம் அடுத்துவரும்போது
இடதுபுறமிருந்து எழும்பியேதண்ணீரில்
வாளைமீன் துள்ளி வலதுபுறத்தில்விழ
வாய்கறியை நிலத்தில்வைத்து வாளையைப்பிடித்திடவே
வாளைமீன் தப்பி வைகையாற்றில்தான்விழவே
நிலத்தில்வைத்தமாட்டிறைச்சி நின்றதொருசெம்பருந்து
காலிலிடிக்கிகொண்டு கானகமேபோய்விடச்சே
அப்பொழுதுகுள்ளநரி அடைவாகத்தான்பார்த்து
மாட்டிறைச்சியும்போச்சு வாளைமீன்தான்போச்சு
வானத்தைப்பார்த்து மதிமறந்துநின்றதுவாம்
அந்தப்பருந்துபோல் அபிமன்னரென்னைக்கொண்டு
போவார்காண்மாயவரே புத்திகெட்டஐயாவே
குள்ளநரிபோலே குடிகேடன்துரியோதனன்
பார்த்திருப்பானப்போது பல்லைத்திறந்துகொண்டு
இந்தக்கதைகேட்டு இயலானமாயவரும்
சிந்தைகுளிர்ந்து சிரித்துமுகம்நோக்கி
பின்னையுமேமாயன் பிரியமுடன்சொல்லலுற்றான்
அல்லகாண்சுந்தரியே அழகுமயிலாளே
துரியோதனனுக்கு திரவியங்கள்மெத்தவுண்டு
ராச்சியங்களெல்லாம் நாகக்கொடியோனும்
ஒருகுடைக்கீழாக உலகமெல்லாமாளுகிறான்
ஆளுந்துரியோதனன் அவன்மகனலக்குணற்கு
பெருமையுள்ளமன்னன் பெலத்தால்பெரியவன்காண்
உன்னழகுக்கேற்ற ஒளிவுள்ளலக்குணன்றான்
(உன்) அத்தைமகனென்றால் அழகுகெட்டவாபிமன்
மொட்டைத்தலையன் முட்டிக்கால்கட்டியவன்
நாடுதனிலேபிச்சை நலமாயெடுக்கிறானே
என்றுபெருமாள் எடுத்துரைத்தாரிவ்வார்த்தை

மாயன்மகள்சுந்தரியாள் மனஞ்சலித்துதான்கேட்டு
துரியோதனன்பாணமோ திரமாய்பேசுகிருன்
ஆட்டிடையாகள்ளா அசடாகுடிகேடா
ஒருவனுடையபெண்ணை யொருவன்விருப்பமுற்று
வாத்தியார்கதைபோலே வருமோடாயிப்பொழுது
என்றுதான்சுந்தரியாள் இயலாகக்கூறலுற்ருள்

இதுவும் உவமானமாகச்சொல்லிய
உபாத்தியாயர் கதை.

---

அப்போதேகேட்டு ஆயன்மனமகிழ்ந்து
வாத்தியார்தன்கதையை வாகாகச்சொல்லுமென்ருர்
அப்போதேசுந்தரியும் அடைவாக்ச்சொல்லலுற்ருள்
ஆயனேஉந்தனைப்போல் அறிவுகெட்டமன்னவனும்
ராச்சியத்தைஆண்டு நாடொருமைசெய்கையிலே
ஆதிசிவனருளால் அவனுக்கொருமகள்காண்
அந்தநல்லபெண்ணை அழகுள்ளபூங்கொடியை
ஐந்துவயதில் அறிவறியவேணுமென்று
வைகுந்தனென்னும் வாத்தியொருவருண்டு
வாத்தியார்பள்ளியிலே மகளைப்படிக்கவைத்தார்
ஐந்துவயதி லரிச்சுவடிமுதலான
மூந்திரிலக்கமுடன் மூதுரையாத்திசூடி
கல்வியொழுக்கும் கலந்ததொருவேழமுகம்
ஒன்பதாம்வயதில் உயர்ந்ததோரெண்சுவடி
பத்துவயதிலே பாரச்சுவடியான
நிகண்டுதிவாகரமும் நிகரானஇலக்கணமும்
இத்தனையுத்தான்படித்து இயல்பாய்வரும்போது
ஒருநாட்பொழுதிலே உயர்ந்தபள்ளிக்கூடந்தனில்
பொழுதுபோகுமுன்னே பிள்ளைகளை அனுப்பிவிட்டு
வைகுந்தனென்ற வாத்தியாரப்பொழுது
மன்னன்மகளை வகையாகத்தானிருத்தி
அடிபெண்ணேஉன்பேரி லாசைகொண்டுவெகுநாளாய்
மாயையென்றஆசை மறப்பதில்லைபெண்ணனங்கே
என்னாசைதீர்க்கவென்று இயம்பினன்வைகுந்தன்
அப்போதுமங்கையரும் ஐயோகோவென்றழுது
என்னபுத்திநீதான் இயம்பலுற்றீர்சற்குருவே
ஐயாவேநீர்தாமும் அவ்வார்த்தைபேசாதீர்

படிப்பித்தவாத்தியார் பாங்காகஎன்தகப்பன்
கைச்சரசஞ்செய்யாதீர் காரணரேஎன்குருவே
என்றுதான்மன்னன்மகள் இவ்வார்த்தைதானுரைக்க
அப்போவிசாரமுற்று ஆனதொருவைகுந்தன்
அல்லவடிபெண்ணே ஆரணங்கேசொல்லுகிறேன்
நீதியைமெத்தசொன்னுய் நிலைமையுள்ளவாழ்மயிலே
நீசொன்னபடியோ நிற்குதோபூவுலகில்
ஒருநாளைக்காணுலும் உயர்ந்தமலைமனையில்
இருவருங்கூடி இளமான்கலையதுபோல்
விளையாடநீவாராய் வெற்றியுள்ளபூங்கொடியே
வாத்தியார்சொல்ல மங்கையருமேதுரைப்பாள்
ஐயாஉனக்கடியாள் ஆண்பிள்ளையல்லவோ
மெய்யாகப்பேசுகிறீர் வீண்பேச்சைவிட்டுவிடும்
என்றுசொல்லிமங்கை இயலாயுரைத்துவிட்டாள்
அப்போதுவாத்தியார் ஆனதுயரமுடன்
மங்கையரைவீட்டிற்கு வகையாயனுப்பிவிட்டான்
வாத்தியார்தானும் வஞ்சிபகைநெஞ்சில்வைத்தான்
ராஜாமகளும் நடந்துசென்றுள்வீட்டுக்கு
வீட்டுக்குள்தான்புகுந்து விபரமுள்ளமங்கையரும்
கூட்டித்தொகைகூட்டும் கொத்தானபுத்தகத்தை
தூக்கையங்கேதூக்கி துணிவாகத்தானிருந்தாள்
மற்ருெருநாட்காலையிலே மங்கையருந்தான்திரண்டாள்
அப்போதுராஜாவும் அகமகிழ்ந்துகொண்டாடி
வைகுந்தனென்னும் வாத்தியார்யுனையழைத்தான்
அப்போதுவாத்தியார் ஆனவியாகூலமாய்
என்னசெய்வேனென்று ஏங்கிமனந்தளர்ந்து
மன்னர்மனைக்கு வைகுந்தன்வந்துவிட்டான்
ராஜாவுமப்போது நலமுடனேயேதுசொல்வார்
(என்) அருமையிளமயிலாள் ஆரணங்குயென்மகளும்
வெள்ளிக்கிழமையிலே விடியவொருசாமமுண்டு
உத்திராடநட்சத்திரம் உகந்தபிரதமையில்
இந்தநல்லவேளையிலே இயலானயென்மகள்தான்
புட்பவதியானுள் புராணத்தைப்பாருமென்ருன்
அப்போதேவைகுந்தன் ஆனதொருஏடெடுத்து
சாஸ்திரத்தைப்பார்த்து சலிப்பாகத்தானிருந்தான்

அப்போதுமன்னன் அடைவாகத்தான்பார்த்து
வாத்தியாரே நீர்தான் மதிமாந்துயிருப்பானேன்
சொல்லுமையாவென்று சொன்னாரோராசாவும்
வைகுந்தவாத்தி மனதுதுயரமுடன்
என்னசெய்வோம்ராசாவே இயல்புடையவுன்மகள்தான்
திரண்டநட்சத்திரந்தான் திறமாயிருக்கவில்லை
ஆண்டவனேராசாவே அரண்மனைக்கு அழிவுவரும்
உன்மகள்திரண்டதுதான் உலகுக்கழிவுவரும்
இந்ததொருபெண்ணை நீர் இயல்பாகவைத்திருந்தால்
சீமைகளெங்கும் தீப்பிடிக்குமிப்போதே
என்றுசொல்லிவாத்தியார் இவ்வார்த்தைதானுரைக்க
மன்னவனுமப்போது வாயிலடித்துக்கொண்டு
என்செய்வேன்ஈஸ்பரனே யென்றுமிகப்புலம்பி
மன்னனரசனும் வாத்தியாரைத்தான்கேட்டான்
வைகுந்தவாத்தி வகையாகவார்த்தைசொல்வான்
பேழைதனைகொண்டுவந்து பெண்ணையதனில்வைத்து
தாலியுங்கூறைகளுந் தரிக்கும்வுடமைகளும்
ஒருவரீசைஉடமையெல்லாம் ஒப்பமுடனதனில்வைத்து
ஐந்துகட்டுகட்டி அரக்குமுத்திரைதான்போட்டு
ஓடுகிறஆற்றிலே ஒழித்துவிடுராசாவே
தோஷங்களெல்லாந் தொலைந்துபோம்அத்தோடே
அப்போதுமன்னன் ஆனவியாகூலமதாய்
பேழைதனைக்கொண்டுவந்து பெண்ணையதனில்வைத்து
ஐயோமகளேயென்று அழுதானேமன்னவனும்
அத்தைமகனிருக்க ஆற்றோடேபோறாயோ
அழுதுபுலம்பிமன்னன் ஆற்றிலேதள்ளிவிட்டான்
வாத்தியாரப்பொழுது வகையாகத்தானெழுந்து
பள்ளிக்கூடத்து பசங்களையிட்டுக்கொண்டு
ஆற்றங்கரையோரம் ஆசையுடனோடிவந்தான்
பேழைவருகுமடா பிடியுங்களென்றுசொன்னான்
வழிபார்த்துக்கொண்டிருந்தான் வைகுந்தனப்போது
அப்படியாயங்கே அமர்ந்திருக்கும்வேளையிலே
பேழைவருகுதையா புனலாற்றங்கரையோரம்
அவளுடையஅத்தைமகனவ்விடத்தில்வேட்டைவாரான்
வேட்டைகளாடியே வேங்கையொன்றுதான்பிடித்து

கூண்டிலதையடைத்து கொற்றவனும்கொண்டுவாரான்
வேட்டையும்சிக்காமல் விடுபட்டுவாருணும்
அவ்வேளையிற்பேழை ஆற்றோடேவந்ததுகாண்
கண்டுமேமன்னவனுங் களித்துமனமகிழ்ந்து
ஆரடாசேவகரே ஆனதொருமந்திரியே
பேழையடாவுங்களுக்கு பேழைமுதலெந்தனுக்கு
என்றுசொல்லிராஜா இயல்பாகத்தானுரைத்தான்
நல்லதென்றோடியே நாலுபேர்பிடித்தார்கள்
பேழைதனைக்கொண்டுவந்து பிரியமுடன்வைத்தார்கள்
பேழைபெண்ணாகவொரு பொற்கொடியுந்தானிருந்தாள்
ராஜாக்களுக்கேற்ற நல்லதொருபெண்ணாச்சு
எங்களுக்கோவாளும் விலைவரியுந்தானாச்சு
இராஜன்குமாரத்தி இராசன்முகம்பார்த்து
நீ-ஆரென்றுகேட்க அப்போதுரைக்கலுற்றாள்
பொல்லாதவேளையிலே புத்தியறிந்தேனென்று
ஓடுகிறதண்ணீரில் உள்ளேதான்தள்ளிவிட்டார்
வந்தவரலாற்றை வகையாகச்சொல்லிவிட்டாள்
கேட்டந்தராஜாவும் கிளிமொழியைத்தானெடுத்து
பெண்ணிருந்தபேழையிலேபெருவேங்கைதனையடைத்து
ஓடுகிறதண்ணீரில் விட்டுவிட்டானுத்தமனும்
மாமன்திருமகளை வகையாகத்தானெடுத்து [ன்
பல்லக்கில்வைத்துக்கொண்டு பண்புடனேவந்துவிட்டா
அப்பேழைவருகுதையா ஆற்றங்கரைதனிலே
வாத்தியார்கண்டு மனதுசந்தோஷமுடன்
வாசிக்கும்பிள்ளைகளை வாகாகத்தான்பார்த்து
ஆற்றில்போம்பேழைதனை அன்பாய்பிடியுமென்றான்
நீந்திப்பிடித்தார்கள் நேத்திதனைபேழைதன்னை
எடுத்துவந்துபெட்டிதனை இறக்கிவைத்தார் கொலுதனி
பரிவுடனேதன்வீட்டில் பாங்காகத்தானிறக்கி [லே
பள்ளிக்கூடத்து பசங்களையுந்தானழைத்து
மங்கிலியம்நான்தரிப்பேன் வாழ்வேந்தன்மங்கையற்கு
தார்வேந்தவைகுந்தனூர் சதாஸ்தென்றுசொல்லுமென
அப்போதுவாத்தியார் அன்பாகத்தான்மகிழ்ந்து
சோபனகலியாணம் சீக்கிரமாய்முடிக்கவேணும்
தலைவாசலையடைத்து தாப்பாளும்பூட்டிவிட்டான்
பேழையுடன்வந்த பேழைமயிலாளேயென்று

பூங்காவனந்தனிலே போகிக்கச்சொன்னானே
வாமாட்டேனென்றாயே வந்தகப்பட்டாயே
கலியாணசோபனம் கலந்துசெய்வோமென்றுசொல்ல
கட்டையவிழ்த்தானே கட்டழகன்வைகுந்தன்
கட்டைவிழ்த்தவுடனே கண்டானேவேங்கைதன்னை
வேங்கையுந்தானெழும்பி மிகவேபசிதீர
குடலைப்பிடித்துரத்தங் குடித்துதேவைகுந்தனை
வேங்கையுமப்போது வெளிப்பட்டுப்போனதுவே
அவ்வேங்கையோடொக்குமையா விஜயன்மகனாரும்
வாத்தியோடொக்குமையா மலடன்பெற்றலக்குணனும்
மாயன்பெருமாளே மன்னவனேகேளுமினி
கற்றாழைமேலே கல்லுவண்டிவந்தாக்கால்
கல்லுக்குச்சேதமா கற்றாழைக்குச்சேதமா
கல்லுவண்டிக்கொக்குமையா காண்டீபன்பெற்றபிள்ளை
கற்றாழைக்கொக்குமையா கண்ணில்லான்பெற்றபிள்ளை
கொக்குதிரளிலே ராசாளிபுகுந்தக்கால்
கொக்குக்குச்சேதமுண்டோ ராசாளிக்குச்சேதமோதான்
கொக்கோடேயொக்குமடா குருடன்பெற்றதன்மகனும்
ராசாளிக்கொக்குமடா நல்லத்தைதன்மகனும்
அவர்களுடபலமும் ஆண்மையும்சேவகமும்
பஞ்சவர்கள்சாதிவகை பாவியறியாயோடா
ஐவருடவீரியமும் ஆண்மையறியாயோடா
முன்னேஉன்தங்கையவரை மொய்குழலாளத்தையவரை
துரியோதனனுள்வந்து தீவிரமாய்கொள்ளுகைக்கு
பலராமரிடத்தில்வந்து பரியமதுதான்கொடுத்து
மண்மேலேதானிருந்து மங்கிலியந்தானெடுக்க
அப்போது அருச்சுனனும் ஆகாசமாகவந்து
சன்யாசிவேடங்கொண்டு தார்விஜயனப்பொழுது
தாலியைத்தான்பிடிங்கி தாலிகட்டிபார்க்கிலையோ
அருச்சுனனார்தேவியென்று அறியவேதாலிகட்டி
வெட்கஅடித்தாரே விஜயனென்மாமன்
அப்படிக்கொத்தவனா அறிந்திருந்துயென்தகப்பா
பஞ்சையாய்நீயும பணத்துக்குஆசரித்து
உன்னுடையசாதிபோலே உத்தமனேபார்த்தாயோ
மடப்புத்திபோலே நினைத்தாயேமாட்டிடையா

பெண்சாதிதானிழந்து போனாயேமுன்பிறப்பில்
அரக்கனுன்தேவியைத்தான் அழைத்தோடிப்போனானே
சீதையுன்தேவியாரை சிறையிலேவைத்தானே
ரோஷமெனக்குமுண்டோ லோகமளந்தவனே
இப்படிச்சொல்லியெல்லாம் ஏசினாள்சுந்தரியும்
இன்பமுடன்கேட்டு இருதயத்தில்தானகைத்து
வாயைத்திறவாமல் மறுவார்த்தைப்பேசாமல்
தலையைக்குனிந்துகொண்டு சுவாமியிருந்துவிட்டார்

சுந்தரிதன்தகப்பனிடத்திற் சபதமிட்டது.

அப்போதுசுந்தரியும் ஐயர்மனதறிய
தையலந்தசுந்தரியுஞ் சபதமிட்டுக்கொண்டாளே
அருச்சுனபுரத்தையெல்லாம் அடியோடேதான்யிடித்து
பரிச்சிதமாய்த்தானிடித்து பரித்திவிரைத்திடுவேன்
துவாரகாபுரியெல்லாம் சுட்டுக்கரியாக்கி
துரியோதனன்கூட்டம் சேனைகளுள்ளதெல்லாம்
கரியாக்கிச்சுட்டு கடலிலேபோட்டுவைப்பேன்
ஆகாதலக்குணனை ஐந்துகுடுமைவைத்து
தலையைச்சிறைக்கச்சொல்லி சவுக்காலேதானடித்து
அரசாணிக்காலோடே அவனையுங்கட்டிவைத்து
ஆயிரம்பெருந்திரியை அவன்தலையிலேற்றிவைத்து
மற்றுமுள்ளபேரையெல்லாம் மரத்துடனேகட்டிவைத்து
அத்தைமகன்உன்புருஷன் அபிமன்னராஜாவே
சத்துவமாய்த்தாலி தரிப்பிக்கப்பண்ணிவைப்பேன்
என்றுசொல்லிசுந்தரியும் ஏசிசபதமிட்டாள்
மாயன்பெருமாளும் மகளாரைத்தான்பார்த்து
தாயேமகளேநீ தார்குழலேசுந்தரியே
பஞ்சவர்களாண்மையெல்லாம் பார்த்துமகிழ்ந்தனம்மா
(அவர்கள்) காடேகுடியிருப்பு கானலேகைவிளக்கு
வீடேதுமில்லை மிகவாழத்தேசமில்லை
நாடேதுமில்லை நல்லமனைதானுமில்லை
காணியுமில்லை கமுகுவளநாடுமில்லை
ஏழையர்களானாலும் இந்தவுலகிலில்லை
ஊருமில்லைபேருமில்லை உற்றாருறவுமில்லை
ஆனபடியாலேதான் அருச்சுனபுரத்தரசன்
தேசத்தழகன் துரியோதனப்பெருமாள்

ஆனையுள்ளான்சேனையுள்ளான் அண்டாதனமுமுள்ளான்
தேசமெங்கும்ஆளவல்லான் தேவகங்கள்பண்ணவல்லா
ன், பஞ்சவர்களைவரையும் பாழ்க்காட்டையோட்டிவிட்டா
அவனுக்கெதிருமில்லை அரசாளஆருமில்லை
ஆனபடியினுள் அம்மாளேகண்ணேயிப்போ
லக்குணற்குயென்றுசொல்லிநாள்முகூர்த்தந்தானுமிட்டே
ஆளவிடந்தேடி அரசுபரித்தேனம்மா
வாழுமிடந்தேடி வாழைப்பதித்தேனம்மா
ஒன்றுல்குறைவுமில்லை உத்தமியேஉந்தனுக்கு
உன்மனதுக்கேற்றபடி உத்தமியேசெய்யுமென்றுர்
அப்போதுசுந்தரியும் ஆனதுயரமுடன்
வந்தாளேதாய்மனைக்கு மாளிகையினுட்புகுந்தாள்
ஆத்தாளைக்கண்டு அடித்துபிரண்டழுதாள்
அலமேலுமங்கையரே ஆட்டிடையன்தேவியரே
மங்கையரேஜானகியே மாட்டிடையன்தேவியரே
இப்படிதான்செய்வாரோ ஈனங்களில்லாமல்
ஜாதிகெட்டவுங்களுக்கு தயவுசற்றுமில்லையோதான்
பணத்துக்கும்பொன்னுக்கும் பரதவித்துநின்றீர்களோ
துரியோதனன்சகுனி சீரைக்கொலைத்தானே
பாவிதுரியோதனன் பணமெத்ததந்தானே
என்னையவன்கொள்ளவந்தால் இளமயிலேயீடழிவான்
வேசிமகன்லக்குணற்கு விரல்கொடுக்கநீதியுண்டோ
தாசிமகன்லக்குணற்கு தலைசாய்க்கநீதியுண்டோ
சுண்டுவிரல்பிடித்து சுத்திவரநீதியுண்டோ
ஒருதாலியென்றிருந்தேன் உலகத்திலுள்ளபடி
இருதாலிநான்தரிக்க எந்தன்விதிவசமோ
சாவேன்கெடுவேன் சமுத்திரத்தில்போய்விழுவேன்
சாண்கயிறுபஞ்சமோ என்னுயிரைமாய்ப்பதற்கு
நஞ்சுமலரியும் கிடையாதோராச்சியத்தில்
பொன்னுங்கயிறெடுத்து பொருந்தகழுத்திலிட்டு
பூப்போலேயென்னுயிரை போக்கவறியேனே
ஆகாப்புலையனுக்கு ஆசைதான்சொன்னீர்களே
வெட்கந்தானில்லையோ மெல்லியரேதாயரே
திக்கற்றவுங்களுக்கு தெய்வந்துணையாமோ
வயிற்றைக்கிழித்துநான் வரஞ்ஞளைவாங்கிவைப்பேன்
இருவரையுங்கொன்று எமலோகமோட்டிடுவேன்

என்றுசொல்லிசுந்தரியும் இட்டாள்சபதமெல்லாம்
மகள்முகத்தைப்பார்த்தாளே மங்கையலர்மேலும்
என்மகளேசுந்தரியே இந்தவகைநானறியேன்
கலியாணபேச்சுகளைக் காதிலேயுங்கேட்டறியேன்
துரியோதனன்சேனை திரள்வந்ததென்றூர்கள்
வந்ததுவும்நான்கேட்டேன் மறுவார்த்தைநானறியேன்
பெண்வந்துகேட்ட பேச்சுகளைநானறியேன்
என்றுசொல்லிசுந்தரிக்கு எடுத்துரைத்தாள்லட்சுமியும்
நல்லதுநல்லதென்று நடந்தாளேசுந்தரியும்
தாதியுடன்கூட தன்மனைக்குவந்துவிட்டாள்
மாணிக்கத்தண்டிலேறி வந்தாளேசுந்தரியும்
அரண்மனைக்குவந்து ஆசனத்தின்மீதிருந்து
ஐந்துபேர்தாதிகளை அண்டையிலேதானழைத்து
ஆலோசனைசெய்து ஆங்காரக்கோபமுடன்
அபிமன்னராசனுக்கு ஆளனுப்பவேணுமென்று
ஓலையெழுதவென்று உத்தாரவுசொன்னாளே
தாதிகளுமப்போது சம்மதித்துக்கொண்டார்கள்

சுந்தரி அபிமன்னனுக்கு ஓலையெழுதுதல்.

---

ஓலையெழுதவென்று உத்தமியாள்சுந்தரியும்
வண்ணக்குருத்தோலை வாரியவளொப்பமிட்டு
ஈழப்பனையோலை இருபக்கங்காம்பரிந்து
தாளிப்பனையோலை தலைபக்கங்காம்பரிந்து
விநாயகரைப்பூசைபண்ணி விக்கினரைத்தோத்தரித்து
சிவசிவாவென்று சிவனாரைத்தோத்தரித்து
வேலுமயிலுடைய வேலவரைத்தோத்தரித்து
வந்தெனக்குமுன்னடவாய் வள்ளிமணவாளா
மாயோன்மருமகனே மலர்ப்பாதந்தெண்டனிட்டேன்
மாமன்மாரைவளுக்கும் மலர்ப்பாதம்தெண்டனிட்டேன்
அத்தைதுரோபதைக்கு அடிவணங்கிதெண்டனிட்டேன்
மாமிசுபத்திரைக்கு மனமிரங்கிதெண்டனிட்டேன்
மைத்துனரேயுன்பாதம் மலர்தூவிதெண்டனிட்டேன்
அபிமன்னராஜனுக்கு அடிவணங்கிதெண்டனிட்டேன்
ஓலையெழுதுகைக்கு உகமையென்றுநானறியேன்
வாசகந்தானெழுத வகையறியேன்மைத்துனரே

என்றுசொல்லிசுந்தரியும் எழுதுகிருள்வக்கணையாய்
தேசத்தழகுமன்னன் துரியோதனன்சகுனி
கர்னனுடன்சேனே கடல்போல் நிறைந்துவந்து
வல்லமைகள்பேசியெங்கள் மாயவரைப்பெண்கேட்டு
நல்லமுகூர்த்தம் ராசிகளுந்தான்பார்த்து
லக்குணற்குவேணுமென்று நாளுமிட்டுக்கொண்டானும்
பொன்மெத்ததாரேருமென்று பெருமாளை தான்கேட்டான்
மன்னர்பெருமாளும் மதிமயங்கியப்போது
செல்வப்பெருமாளும் திரவியத்தைவாங்கிவிட்டார்
பொன்னைமெத்தவாங்கி பெருமாளுஞ்சம்மதித்து
என்னையந்தலக்குணற்கு இசைந்துகொடுக்கவேதான்
பகல்முகூர்த்தமென்றுசொல்லி பாக்குகள்தான்மாற்றி
இன்றைக்குஎட்டாநாள் இசைந்தசுக்ரவாரமென்று
பெண்முகூர்த்தமிட்டு போனன் துரியனுமே
தேசத்தழகுமன்னன் துரியனும்போனபின்பு
சொல்லிஞளெந்தனுக்கு தோழியவள்செங்கழனி
செங்கழனிசொல்லவேநான் சித்தங்கரைந்தழுதேன்
அப்போதுமாயாண்டை அடித்துப்புரண்டழுதேன்
ஏசாதும்யேசி எண்ணிக்கையில்லாமல்
பேசாதும்பேசி பெருமாளுடன்சண்டையிட்டேன்
என்னசண்டைசெய்தாலும் ஏறெடுத்துப்பார்க்கவில்லை
என்தகப்பன்முன்னுக இட்டேன்சபதமெல்லாம்
அச்சுதனூர்நகரம் ஆனதுவாரகையும்
பரிசுத்தமாகச்சுட்டு பாழாக்கிபோட்டிடுவேன்
சுட்டுக்கரியாக்கி சூரைகளாடிவிப்பேன்
எட்டுதலைலக்குணனை எட்டிமயிர்பிடித்து
கொள்ளவந்தலக்குணனை குடிமைதலைசிரைத்து
கள்ளன்திருடனைத்தான் கடுகதலைசிரைத்து
அபிமன்னர்வாளாலே ஐந்துகுடுமிவிட்டு
அரசானிக்காலோட அவனையுங்கட்டிவைத்து
ஆவின்சாணிகொண்டுவந்தவன் தலையிலப்பிவைத்து
ஆயிரம்பெருந்திரியால் அவன்தலையில்விளக்கேற்றி
மணைமேலேதானிருந்து மைத்துனரேயுன்கையாலே
மங்கிலியங்கட்டி மகிழ்ந்திருப்பேனென்றுசொல்லி

சபதங்கள்தானுமிட்டு தாய்மனைக்குநான்போனேன்
சண்டைமெத்தநான்கொடுத்தேன் தாயாரறியேனென்று
சத்தியங்கூறினாள் தாயாரறியேனென்று
பின்னையுமெத்தமெத்தப் பேசிச்சபதமிட்டேன்
சபதமழியாதே தயவாகமைத்துனரே
சிவசிவாமைத்துனரே செய்தருளுமங்கிலியம்
வந்துநீரென்னையிப்போ மங்கிலியங்கட்டுமென்றாள்
பள்ளிக்கூடந்தனிலே இருந்துபடித்தோமே
வள்ளிக்கொடிபோலே வளர்ந்திருந்தேனப்போது
பஞ்சைச்சிறிக்கியைப்போல் பத்தாவேநானிருந்தேன்
கொஞ்சச்சிரிக்கியைப்போல் கூடத்திரிந்தேனே
கரிகுச்சிபோலே கடிகித்திரிந்தேனே
அப்படிதானெண்ணாதே அபிமன்னராஜாவே
வளர்ந்தேன்சமைந்தேன் வடிவுமிகவானேன்
மயிரழகைகண்டாலே மயங்குவாய்மைத்துனரே
கொண்டையழகைக்கண்டால் கொற்றவனேநீதறியாய்
நெற்றியழகுகண்டால் நீபொறுக்காய்மைத்துனரே
மூக்கழகைக்கண்டாலே மூர்ச்சையாய் நீவிழுவாய்
கண்ணழகைக்கண்டாலே களைத்திடுவாய்மைத்துனரே
கண்புருவம்ரெண்டழகும் காமனார்வில்லதுபோல்
மேற்புருவமிரண்டும் வேப்பிலைச்சாயலைப்போல்
விண்ணவரைமயக்கும் விழிகள்சேல்கெண்டையைப்போ[ல்
சீவிமுடித்தகொண்டை சிறுத்தபனம்பழம்போல்
மன்னவரைத்தான்மயக்கும் மதிமுகந்தன்னழகும்
மன்னமதுரெண்டும் காமன்கடைந்தாற்போல்
வடிவானகாதிரண்டும் பள்ளிக்கொடியதுபோல்
கூறியமூக்கிரண்டும் குமிழம்பழமதுபோல்
வாயழகைக்கண்டால் மயங்குவாய்மைத்துனரே
செம்முருக்கம்பூவதுபோல் சிவந்தவிதழழகும்
பல்வரிசையாணி பதித்தமுத்துபோலிருக்கும்
கழுத்தடிகள்தன்னழகு கடைந்தசங்குபோலிருக்கும்
தோளழகுமைத்துனரே சொல்லுகிறேனீர்கேளீர்
மூங்கிற்குருத்ததுபோல் மூளைத்தயிருதோளழகும்
கையழகுசெங்கரும்பு போலேகனத்திருக்கும்

மார்பழகைச்சொல்லுகிறேன் மைத்துனரே நீரறியும்
அகண்டமணிமார்பும் ஆபரணப்பூஷணமும்
திரண்டஸ்தனமிரண்டும் செண்டாணபந்ததுபோல்
அடிக்கொண்டெழும்பியது அமிர்தகலசம்போல்
ஒப்புடனே நானும ஒளிவாயிருக்கிறேன்காண்
மட்டிடப்போகாது மைத்துனரேயென்னழகு
ஆலிலைப்போலாக அமர்ந்தசிறுவயிறும்
இடையழகுசொல்ல எனக்குத்தெரியாது
சிங்கத்திடையென்று செப்புவார்தோழியர்கள்
இருதொடையிரண்டழகும் இளவாழைத்தண்டதுபோல்
நடையழகுமைத்துனரே நலல அன்னம்போலிருக்கும்
முழங்காலின்பேரழகோ மூனைத்திராசுபோலிருக்கும்
கணுக்காலின்சீரழகு கனத்தவிரல்போலிருக்கும்
குதிக்காலின்பேரழகு குவிந்ததெண்டுபோலிருக்கும்
பொருந்தியபாதமிரண்டும் புத்தகம்போலிருக்கும்
திருந்தியவிரலனைத்தும் செப்பமுடியாது
பவழம்பதிந்தாற்போல் பாதவிரலழகும்
மைத்துனரே நீர்வந்தால் மயங்கிவிழுந்திடுவீர்
அரம்பையைப்பார்க்கிலும் அதிக அழகாயிருக்கும்
மேனகைதிலோர்த்தமையும் மெல்லியெனக்கீடலவே
மன்மதன்தேவியைவிட மற்றுமழகாயிருப்பேன்
இப்படியாய்நான்வளர்ந்து இருக்கிறேன்பத்தாவே
கொஞ்சமென்றுபாராதே கோபங்கள்வையாதே
பஞ்சைசிறிக்கியென்று பாராதேபத்தாவே
உம்மைநினைந்து உமதுகணையாழியைநான்
கண்களோடொத்தி களித்துபடுத்திருப்பேன்
இப்படியாய்ச்சொல்லி எழுதினாள் ஓலையிலே
அவ்வேடுவிட்டு மறுவேடுதானெடுத்து
கோபித்தெழுதுகிறாள் கோபாலன்றன்மகளும்
பெருமாள்வயிற்றிலே பெண்ணாப்பிறந்தேனே
அருமைகுலைந்தேனே ஆக்கினைக்குஉள்ளானேன்
உளுத்தமாமானேன் உள்ளூருச்செக்கானேன்
பட்டமாமானேன் பாழூருச்செக்கானேன்
கட்டைமாமானேன் கன்றுகட்டுந்தும்பானேன்

# அபிமன்னன் சுந்தரிமாலை.

கெட்டுமரமானேன் கேடுகெட்டகொம்பானேன்
மட்டைமரமானேன் மாடுகட்டுந்தும்பானேன்
எட்டிமரமானேன் எல்லைநட்டகல்லானேன்
காட்டிலேகாய்ந்த நிலவானேன்கண்மணியே
ஏட்டுப்புறத்திலே எழுதினேன்கண்மணியே
நாட்டுப்புறத்திலே நட்டநடவானேன்
ஆற்றிற்கரைத்த புளியானேன் ஆணழகா
சேற்றிற்கவிழ்த்த தேனானேன்தேர்வேந்தா
விழலுக்கிறைத்த நீரானேன்வித்தகனே
கானலுக்குப்பெய்ந்த மழையானேன்கர்த்தாவே
அங்காடிக்கிட்ட பதரானேன் ஆண்டவனே
இடையன்கொம்பானேன் என்னுடையபத்தாவே
மடையன்வெட்டுங்கொம்பானேன் மன்னர்பெருமாளே
தாய்தகப்பனென்னை சதிசெய்துவிட்டார்கள்
நீரிப்போவந்தால் நிற்பேன் நிலைத்திருப்பேன்
வாராமற்போனால் மாண்டிடுவேன்மைத்துனரே
என்னுணமைத்துனரே என்தகப்பன்தன்னுண
போகமனம்வருமோ புத்திகெட்டுபோனேனே
ஓலைகண்டபோதேதான் ஓடிவாமைத்துனரே
ஆகாப்புலையன் அழுவானரண்மனையில்
நீதிநான்சொன்ன நிண்ணயங்கள்தப்பாது
நாளையதினந்தானே நடந்தோடிவாருமென்றாள்
வாராமல்நீயிருந்தால் மானிடர்களெல்லோரும்
இருதாலிகட்டியென்று ஏசுவாரென்னையுந்தான்
நம்முடையசாதியிலே நடக்குமோராசாவே
புருஷனொருத்தனென்று பூரித்தேன்ராசாவே
புருஷனிருவனென்று பிரித்தானே ஆண்டவனும்
அதுவுந்தானில்லாமல் அபிமன்னராசாவே
கொண்டபெண்விட்டாலும் குறித்தபெண்விடுவாரோ
பெண்டைவிட்டானென்று பேச்சேச்சுமாகிவிடும்
கர்த்தாவேமைத்துனரே கடுகவேவந்திடுங்காண்
லக்குணனைக்கொண்டு ரணபேரிபோட்டுவைப்பேன்
அவனையும்பிடித்துவந்து அரசானிக்காலோடே
சிக்கெனகாலில்கட்டி சிரசைந்துகுடுமைவிட்டு

முடிக்குடிமைதான்சிரைத்துமூன்றுவிளக்கேற்றிவைப்பே
ன், சபைமன்னர்பார்த்திருக்க தலையிலேசாணிவைத்து
ஆயிரந்திரிபோட்டு அணிவிளக்கேற்றிவைப்பேன்
பார்த்திருக்கத்தாலிகட்டிபாவிப்பேனென்றுசொன்னேன்
நேர்த்தியாய்த்தாலிகட்டி நிர்வகிப்பேன் இப்போது
சொன்னசபதமது சும்மா அழியாமல்
மன்னவரேநான்சொன்ன வார்த்தையைத்தள்ளாமல்
என்னுயிதுவென்று என்புருஷர்மைத்துனரே
ஆலோசியாமலே அரைக்ஷணத்திலிங்குவந்து
மன்னவரேநீர்வந்து மங்கிலியந்தான்தரியும்
என்றுசொல்லிசுந்தரியும் எழுதினளோலையிலே
சுத்தமுடனே சுருளோலைதான்சுருட்டி
ஒப்பமுடன்போட்டு உறுதியுடன்தான்சுருட்டி
கடையோலையிட்டுக் கணையாழிமோதிரத்தால்
அரைக்காலேமுத்திரையும் ஆரணங்குதான்போட்டு
ஒருச்சுருளை வைத்து உத்தமியுமப்போது
செப்பமுடன்சுந்தரியும் சீக்கிரமாய்தானடந்து
வடக்குமுகமாக வந்துநின்றுமங்கையரும்
சிவசிவாவென்றுசொல்லி செபித்தாளேமந்திரத்தை
பாட்டனைத்தானினைத்து பத்தியுடன்றான்பணிந்தாள்

வாயுபகவான் சுந்தரியிடம் வருவது.

வடக்கேவெகுதூரம் வாயுதேவன்றான்கேட்டு
பொட்டெனவேயோடிவந்து புகழ்பேத்திமுன்நின்றான்
பாட்டனைத்தான்பார்த்துப் பைங்கொடியுந்தெண்டனிட்
வந்தீரோயென்பாட்டா மனதுகுளிர்ந்துவிட [டாள்
உபசாரஞ்சொல்லி உட்காரவைத்தாளாம்
பேத்தியைத்தான்பார்த்துப் பேசுவாரப்பொழுது
என்னைநினைக்கவந்த காரணமேன்பேத்தியரே
வல்லவியேசொல்லுமென்று வாயுராசன்றான்கேட்க
சொன்னாளேசுந்தரியும் துரியோதனன் துடுக்கை
பெண்கேட்கவந்ததுவும் பெருமாளிசைந்ததுவும்
அருச்சுனனாரென்மாமன் அவருடைபுத்திரனர்
அபிமன்னராஜருமே அறியவேவேண்டுமென்று

ஓலையெழுதிவைத்து உம்மைநினைத்தேனென்றாள்
என்றுசொல்லிசுந்தரியும் எடுத்துரைத்தாள்பாட்டனுக்கு
வாயுபகவானுஞ் சொல்வது.

---

அந்தவிசேஷம் அதுகேட்டுவாயுமன்னன்
சுந்தரியைப்பார்த்து சொல்லுவாள்பாட்டனுமே
பஞ்சவர்கள்காடுறைந்து பணங்காசுமில்லாமல்
நாடுவிட்டுக்காடுறைந்து நல்லபதியிழந்து
வில்லிழந்துவாளிழந்து வீமாபுரமிழந்து
காய்கிழங்குதின்று காட்டில்திரிகின்றார்
சீமையுமில்லை செலவழிக்கச்செம்பொன்னில்லை
நாடுமில்லைநகரமில்லை உற்றாருறவுமில்லை
படுக்கவிடமுமில்லை பள்ளிகொள்ளத்தாவுமில்லை
சுபத்திரையாளுன்மாமி சோற்றுக்கழுகிறாள்
தரித்திரப்பட்டுத் தடமாட்டமாயிருக்க
அபிமனுக்குவாக்குப்பட்டாய் ஆகாதுசுந்தரியே
துரியோதனன்வீட்டில் திரவியங்கள்மெத்தவுண்டு
கற்புக்குழலாளே காராம்பசுந்தேனே
இத்தனையும்பார்த்து இசைந்தானேஉன்தகப்பன்
வைக்குமிடமறிந்து வாழைபதித்தாண்டி
பூக்குமிடமறிந்து புன்னைபதித்தாண்டி
காய்க்குமிடமறிந்து கமுகுபதித்தாண்டி
உண்ணநல்லசோறுமுண்டு உடுக்கநல்லஆடையுண்டு
தின்னநல்லபாக்குமுண்டு செலவழிக்கச்செம்பொனுண்டு
எனக்குமெத்தசந்தோஷம் ஏற்றமுள்ளமாமயிலே
உத்தமியேயுந்தனுக்கு உறுதிகண்டாய்சுந்தரியே
என்றுமெத்தசொல்லி யெடுத்துரைத்தான்பாட்டனுமே
சுந்தரி கோபிப்பது.

---

சுந்தரியுந்தான்கெட்டு சுறுக்காயெழுந்திருந்து
கண்கள்சிவந்தாளே காந்தாளமானாளே
சந்திராயுதமெடுத்தாள் தன்பாட்டன்தலையறுக்க
தலையையறுத்து சமுத்திரத்திற்போட்டிடுவேன்
மார்பைப்பிளந்து வைகுந்தஞ்சேர்த்திடுவேன்
பாட்டனென்றுபாரேநான் பறக்கடிப்பேனுன் னுயிரை
திட்டமுடன்வாளுருவி சிரசைத்துணிக்கவந்தாள்



## வாயுபகவான் சொல்லுவது.

---

கண்டானேவாயுராசன் கன்னியுடசத்துவத்தை
அல்லவடிபேத்தியரே அறியாமற்சொன்னனடி
உன்-மனதறியச்சொன்னேன்காண் மதியுள்ளசுந்தரியே
பரியாசஞ்சொன்னேனடி பைங்கிளியேசுந்தரியே
நல்லதென்றுசொல்வாயோ நான்மாட்டேனென்பாயோ
வல்லவியேயுந்தன் மனமறியச்சொன்னேனடி
கோபித்துக்கொள்ளாதே கோபாலன்றன்மகளே
போகவிடைதாரும் பூங்கனியேசுந்தரியே
ஆவியழியுதடி அடித்தொடைகள்நோகுதடி
நடக்கவுமாட்டேனடி நான்போகேன்நாயகியே
வயிற்றிற்பசிக்குதடி வாயுலர்ந்துபோகுதடி
வயிற்றுக்குசோறுமிட்டு மறுசோறுமூட்டைகட்டி
போகப்பெலன்கொடுத்தால் போவேன்காண்சுந்தரியே
இப்படியாய்ச்சொல்லி எடுத்துரைத்தான்வாயுதேவன்
சொன்னவிசேஷமெல்லாம் தோகையவள்தான்கேட்டு
சற்றேநகைத்தருளித் தாதிகளைத்தானழைத்து
ஆயிரக்கல அரிசி அடிசில்சமையுமென்றாள்
கட்டமுதுக்காயிரக்கலம் கன்னிசமையுமென்றாள்
அப்படியேதாதியர்கள் அடிசில்சமைத்தார்கள்
செப்பமுடன்நற்கறிகள் திரளாய்சமைத்தார்கள்
வாழையிலைபோட்டு வட்டித்தாள்பாட்டனுக்கு
கொட்டினாள்கோபுரம்போல் குவித்தாள்மலைபோலே
சிறுமலைகள்போலே சேரவைத்தாள்நற்கறிகள்
அந்தமுடன்சுந்தரியும் அமுதுபடைத்தாளாம்
பாட்டனையும்சுந்தரிதான் பசியாறுமென்றுசொன்னான்
வந்தானமுதுமுன்னே வாயுராசன்பாட்டனவன்
பிசைந்தானேசோற்றையெல்லாம்பிடித்தானேமூன்றுபிடி
மூன்றுபிடியாய்ப்பிடித்து உருட்டிமுகம்பார்த்து
சிவனேதுணையென்று விழுங்கிவிட்டான்வாயுராசன்
கஞ்சியுஞ்சோறுமாக கால்வயிறு ஆச்சுதுகாண்
கட்டமுதுசோற்றைக் கனமாய்ப்படையுமென்றான்
மூவாயிரக்கல அரிசி சமையுமென்றாள்மூப்பிகளும்
சமைத்துப்படைத்தார்கள் தாதிசமர்த்துகளும் [ம்
மூவருக்கும்பிரீதியென்று விழுங்கினான்சோற்றையெல்லா

யாவருக்கும்பிரீதியென்று அன்பாய்ப்புசித்தபின்பு
கைகழுவிவாய்துடைத்து கடுகிவந்தான்பாட்டனுமே
அரிபிளவுவெற்றிலையும் அள்ளிரொம்பகைகொடுத்தாள்
ஓலைச்சுருளெடுத்து உத்தமியுந்தான்கொடுத்தாள்
போடாநீபாட்டாவென்று போற்றிவிடைகொடுத்தாள்
வாயுராசன்வாங்கி மடியிலேவைத்துக்கொண்டு
மறுவார்த்தைசொல்லுகிறான் வஞ்சியாள்சுந்தரிக்கும்
அடிபெண்ணேஓலையை அவன்கையில்நான்கொடுத்தால்
ஆக்கினைகள்செய்து அறுப்பாண்டிவாளாலே
பொல்லாதபயலவன் பூங்கொடியேயுன்புருஷன்
கிட்டநின்றுநான்கொடுத்தால் வெட்டியெறிந்திடுவேன்
கண்ணுக்குக்காணாமல் காற்றூடேபோட்டிடுவேன்
ஓலையைநான்போட்டு ஓடியேபோய்விடுவேன்
சம்மதியோஉந்தனுக்கு தயவாகச்சொல்லுமென்றாள்
மாலைக்குழலாளும் மறுவார்த்தைசொல்லுகிறாள்
இந்தச்சுருளோலை எப்படிதானாலும்
அந்தமுள்ளமைத்துனனார் அவர்கையிலகப்படவே
கொண்டுபோய்ஓலையைத்தான் கொடுமென்றாள்சுந்தரியும்
நல்லதென்றுசம்மதித்துநடப்போமென்றெழுந்திருந்தார்
கட்டமுதுமூட்டைதன்னை கைக்கொடுத்ததாயிரம்பேர்
சுண்டுவிரலிலே தூக்கிட்டுக்கொண்டானே
போகிறேநான்பேத்தியரே போய்வாருமென்றுசொன்னா
பாட்டனைப்பார்த்துப் பட்சமுடன்தெண்டனிட்டாள் [ள்
அப்போதுதானும் அடியெடுத்துவைக்கலுற்றான்
தூக்கிஅடிவைக்க ஏழரைநாழிசெல்லும்
இருப்பானெழுந்திருப்பான் இளப்பாறித்தான்போவான்
பார்த்தாளேசுந்தரியும் பாட்டன்பயணமெல்லாம்
ஏதடாஎன்பாட்டா இப்படிக்குநீநடந்தால்
ஆனைகுந்திபட்டணமும் ஆறுமாதம்பயணமாச்சே
என்சபதமெல்லாம் எரிந்துபுகைந்துவிடும்
அப்பாலவர்வந்து ஆகிறகாரியமேன்
மோசமும்பண்ண இசைந்தாயோயென்பாட்டா
நாளைஅவரறிந்தால் நடக்குமோகாரியங்கள்
இல்லாதேபோனால் என்னுயிரழிந்துவிடும்
என்றுசொல்லிசுந்தரியும் இருந்தாள் துயரமுடன்

## வாயுராஜன் போகிறது.

அப்போதுவாயுராஜன் அவள்முகத்தைத்தான்பார்த்து
மாலைக்குழலாளே மனுவொன்றுநீகொடுத்து
இப்போதேதானெழும்பி ஏகமாய்நான்வளர்ந்து
ஐந்தாறுநாழிகையில் அபிமனிடம்போய்ச்சேர்வேன்
என்றுசொல்லிபாட்டன் எடுத்துரைத்தான்சுந்தரிமுன்
ஒன்றுக்குமஞ்சாதே உத்தமியேயென்றுசொல்லி
ஓலையைக்கண்டால் ஒருநொடியில்தான்வருவான்
சிமிட்டிவிழிக்குமுன்னே துரியோதனன்படையை
அமட்டி அரைக்கணத்தில் அருத்துப்பலியிடுவான்
உன்னைமணம்புணர்ந்து உலகாள்வான்கண்டாயே
என்றுசொல்லிபாட்டன் எழுந்திருந்துதீவிரமாய்
கட்டழுதுவாங்கி கடுகிநடந்தானே
அண்டங்கிடுகிடென்ன ஆகாயந்தானதிர
எண்டிசையுந்தானடுங்க எமலோகந்தத்தளிக்க
காடுகடந்து கரியமலைதான்கடந்து
நாடுகடந்து நல்லமனைதான்கடந்து
ஆறுகடந்து அரியவனங்கடந்து
இஞ்சிவனங்கடந்து எலுமிச்சையுட்புகுந்து
மஞ்சள்வனங்கடந்து மாதுளையுட்புகுந்து
ஆனைகுந்திபட்டணத்தே அடுத்தானேவாயுராஜன்
மாந்தோப்புச்சாலையிலே வந்துநின்றானப்போது
ஆனைகுந்திபட்டணம்வாழ் அபிமன்னராஜதுரை
தோழயார்தன்னுடனே துணையாகஆயிரம்பேர்
உண்டுவில்லுதானெடுத்து உத்தமனார்தன்மகனும்
அம்பெடுத்துவில்லெடுத்து அரியவாள்கையிலெடுத்து
தாயாரைசுற்றிவந்து சாஷ்டாங்கதெண்டனிட்டு
வேட்டைக்குப்போக விடைதாருமென்றுசொன்னான்
அப்போசுபத்திரையும் அபிமன்னனைத்தான்வாழ்த்தி
போய்வாருமென்றுசொல்லி புகழ்ந்துவிடைகொடுத்தாள்

## அபிமன்னன் வேட்டையாடுகிறது.

அங்கேவிடைபெற்று அபிமன்னன்தோழருடன்
கச்சுகளும்தட்டிகளும் கட்டியபிமன்னனுந்தான்
சந்திரகாந்திதட்டிகட்டி தாமரைப்பூசுங்குவிட்டு
இந்திராதிதேவரெல்லாம் இவனைவணங்குவார்கள்

வெளியேபுறப்பட்டு வேட்டைக்குத்தான்போனான்
நாடுகடந்து நல்லவேட்டையாடுகிறார்
காடைகவுதாரி கலைமான்கடம்பைகளும்
மஞ்சட்குருவிகளும் மயிலும்குயிலினமும்
விந்தைவிந்தைபட்சிகளும் விளையாடிதான்பிடித்தான்
கொண்டலாத்திவல்லூறு கோலமுடன்தான்பிடித்து
ஆற்றருகேவந்து அபிமன்னராசாவும்
குப்பிகத்துபர்யமணல் குறித்திடும்வேளையிலே
மாயன்பெருமாள் மனதிலொன்றுதானினைந்து
வேட்டையாடும்பாலனுட வீரியத்தைபார்ப்போமென்று
கிளிபிள்ளையாகவே கிருஷ்ணரெழும்பிவந்தார்
அபிமன்னர்தானிருக்கும் அந்தஅடவிவந்தார்
வந்தாற்பறந்து மரத்தில்கிளியாயிருந்து
அதனையுங்கண்டான் அபிமன்னன் அப்போது
இதனைப்பிடிக்கவென்று ஏறிட்டாள்வில்கணையை
உண்டைவில்லைத்தானெடுத்து ஊடுருகத்தொடுத்தான்
கிளிபிள்ளைதானும் கிளம்பிற்று அப்பொழுது
கிளம்பிப்பறக்கிறது கேசரிமார்க்கமதாய்
பாலனபிமனும் பாங்குடனப்பொழுது
வல்லூறுடேகையை வானத்தில்போகவிட்டான்
அதுவுமிதுவும் அந்தரத்தில்தான்பறக்க
அபிமன்னராசாவும் அதன்பின்னேதான்போனான்
தோழருமன்னவனும் தொடர்ந்தாற்போல்தான்போனான்
கிளிப்பிள்ளைதானும் கெம்பிரமாய்த்தான்பறந்து
வாயுராசன்காட்டில் தொடர்ந்துபறந்ததுகாண்
வல்லூறுடேகைகளும் வலுவாய்ப்பறந்தது
பறந்துதொடரவே பதுங்கிற்று அக்கிளியும்
மாயமாய்த்தான்பறந்து மறையோனாய்மாயவனும்
பாட்டைவழியிலே வந்திருந்தாரப்பொழுது
கிளிப்பிள்ளைபின்னாக கிட்டிவந்தவல்லூறும்
மாயமாய்தான்போக மரத்தின்மேல்நின்றது
இதுகள்பிறகே இரைக்கவேதானோடி
அபிமன்னராசாவும் அக்காடேதான்வந்தார்
தோழர்களுமன்னர்களும் சுறுக்காய்நடந்துவந்தார்

அப்போதபிமன்னன் ஆண்கிளியைக்காணுமல்
மெத்தக்கிலேசமாய் விசாரமாய்த்தானிருந்தார்
வல்லூறைக்காணுமல் வாவழைத்தானப்போது
டேகையும் கைமேலே நிண்ணயமாய்வந்தது
அப்போதுபிராமணனை அபிமனுந்தான்கண்டு
இது-ஆருடையபட்டணம் ஐயாவேயென்றுகேட்டான்
துறுவாசன்தன்னுடைய சொல்லரியபட்டணந்தான்
அப்போயெறிபறந்து அபிமன்னராசனுந்தான்
பட்டணத்தையெல்லாம் பாலனுஞ்சூறையிட்டான்
இப்படியாக இருக்கிறவேளையிலே
வழியிலே நின்றுமாயன் மறையோனாய்ப்போகையிலே
எங்கிலுங்காணுமல் என்செய்வோமென்றிருக்க
அப்போபிராமணரும் அவ்வழிதான்வாவே
வாயுராசன்கண்டு மறையோனைத்தெண்டனிட்டு
ஐயாபிராமணரே அபிமன்னனைக்காணீரோ
என்றுசொல்லிக்கேட்க எடுத்துரைப்பாரப்போது
ஆரோதெரியாதையா அறியாதபிள்ளையுமாய்
பார்த்தாலும்பாலகன்போல் பாய்ந்தாலும்புலியதுபோல்
வீரரையுஞ்சூரரையும் வென்றிடுவான்மன்னவரை
பொல்லாதபையலவன் போர்கள்கெலித்திடுவான்
எதிர்த்தவரைக்கொன்று இருபிளவாய்போட்டிடுவான்
கண்டவரைவெட்டி கழுவிலேஏற்றிவைப்பான்
அத்தனைக்கும்வல்லவனாய் அறியாதபையலுமாய்
துறுவாசன்பட்டணத்தைச் சூறையடிக்கின்றான்
நான்-யாசகத்துக்கென்று அறியாமல்வந்துவிட்டேன்
கண்டேன் அவனையங்கே கலங்கிப்பயந்துவந்தேன்
அவனாரோதெரியாதையா அறிந்துமெள்ள நீர்பாரும்
குன்றேறி நீபார்த்துக் குறிப்பாயறியுமென்றார்
என்னத்துக்காக நீர் இப்போதுதேடுகிறீர்
அவனுடையகாரியமேன் அழகா நீருரைப்பீர்

வாயுராசன் சொல்வது.

---

வாயுராசனப்போ வயணமாய்ச்சொல்லலுற்றான்
மாயன்மகள்சுந்தரியாள் வாவிட்டாளென்னையிப்போ
துரியோதனனுடைய செல்வனும்லக்குணற்கு
தன்னைக்கொடுக்கவென்று சம்மதித்துதன்தகப்பன்

பணமெத்தவாங்கியே பரியமிசைத்தானும்
அதுகேட்டுசுந்தரியும் அனலாகத்தான்சீறி
அபிமன்னனைக்கொண்டு அவன்பதியுமிவன்பதியும்
சுட்டுக்கறியாக்கி சூறையிடவேண்டுமென்று
ஓலையெழுதி உளவாயென்கைகொடுத்தாள்
கொண்டுபோய்நீகொடென்றுகொடுத்தாளேயென்கையில்
அதனையான்கொண்டுவந்து அபிமனைத்தேடுகிறேன்
என்றுசொல்லக்கேட்டு எடுத்துரைப்பார்வேதியரும்

வேதியர் சொல்வது.

---

ஆனாலும்நீ அவன் அண்டையிலேபோகாதே
சூரியனை நீநினைத்தால் சுருக்காயும்வெய்யிலில்
வெய்யிலிலேவேர்த்து விடாய்ப்பட்டுத்தான்வருவான்
அவ்வேளை நீபார்த்து விடாய்பட்டுத்தான்வருவான்
மாயமாய்நீபோட்டு மறைந்துபோவென்றுசொன்னான்
அப்படியாய்ச்சொல்லி ஐயர்நடந்துவிட்டார்
வாயுராஜன்தானுமப்போ வளர்ந்துகுன்றுதானேறி
உயரவேதானேறி ஊடுருகத்தான்பார்த்தான்
அப்போதுகண்டு அறிந்தானபிமன்னனென்று
வேதியனார்சொன்ன விசேஷமெல்லாமெய்யென்று
சூரியனைத்தான்பார்த்து சொல்லலுற்றாரப்பொழுது
ஐயாவேஇப்போது அரைநாழிமாத்திரந்தான்
(நீர்) பதினாறுகண்ணாலும் பார்க்கவேவேணுமென்றார்
வாயுராஜனைப்பார்த்து வகுத்துரைப்பார்சூரியனும்
காய்ந்தால்களைவருமோ கட்டழகாயிப்போது
காற்றடங்கிநின்றால் கடும்வெய்யில்யானுவேன்
களையும்தவிர்ப்பும் கடுகெனவேவந்துவிடும்
அப்படியேநீங்களும் அண்ணன்தம்பிதானிருவர்
காதுங்கனிவாயும் கால்நாழிமூடிநின்றால்
நானுமேருட்டியாய் நன்றாயெரிக்கிறேன்பார்
என்றுதான்சொல்லி இதுவேமெய்தானென்று
வாயுராசனப்போ வாய்மூடிதான்மறைந்து
குகையில்மறந்துமப்போ கூடாமல்தானிருந்தார்

## அபிமன்னன் வேட்டையாடிப் பந்தடிக்கிறது.

---

அப்போதபிமனும் அருஞ்சூறைதானடி
வெய்யலிலுங்கானலிலும் மெத்தவெதும்பி நின்றார்
அபிமன்னன்தோழர்களும் ஆனதுரைமார்களும்
மெத்தவெதும்பி விடாய்பட்டார்தண்ணீரின்றி
தண்ணீர்கிடையாமல் தாகவிடாய்தான்களைத்தார்
கண்டானபிமன்னனும் களைப்புண்டுவீழ்ந்தவரை
தாகவிடாய்தீரவென்றார் தண்ணீருங்கிட்டவில்லை
மாயமாய்ப்போகவே செய்தார்மகாதேவர்
எங்குமவர்திரிந்து ஏசலுற்றாற்றருகே
ஆற்றருகேசென்று ஆற்றுவோந்தாகமென்று
அபிமனுந்தோழருமா யாற்றருகேவந்தார்கள்
தண்ணீர்விடாய்தீர்ந்து தாகந்தெளிந்தார்கள்
தாகந்தணிந்தவர்கள் தன்களையுமாறினபின்
குப்புகந்துபாயுமணல் குவித்திடுமணலையெல்லாம்
மணலைகுவித்து மன்னர்களுந்தோழர்களும்
பந்துகளடியே பாலன்விளையாடுவதும்
ஒப்பமுடனொவதும் ஓடியடிப்பதுவும்
நூறுபேர்தோழருமாய் நிற்பாரொருபக்கலிலே
இவன்தானொருபக்கலிலே எகிறியடிப்பதுவும்
சென்றுவிளையாடுவதும் நின்றுவிளையாடுவதும்
ஓடியடிக்கிறதும் ஒருவன்மேற்பாய்கிறதும்
மோதியடிக்கிறதும் மூலைமுகத்தினிற்கிறதும்
வாயுராசன் காற்றடிப்பதும் ஓலையைவிட்டோடுவதும்.

கண்டானேவாயுராசன் காளையுடசத்துவத்தை
பாலனுடசத்துவத்தைப் பார்க்கவேவேண்டுமென்று
வாயுராசன்றானு மலையைவிட்டுத்தானெழும்பி
நான்குதிக்கும்பார்த்தானே நடுவாகநின்றுகொண்டு
ஆற்றின்கரையும் அதினருகேதோப்புகளும்
பார்த்துமேவாயுராசன் பதறியெழுந்திருந்து
மேலாகக்காற்றெடுத்து வெண்பணலாய்த்தானடிக்க
வானமும்பூமிகளும் வளர்ந்திருக்குங்காட்டகத்தே
ஆகாயந்தான்பறக்க அடித்தானேகாற்றாக
காடுமலைகளும் காடிசிங்கம்யானைகளும்

ஓடிவந்துமேல்விழவே உறுதியுடன்காற்றடித்தான்
நூறுபேர்தோழருமே காற்ருேடேதான்பறந்தார்

அபிமன்னன்கோபித்து வாளுருவிப்புறப்படல்.

---

அபிமன்னராசாவும் ஆலோசனைகள்பண்ணி
நின்ருெருவனுமே நெடுமூச்செறிந்தானே
அந்தமலைகளெல்லாம் மாஞ்செடிகளுள்ளதெல்லாம்
ஆண்சிங்கம்யானை அதிலுள்ளமிருகமெல்லாம்
வாளாலேவெட்டி எறிந்தான்மலைமலையாய்
வாயுராசனுக்கிந்த வலுமைவந்தகாரணமேன்
சோதித்தவன்றலையை துணித்திடுவேனென்றுசொல்லி
பூரித்தெழுந்திருந்து புறப்பட்டான்வாளுருவி
வாளாலேவீசுவதும் மலைமரங்கள்சாய்கிறதும்
தோளாலகுவெடுத்துத் தூத்திவருகிறதும்
காற்றுக்கெதிராகக் காவலனூர்வருகிறதை
பார்த்தானேவாயுராசன் பாலன்வருகிறதை
துரியோதனன்படையைச் சேரமடித்திடுவான்
நூற்ருெருவர்தன்முடியை நொடியிலறுத்திடுவான்
பதினெட்டுஅக்ரோணி படையும்பரிகலமும்
கணப்பொழுதில்வெட்டி கைலாசம்போக்கிடுவேன்
அந்தமலைக்காட்டில் அன்பானதோழரெல்லாம்
சிந்தைகலங்கி செடிமரத்தைதான்பிடித்து
பந்துபோலேசுருண்டு படுத்திருந்தாரக்காட்டில்
அப்போதுவாயுராசன் அன்பானஓலையைத்தான்
ஓலைச்சுருளெடுத்து ஓட்டிவிட்டான்காற்ருேடே
ஓலையைவிட்டபின்பு ஓடியேபோனுனே

அபிமன்னன் ஓலையையெடுத்துக்கொண்டுபோகுதல்.

---

அந்தச்சுருளோலை அபிமன்னன்முன்னேவந்து
பந்துபோல்தானெழும்பி பக்கத்தில்நின்றதுகாண்
கண்டானேஓலையைத்தான் காண்டீபன்றன்மகனும்
கணையாழிமுத்திரையும் கடைவோலைசுத்ததுவும்
மணமானசுந்தரிதான் வரவிட்டவோலையென்று
கனமாகதானெடுத்து கனிவாயால்முத்தமிட்டு
கோபித்துவாளுருவி கோபமுள்ளபாலனுமே [ம்
துணித்திடுவேனென்றுசொல்லி தூத்தினுள்பாட்டனையு

பார்த்தானே நாலுதிக்குப் பாட்டனையுங்காணாமல்
போய்விட்டானென்றுசொல்லி பூரித்தான்பாலனுமே
திரும்பிநடந்தானே திக்குதிசைதானடுங்க
தோழன்மார்தங்களுடன் சொல்லவேவேணுமென்று
தேடிப்புறப்பட்டு சேவகரைக்கண்டானே

### அபிமன்னன் தோழருக்குச்சொல்லுதல்.

---

அந்தஅபிமன்னன் அனைவரையுந்தானெழுப்பி
சிந்தைதெளியவைத்து சிவனுரைத்தோத்தரித்து
காற்றிலடிப்பட்டீர்களோ கட்டழகர்தம்பிகளே
வேற்றோலையாகவந்து விழுந்துதடாயென்மேலே
ஓலையைக்கொண்டுநான் உங்களையுந்தேடிவந்தேன்
தப்பிப்பிழைத்தீர்களோ தடமாட்டமாகாமல்
காற்றடித்தபாட்டன் கடலிலேபோயொளித்தான்
ஓலையைப்போட்டுவிட்டு ஓடினனென்பாட்டன்
உங்களையான்பார்க்க வோடிவந்தேனுத்தமரே [னுமே
அரண்மனைக்குப்போவோமென்று அழைத்தானேபால
நல்லதென்றுசொல்லி நடந்தாரரண்மனைக்கு
அம்மாள்சுபத்திரையாள் ஆசாரமண்டபத்தில்
சிங்காதனத்திலே இருந்தாள்சுபத்திரையும்
மன்னவர்கள்பிள்ளைகளும் மாயன்மருமகனும்
அம்மாளைசுத்திவந்து அடிவணங்கிதெண்டனிட்டார்
வாழ்த்திவிடைகொடுத்து மறுசங்கைகேட்டாளே

### அபிமன்னன் தாயாருக்கு ஓலைகொடுப்பது.

---

அப்போதபிமரும் அம்மாளைத்தான்பார்த்து
காற்றோடேதம்பிமார் கண்டெடுத்தாரிவ்வோலை
பார்த்தெனக்குச்சொல்லுமென்று பாலகனுங்கைகொடுத்
அந்தச்சுருள்வாங்கி அம்மாளும்வைத்திருந்தாள் [தான்
பொழுதுபுகுந்ததுகாண் புதுநிலவுங்காயுதப்போ
சலக்கங்கள்தானாடி சந்திசெபம்தான்முடித்து
சாப்பிட்டனைவரும் தம்பிமார்தூங்கினபின்

### சுபத்திரை ஓலையை வாசிப்பது.

---

அம்மாளெழுந்திருந்து அரண்மனையைத்தான்மூடி
ஒருவரையுங்காணாமல் ஓலைச்சுருளெடுத்து

தூண்டாவிளக்குமுன்னே பார்த்தாள்சுபத்திரையும்
உருகிக்கரைந்தழுதாள் உடம்பெல்லாம்புண்ணானாள்[லே
அண்ணனைத்தானினைந்து யறைந்துகொண்டாள்மாமே
கண்ணில்லான்போனுக்கு கலியாணம்வந்ததென்ன
வண்ணமகள்சுந்தரியும் வாழ்க்கைப்படுவாளோ
என்னசெய்வேனென்று ஏங்கிமனந்தளர்ந்தாள்
தம்பியிந்தபேச்சறிந்தால் தரிப்பானோபூமியிலே
அந்தச்சுருளோலைதன்னை அன்பாய்மறையவைத்தாள்
இந்தவிசேஷம் எடுத்துரைக்கப்போகாது
என்றுசுபத்திரையாள் இருந்தாள்மனதில்வைத்து

அபிமன்னன் சொல்வது.

---

பொழுதுவிடிந்தபின்பு போர்மன்னராசாக்கள்
எழுந்திருந்துமுகங்கழுவி ஈஸ்பரைத்தானினைந்து
திருநீறுபூசி சிவனாரைத்தோத்தரித்து
தம்பி அபிமன்னன் சாப்பிட்டபிற்பாடு
வாளபிமன்னனுமே மாதாவைத்தெண்டனிட்டு
தாயேநான்தந்த சுருளோலைவாசகத்தை
நியாயமுடன்சொல்லுமென்று கேட்டானேநற்பாலன்

சுபத்திரை சொல்வது.

---

தாயார்சுபத்திரையும் தம்பிமுகம்பார்த்து
யாருக்கோவந்ததடா மகனாரேயவ்வோலை
மாயமாய்வந்ததடா மகனாரேயவ்வோலை
வாசித்துப்பார்த்தேனடா வகையொன்றுமில்லையடா
கிழித்துமேபோட்டேனென்று சொன்னாள்சுபத்திரையும்
சொன்னவுடன்பாலன் துள்ளியெழுந்திருந்து
கோபித்தெழுந்திருந்து கொக்கரித்துப்பற்கடித்து
தாயாரைக்கோபித்து தம்பிமபிமன்னனுமே
ஓலையைநீதந்தால் உயிருடனேநானிருப்பேன்
தாராமல்நீயிருந்தால் தலையறுத்துமுன்னேவைப்பேன்
(என்று) வாளையுருவியவன் மண்ணிலேதானாட்டி
வாளின்மேல்நான்விழுந்து மடிந்திடுவேன்மாதாவே
தோழன்மார்கண்டுதங்கள் துடைகளுந்தானடுங்க
அண்டங்கிடுகிடென்ன அடித்துடைகள்தானடுங்க
கண்டுசுபத்திரையாள் கைவாளைத்தான்பிடுங்கி

கிழித்தெரிந்தவோலை வருமோதான்கொற்றவனே
பழிக்குப்பிறந்தாயோ பாலகனேஎன்வயிற்றில்
இப்படியாய்ச்சொல்லி எடுத்துரைத்தாளேந்திழையும்
என்னதான்சொன்னாலும் ஏந்திழையேநான்கேளேன்
செத்துமடிந்திடுவேன் உன்சிந்தைகலங்கவேதான்
சௌரியங்கள்பேசி சபதமிட்டான்பாலனுமே
பெற்றசுபத்திரையாள் பிரமைகொண்டாளப்பொழுது

சுபத்திரை ஓலையைக்கொடுப்பது
அபிமன்னன் வாசிப்பது.

---

பார்த்தாள்மகனுடைய பட்சங்களும்பத்திரமும்
காற்றுடனோடிவந்த ஓலையவன்கைக்கொடுத்தாள்
ஓலைச்சுருள்விரித்து பார்த்தானேஉத்தமனும்
மச்சினியாள்தானெழுதி வரவிட்டவாசகத்தை
நிச்சயமாய்க்கண்டு நிதானமிட்டான்பாலனுமே
தாயாரைத்தான்பார்த்து தம்பியபிமன்னனுமே
இப்படிதான்செய்வானோ என்தாயேஉன்தமையன்

அபிமன்னன் சொல்வது.

---

காணியிழந்தாலும் கற்பழியப்போமோதான்
இடைப்புத்திபிடரியிலே என்பாரேவையகத்தில்
மடைப்புத்தியாலேயல்லோ மாராட்டஞ்செய்தானே
தென்னமுடிமன்னன் துரியோதனன்பாவி
தன்மகன்லக்குணனை தலையெடுக்கப்பார்த்தானே
பூமியிழந்தாலும் பெண்டிழந்துபோவேனோ
காணியிழந்தாலும் காதலியைவிடுவேனோ
ரோஷமெனக்கில்லையோதான் லோகமெல்லாமேசாரோ
கொண்டபெண்ணையொருவருக்குக் கொடுப்பாரோவையக
வண்டார்குழலாளும் மறுதாலிகட்டுவாளோ [த்தில்
என்தகப்பனருச்சுனன்தான் இந்தபிழைகேட்டாக்கால்
உன்னையுங்கொன்று உலகமெல்லாந்தான்கொளுத்தி
அந்ததுரியோதனனை அனைவரையுந்தானறுப்பான்
தீயாயெரிப்பானே திரள்விசையனென்தகப்பன்
இப்படியென்று எடுத்துரைத்தான்பாலனுமே
இடையனுடன்பிறந்து இளப்பமாய்ப்போனாயே
மடையனுடன்பிறந்து மதியில்லாளானாயே

நான்போகஎன்தாயே நல்லவிடைதாருமம்மாள்
என்றுசொல்லிபாலனுமே எதிர்நின்றுகேட்டானே

சுபத்திரை சொல்வது.

---

தாயார்சுபத்திரையும் தம்பிமுகம்நோக்கி
மாயனுடசுந்தரியாள் வரவழைத்தாள் ஓலைதன்னை
மெய்விசேஷம்பொய்விசேஷம் வேணதெல்லாந்தானெ
கைகலக்கவேண்டி கவடோலை அனுப்பிவைத்தாள் [முதி
இந்தவிசேஷமெல்லாம் என்மனதுதானறிய
யான்போயறிந்து அனுப்புகிறேனுன்னையென்றாள்
இந்தவிசேஷம் இதுமெய்யோதாயாரே
அப்படியேசெய்கிறேன் என்றாள்சுபத்திரையும்

சுபத்திரை துவாரகைக்குப் பயணப்படல்.

---

பாங்கிகளைத்தானழைத்து பல்லக்குஜோடியென்றாள்
அப்படியேதாதியர்கள் அலங்கரித்துவைத்தார்கள்
அப்போசுபத்திரையும் அன்பாகத்தானெழுந்து
ஆயிரம்பேர்தாதிகளும் அம்மாள்சுபத்திரையும்
நேயமுடன்கூடி நிதானமிட்டாரப்போது
துவாரகாபுரிக்கு துரிதமிட்டாரப்போது
அம்மாள்சுபத்திரையும் ஏறினாள்தண்டிகைமேல்
பயணம்பயணமென்று பாரத்தமுக்கடித்தார்
அதிரவேமேளமெல்லாம் அடித்தார்களந்நேரம்
பேய்க்காளம்பூரிகையும் பிடித்தார்களப்பொழுது
ஆலவட்டம்வீசுவதும் அகிலம்பிடிக்கிறதும்
மேல்வட்டம்வீசிவர வெண்சாமரைபோடுவதும்
ஆயிரம்பேர்தாதியரும் அருகேநடந்துவர

சுபத்திரை அபிமன்னனுக்குப் புத்திசொல்வது.

---

தம்பியபிமன்னனையுந் தன்னருகேதானழைத்து
அப்பாமகனேநீ அறிவுள்ளகண்மணியே
ஒப்பமுடன்போய்வாறேன் உத்தமனேநீகேளும்
அரண்மனைவாசல்விட்டு அப்புறத்தேபோகாதே
தோழன்மார்தன்னுடனே சுகமாயிருங்காணும்
சொக்கட்டான்சதுரங்கஞ் சுகமுடனேதானாடி
உண்டுசுகித்து ஒருநினைவுமெண்ணாமல்

சந்தோஷமாக தம்பியிருங்களென்று
துக்கங்கள்கொண்டு நீ சுந்தரிமேலாசைவைத்து
வெட்கத்தைவிட்டு வெளிப்பட்டுவாருதே
ஐந்தாறுநாளையிலே அங்கேதான்போய்வாறேன்
அந்தவிசேஷம் அதுகேட்டுபாலனுமே
தாயாரைச்சுற்றிவந்து சாஷ்டாங்கதெண்டனிட்டு
தெண்டனிட்டதன்மகனை சீக்கிரமாய்தானெடுத்து
வாழ்வாய்வளருவாய் வைத்திருப்பீருத்திருப்பீர்
தாழ்வுகுறையில்லாமல் சம்பத்தையுண்டாவாய்
வாழ்த்திவிடைகொடுத்து பாலனையும்பத்திரமாய்
காத்திருங்களென்றுசொல்லி கடிகியுரைத்தாளே

சுபத்திரை துவாரகாபுரம் வருவது.

---

மூப்பத்திரண்டுவகை மேளங்களுள்ளதெல்லாம்
தப்பாமல்கொட்டிவா சங்கீதந்தான்முழங்க
வாருள்சுபத்திரையும் மாயனுடபட்டணத்தே
காடுகடந்து கரியமலைதான்கடந்து
நாடுகடந்து நல்லமனைதான்கடந்து
இஞ்சிவனங்கடந்து எலுமிச்சையுட்புகுந்து
மஞ்சள்வனங்கடந்து மாதுளையினுட்புகுந்து
சிங்காரத்தோப்புகளும் தெருவும்பலகடந்து
அண்ணனரண்மனைக்கு வந்தாள்சுபத்திரையும்
ஆயன்பெருமாள் அவரிருக்குமண்டபத்தே
தண்டிகைவிட்டிறங்கி தங்காள்சுபத்திரையும்
தமையனுடகால்மேலே மாதுகன்னிதெண்டனிட்டாள்
தெண்டனிட்டதங்கையரை ஸ்ரீராமர்தான்பார்த்து
வாருமம்மாள்தங்கையரே மகனுஞ்சுகமோதான்

சுபத்திரை சொல்வது.

---

அண்ணரைத்தான்பார்த்து அரிவைசுபத்திரையும்
என்னவென்றுகேட்டாளே ஏலங்குழலாளும்
கண்ணில்லான்பேரனுக்கு கற்புடையசுந்தரியை
என்னென்றுநீர்கொடுக்க இசைந்தீர்நீர்பெருமாளே
நம்முடையஜாதியிலே நடக்குமோ அண்ணாவே
கண்டவர்க்குநன்று யிருக்குமோகர்த்தாவே
அண்டத்தில்வானவர்கள் ஏசாரோ அண்ணாவே

என்னையும்பார்க்காம லேக்கற்றுப்போனீரோ
அண்ணனென்றுநானிருந்தேன் அனியாயஞ்செய்தீரோ
உம்முடனேதான்பிறந்து உலகத்துக்கேச்சாச்சே
என்றுசொல்லிதாண்புலம்பி ஏலங்குழலாளும்
அடித்துப்புரண்டழுதாள் அண்ணர்கொலுமுகத்தில்

பெருமாள் சொல்வது.

அப்போதெழுந்திருந்து ஆயன்பெருமாளும்
தங்கைசுபத்திரைக்கு தணியவேகோபமெல்லாம்
இங்கிதமாகவே எடுத்துரைப்பாரேந்திழைக்கு
என்னாலேவந்ததல்ல ஏலங்கருங்குழலே
மாமன்சகுனியுட வார்த்தையினால்வந்ததுகாண்
துரியோதனன்குடியைச் சேரக்கெடுக்கவென்று
நூற்றொருவர்தன்முடியை நொடியிலறுக்கவென்று
பார்த்திருக்கஅவன்சிரசு பாழாக்கவேணுமென்று
சகுனிகெடுத்தாண்டி தங்கையரேநீபோடி
அலமேலுமங்கை அரண்மனைக்குப்போய்வாடி
என்றுசொல்லி அப்போ ஏந்திழைக்குச்சொன்னாரே

சுபத்திரை இலட்சுமியை யேசுகிறது.

அந்தசுபத்திரையும் அரண்மனைக்குஉட்புகுந்து
அலமேலுமங்கையரை அவள்முகத்தைத்தான்பார்த்து
சொன்னாள்சுபத்திரையும் துடுக்கானவார்த்தைகளை
மாட்டிடையன்தேவியேடி மதிகெட்டுப்போனாயேடி
ஆட்டிடையன்தேவியேடி அறிவழிந்துபோனாயேடி
இடைக்குலத்தில்நீபிறந்து ஏக்கத்துப்போனாயேடி
கண்டார்நகையாரோடி கலியுகத்தாரேசாரோடி
வெட்கமுமில்லையோ வேசிமகளாரே
இப்படியாகச்சொல்லி. ஏசினாள்லட்சுமியை
கோபம்பிறந்ததுகாண் கோபாலன்தேவியற்கு

இலட்சுமியும் சுபத்திரையும் சண்டையிடுவது.

அலமேலுமங்கையரும் அப்போதெழுந்திருந்து
ஏண்டியென்னையேசுகிறாய் இடையனுடற்பிறப்பே
மாட்டிடையன்தங்கையரே மதிகெட்டுவந்தாயோடி
ஆட்டிடையன்தங்கையரே அறிவுகெட்டுவந்தாயோடி



பேச்சுமிஞ்சிப்போகாதேபின்னிடைந்துபோடியென்றுள்
தாட்சிணியாய்ச்சொல்லுகிறேன் சாய்ப்பாகநீபோடி
போடியென்றுசொல்லவேதான் பூவைசுபத்திரையும்
அலமேலுமங்கையரும் அவள்மடியில்கைபோட்டாள்
இருவருமங்கே யிழுத்துமடிபிடித்து
ஒருவர்க்கொருவர் உக்கிரகோபமுடன்
முன்சொன்னசபதமெல்லாம் முடிக்கிறேன்வாடிஎன்று
சாட்சிபோண்டையிலே போவோம்வாவென்றுசொல்லி
ஏசியவளை இழுத்தாளுடைகுலைய
அவளிழுக்கஇவளிழுக்க அடிதடிகளாச்சுதங்கே
அடித்தாளேதாடையிலே அலமேலுமங்கையரை
இவளடிக்கஅவளடிக்க இவளிழுக்கஅவளிழுக்க
அடிதடிகள்மிஞ்சுதுகாண் ஆங்காரக்கோபமுடன்
கட்டிப்பிரண்டு கட்டுருண்டுதானுருள
தாதிகளெல்லாந் தலைமேலேகையைவைத்து
குய்யோமுறையோவென்று கூக்குரலுந்தான்போட

சுந்தரி விலக்குவது.

---

கேட்டாளேசுந்தரியும் கிருபையுடனோடிவந்து
பார்த்தாளிருவரும் படுகிறதுன்பமெல்லாம்
ஓடிவந்துமேல்விழுந்து ஒருத்திதலைமயிரை
மாமிதலைமயிரை வாங்கிவிட்டாள்சுந்தரியும்
தாயார்தலைமயிரை தனியவேவாங்கிவிட்டாள்
மாமிசுபத்திரையை மருமகளுந்தான்பார்த்து
அத்தையரேயிப்பேச்சு அம்மாளறிந்ததில்லை
நானறிந்துசண்டையிட்டு நாயகியேசொன்னேன்காண்
அப்போதறிந்தாள்காண் அலமேலுமங்கையரும்
அறியாதவள்பேரில் அடித்துவிழக்காரியமேன்
மாமியார்தன்னுடனே வகையாகச்சொன்னாளே

இருவரும் சாட்சிகேட்க வருவது.

---

சாட்சிபோண்டையிலே தாம்போவோம்வாருமென்று
அன்றுமுழுகின அக்குளமுந்தான்தேடி
கங்கைக்கரைமேலே கிளிமொழிமார்வந்துநின்று
சுபத்திரையுமப்பொழுது சொல்லிஉரைத்தாளே
கங்கைமாதேவியரே கிருஷ்ணனுடன்பிறப்பே

தங்கையுரைக்கிறதை தயவாகநீர்கேட்டு
உண்மையாய்கேட்டு உத்தமியேநீயுமிப்போ
அலமேலுமங்கையரும் அரியவேநீயுமிப்போ
சாட்சியுரையுமம்மா தயவாகவெங்களுக்கு
லட்சுமியும்நானுமப்போ நாலாநாள்தானும்வந்து
சூதகமாய்த்தலைமுழுகி துய்யகரைவந்துநின்று
ஒருவர்க்கொருவர் உவந்துமனமகிழ்ந்து
இந்தமுழுக்கோடே இதுகெற்பமுண்டானால்
உன்வயிற்றிலாண்பிறந்து என்வயிற்றில்பெண்பிறந்தால்
உன்மகனுக்கென்மகளை உத்தமியேதாரேனென்று
என்வயிற்றிலாண்பிறந்து உன்வயிற்றில்பெண்பிறந்தால்
உன்மகனுக்கென்மகளை உத்தமியேதாறேனென்று
இருவருஞ்சொல்லி இசைந்துவைத்துக்கொண்டோமே
அப்படியேஎன்வயிற்றில் ஆண்பிள்ளையுதித்தது
அவள்வயிற்றில்பெண்பிறந் ததுவும்வளர்ந்ததுகாண்
அன்றுசொன்னவார்த்தையை அதுவுமவள்மாற்றிவிட்டு
லக்குணற்குத்தான்கொடுக்க நாளுமேயிட்டாராம்

கங்கைசாட்சி சொல்வது.

---

ஏதென்றுநான்கேட்டால் இல்லையென்றாளிலட்சுமியும்
நீங்களறிவீரென்று நிண்ணயங்கள்பண்ணினதை [ம்
அப்போதுஉங்களையும் அறிந்திரென்றுசாட்சிவைத்தோ
அதுகேட்கவந்தோமே அவளறியநீருரையும்
என்றுசொல்லகங்கையரும் இதுமெய்தானென்றுசொல்லி
மெய்யென்றுசொல்லியப்போ மேலாகப்பொங்கிற்று
குமிளியிட்டுப்பொங்கிற்று குளக்கரையின்மேலாக
கண்டீரோலட்சுமியே கங்கையுடசாட்சிதனை

இலட்சுமி கங்கையின்சாட்சி பொய்யென்பது.

---

அப்போதலர்மேலும் அல்லவேசாட்சியென்று
மாமாங்கம்பொங்கும் வருஷமிதுமாதம்
அதனாலேயெனக்கும் அமர்ந்துமேபொங்கிவிடும்
அல்லவடிசாட்சியென்றே அலமேலுமங்கையரும்
சொல்லவேதான்கேட்டு சுபத்திரையுமப்போது
ஆலமரந்தன்னை அண்ணாந்துதான்பார்த்து
விக்கினருமங்கே வீற்றிருந்தார்கீழேதான்

முழுகவந்தபோது முன்னேமொழிந்தவற்றை
அறிந்திரென்றுஉம்மையப்போ அறியவேசாட்சிவைத்
அந்தவிசேஷம் அறியவேஅத்தாட்சி [தோம்
சொல்லுஞ்சொல்லுமென்றேசுபத்திரையுங்கேட்கையிலே
அலமேலுமங்கையு மப்போதானெண்ணுகிருள்
ஆலடியிற்பிள்ளையரே ஐந்துகரத்தோனே
இவ்வார்த்தைநீயுமிப்போ சொல்லாதிருக்கவேண்டும்
அப்பம்வடைதோசை யதிரசமும்முப்பழமும்
செப்பமுடனுந்தனுக்குத் திறமாகயான்படைப்பேன்
குன்றுக்குவிக்கிறேன் கூறுதேசாட்சிஎன்ருள்
நல்லதென்றுவிக்கினரும் நட்டாற்போலேயிருந்தார்

ஆலமரமும் விநாயகரும் சாட்சிசொல்வது.

---

அசையாமல்தானிருக்க ஆயனதுவறிந்து
வண்டாகவேகுடலைத் துளைக்கிருர்மாயவரும்
ஆலமரமதுதான் அசைந்ததுகாணப்பொழுது
அப்போதுவிக்கினரும் அப்பம்வடைஆசைவிட்டு
சாட்சியிதுமெய்யென்று தானசைத்தாரப்பொழுது
சுபத்திரையும்லட்சுமியும் சோதனையாய்ப்பார்த்தார்கள்

இலட்சுமி இதுவும்பொய்யெனல்.

---

அப்போதுலட்சுமியும் ஆலமரத்தடியில்
பிள்ளையார்தானுமங்கே பிலனுறிருக்கையிலே
மேல்காற்றுநன்ருய் விசிறியடிக்கையிலே
ஆலமரமசைய அதுவுமசைந்ததுகாண்
ஓசையாய்விக்கினரும் விநாயகர்தானசைந்தார்
இதுசாட்சியல்லவென்று இடைஞ்சாளாம்லட்சுமியும்
ஆனல்தானுந்தனுக்கு ஆர்சொன்னால்மெய்யென்ருள்

இலட்சுமி சொல்வது.

---

ஆகாயவாணியரும் ஆட்டிடையன்சொன்னுக்கால்
மெய்தானுனக்குளந்தன் மெல்லியரைத்தாரேனென்ருள்
அன்றிருந்தகிலாரியும் அறுபதுமேல்நாற்பதுவும்
சென்றுஇருந்தானே செலவழிந்துபோகாமல்
இந்திரும்வானவரு மிருந்துசொல்லப்போருயோ
ஆகாயவாணியரும் அவளும்சொல்லப்போருளோ

இவளும்இடைஞ்சிடுவாள் இதுவேஉபாயமென்று
யென்றுமேலட்சுமியு மிசைவேனென்றுதான்சொன்னாள்
அப்போது இடையனும் அன்றிருந்தார்போலிருந்தார்
இவனிருந்தபோதே இவள்கடையுமீடேறும்
எண்ணியேலட்சுமியும் இருந்தாள்மனத்துடனே
சுபத்திரையுமப்பொழுது சுந்தரியேலட்சுமியே
வாடியென்றேயழைத்தாள் ஆட்டிடையன்தன்னருகே
ஆட்டிடையனண்டையிலே அருகாகவந்துநின்று
அண்ணேதான்கோபாலா அன்றிருவர்நாங்கள்வந்து
சம்பந்தம்பேசியேதான் சாட்சிவைத்துப்போனோமே
அலமேலுமில்லையென்று ஆகடியம்பேசுகிறாள்
உண்டோதானில்லையோ உத்தமரேசொல்லுமென்றாள்

பெருமாளும் ஆகாயவாணியும் சொல்வது.

---

ஆமாண்டியென்பிறப்பே அசடி அலமேலு
கொள்வேன்கொடுப்பேனென்று கூசாமலப்பொழுது
என்முன்னேசொன்னதுண்டு அனேகநாள் ஆச்சுது
ஆனாலிடைச்சியல்லோ அசந்துமதிகெட்டாளோ [ன்னார்
சொன்னதுண்டுகேட்டதுண்டுசுபத்திரையேயென்றுசொ
ஆட்டிடையன்சொல்லுகையில் ஆகாயவாணியரும்
மெய்தான்காணென்று விளம்பினாள்மேலாக
கேட்டிரோலட்சுமியே கீர்த்தியுமிப்போது
என்றுசுபத்திரையா ளெடுத்துரைத்தாள்லட்சுமிக்கு

இலட்சுமி இதுவும் பொய்யெனல்.

---

இடையர்சொல்லினது ஈடல்லயெந்தனுக்கு
பெரியவயதினாலே பினத்தினான்கோனாரும்
மூன்பின்னுந்தோன்றாது முதிர்வயதுபெற்றதினால்
ஆகாயவாணியரும் அதுவுநானம்பேனடி
மேகமதிர்ந்ததினால் விளம்பினாற்போலாச்சு
சாட்சியிதுவல்லவென்றே தானிடைஞ்சாள்லட்சுமியும்
பின்னையும்சொல்லியப்போ பேசினாள்லட்சுமியும்
எந்தவரிசையுடன் யென்பெண்ணைக்கேட்பாரோ
ஊருமில்லைபேருமில்லை உறங்கவிடமுமில்லை
நாடுமில்லைவீடுமில்லை நாட்டிலேயும்பாதியில்லை

காணியில்லைபூமியில்லை கானகத்துவேடருக்கு
என்பெண்ணைக்கேட்க இசையுமோஉந்தனுக்கு
இலட்சுமிக்குஞ் சுபத்திரைக்குஞ் சண்டையாகிறது.

---

என்றுசொல்லலட்சுமியும் எட்டியேயப்பொழுது
மயிரைப்பிடித்திழுத்தாள் மங்கைசுபத்திரையும்
அலர்மேலுமங்கையும் அவள்மயிரைத்தான்பிடித்தாள்
அடித்தாளேசுபத்திரையும் அலமேலுமங்கையைத்தான்
இவளிழுக்கஅவளிழுக்க இடுப்பிலேதானுதைக்க
அடிதடிகள்மிஞ்சுதுகாண் ஆங்காரக்கோபமுடன்
வெய்யலிலேதான்பிரண்டு மேதினியில்தான்விழுந்தார்
சுந்தரி விலக்குவது.

---

மாயன்மகள்சுந்தரியும் மறுபடியுமோடிவந்து
பார்த்தாளேயத்தைமுகம் பரிதாபம்தாளாமல்
ஓடிவந்துமேல்விழுந்து ஒருத்திதலைமயிரை
மாமிதலைமயிரை வாங்கிவிட்டாள்சுந்தரியும்
தாயாரைத்தான்விலக்கி தள்ளிவிட்டாளப்புறத்தே
என்னஉனதுகுறையென்றுமேகேட்கலுற்ருள்
நானிங்கேதானிருக்க நடக்குமோசண்டைகளும்
என்னம்மாவுங்களுக்கு இத்தனைகோபமென்ன
சுந்தரி சொல்வது.

---

ஆகாப்புலையன் அழுவான்கழுசிறையன்
தேசத்தாசன் துரியோதனன்பாவி
மோசம்பண்ணுஞ்சகுனி மூதேவிசண்டாளன்
சதிக்குச்சமர்த்தன் சகுனிபடுபாவி
ஆதரித்துக்கொள்ளவே நினைத்தான் அரும்பாவி
உங்களுக்குவந்ததென்ன ஒருவர்க்கொருவர்சண்டை
க்ஷமித்துமனங்கொள்ளென்று சாஷ்டாங்கதெண்டனிட்
மாமிசுபத்திரையை மருமகளுந்தான்பார்த்து [டான்
அத்தையரேயிப்பேச்சு எங்களம்மாளறிந்ததில்லை
கலியாணப்பேச்சுகளைக் காதாலேகேட்டதில்லை
அறியாதவள்மேலே அருஞ்சண்டையேதுக்கு
மாமியார்தன்னுடனே வகையாகச்சொன்னளே
கோபங்குறையாதென்று கூறினுள்சுந்தரியும்

என் மைத்துனரைச்சீக்கிரமாய் வரவிடுங்காணத்தையரே
தலைமுழுகிப்பூசைசெய்து சாப்பிடவேவாருமென்ருள்
சுபத்திரை சொல்வது.

---

சாப்பிட்டேன்மருமகளே தயவுமறவாதே
போய்வாரேனென்றே புறப்பட்டாள்பூவையரும்
தாதிகளைத்தானழைத்து தாண்டிகைபிடியுமென்ருள்
மருமகளுமோடிவந்து மாமிக்குத்தெண்டனிட்டு
பாலமுதுகொள்ளாமல் பட்டினியாய்ப்போவாரோ
என்னுணை அத்தையரே யிருந்தமுதுகொள்ளுமென்ருள்
இத்தனைசண்டையிலே அமுதுகொண்டாலேசாரோ
அமுதுஇறங்குமோடி அன்னப்பசுங்கிளியே
இருமென்றேசொல்லியே ஏறினுள் தண்டிகைமேல்
சுந்தரி சொல்வது.

---

சுந்தரியுமோடிவந்து சொன்னுளொருவிசேஷம்
மைத்துனரை நாளையிங்கே வரச்சொல்லும் அத்தையரே
அவர்-வாருமல்தானிருந்தால் மடிந்திடுவேன்மாமியரே
அக்கினியில்நான்விழுந்து அபகீர்த்திவைத்திடுவேன்
ஐயமார்தம்மாணை அனுப்பிவிடும் அத்தையரே
தாலியும்கூரையுந் தரிக்குமுடமையெல்லாம்
நேயமாயிருக்கிறது நிலவாமாயிங்கனுப்பும்
இன்றுடேமூன்றேநாள் இருக்கிறதுகல்யாணம்
நாளையாத்திரிக்கு நடந்துவரவேண்டுமென்ருள்
சுபத்திரை ஆனைகுந்திபட்டணம் போகிறது.

---

நல்லதுநல்லதென்றே நடந்தாள்சுபத்திரையும்
போனுள்சுபத்திரையும் பொன்கிளிபோல்தான்பறந்து
ஆனைகுந்திபட்டணத்தை போனுளலைதாரி
அப்போதபிமன்னன் அழகும்திலேறி
பார்த்தானேதாயாரை பார்த்தன்மகனும்
மதிலையும்விட்டுக்கீழே குதித்தானேமன்னவனும்
தாயாரும்வந்து தண்டிகையும்விட்டிறங்கி
அரண்மனைக்குள்ளே போனுளேதாயாரும்
தம்பி அபிமன்னனும் தாயாரைச்சுத்திவந்து
சாஷ்டாங்கமாகவே தெண்டனிட்டான்தார்வேந்தன்

வாழ்த்திமகனை மடியிலெடுத்தணைத்தாள்
நூறுபேர்தோழருடன் அபிமனுமேதுரைப்பான்
வந்திரோதாயேயென்றே மலர்தூவிதெண்டனிட்டான்
தெண்டனிட்டபிள்ளைகளை சீருடனேவாழ்த்தியம்மாள்
இருக்கச்சிங்காதனங்கள் இட்டாளிளங்கொடியாள்
அப்படியே அங்கே அமர்ந்திருந்தவேளையிலே

அபிமன்னன் கேட்பது.

---

பாலனபிமன்னனும் மாதாவைத்தான்பார்த்து
போய்வந்தகாரியத்தை புதுமைகளைச்சொல்லுமென்றான்
உங்கள்-தமையன்பெருமாள் சமூகங்கிடைத்ததோதான்
அலமேலுமங்கையுட அதிசயத்தைக்கண்டீரோ
சுந்தரியும்நன்றாய் சுகமாயிருக்கிறாளோ
துரியோதனன்பேச்சை தீமையெல்லாங்கேட்டீரோ
கல்யாணம்கூடினதும் காரியங்கள்பேசினதும்
நிண்ணயமாய்க்கேட்டீரோ நீதியுள்ளதாயாரே
பின்னையும்உண்டான பேச்சுகள்உள்ளதெல்லாம்
நன்றாகக்கேட்டீரோ நானறியச்சொல்லுமென்றான்

சுபத்திரை சொல்வது.

---

ஏதென்றேகேட்டு யேசினேன்மாயவனை
தலைகுனிந்தாற்போலே இருந்தார்தனஞ்சயரும்
உள்ளபடிதப்பாது என்றார்ஒருவிசேஷம்
அலமேலுமங்கையண்டை வந்தேன்மகனாரே
பேசாமல்தானிருந்தாள் பெண்பெருமாள்நாயகியும்
ஏசினேன்நானவளை எண்ணிக்கையில்லாமல்
அவளும்என்னைஏசினாள் அடிதடிகளாச்சுது
நான்-மயிரைப்பிடித்துயிழுத்தேனேமங்கையரை
என்மயிரைத்தான்பிடித்துயிழுத்தாள் இளங்கொடியாள்
இருவரும்சண்டை இசைவாகத்தான்கொடுத்தோம்
அடிதடிகள்மிஞ்சுது ஆக்கரித்துகொக்கரித்து
கிடுகிடென்றேபூமியிலே கீழவும்தான்விழவே
தாதிகளெல்லோரும் தவித்தழுதுநிற்கையிலே
ஓடிவந்தாள்சுந்தரியும் ஓகோகோயென்றேதாயே
மயிரைப்பிடித்திழுத்த கையையும்வாங்கிவிட்டாள்
தாயார்தலைமயிரை தயவாகவாங்கிவிட்டாள்

குறுக்காகநின்றுகொண்டாள் கொம்பேரிடையாளும்
கோபமெல்லாம்தீர்ந்தபின்குனிந்துமேதெண்ட நிட்டாள்
இன்றைக்குமூன்றேநாள் இருக்குதென்ருள்கலியாணம்
நாளைக்குவாங்களென்று சொன்னுளேசுந்தரியும்
என்றுசொல்லக்கேட்டு எழில்விஜையன்புத்திரனும்
ஆலித்துவாளபிமன் ஆச்சியர்க்குத்தெண்டனிட்டு
என்னுயென்னுமாதாவே இன்னமொருக்காலுரையும்
அல்லகாண்சுந்தரியா ளாயன்மகளாரும்
உன்-மாமியாரும்நானும் மற்பொருதும்வேளையிலே
வந்துபதம்பணிந்து மயிரைவிலக்கிவிட்டு [ரே
என்மைத்துனனர்தன்னையிப்போ வாவிடுங்காணத்தைய
அபிமர்வாராதிருந்தால் அக்கினியில்விழுவேனென்ருள்
இதுவேயுரைத்தாள்காண் இனியொன்றுநானறியேன்
அல்லகாண்மாதாவே ஆயனுடதங்கையரே
அடித்தஅடிவாங்கவல்லேன் ஆயன்பதியழிப்பேன்
மங்கைமகளாமாகில் வாக்கப்பட்டாளாமாகில்
காணவும்போரேனே கண்ணுதலாள்சுந்தரியை
ஆகையால்சொன்னேன்காண் ஆச்சியரேகோபம்வேண்
தாய்தகப்பன்வேண்டாத தாரமெனக்கேரு [டாம்
பெற்றதாய்வேண்டாத பெண்டாட்டிநான்வேண்டேன்
உலகத்தில்வார்த்தை உரைக்கயிடமாச்சே
பஞ்சவர்கள்வங்கிஷத்தில் பார்த்தன்மகனுற்கு
பெண்கேட்கப்போயிருந்து பெருமாளிடதேவிகையில்
அடிபட்டுவந்தீரென்று அனைவருப்ஏசாபோ
தாயாதியேசாரோ சத்துருக்களேசாரோ
காணியாளன்கேட்டால் கனங்குலையயேசாரோ
காணியாளன்கேளாமுன் கழுத்தறுத்துக்கொள்ளுகிறேன்
வாளையுருவி வலக்கையறிந்துபற்றி
சாவேனேயென்றழுதான் தனஞ்சயனர்புத்திரனும்
கண்டாள்சுபத்திரையும் கனக்கவேதானடுங்கி
பழிக்குப்பிறந்தாயோ பாலகாஎன்வயிற்றி
வாடாமகனுரே வையகத்தில்பெண்ணிலையோ
பஞ்சவர்கள்புத்திரனும் படைபொருதமாட்டாமல்
பொழுதுமணம்செய்யாமல் போக்கிரிவாளபிமன்
மாண்டானேஎன்றுசொல்லி வையகத்தில்வார்த்தையல்
மாதுதிருவாணை மன்னவர்க்குத்தம்மாணை [லோ

என்னுணே நீமகனே என்வார்த்தைதள்ளாதே
வாடாமகனேயென்று வாள்பறித்துகீழ்ப்போட்டு
மைந்தருக்குமாதா மனதுவாவார்த்தைசொல்லி
இத்தனையுங்கேட்டு எழும்பியேவாளபிமன்
அண்டங்கிடுகிடென ஆகாயந்தானதிர
மீசையின்மேல்கைபோட்டு வீரியன்வாளெடுத்துவந்து
இலக்குணரைக்கொன்று ரணப்பெலிபோட்டுவைப்பேன்
துரியோதனன்கூட்டம் சேனைபரிகலமும்
அதிரவேவெட்டி அவலோகஞ்சேர்த்திடுவேன்
அஸ்தினுதன்புரத்தை அடியோடேதானிடித்து
பருத்தியும்ஆமணக்கும் விறைக்கிறேன்பாருமம்மா
சுந்தரியைக்கொண்டுவந்து சுகமாகத்தாலிகட்டி
உந்தன் அரண்மனையில் ஊழியங்கள்பண்ணவைப்பேன்
என்னை அனுப்புமம்மாள் எனக்குவிடைதாருமம்மாள்
தம்பிசொன்னவார்த்தைகளை தான்கேட்டுசுபத்திரையும
அப்பாமகனே அறிவுள்ளபாலகனே
எப்படிபோகவிட்டு இருப்பேண்டாபூமியிலே
பாலுங்குடித்தறியாய் படைமுகத்தில்நின்றறியாய்
முன்னறியாய்பின்னறியாய் முனைமுகத்தில்நின்றறியாய்
இராவறியாய்பகலறியாய் ரணமுகத்தில்நின்றறியாய்
அறியாதபாலகனே அனுப்பவேஞாயமுண்டோ
கொஞ்சுமொருபாலகனைக் கூட்டவேஞாயமுண்டோ
போகவுமாகாது புத்திரனே நீகேளாய்
உங்களையமார்வந்தபின்பு ஆனவிடந்தேடி
தையலரைக்கொண்டுவந்து தாலிகட்டிவைக்கிறேன்
பூமியிலேபெண்கள் கிடையாதோபுத்திரனே
ரூபசவுந்தரிகள் லோகத்தில்மெத்தவுண்டு
சுந்தரிக்குமிஞ்சினபெண் தேசத்தில்மெத்தவுண்டு
அந்தமுள்ளகன்னியரே அழைத்துமணஞ்செய்கிறேன்
இந்தவஞ்சகேடும் இல்லாதசண்டைகளும்
வெட்டுவதும்குத்துவதும் வெறுத்தவரைவெல்லுவதும்
கொண்டாலுமாகாது குலத்துக்கிகழ்ச்சியடா
இப்படியாய்ச்சொல்லி எடுத்துரைத்தாள்சுபத்திரையும்
மாதாமுகம்நோக்கி மைந்தனெடுத்துரைப்பான்
பூமியிழந்தாலும் பெண்டிழந்துபோவாரோ
தாரமிழந்தாலும் தாலியிழப்பதுண்டோ

நாட்டுக்குள்ளேச்சல்லவோ நாயகியேயென்தாயே
ஊருக்குளேச்சல்லவோ உத்தமியேயென்தாயே
ஐவர்குலத்திலே அழும்புண்டோஎன்தாயே
சாவேன்கெடுவேன் சமுத்திரத்தில்போய்விழுவேன்
சுந்தரிமேல்போய்விழுந்து அணிந்துகழுத்தறுப்பேன்
எந்தன்கழுத்துகூட சரியாயறுத்திடுவேன்
இப்படியாய்ச்சொல்லி எழில்வீரன்தானுரைத்தான்
தாயார்சுபத்திரைக்கு சரீரமெல்லாம்தானடுங்கி
அடித்துடையுங்காலு மதிரவேதானடுங்கி
வயிற்றில்நெருப்பை வாரியெறிந்தாற்போல்
எரிந்துகுலைநடுங்கி எல்லாநினைவுமற்று
மயக்கம்பிறந்து மங்கையரும்தான்விழுந்தாள்
தாதியொருத்தி தலைமாட்டில்நின்றுகொண்டு
சாதிமணிக்கவுரி சந்தனத்தால்நீர்தோசி
வீசினார்தாதியர்கள் மேனியெல்லாந்தான்குளிர
விழித்துமுன்பார்த்தாளே விசையன்மகனுரை
இகழ்ச்சியாய்ச்சொன்ன விருப்பானேவாளபிமன்
அதுவுமொருவிசை அறிவோமேயென்றுசொல்லி
வாடாநீவாளபிமா கேளாயொருவார்த்தை
ஆரென்றுசொல்லி அறியாயோசுந்தரியை
மாடாடுமேய்க்கு மடையரிடைக்குலந்தான்
செத்தாடுதின்பான் சுவாலிடையசாதியடா
தண்டுக்கடைதோறுந் தயிர்விற்குஞ்சாதியடா
பாளையங்கள்தோறும் பால்விற்குஞ்சாதிகண்டாய்
கண்பசப்பினாலே காசிபிடுங்கிடுவாள்
பெருமாளவனுமொரு பெரியஇடையனடா
எக்குலங்களானாலும் இடைக்குலங்களாகாது
அந்தக்குளத்தி லடுக்குமோபெண்ணமக்கு
ராஜகுலத்தில் நடக்குமோமன்னவனே
லட்சுமியாள்உன்மாமி நாடழிந்தகன்னிடைச்சி
உனக்குநிகரான உலகத்துராசாக்கள்
மன்னவர்கள்பெற்றதொரு மங்கையர்தாமிருக்க
மாயன்மகளொழிய மற்றொருத்தியாகாதோ
பெருமாள்மகளொழிய பின்னொருத்தியாகாதோ
பெருமாள்மகளாசை போட்டுவிடுஎன்மகனே
மாயன்மகளாசை மறந்துவிடுவாளபிமா



# ௬அ அபிமன்னன் சுந்தரியாலே.

இடையன்மகள்தன்னுசை எண்ணுதேமனந்தனிலே
என்று-மாதாவுரைத்தவுடன் வாளபிமனே துசொல்வான்
மாண்டுளுத்துப்போனாலு மறப்பேனோசுந்தரியை
முத்துமுலேசுந்தரியை உத்தமியேநான்மறவேன்
மாயன்மகளாரை மைச்சினியாள்சுந்தரியை
நான்-மறவேன்மறவேனம்மா வாள்விசையன்தேவியரே
உந்தன்குலத்தை உச்சிதமோசொல்லவந்தாய்
இந்தமிரட்டுக்குப் பயமெடுத்துப்போவேனோ
ஏச்சான இடைக்குலத்தை என்தாயே நீபழித்தாய்
கூடப்பிறக்கிலேயோ கூட்டுப்பாலுண்ணலேயோ
ராசாவுக்குகையீந்து ராஜாத்தியானுயோ
வாடா நீஎன்மகனே கேளாயொருவார்த்தை
ஆகாதுசுந்தரியை அபிமா நீமாலேயிட
ஆரைக்கழுத்தியோடா நம்மரண்மனைக்காகாது
கோரைக்கழுத்தியோடா குடித்தனத்துக்காகாது
சுருட்டைமயிர்சுந்தரியாள் சுற்றமுமாகாது
பாட்டைத்தலேயுடையாள் பட்டிணத்திற்காகாது
வேண்டாங்காண்வாளபிமா விசையன்திருமகனே
ஆகாதுகாணும் அச்சுதனுர்பெண்ணமக்கு
அபிமன்னன் சொல்லுவது.

---

ஆனல்கேளென்தாயே அருச்சுனனுர்தேவியரே
ஆரைக்கழுத்தானல் அன்றுபிழைத்தேனம்மா
கோரைக்கழுத்தானல் கொடிமுடியானுவண்டி
சுருட்டமயிரானல் சுகமாயிருப்பேனம்மா
பாட்டந்தலேயானல் பட்டம்பொருக்குமம்மா
துடையிலேபாம்பானல் துஜங்கட்டிவாழ்ந்திடுவேன்
அரையிலேபாம்பானல் அட்செயலட்சணங்காண்
மாதாசுபத்திரையு மறிந்துரைத்துக்கூறுமல்
அபிமரும்ஆச்சியரும் ஆனேகுந்திவந்தார்கள்
சுபத்திரையும் அபிமன்னனும் சதுரங்கமாடுதல்.

---

அத்தநாள்போக்கி மறுநாள்கழிந்தபின்பு
மாயன்பதிநோக்கி மறுநாள்கழிந்தபின்பு
மறக்கடிக்கவேணுமென்று மங்கைசுபத்திரையும்
சதுரங்கமாடுவோம்வா தம்பியென்றுதானழைத்தாள்

தாதியர்களோடிச் சதுரங்கங்கொண்டுவந்தார்
விரித்தசதுரங்கம் வேல்பொருதுங்கண்ணாளும்
தன்மகனுந்தானும் சதுரங்கமாடலுற்றார்
அபிமருமாச்சியரு மாடலுற்றாரப்பொழுது

பெருமாள் பிராமணராய் வருகிறது.

---

அப்போதுவாரகையில் ஆயனுந்தானினைந்து
அடிபட்டதங்கையரும் அபிமனைவரவொட்டாமல்
மாற்றான் துரியோதனனும் வருவதற்குமுன்பாக
அபிமரையிங்கே அழைத்துவரவேணுமென்று
மாயன்பெருமாளும் மறையவன்போல்வடிவாகி
பீறக்குடைபிடித்து பூசைபெட்டிதோளில்வைத்து
பஞ்சாங்கங்கைபிடித்து பிராமணவேஷமுடன்
ஆயன்பெருமாளும் ஆனைகுந்திதன்னைநோக்கி
மாயன்வரும்வழியில் வனத்தில்புதுமைசொல்வேன்
பட்டமரந்துளுக்கும் பால்பசுக்களீன்றிடுமாம்
பால்பசுக்களீன்றிடுமாம் பாலாய்ச்சொரிந்திடுமாம்
பூக்காதமரங்களெல்லாம் பூரித்துச்சொரிந்திடுமாம்
காயாமரங்களெல்லாம் காய்த்துப்பழுத்திடுமாம்
வடிந்தகுளங்களெல்லாம் வழிந்துசொரிந்திடுமாம்
ஆறுகடந்து அரியவனங்கடந்து
கற்பகக்காவுகளும் கடியவனந்தாண்டி
ஆயன்பெருமாளும் ஆனைகுந்திவந்தமர்ந்தார்
வீதியும்வீதித் தெருவும்பலகடந்து
தேரோடும்வீதித் தெருவும்பலகடந்து
ராஜர்பெருந்தெருவில் நாராயணர்வருவார்
தாணியளந்தவரும் தங்கைமனைதனிலே
சுபத்திரையாள்வாசலிலே ஸ்ரீராமர்வந்தமர்ந்தார்
தாதியரைத்தான்பார்த்து தார்வேந்தர்கூறுவார்
ஆடிதாதியரே ஆயர்தங்கைமாளிகைதான்
சொல்லடிதாதியரே சுபத்திரையாளெங்கேயடி
தாதியருங்கேட்டு சரணமென்றுதான்பணிந்து
வேதியரேநீருமெங்கள் மெல்லியரைக்காணுமென்றாள்
இந்தஅரண்மனைதானேந்திழையைக்காணுமென்றாள்

பெருமாள் சொல்வது.

வந்தார்மறையவரும் மாதுமுகம்நோக்கி
சேஷை அரிசியிட்டு தெர்ப்பைப்புல்கைக்கொடுத்தாள்
பஞ்சாங்கங்கைப்பிடித்து பார்ப்பானும் நிற்கலுற்றார்
மாதுசுபத்திரையும் மறையோர்க்குதெண்டனிட்டு
வந்தபிராமணரை வணங்கியெழுந்திருந்து [று
வாருமையாவென்றுசொல்லிமண்டபத்தில்கொண்டுசென்
ஆசனத்தில்தானிருத்தி அடிபணிந்துதெண்டனிட்டு

சுபத்திரை சொல்வது.

---

மறையவனை நோக்கியிந்த மங்கையருங்கூறுவாள்
வேதியரே நீரும் விருத்தக்கிழவனையா
எங்கிருந்துயிங்குவந்தீர் எனக்கரியகூறுமென்றாள்
மங்கையரே நீர்கேளீ ரென்வார்த்தையுரைக்கிறேன்
காசிவளநாடு கன்னியாகுமரிதேசம்
தூரம்வடக்கேயம்மாள் துவாரகாபுரிக்குமப்பால்
புண்ணியதீர்த்தம் புனலாடிபூசைபண்ணி
காசிக்குப்போயிருந்து வந்தேன்காண்காரிழையே
தேசத்தழகன் துரியோதனன்வீட்டில்
ஏர்நிறைந்தலக்குணர்க்கும் யேலங்குழலாட்கும்
பெருமாள்மகளாராம் பேரானசுந்தரிக்கும்
கலியாணமென்றுசொல்லி கன்னியரே நான்போறேன்
மெத்தவிடாயினாலே மெல்லியரேயிங்குவந்தேன்
மற்றொருதன்னிடத்தே மங்கையரே நானறியேன்
மாயனிடதங்கையென்று வள்ளற்கெதிர்வந்தேன்
எந்தன்விடாயாற்றி இங்கிருக்கப்பண்ணுமம்மா
ஆடாவாழ்வீரா அபிமன்னராசாவே
தாகத்துமோர்கொடுத்தால் சாப்பிட்டுநான்போறேன்

அபிமன்னன் பிராமணரைக்கேட்பது.

---

பாணக்கந்தான்கொடுத்தான் பாலனபிமன்னன்
அரிபிளகும்வெற்றிலையும் ஐயருக்குத்தான்கொடுத்தான்
ஆருடம்பார்த்துதான் ஐயருரைத்தாரே
பெண்யேல்கவலையாய் புகழ்வீராகேட்கிறாய்
உனக்கிருந்தபெண்ணை ஒருவனுக்குஆகுதென்று
நினைத்துநீகேட்டாய் நீதியுள்ளராசாவே

பயப்படத்தேவையில்லை பார்த்தன்மகனுரே
போய்வாருமென்று பிராமணருஞ்வாழ்த்துகிருர்

அபிமன்னன் துவாரகைக்கு வருவது.

---

நல்லதென்றுபாலன் நடந்தானும் அப்பொழுது
வந்தான்வெகுதூரம் மலைகாடுதான்கடந்து
ஆரண்யமான அடவியிலேதான்புகுந்து
அந்தஅடவிவிட்டு அப்புறமேபோகையிலே
பம்பையென்னுமாறு பரவிவெள்ளந்தாஞேட
காக்காய்குருவி பறக்கவும்போகாது
அக்கரைக்குமிக்கரைக்கும் ஆள்போகக்கூடாது
ஆகாயமளாவியேதான் அதிகவெள்ளம்பெருகிவர
அங்கேவந்துநின்ருனே அபிமன்னராசாவும்
எப்படிபோவோமென்று எண்ணிவிசாரமிட்டான்
பிராமணனைப்போலேயங்க பெருமாளும்ஓடிவந்து
நேராகவந்து நின்ருரே ஆற்றருகே
ஐயரைக்கண்டானே அபிமன்னராசாவும்
வயதுசென்றபார்ப்பானைக் கண்டானேபாலகனும்
கண்டவுடனேயவன் கையெடுத்துக்கும்பிட்டான்
எங்கிருந்துயெங்கேவந்தீர் எங்கேபயணமென்ருன்
கலியாணமென்றுசொல்லி கட்டழகா நான்வந்தேன்
துவாரகாபுரியினிலே சுந்தரிக்குலக்குணர்க்கும்
பெரியகலியாணமென்று பிறந்தஉலகமெல்லாம்
அதினுலேவந்தேன்காண் ஆறடைத்துக்கொண்டதங்கே
என்னசெய்வோமென்று எண்ணிவிசாரமிட்டான்
அந்தவிசேஷம் அபிமன்னன்தான்கேட்டு
சிந்தைகலங்கியே சிவசிவாவென்றுசொல்லி
நானுங்கூடவாறேனென்று சொன்னுனேநற்பாலன்
ஆற்றிலேநீந்திடவும் தெரியுமோஐயாவே
நீந்திக்கரையேற நிண்ணயங்கள்தான்வருமோ
என்றுசொல்லிபாலனுமே எடுத்துரைத்தான்ஐயனுடன்
நல்லதென்றுசொல்லி நடந்தாரிருவருமே

அபிமன்னன் ஆற்றில் நீந்துவது.

---

ஆற்றிலேயிறங்கினுர் அரையளவுதண்ணியிலே
கைக்கோர்த்துக்கொண்டார்கள் கட்டழகன்ஐயனுமே

மார்மட்டுந்தண்ணீர் வந்ததுபம்பைநதி
அதுநீஞ்சிப்போகச்சே ஆறுபெருகிமெத்த
மேல்வெள்ளம்வந்து மூழுகியிருவருமே
அந்தச்சமயம் அறிந்துபிராமணரும்
நழுகவிட்டுபாலனைத்தான் நடந்தாரேஐயனுமே
ஆற்றுச்சுழலிலே அழுத்திவிட்டுப்போனாரே
தம்பிசமர்த்தை தானறியவேணுமென்று
வெம்பிவிழவாற்றிலேதான் விட்டார்பெருமாளும்
சுழட்டுவதும்இழுக்கிறதும் சொருகிறதும்மணல்கீழே
கிளம்புவதும்தாக்கிறதும் கிறுகிறென்றுசுற்றுவதும்
தூக்கியடிக்கிறதும் சுழலமிட்டுநீஞ்சுவதும்
ஐநூற்றுக்காதவழி கடந்திருக்கும்அப்பாறை
அரிகரியென்றுசொல்லி யாண்டவனை நினைக்கிறதும்
ஐயன்மார்தன்னை அன்பாய்நினைக்கிறதும்
அபிமன்படுந்துயரம் ஆயனுந்தானறிந்து
தெற்பைப்புல்லாகவந்து நின்றார்திருமாலும்
தெற்பைப்புல்பற்றியே சேர்ந்தான்கரைமேலே
பார்ப்பானைப்பார்த்தானே பாலனபிமன்னன்
ஐயோபிராமணரே ஆற்றிலேபோனீரோ
பார்ப்பான் துணையுமல்ல பயிற்றங்காய்க்கறியுமல்ல
பார்ப்பானை நானும் படைத்துணையாய்நம்பிவந்தேன்
என்றுவிசாரமிட்டு எழில்வீரன்தானினைந்தான்
வாளுங்கைகேடயமும் வைகையிலேபோச்சுதே
ஆறுவடிந்தபின்பு அக்கரைநாம்திரும்பி
வாள்கேடயங்கொண்டு வருவோமேயென்றுசொல்லி
மாயன்பதிதனிலே மன்னரவர்வந்திருந்து
மாதுநல்லாள்சுத்தரியை மணஞ்செய்வான்தப்பாது
மாதாவும்நம்மை வரவொட்டாளென்றுசொல்லி
கச்சைவரிந்துகட்டி கைக்கொன்றுமில்லாமல்
ஆற்றங்கரையைவிட்டு ஆயன்பதிநோக்கி
காடுகடந்து கரியவனங்கடந்து
குன்றும்பருவதமும் குளிர்ந்தமலைதோப்புகளும்
சுற்றும்பதிங்காதஞ் சூழ்ந்தமலைதோப்புகளும்
மெத்தக்கரடிகளும் வெம்புலியும்செம்புலியும்
காட்டானையாளிகளும் கருங்குரங்குசிங்கங்களும்

அப்படிக்கொத்த ஆரணியக்கானகத்தில்
நடையாகப்பாலனுமே நடந்தானே அக்காட்டில்

அபிமன்னன் வல்லரக்கன் பாறைமேல்
படுத்துக்கொண்டது.

---

மெய்யானவல்லரக்கன் வீற்றிருக்குமக்காட்டில்
வல்லரக்கனுண்மைகளை மட்டுரைக்கப்போகாது
ஐம்பதுகாதவழி அகண்டதிருமார்பும்
எண்பதுகாதவழி இசைந்திருக்கும்தோளிரண்டும்
கைநூறுகாதவழி கடந்திருக்குமப்பாலே
கால்நூறுகாதவழி யுண்டாமவனுக்கு
மூன்னூறுகாதவழி மூக்குமுசந்திருக்கும்
வல்லரக்கன்தன்சிரசு மகாமேருபருவதம்போல்
இப்படியாய்க்கொடுத்த இடும்பனென்னும்வல்லரக்கன்
கமலகன்னியுடன்பிறந்த கருமூடன்வல்லரக்கன்
அந்தவனத்திலே அபிமன்னராஜனுமே
போனான்வழிதப்பிப் பொல்லாதான்கானகத்தில்
அந்த அரக்கன் அவன் தூங்குங்கற்பாறை
விந்தைவிந்தையாக மெத்த அழகாயிருக்கும்
அந்தமாய்தானிருக்கும் அழகானபாறையின்மேல்
ஆற்றிலடிபட்ட அபிமன்னராஜாவும்
கைசோர்ந்துமெய்சோர்ந்து கனத்தமுடிசோர்ந்து
மெய்சோர்ந்துடம்பெல்லாம் வெகுவாய்க்கடுப்பெடுத்து
தூக்கம்போல்வந்து சோர்ந்துபடுத்தானே
பல்லிக்கையானே பாறையின்மேற்றான்படுத்தான்
வல்லரக்கனிரைதேடப் போயிருந்தான்வடதிசையில்

சுபத்திரை அபிமன்னனைத்தேடுவது.

---

இனி-ஆனைகுந்திபட்டணத்து அடைவுகளை நீர்கேளீர்
தோகைசுபத்திரையும் தோழிமார்தன்னுடனே
தோட்டமுந்தோப்பும் துரவுகளும்தான்தேடி
எங்கெங்குந்தேடி இராஜாவைக்காணமல்
பூங்காவனங்களும் புனலின்கரையோடி
வாளபிமன்சிற்றடியு மறையோன்பெருவடியும்
புனலின்கரைநோக்கி போறஅடிபார்த்து
ஐயோ அபிமாயென் னுவிக்கொருமருந்தே

என்னசெய்வேன்வாளபிமா ஏழைமதியானேன்
பார்ப்பானைநம்பி பாதவித்தேன்பாவிநான்
பார்ப்பானுநம்மை பகைமுடித்தான்கண்டீரோ
நம்பினவேதியரே நட்டாற்றில்விட்டாரே
தக்கப்புகழுடையார் தருமருமிங்கேவந்து
வெற்றிமதயானை வீமருமிங்கேவந்து
நாமமுடைய நகுலர்தம்பியங்குவந்து
தோராவடிவழகி துரோபதையுமிங்குவந்து
ஆணழகனிங்குவந்து அபிமன்னனெங்கேயென்றால்
தக்கப்புகழுடைய தருமருக்கேதுசொல்வேன்
வெற்றிமதயானை வீமருக்கென்னசொல்வேன் [ல்வேன்
ஆச்சியருக்கென்னசொல்வேன் ஆணழகர்க்கென்னசொ
கோணுதமாதவத்துக் குந்தியருக்கென்னசொல்வேன்
ஐயா அபிமா நீ ஆற்றில்விழுந்தீரோ
என்னவென்றுசொல்லி எடுத்துரைப்பேன்வெட்காமல்
மன்னவர்கள்முன்பாக மனந்தளரப்பண்ணினையோ
ஐயோ அபிமாவென்று அலறியேதானழுது
அபிமருடன்றானும் ஆற்றில்விழுவேனென்று
பொன்னலையில்விழுவேனென்ன பூவையருந்தான்துணி
அழுதுமனந்துணிந்தாள் ஆச்சிசுபத்திரையும் [ந்து
இப்படிக்கொத்த இக்கட்டுவேளையிலே

துரோபதை கனவுகண்டு தருமருக்குச்சொல்வது.

---

அப்போவனத்தி லரிவைநல்லதுரூபதையும்
சொற்பனங்கள்கண்டு தோகையருந்தானெழுந்து
ஐவர்கொலுவிலே ஆச்சியுமேதுரைப்பாள்
கண்டேன்காண்காவலரே கடியதொருசொற்பனம்நான்
ஆயனுடன்பிறந்தா ளழகுசுபத்திரையும்
வைகைக்கரையிலே மரிப்பேனேயென்றுசொல்லி
மைந்தனைப்போகவிட்டு மங்கையழுகிறாள்காண்
என்னபுதுமையிது என்கனவுதப்பாது
என்னசகாதேவன் எழுந்திருந்து அப்போது
தாமமுடியானும் சாஸ்திரங்கள்தான்பார்த்து
தருமர்முகம்பார்த்துச் சகாதேவன்கூறுவான்
ஆர்காணுமண்ணாவே அப்படியேதப்பாது
ஒக்குமிது அண்ணாவே உள்ளபடிதப்பாது

மாயன்மகளார் மருதவல்லிசுந்தரியாள்
ஆளப்பிறந்த அபிமருக்கிருந்தபெண்ணை
மன்னன் துரியோதனன் தன்மைந்தனிலக்குணற்கு
பரியம்பொருந்தினன்காண் பாரளந்தான்தன்மகளை
இந்த-வெள்ளிக்கிழமையிலே எம்பெருமாள்தன்மகளை
மணஞ்செய்யவேணுமென்று மன்னவர்கள்தான்போனர்
அந்தவிசேஷம் அபிமனுந்தானறிந்து
மாதாவையறியாமல் மாயன்பதிநோக்கி
புனலின்கரைதாண்டி போனனேவாளபிமன்
சேர்ந்துமணம்புணர்ந்து திரும்புவான்தப்பாது
ஆகையினலே அழகுசுபத்திரையும்
ஆளப்பிறந்த அபிமனைத்தேடிவந்து
புனலின்கரையருகே புலம்புகிருள்மங்கையரும்
ஆற்றில்விழுவேனென்று அழுகிருளென்றுரைத்தான்

தருமர் அருச்சுனனை சுபத்திரையிடத்திற்கு
அனுப்புதல்.

---

தக்கப்புகழுடைய தருமாதுகேட்டு
காண்டாவனமெறித்த காளைமுகம்நோக்கி
ஆயன்பதிநோக்கி அபிமன்னன்போனனும்
மைந்தன்நிமித்தியமாய் மங்கைசுபத்திரையும்
மாளநினைந்தாளாம் வாழ்விசையாவுன்தேவி
வைகைக்கரையிலே வந்தேபுலம்புருளாம்
மாறுவேஷமாகி மாயவரைப்போலாக
வேகாதிவேகமுடன் விசையனேநீரும்போய்
உன்-மாதுக்குப்போயுரைத்து மனஸ்தாபம்தீர்த்துவிட்டு
ஆனைகுந்திக்கேகவிட்டு அருச்சுனவாருமென்றுள்
தக்கப்புகழுடைய தருமருரைக்கலுமே

அருச்சுனன் மாறுவேடங்கொண்டு சுபத்திரைக்குச்
சொல்வது,

---

அங்கேவிடைகள்பெற்று அருச்சுனனார்வீரியனும்
வாய்வேகமாகவந்தார் வைகைப்புனலருகே
தெண்டுகமண்டலமும் சேர்ந்ததொருபுஸ்தகமும்
பின்குடுமைபூநூலும் பிரப்பங்கோல்கைபிடித்து

திருமால்தன்மைத்துனரும் சித்தரைப்போலாக
தன்தேவிக்கெதிராக தேர்விஜயன்வந்துநின்று
ஆர்காணும்பெண்ணே நீ ஆற்றங்கரைதனிலே
ஏன்காணும்பெண்ணே விழுந்தழுதாயிப்போது
உன்மைந்தனொருவனிந்த வைகைக்கரைதனிலே
விழுந்தானெனவழுதாய் விழவில்லைக்காணுமவன்
பெண்பேயேநீயுமிப்போ போப்போமெனவுரைத்தான்
மாதாசுபத்திரையும் மனதுமிகக்கலங்கி
திக்கென்றெழுந்திருந்து தேர்விசையன்முன்பாக
மூக்கால்வலம்வந்து முன்னேவந்துதெண்டனிட்டு
சித்தரே நீரும்என் சிந்தையறிந்துரைத்தீர்
மற்றுமுரைக்கவென்றால் வாழ்விசையன்தேவியரும்
காண்டாவனமெரித்த காளையுங்கூறுவான்
மாயன்சகோதரி நீ யல்லவோமங்கையரே
நீ-வாழ்விசயன்தேவியல்லோ மறையாமல்கூறுமென்றார்
உன்மைந்தனொருவனல்லோ மாதா நீஒளியாதே
மாயன்மகளொருத்தி உண்டிலையோமங்கையரே
உன்-மாற்றான்மணம்புணர வந்ததுவும்உண்டிலையோ
மாதாசுபத்திரையும் வாழ்விஜயனைப்பார்த்து
சித்தரே நீரும் தெரிந்துரைத்தீர்தப்பாது
ஒளிப்பதெங்கேவேதியரே உள்ளபடிசொல்லிவிட்டீர்
அபிமனெந்தன்மைந்தனிந்த ஆற்றில்விழவில்லைஎன்றீர்
பிழைப்பானோஎன்மகனும் பிராமணரேகூறுமென்றார்
வேதியரானதொரு விஜயனுங்கூறுவான்
மங்கையரேஉன்மகனும் மாயன்பதிதனிலே
மாற்றானைவென்று திருமாயன்மகளர்ரை
மணஞ்செய்துமீண்டு திருப்புவன்காண்மங்கையரே
எதுக்கும்அஞ்சாதே யெம்பெருமாள் தங்கையரே
எட்டாநாளுன்மகனு மிளங்கொடியைமாலையிட்டு
மன்னர்மதிக்கவே வருவான்காண்மங்கையரே
அஞ்சாதேமாதே அரண்மனைக்குளேகுமென்றான்

சுபத்திரை தன் அரண்மனைக்குப் போய்விடுவது.

---

ஆச்சிசுபத்திரை அருச்சுனற்குத்தெண்டனிட்டு
சித்தனார்சொன்னதெல்லாம் திருவுளத்தில்தானிறுத்தி
நம்பாமல்நம்பி நடுவே அரைமனதாய்

தோகைசுபத்திரையும் தோழிமார்தன்னுடனே
அபிமருடனிணைவாய் ஆனைகுந்திபோய்ச்சேர்ந்தாள்
காண்டாவனமெரித்த காளையுந்தான்திரும்பி
ஆணழகர்கோமானும் ஐவருடன்போய்ச்சேர்ந்தான்

அருச்சுனன் தருமருக்குச் சொல்வது.

---

தக்கப்புகழுடைய தருமருக்குத்தெண்டனிட்டு
வெற்றிமதயானை வீமருக்குத்தெண்டனிட்டு
நாமமுடைய நகுலனைத்தான்தழுவி
தாமமுடைய சகாதேவனைச்சென்றணைத்து
தீயிற்பிறந்தாளை துரோபதையையெச்சரித்து
போனேன்பிராமணர் போலேவடிவுகொண்டு
ஐவருடனாக அருச்சுனருக்கேதுரைப்பார்
மெய்யாகவந்திருந்தாள் மெல்லிசுபத்திரையும்
உள்ளபடிசாத்திரங்களுரைத்தேன்காணுத்தமிக்கு
மெய்யாகநம்பினள்காண் மெல்லிசுபத்திரையும்
வருவானோஎன்மகனு மென்றேவணங்கினள்காண்
மணஞ்செய்துவாருன்காண் வாளபிமனென்றுரைத்தேன்
ஆயனுடதங்கையரே அனுப்பிவைத்தேனண்ணுவென்
தக்கப்புகழுடைய தருமர்மனமகிழ்ந்து [ருன்
ஆயன்மகிமையிது அறிந்தோமேயென்றுசொல்லி
ஆலோசனைகள்பண்ணி யிருந்தாரேஐவர்களும்

வல்லரக்கன் தன்பாறையண்டை வருவது.

---

அப்போவனந்தன்னி லபிமன்னன் தூங்கையிலே
அந்தவனங்காக்கும் ஆங்காராட்சதனும்
எழுநூறுயானைத்திரள் இறங்கியேமேயுமங்கே
வல்லரக்கன்கண்டு மனமகிழ்ந்துயேதுசெய்வான்
எழுநூறுஆனைதன்னை யிடதுகாலாலமுத்தி
ஆனையெழுநூறும் அருநாவில்தான்பொசித்து
கீழ்க்கடல்நீரையெல்லாம் கிலாரித்துதானுரிந்து
அதிலுள்ளமீனையெல்லாம் அடைவாகத்தான்பொசித்து
வார்முகனில்நீரைவிட மறுகடல்தானிரையும்
மச்சம்பொசித்தபின்பு மதயானைதான்விழுங்கி
வயிறுநிரம்பாமல் மாற்ருடிதான்வருவான்

தான் தூங்கும்பாறையண்டை வந்தான்தறுதலையன்
வாளபிமன் நித்திரையை வல்லரக்கன் தான் கண்டு
வல்லரக்கன் அபிமன்னனை எழுப்புவது.

---

கண்டானேபையலைத்தான் கண்களெரிபறக்க
என்-காட்டுக்குவந்தவனூர் காட்டையழித்தவனூர்
ஈயெறும்புபூருதே என்னுடையகாட்டுக்குள்ளே
மானிடவன் தூங்கவா நாளாச்சோஎன்காடு.
கோபித்துக்கண்சிவந்து கோபமதிசயமாய்
பாம்புபோல்சீறி பட்சிப்பேனென்றுசொல்லி
பாவியரக்கனவன் பாறையின்மேலேறி
ஆரடாபையலே அஞ்சாமல்தூங்கவந்தாய்
நான் தூங்கும்பாறையின்மேல் நரிக்குட்டிபோலவந்து
தூங்கவந்தகாரியமேன் தூக்கியடிப்பேனடா
நித்திரையில்நாம்பொசித்தால் நிலையாதுபாவமென்று
தூக்கந்தனிலிவனை தின்றாமேயானுக்கால்
பாவமிகுத்துவரும் பரிகரிக்கக்கூடாது
எழுப்பிமுழுங்கவென்று இராட்சதனும்கையெடுத்து
அரக்கனுந்தன் துடையி லறைந்துகொண்டானப்பொழு
அரக்கன் தடை தட்டலுமே அந்தவனங்களெல்லாம் [து
கோடையிடிபோலிடித்து குமுறினதுபோலாக
அண்டையிலேதானிருக்கும் அதிரமலைமரமும்
துண்டுதுண்டாக துணிந்துவிழுந்ததுகாண்
இடிசத்தம்தான்கேட்டு இயலபிமன்தான்புரண்டு
வலதுகைதான்மாற்றி இடதுகைகீழ்போட்டு
மற்றுமந்தபாரையின்மேல்வாளபிமன்பள்ளிகொண்டான்
நித்திரைத்தான்சத்துருவு என்பதுவுங்கண்டோமே
காலின்பெருவிரலில் கனபாரைத்தான்பேர்த்து
பாறையுடனேந்தி பையலைக்கொண்டுசென்று
கல்சுனையில்போடவென்று கடிகிவாராட்சதனும்
கல்சுனைதன்னருகே கனபாறைதானிருக்க
அரக்கன்கரையேறி அபிமனைத்தின்னவென்று
அரக்கனும்தன் துடையி லறைந்தானிடிபோலே
மனதுதிடுக்கிடவே வாளபிமன்தானெழுந்து

## அபிமன்னன் எழுந்தது.

---

சொற்பனங்கண்டெழுந்தான் சுபத்திரையாள் தன்மகனும்
பாரளந்தான் தன்மகளைப் பவழவாய்சுந்தரியை
வட்டமுலைசுந்தரியை வலக்கையைதான்பிடித்து
சரசங்கள்செய்ததுபோல் தான்கண்டான்கனவுபோலே
படுக்கைகனவுகண்டேன் பாவியெழுப்பிவிட்டாய்
மடையா அரக்கா வன்னரகில்போய்விழுவாய்
என்ன அரக்கன் எழுந்துமிகநகைத்து
உன்காதல்சொல்லி உரைத்தாய்சிறுபயலே
எங்குமிரைத்தேடி யில்லாமலிங்குவந்தேன்
என்பசியாலுன்னையிப்போ எனக்களித்தானீச்சுரனும்
என்பசிதீர்ந்தால் உன்பாவம்உன்னுடனே
அகப்பட்டாய்என்கையிலே ஆயிசுமாண்டதினால்
பசிக்குதடாஎந்தனுக்குப் பயலேஎழுந்திரென்றான்
தூக்கத்தைவிட்டு துரைமன்னன்தான்விழித்து
அப்போ-பார்த்தானேபாலன் பாரமுள்ளராட்சதனை
கண்டானேராட்சதனைக் கைபிசகுவந்ததென்று
எண்ணிவிசாரமிட்டு ஏங்கிமனந்தளர்ந்து [டு
அப்போ-யீசுரனைத்தானினைந்து இருபாதம்தெண்டனிட்
மாயன்பெருமாளை மனதிலேதானினைந்து
தேவேந்திரனை சிந்தையிலேதானினைத்து [னே
எழுந்திருந்துராட்சதன்முன் னென்னசொன்னீரென்று
கைகட்டிவாய்மூடிக் கனத்தவிசேடமெல்லாம்
மெய்யாகச்சொல்லி விளக்கொண்டான்பாலனுமே

வல்லரக்கனை அபிமன்னன் தலைமுழுகி
வருகிறேனென்கிறது.

---

அய்யாவேநீர்கேளு மடியேன்றன்விண்ணப்பம்
உன்கையில்நானமடிய ஊழித்தவசிருந்தேன்
உன்விடம்தேடிவந்தேன் ஒருவிடமும்நானறியேன்
செத்தவுடன்மோட்சம சேரவேணுமையாவே
நித்திரைகொண்டாலே செத்தமரியாதையல்லோ
அய்யாவேஎன்னுடம்பு அழுக்காயிருக்குதுகாண்
முழுகிக்குளித்துமே முன்வந்துநிற்கிறேனுன்
பசியாலேயென்னையிப்போ பசியாற்றிக்கொள்ளுமென்று

நல்லதென்றுவல்லரக்கன் ஞாயமுள்ளமன்னனென்று
ஆற்றுக்குநீபோயி அப்படியேதலைமுழுகி
சீக்கிரமாய்வாருமென்று சொன்னனேவல்லாக்கன்

## அபிமன்னன் இந்திரனைவரங்கேட்க தபஞ்செய்தல்.

---

நல்லதென்றுபாலனுமே நடந்தானே அப்பொழுது
கைபிசகுவந்ததே கைவாளுமில்லையே
எண்ணிவிசாரமிட்டு ஈசர்செயலென்றுசொல்லி
ஆற்றிலேபோயிறங்கி அபிமன்னராசாவும்
முழுகித்தலையாற்றி முக்கணரைப்பூசைபண்ணி
கிழக்குமுகமாக யிருந்தேகிருபையுடன்
சூரியனைத்தெண்டனிட்டு தோத்திரங்கள்செய்தானே
ஆயிரத்துநூற்று அருந்தவங்கள்செய்தானே
கடலிலெழுகின்ற கதிரோனேசரணமென்றான்
பச்சைக்குதிரையுள்ளாய் பனிப்பகையானவனே
அழகுபன்னிரண்டுடைய ஆதித்தாசரணமென்றான்
அருச்சுனனார்புத்திரனே அபிமன்நானடைக்கலமே
அப்போகதிரோனும் அதிசயமாய்த்தான்பார்த்து
கண்டறியவேணுமென்று கதிரோனுமிறங்கிவந்து
ஆரடாபையா அழைத்ததென்னசொல்லுமென்றான்
சூரியரேயென்வரவு சொல்லுகிறேன்கேளுமையா
தருமருடன்பிறந்த தனஞ்சயனார்புத்திரனன்
என்பேரபிமன்னன் என்பாட்டனிந்திரன்காண்
மாயன்மகள்சுந்தரியை மணஞ்செய்யவேணுமென்று
வழிதப்பியிங்குவந்தேன் வல்லரக்கன்போகவொட்டான்
எதிர்த்துப்பொருதவென்றால் என்கையில்வாளுமில்லை
அத்துவானகானகத்தில் அகப்பட்டேன்சூரியனே
வல்லாக்கன்கையிலே மடிந்துவிட நாளாச்சு [ட்டான்
பொருதவென்றால்வாளில்லை போகவென்றால்போகவொ
ஆதித்தா நீர்கேளும் ஆகையினாலழைத்தேன்
வாராய்நீவாளபிமா கேளாயொருவார்த்தை
வல்லாக்கனைச்செயிக்க வலுமையில்லைஎங்களுக்கு
கிழக்கெழுந்துநாங்கள் கிரணங்கள்தன்னுடனே
செல்லுகிறோமென்று சொன்னாரேசூரியனும்
ஆனாலுநீர்கேளும் அபிமாநான்சொல்லுவதை
தேவேந்திரனரை சிந்தைதனிலேநினைந்தால்

அவராலேயாகுங்காண் ஆயுதமுனக்களிக்க
அப்போதபிமனும் ஆயிரங்கண்ணிந்திரனை
தோத்திரஞ்செய்தானே சுபத்திரையாள்தன்மகனும்
அப்போதுஇந்திரனும் அன்பாய்மனமகிழ்ந்து
வாளொன்றுபோதாது மன்னனபிமருக்கு
பாணமும்வில்லும் பத்திரகாளிகோயிலிலே
அடைக்கலமாய்வைத்தார்கள் ஐவரிட ஆயுதங்கள்
வகைப்படவேவாங்கிவந்து மன்னனுக்குதருகவென்று
முப்பத்துமுக்கோடி தேவர்முனிவர்களும்
நாற்பத்துயெண்கோடி ராஜரிஷியோரும்
இந்திரனுந்தேவரு மெல்லோருந்தான்கூடி
வந்தார்கள்பூமியிலே மாகாளிகோவிலண்டை
தேவரைக்கண்டு திடுகிட்டுமாதேவி
வீரமாகாளி வினவினள்தேவர்களே
வந்தவகையென்னவென்று மனங்குளிரக்கேட்டாளே
தேவேந்திரனும் தெரியவேசொல்வாராம்
என்னிடபேரனுக்கு இளப்புமெத்தவந்ததுகாண்
உந்தனடைக்கலமாய் வைத்திருக்குமாயுதத்தை
எந்தனிடபேரனுக்கு யெடுத்துதாவேணுமென்றார்
அருச்சுனனார்காண்டிபம் அம்புறாத்தூணியுமே
இப்பவேநீதான் எடுத்துகொடுக்கவென்றார்
தேவேந்திரனும் தீவிரமாய்க்கேட்கவுமே
வீரமாகாளி விசேடமுரைத்தாளே
ஐவரும்வந்து அடியேனரண்மனையில்
அடைக்கலமாய்வைத்த ஆயுதத்தையான்கொடுத்தால்
நடக்குமோஞாயங்கள் நான்கொடுப்பதில்லையென்றாள்
அதை-தேவேந்திரன்கேட்டு தேவிமுகம்பார்த்து
மாகாளிதன்தனக்கு மறுவார்த்தையேதுரைப்பார்
பாரமுள்ளராட்சதன்கையில் பாலனகப்பட்டதுவும்
பொல்லாதராட்சதனும் புசிக்கநினைத்ததுவும்
நல்லதென்றுபாலன் நம்மைநினைத்ததுவும்
எல்லோருங்கூடி இளப்பம்வந்ததென்றுசொல்லி
பாலனைத்தப்பிவிட வந்தோமேகாரிழையே
நீ-மாட்டேனென்றுசொன்னால்மடிந்திடுவான்பாலனுமே
அபிமன்மடிந்தாலே அருச்சுனருந்தான்மடிவார்
மெத்தப்பழிகள் விளைந்திடுமேபாலனுக்காய்

## அஉ அபிமன்னன் சுந்தரியாலே.

காண்டீபவில்லும் கடுகெனவே நீகொடுத்தால்
ஒருநாழிகைக்குள்ளே ஒப்பிவிப்பேனுன்கையிலே
என்றவருஞ்சொல்லி இதமாயெடுத்துரைத்தார்
வீரமாகாளியரும் விரும்பிமன துவந்து
அர்ச்சுனனுாயுதத்தை அவர்கையிலொப்பிவித்தாள்
பார்த்தாரேயிந்திரரும் பாரவில்லுமாயுதத்தை
ஆயிரஞ்சூலவண்டி அடங்காதபாரமிது
போயுதவமாட்டாது பிசகுவருமென்றுசொல்லி
என்றுவிசாரமிட்டு இந்திரருமப்பொழுது
ஓலைப்பூவாக ஒளிவுடனே தான்சபித்து
காளியைப்பார்த்து கதிரோனுமிந்திரனும்
தாங்கள்கொண்டுபோக நடக்காதுகாளியரே
இப்படியேபோனல் இராட்சதன்தான்பார்த்தால்
எங்குந்திரியவொட்டன் எமகண்டசண்டாளன்
அதினாலேநாங்க ளஞ்சுவோமவன்தனக்கு
கொண்டுபோய்நீகொடுங்காண் உன்குமாரனபிமருக்கு
என்றுசொல்லக்காளியரும் இதுவோசிலபாரமென்று

காளி அபிமன்னனுக்கு வாள்கொடுப்பது.

---

வாளைச்சடையிலேமங்கையருந்தான்சொருகி
வில்லம்புபாணமெல்லாம் மேனியிலேபூஷணமாய்
கடகத்தைவாய்தனிலே கவ்வியந்தகாளியரும்
மச்சத்தைமீன்குத்தி வந்தொருக்கால்பாய்ந்ததுபோல்
தக்கதொருதுர்க்கையருஞ் சலத்திலேபோய்பாய்ந்தாள்
நீர்நாகம்போலேயல்லோ நீந்திவாருள்கம்பையாற்றில்
வாள்கொண்டுநீரில்வரும் மாதாவைக்கண்டானே
ஆலித்துவாளபிமன் அம்மையைதோத்தரித்தான்
மாயனுடதங்கையரே மகதேவன்தேவியரே
சூலிகபாலியரே துரந்தரிதுர்க்கையரே
நீலித்திரிசூலி நிரஞ்சனியேகவல்லி
பிள்ளை துயர்தீர்க்கும் பெருமையுள்ளமாதாவே
மைந்தனைக்காப்பாற்று மாதாவேநான்சரணம்
மாதாபரஞ்சோதி மைந்தருக்குப்புத்திசொல்லும்
வாழ்த்தியேவாள்தாரும் வல்லரக்கனைச்செயிக்க
என்றதொருவாசகத்தை யேகவல்லிதான்கேட்டு
மைந்தனைப்பார்த்து மகிழ்ந்துரைப்பாள்காளியரும்

மாற்றானைவென்றிடுவாய் மகாபலனையுண்டாவீர்
எதிர்த்து அமர்பொருதி இராட்சதனைவென்றிடுவாய்
என்று-வாயாரவாழ்த்தி வாள்கடகம்கைக்கொடுத்தாள்
வில்லம்புபாணமது வீரமாகாளிதந்தாள்
செயம்பொருந்துமகனேயென்று தேவியும்போய்மறைந் [தாள்
வாள்கடகம்வாங்கி வருவதற்குமுன்பாக

அபிமன்னன் வல்லாக்கனோடு எதிர்க்கிறது.

---

அரக்கனுமப்போது அபிமனைத்தானழைப்பான்
வாடாசிறுபயலே என்வயிறுபசிக்குதடா
காலாப்பசியெடுத்து கடுகியிளப்பாகுதடா
நரைபெலிதின்றால் நாவில்ருசியுமுண்டு
எத்தனைநோமாய் நீமுழுகப்போயிருந்தாய்
வாடாநீபையலென்று வல்லாக்கன்கூப்பிடவே
வந்தானேவாளபிமன் வல்லாக்கன்தன்னெதிரே
வாடாநீவல்லரக்கா வலுமையுண்டோஉன்கையிலே
நில்லாடவல்லரக்கா நிலைதப்பிப்போகாதே
ஓடியொளித்து உயிர்தப்பிப்போகாதே
கேளடாராட்சதனே கெருவமென்னஉந்தனுக்கு
இந்தவனத்தி லிருந்ததொருமிருகமெல்லாம
கொன்றுதின்னாய்இன்றொருநாள் உன்குடலைப்பிடுங்கவ [ந்தேன்
என்றுசொல்லிராட்சதனும் ஏங்கிமிகச்சிரித்து
வாடாசிறுபயலே வாயாடவேண்டாங்காண்
சாவுதுணிந்தல்லவோ சட்டையற்றுப்பேசுகிறாய்
நசிக்கிப்பிழிந்துவுன்னை என்நாவில்தடவுவண்டா
கெறுவமேனுந்தனுக்கு கிட்டவாடாவென்றுசொன்னான்
இந்தஅரக்கன்முன்னே இடிபோலேவாளபிமன்
வீரிட்டெழுந்திருந்து வில்வாங்கிஅம்புதொட்டு
ஆக்கரித்துப்பற்கடித்து அரக்கனைத்தான்பார்த்து
ஏண்டாநீவல்லரக்கா யென்னைஅழைக்கிறாய்
காண்டாவனமெரித்த காளைமகன்நான்தாண்டா
வாடாநீசண்டைக்கு மாவீராவல்லரக்கா [னான்
என்றுசொல்லிபாலனும் எடுத்தெரிந்துவார்த்தைசொன்
பார்த்தானேவல்லரக்கன் பையலிடவார்த்தைதன்னை
அறியாதபாலனுக்கு அறியாமல்வந்ததென்ன
நன்றாச்சுநன்றாச்சு நரியெதிர்த்தாற்புலியாச்சு

# அச அபிமன்னன் சுந்தரிமாலை.

நரியெதிர்த்தால்சிங்கமோ நாயெதிர்த்தால்புலியாச்சோ
என்று நீட்டினன்கையிரண்டும் நீலமலைபோலே

அபிமன்னனுக்கும் வல்லரக்கனுக்கும் சண்டை

---

கண்டானேபாலகன்தான் கைவாரசத்துவத்தை
அண்டாதபாணமதை அபிமனும்வில்வளைத்து
துண்டாகக்கையறவே தொடுத்தானேபாலனப்போ
பாணம்வருகிறதைப் பார்த்தத்தவல்லரக்கன்
பூணிக்கையாகவே பிடித்துபிசைந்துவிட்டான்
பார்த்தானேவல்லரக்கன் பாணம்பின்வருகுதென்று
கல்லுமலைகளும் கனமலைகளுள்ளதெல்லாம்
எல்லாம்பிடிங்கி யிடிபோலேதான்சொரிந்தான்
வந்தமலைகளும் மற்றுமுள்ளகாடுகளும்
பஞ்சிபோலேதான்பறக்கப் பார்த்தானேபாலனுமே
வல்லரக்கன்கோபங்கள் மட்டிடப்போகாது
வெல்லும்பெருமலையை வேரோடேதான்பிடிங்கி
நல்லஅபிமன்னன் நடுதலையில்போட்டானே
வாறபெருமலையை வாளபிமன்தான்கண்டு
ஆறுகணைதொடுத்துவிட்டு அறுத்தான்பொடியாக
இரண்டுமலைபிடிங்கி இராட்சதனும்விட்டெறிந்தான்
இரண்டுமலைநாலா இணைவாளால்வீசிவிட்டான்
பிலத்துடனே வல்லரக்கன் பெரும்புலிபோல்சிரித்து
என்னயிதுபுதுமை யிவ்வுலகில்கண்டதில்லை
இருநூறுகாதவழி யெடுத்துவந்தோம்தின்னவென்று
எடுத்துவிழுங்கிவிட்டா வின்னேரம்செரித்துவிடும்
நரிஎதிர்த்தால்சிங்கமென்று நாட்டில்கதைகேட்டோமே
இவனேசிலபாரமென்றெழுந்தான்ராட்சதனும்
மூன்றுமலைபிடிங்கி முகத்தின்மேல்விட்டெறிந்தான்
மூன்றுமலைதூளாக முறியடித்தான்வாளபிமன்
நாலுமலைபிடிங்கி ராட்சதனும்விட்டெறிந்தான்
நாலுமலைதூளாக நசுக்கடித்தான்வாளபிமன்
ஐந்துமலைதான்பிடிங்கி அபிமன்மேல்விட்டெறிந்தான்
ஐந்துமலைதூளாக்கி அபிமன்னனெழுந்திருந்து
எழுகணைதொடுத்து இராட்சதன்மேல்விட்டானே
மார்பிலேபட்டு வருகுதுஉதிரமங்கே
வல்லரக்கன்கோபித்து மலைபிடிங்கிகைபிடித்து

பூமி அதிர்ந்து பூலோகம்நெக்குவிட
அண்டமதிர்ந்துவிழ ஆகாயம்நெக்குவுட
கதிரோனும்சந்திரனும் கதிதப்பிப்போய்மறைய
வனத்தில்மிருகமெல்லாம் மருகடலாடிவிட
சிங்கங்களெல்லாம் சீறியெழுந்தாற்போல்
ஆனைகளெல்லாம் அதட்டியெழுந்தாற்போல்
கீழேழுலோகமெல்லாம் கிடுகிடென்றுதானதிர
எதிர்த்தாரிருவருமே இருண்டவனந்தனிலே
ஒருவர்க்கொருவர் உரைத்ததுதெப்பையங்கே
ஆறுமலைபிடிங்கி அபிமன்மேல்விட்டெறிந்தான்
ஆறுமலை தூளாக்கி அபிமனப்போயேதுசொல்வான்
வாடா நீவல்லரக்கா உன்வாணாளழிக்கவந்தேன்
கேளடாவல்லரக்கா உன்கெருவமடக்கவந்தேன்
நில்லடாவல்லரக்கா நீயோடிப்போகாதே
என்றுசொல்லவல்லரக்க னிதுபுதுமையென்றுசொல்லி
ஏழுமலைபிடிங்கி எதிர்த்தானேவல்லரக்கன்
ஏழும்பதினைலா யிழுக்கடித்தான்வாளபிமன்
எட்டுமலைபிடிங்கி விட்டெறிந்தான்ராட்சதனும்
எட்டுமலைபட்டுவிழ இணைவாளால்வீசிவிட்டான்
பத்துமலைபிடிங்கி பையன்மேல்விட்டெறிந்தான்
பத்துமலைச்சிதற பறக்கடித்தான்வாளபிமன்
கோபம்வந்துவல்லரக்கன் கோட்டையிடிபோலே
வேதாளமாகவந்து விழுந்தானேவல்லரக்கன்
பார்த்தானேபாலன் பாவியுடசத்துவத்தை
அறுத்தானேவாளாலே அவனங்கம்பொடியாக
விழுந்தானேவல்லரக்கன் மேனியெல்லாந்தானடுங்க
கண்டானேபாலன் கபடானராட்சதனை
துண்டாகவேவெட்டி துணிக்கவேவேணுமென்று
வாளுருவியோடிவந்தான் மாயன்மருகோனும்
காளையானவல்லரக்கன் கடுகெனவேதானெழும்பி
மலைகளெல்லாமாண்டதோ மரம்பிடுங்கிவல்லரக்கன்
வாடா நீவல்லரக்கா கேளாயொருவார்த்தை
மலைபட்டபாடுதான் மரங்களென்னசெய்யுமடா
கிட்டவாடாராட்சதனே வெட்டிப்பலியிடுவேன்
காகொண்டவல்லரக்கன் கையிரண்டுந்தானீட்டி
ஏரலிலேகுத்தி யெடுத்துவிழுங்கவென்று

நீட்டினான்கையை நெடியமரம்போலே
வல்லரக்கன்தான்வரவே வாளபிமன்தான்சிறித்து
எத்தனைநேரம் இவனுடனேபோராட்டம்
மந்திரவாளெடுத்து வாளபிமன்கைபிடித்து
அரக்கனிடகையிரண்டும் அறுத்தானேவாளாலே
கூவினான்வல்லரக்கன் கொடிமுடிதானதிர
ஆவென்றசத்தம் அண்டம்கிடுகிடென்ன
ஆகாயம்பூமி அதிர்ந்துநடுங்கிடவே
சத்தசமுத்திரம் சலம்வற்றிஉள்ளடங்க
சந்திரசூரியர் தானடுங்கியோடிவிட
முப்பத்துமுக்கோடி தேவர்களும்முனிவர்களும்
தேவேந்திரன்கூட திகைத்துமுகம்பார்க்க
வல்லரக்கன்சண்டை பலவந்தமாச்சுதென்று
சொல்லிநகைக்கிறதும் சூட்சங்கள்பேசுறதும்
இப்படியாய்ச்சொல்லி இருக்கிறவேளையிலே
பையலபிமன்னன் பாணசரத்தாலே

வல்லரக்கன் இறந்துவிட்டது.

---

விழுந்தானரக்கன் மேருமலைதுண்டதுபோல்
அசைந்துகிடக்கச்சே அபிமன்னராசாவும்
அரக்கன்முழங்காலை அறுத்தானேயன்னேரம்
தலையறுந்துதரையில்விழ தனிவாளால்வீசினான்
அறுத்துவிழுந்தபோது ஆவென்றுவாய்குளறி
தங்காள்கமலகன்னி தாயேயென்றுகூச்சலிட்டான்
கெட்டேன்கமலகன்னி கடோர்க்கஜாயென்மருகா
பட்டேன்வனந்தனிலே பையன்கைவாளாலே
அறிந்தாள்கமலகன்னி அண்ணனிடகூச்சல்தனை
மயங்கிவிழுந்தவளு மகனுரைத்தேடலுற்றாள்
வல்லரக்கன்முண்டமது மலைமரங்களுள்ளதெல்லாம்
புரண்டுஉருண்டு பொடிப்பொடியாயாகுதுகாண்
காட்டிலேயுள்ள கனமிருகசாதியெல்லாம்
திட்டமுடன்கொன்று திரண்டதுகாண்முண்டமது
பூமியொரு அம்மியமாம் அவனொருகுழவியுமாய் [போல்
அவ்வனத்துமிருகமெல்லாம் அம்மியின்மேல்மிளகது
அரைத்துவைக்குதுகாண் அரக்கனிடமுண்டமது
அப்போதுவாளபிமன் அரக்கனண்டைவந்துநின்று

ஏதடாயிவனுக்கு இந்தபலம்வந்துதென்று
அமிர்தகலசம் அடிவயிற்றில்உண்டோதான்
என்றுசொல்லிபாலனுமே எதிராகவந்துநின்று
வாளாலேகுத்தி வ்யிற்றைக்கிழித்தானே
அறுத்தானேகலசத்தை ஆற்றிலேபோட்டுவிட்டான்
போனானேவல்லாக்கன் புலம்பியேஆகாயம்
அவனுயிரைத்தானு மழித்துவிட்டார்பெருநாகில்
இந்திரரும்தேவர்களும் மெல்லாமனமகிழ்ந்து
பூமாரிதான்பொழிந்தார் போரபிமன் தன்மேலே
அப்போவபிமர்வந்து ஆற்றிலேதான்முழுகி
க்கைகால்முகம்கழுவி கனிவாயுங்கொப்பளித்து
மேடேறிவந்து முழுகியபசியதனல்
காட்டகத்திலுள்ள கனிபழங்கள்வேணதெல்லாம்
பண்டுபலாதிகள் பலாப்பழங்கள்மாம்பழங்கள்
திட்டமுடன்பொசித்து தீர்த்தான்பசிதனையே
வாள்வில்லைக்கைப்பிடித்து வாளபிமன்ஏதுசெய்வான்
அரக்கன்விழும்போது ஆவென்றுதான்கூவி
மருமகனைத்தானினைந்தான் வரட்டும்சலுவையென்று
சலுவைவருமளவும் செடியிலேவாள்சொருவி
வழிபார்த்துவாளபிமன் மலைபோலேவீற்றிருந்தான்
ஆலமரத்திலே அதின்விழுதைஉஞ்சலிட்டு
ஏறிவிளையாடி யிருந்தானேவாளபிமன் ]து
அப்போ-கமலகன்னிதன்மகனை கடுகெனவேதானழைத்
வாடாகடோற்கஜனே மதவீமன்தன்மகனே
உன் அம்மானரக்கனுக்கு ஆபத்துவந்ததென்று
என்னைநினைத்து இடிபோலேகூச்சலிட்டான்
போயறியவேணுமடா போர்புரியும்வீரியனே
ஏதடிதாயே எங்களம்மான்றனக்கு
ஆபத்துத்தான்வருமோ அம்மானே நீர்கேளும்
ஆகாயம்பூமி அதிர்ந்துவிழுந்தாலும்
தேவர்களாலும் செயிக்கவேபோகாது
எங்களம்மான்வல்லாக்க னிடிக்குச்சமானமுள்ளான்
என்றுகடோற்கஜனு மெடுத்துரைத்தானப்பொழுது
அப்படியல்லவடா அறியநீதம்பியரே
போயறிந்துவாருமென்று போகவிடைகொடுத்தாள்
அப்படியேநல்லதென்று அடிவணங்கிதெண்டனிட்டு

## அஅ அபிமன்னன் சுந்தரியாலே.

தெண்டுங்கடகமும் திடமானவில்கணையும்
எடுத்தேறகக்கட்டி யிடிபோலேகொக்கரித்து
மறித்துமவனுரைப்பான் மாதாமுகம்நோக்கி
அம்மாளுக்காபத்து வந்ததென்றுசொன்னீரே
அவனைசெயிக்கிற பேருமில்லைவையகத்தில்
சிவன்பிர்மாவிஷ்ணுவும் தேவேந்திரன்முதலாய்
எமதர்மனுனுலு மெதிர்விழிக்கப்போகாது
அப்படிக்கொத்தவன்மே லார்சண்டைசெய்வார்கள்
கூப்பிட்டானென்று கோதையரேசொன்னீரே
அப்படியேமெய்யாய்தா னுபத்தேயானாலும்
கஞ்சிகொண்டுபோனுல் களைக்குதவுமாகாதே
காவடியில்கட்டி கனமாகயிப்பொழுது
கொண்டுபோகவேணுமென்று சொன்னான்கடோர்க்கஜ
அவ்வசனங்கேட்டு அம்மாள்கமலக்கன்னி [னும்
கடுகவேதாதியரைக் காதலுடன்தாமழைத்து
பதிருயிரக்கலம் பச்சரிசிதானெடுத்து
கொள்ளுயிருகலம் கூடவேதான்கலந்து
கஞ்சியாய்க்காய்ச்சி காவடியில்வையுமென்ருன்
பண்ணைபறட்டை பருந்தும்பைமுன்னையுடன்
ஏனவகையுடையபயிலைக்கறிகளுள்ளதெல்லாம் [ள்
குன்றுபோல்தான்பிடிங்கி கொப்பரையில்தான்சமைத்தா
பிரட்டியுருட்டி பெருமலைபோல்தான்திரட்டி
கஞ்சியொருபக்கம் கலவலொருபக்கமுமாய்
வைத்தார்கள்காவடியில் மலைபோலோட்சதிகள்
எடுத்தான்கடோற்கஜனு மிருதோளுந்தானசங்க
கொப்பரையில்கஞ்சி குதித்துத்தளும்பவேதான்
சீக்கிரமாய்தானடந்தான் சிறுவன்கடோற்கஜனும்
கால்நடையாய்தானடந்து கடிகிவருவானே
பச்சைமலைதேடி பவழமலைதான்தேடி
கொல்லிமலை ஆராய்ந்து குட்குமலைதான்தேடி
அம்மான்சலங்குடிக்கு மரியமடுதனிலே
காட்டானைநீர்குடிக்க கண்டான்கடோற்கஜனும்
தெண்டையுங்காவடியும் சீராய்தரையில்வைத்து
அம்மானைத்தேடி அருஞ்சுனைநீர்குடித்து
கரையேறிவந்து காவடியும்தெண்டனிட்டு
மாமனிருக்கும் வனந்தேடித்தான்வரச்சே

மேற்கடல்பொங்கி வெள்ளமிட்டுவாராற்போல்
செவ்வானம்போலிரத்தம் சிவந்துவரக்கண்டானே
கண்டான்கடோற்கஜனும் கைகாலசைந்துநின்றான்
என்னபுதுமையிது யெண்ணமிட்டுகடோற்கஜனும்
உதிராறுதான்தாண்டி ஓடிவாரான்கடோர்க்கஜனும்
அம்மானிருக்குமந்த அக்காட்டினுட்புகுந்தான்
பார்த்தானே நாலுதிக்கும் பட்டமலைமாத்தை
தோப்புகளெல்லாம் தூளாய்க்கிடக்கிறதும்
மாமரங்களெல்லா மடிந்துகிடக்கிறதும்
கரடிகள்சிங்கங்கள் காட்டானையுள்ளதெல்லாம்
பொடிப்பொடியாய்த்தானுமங்கே பூமிநிறைந்ததுவும்
கண்டான்கடோர்க்கஜனும் காலிரண்டும்பாவாதே
காடுகடந்துமவன் கண்டானே அம்மானை
மலைபோல்விழுந்திருக்கும் வல்லரக்கன் தன்தலையை
பார்த்தான்கடோர்க்கஜனும் பார்த்துமேதலையசைத்தான்
ஆரடாகொன்றவர்க ளம்மானையென்றுசொல்லி
அகோரமாய்த்தானழுதான் அம்மானைத்தானினைந்து
உன்-கட்டையறிந்தவனோ காட்டைக்குலைத்தவனோ
ஈயெறும்புதீண்டாத இருண்டவனந்தனிலே
மானிடவர்வந்து வதைக்கவழியாச்சோ
கோபித்துக்கண்சிவந்தான் கோவைப்பழம்போலே
ஆலித்தெழுந்திருந்து அம்மானைக்கொன்றவனை
இப்பவேகொன்று எமலோகம்போக்கிடுவேன்
என்றுசபதமிட்டு இறக்கிவைத்தான்காவடியை
அம்மானைக்கொன்றவனை அறிந்துபழிவாங்கவென்று
மாமனைக்கொன்றவனை மறித்துபழிவாங்கவென்று
தெண்டெடுத்துதோளில்வைத்து சீக்கிரமாய்தானெழுந்
காடெல்லாந்தேடுகிறான் கடோற்கஜனப்பொழுது [து
ஓடியெங்குந்தான்பார்த்தான் உயர்ந்த அடிதான்காணான்
பாலனடியல்லாமல் பர்ந்த-அடிகாணானே
அழுதுகளைதெளிந்து ஆலமரத்தடியில்
விழுதின்மேலேறி விளையாடும்பாலனைத்தான்
கண்டான்கடோற்கஜனும் காளையபிமன்னனை
தம்பிசிறுபிள்ளாய் தாஷ்டிகாட்சதனை
கொன்றவனைக்காணையோ கொற்றவனேசொல்லுமென்று
அம்மானைக்கொன்றவனை அறியாயோபாலகனே [ன்

அவ்விசேஷம்கேட்டு அபிமன்னராசாவும்
சொன்னனேவாய்திறந்து சூதானவார்த்தைதன்னை
ராட்சதனைக்கொன்ற நற்பாலனிப்பொழுது
வடக்குமுகமாகவே போனன்மலைபோலே
திடுக்கென்றுதானேடி தீவிரமாய்பாருமென்றான்
அப்படியேபோனனே அவன்சொன்னசாடையெல்லாம்
தேடியேகாணுமல் திரும்பிவந்தான்பாலனண்டை
காணேமென்றுசொல்லி கவலையுடன்கேட்டான்
தெற்குவடக்குத் தென்மேற்குதென்கிழக்கு
நாலுதிக்குமோடி நலமாகப்பாருமென்றான்
ஆக்கனைக்கொன்றவன் அகப்படுவானென்றுசொல்லி
ஓடியேபாருமென்று உத்தாரம்பண்ணனே
பூனையையானையைப்போல்பெரும்புலிபோல்தான்திரிந்து
தேடிப்பிடித்தவனைச் சீக்கிரமாய்க்கொல்லுமென்றான்
அவ்வார்த்தையைக்கேட்டு அப்படியேதானேடி
நாலுதிக்குமோடி நாட்டமுடன்பார்த்தானே
காடுமலையும் கடியவனந்திரமும்
வடகடலுந்தென்கடலும் மற்றுமுள்ளதீவுகளும்
திட்டமுடன்பார்த்து திரிந்தெங்குங்காணுமல்
எங்கேயுங்காணும லேங்கிவிசாரமிட்டு
மறுபடியும்தான்வந்து வருத்தமுடன்கேட்டானே
கேட்டவுடனே கிருபையுள்ளபாலனுமே
உன்-அம்மானைக்கொன்றவனை அவனைநீகண்டாக்கால்
என்னதான்செய்வாய் எனக்கறியக்கூறுமென்றான்
சொல்லுமென்றுகேட்கலுமேசுருக்காகத்தானுரைப்பான்
என்-அம்மானைக்கொன்றவனை அறிந்தேனேயாமாகில்
வெட்டிப்பலியிடுவேன் வீரமாகாளியற்கு
குத்திவலித்து குடலீரல்தான்பிடிங்கி
வெட்டிதலைபிளந்து விட்டெறிவேன்நாலுதிக்கும்
நன்றாயுடல்பிளந்து நாலுதிக்கும்போட்டிடுவேன்
என்னகடோர்க்கஜனும் யேதுரைப்பான்பாலனுமே
கோபித்துகண்சிவந்து கொக்கரித்து அப்பொழுது
அடங்கியிருந்தாக்கால் ஆக்கனும்சட்டைசெய்யான்
ஆலித்தடிபாய்ந்து அபிமனுங்கொக்கரித்து
வெட்டினவன்நானிருக்க பட்டிமகன்தேடுவதேன்
ஆடாராட்சதனே அரக்கனுக்குநீயுறவோ



பாராயரக்கனிட பாடுபடப்போருயோ
வாடாநீஉதிரத்தில் மஞ்சனீராட்டுகிறேன்
போராடவேபயந்து புத்திகெட்டுஓடாதே
கொன்றவனும்நான்தாண்டா கோலமுள்ளராட்சதனே
உன்னம்மாணைக்கொன்றதோ ராண்பிள்ளை நான்தாண்டா

## கடோர்க்கஜனுக்கும் அபிமன்னனுக்கும் யுத்தம்.

என்னுடேசண்டைக்குஎதிர்த்துவாடாவென்றுசொன்னு
தாவித்துவில்லெடுத்து சரபாணம்தான்தொடுத்து [ன்
காளையபிமருடன் கடோர்க்கஜனேதுரைப்பான்
வாருய்சிறுபயலே யென்மாமனைகொன்றவனுர் [ன்
உனக்குதுரை தானேஒளித்துவைத்தால்சொல்லுமென்ரு
உன் துரையுநான் தாண்டா உன்னம்மானைகொன்றவனுன்
நீயெதிர்த்தாலும்மையும் இருபிளவுசெய்வேனுன்
என்றுசொல்லவாளபிமன் ஏங்கிகடோர்க்கஜனும்
பக்கத்திலாளைவைத்து பட்சமாய்சொல்கிறேன்நான்
உள்ளே அழைத்துகொண்டு துள்ளிதிரிகிருன்காண்
மடிந்தவனைப்பார்த்தால் திரும்பில்பெரியவன்காண்
துணித்தவனைப்பார்த்தால் அரும்பில்சிறியவன்காண்
முன்னேபெரியோர்க ளுரைத்தமொழிப்படியே
சிறியதெல்லாம்பெரியதுக்கிறையென்றுசொல்லுவார்கள்
பெரியதெல்லாம்சிறியதுக் கிறையாச்சு இதுபுதுமை
இந்தப்புதுமையை யினியறியவே ணுமென்று
மூன்னூறுமுழக்கச்சை மூனுசுத்தாய்தானிறுக்கி
எழுநூறுயானை இழுக்கவொண்ணுதெண்டுகளை
சுத்தியெடுத்து தோளின்மேல்வைத்துகொண்டு [ரூர்
பொருதுவம்வாவென்றுமை போர்க்களத்தில்வந்துநின்
இருப்புலக்கைகைபிடித்து எறிந்தானவன்தலைமேல்
வருகிறதண்டையவன் வாளாலேதட்டிவிட்டான்
காதவழியெழும்பிக் கால்மேலேவந்துவிழும்
கடோர்க்கஜன்தானெழும்பி கடுங்கோபந்தானுகி
பாமலைபிடிங்கி பாலன்மேல்விட்டெறிந்தான்
அந்தமலையை அபிமன்னராசாவும்
பந்தடித்ததன்மையைப்போல் பறக்கடித்தான்வாளபிமன்
கடோற்கஜனப்பொழுது கடுங்கோபங்கொண்டெழுந்தா
வில்லையெடுத்து வீறிட்டுகடோர்க்கஜனும் [ன்

ஆயிரம்பாணம் அபிமன்மேல்போய்விழவே
உபதேசம்பண்ணி உக்கிரமாய்விட்டானே
பாலன துகண்டு பாரியவில்லெடுத்து
தூளாகிப்போகத் தொடுத்தானெதிர்பாணம்
பாணமும்பாணமும் பரவியெதிர்கொண்டு
பாளையாகப்பறந்து துணிந்துவிழுந்ததுகாண்
ஐந்நூறுபாணம் அபிமன்னராசாவும்
அரக்கன்தலைவிழவே அன்னேரம்விட்டானும்
கடோர்க்கஜன்கண்டுமே கையாலேதட்டிவிட்டான்
வடக்கேயெறிந்துவிட்டான் வாளபிமன்பாணத்தை
கோபித்துபாலனுமே கோடையிடிபோலே
வாய்விட்டுக்கூறி மறுபாணந்தான்தொடுத்தான்
ஆயிரத்திமூன்று அதிர்பாணந்தான்தொடுத்தான்
மாயக்கடோர்க்கஜனும் வந்தவொருபாணமெல்லாம்
ஓயாமல்தட்டி உதிரடித்தான்பூமியிலே
கடோர்க்கஜன்தெண்டாலே கனமார்பில்தானறைந்தான்
வாளாலபிமன் வருந்தெண்டைதட்டிவிட்டான்
தெண்டையிடையவைத்து திகைத்துமனம்வெருகி
முத்துமுடியசைந்து மூக்குமேல்கையைவைத்து
இந்தஉலகிலெவரும்எதிருமில்லை
கச்சுகட்டுமுள்மடியும் கடகுமந்திரவாளழகும்
ஒட்டிப்பொருந்துவதும் உடையும்நடையழகும்
நம்முடையவங்கிஷவான் போலேயிருக்குதென்று
ஈச்சுரனோவிஷ்ணுவோ எழுதும்பிரமாவோ
சூரபத்மனைச்செயித்த சுப்பிரமணியரோ
கசமுகனைக்கொல்லவந்த சண்முகவிக்கினரோ
தக்கன்தலையறுத்த தனிவீரபத்திரரோ
ஐவர்க்குரியவரோ ஆதிநாராயணரோ
ஆரடாபயலேயென்று அதட்டியேகேட்கலுற்றான்
எனக்கேழ்க்கக்கடோர்கசனுமேதுரைப்பான்பாலனுமே
வாருய்நீராட்சதனே கேளாயொருவார்த்தை
காவலழிக்கவந்தேன் கட்டுரைக்கபேசவந்தேன் [ள்வேன்
உன்பலத்தைக்கருவறுப்பேன் வல்லுயிரைகொள்ளைகொ
உன்னம்மான்தன்னுடனே அனுப்பவந்தேனுன்னையுந்
பொருவையோயாமாகில் போகாதேநில்லென்றான் [தான்
கனவீமன்பெற்றெடுத்த கடோர்க்கஜன்தான்கேட்டு

வாடாசிறுபயலே கேளாயொருவார்த்தை
என்னம்மான்பழிதீர மண்டைசிதரடிப்பேன்
போனீரேயாமாகில் போகவொட்டேன் நானும்மை
என்றுசொல்லியப்பொழுது யிருவருமேதானெதிர்த்தார்
தெண்டால்கடோர்க்கஜனும் தீவிரமாய்த்தானடித்தான்
பந்துவிழுந்தாற்போல் வந்துவிழும்பாலனுக்கு
அப்போதுபாலனுமே அனலாயெரிபறந்து
வாளாலேவெட்டினான் மன்னன்கடோர்கஜனை
பூமாலையாகவே போந்தது அவன்கழுத்தில்
கண்டான்கடோர்க்கசனும் கபடுவந்ததென்றுசொல்லி
ஏறநினைத்து யெண்ணமிட்டுகடோர்க்கசனும் [நின்றான்
இதை அறியவேவேண்டுமென்று அபிமாண்டைவந்து
தம்பிசிறுபிள்ளாய் சமர்த்தனாய்சண்டைபண்ணாய்
விந்தையாயென்மனதில் சந்தோஷந்தானாச்சு
உன்பேருரைச்சொல்லி பொருதடாதம்பியென்றான்
வாடா நீராட்சதனே மாமன்பழிவாங்கவந்தாய்
ரணக்களத்தில்பேருரைத்தால் ராச்சியத்தில்கேட்பாரோ
படுகளத்தில்ஒப்பாரி கேட்பாரோபார்வேந்தா
ஊர்பேர்தான்கேட்பார்கள் உற்றகவிவாணர்
என்பேரை நீகேட்க என்மேல்கவிபாடுவாயோ
பேருமில்லையூருமில்லை பொருதுவோம்வாடாவென்றான்
அப்போகடோர்க்கசனும் அபிமனுடனேதுசொல்வான்
உன்னுடையஊர்பெயரை எடுத்துமுன்னேசொல்வாயே
பிற்பாடுசொல்கிறையோ பெருமையுள்ளசிறுபிள்ளாய்
ஊர்பேர்தான்கேட்கவென்றால் உம்முடையஆயுதத்தை
கடக்கவெறிந்துவிட்டுக் கைகட்டிவாய்புதைத்து
வித்துவர்கள்போலத்தாம் விநயத்துடன்கேட்டால்
சொல்லுவனேசொல்வேனே துரைமன்னாயெப்படியோ
என்றுசொல்லவாளபிமன் எழுந்திருந்து அப்பொழுது
உயர்ந்தமாந்தனிலே உற்றவாள்தான்சாத்தி
கால்மேலேகால்போட்டு காலையுட்கார்ந்தானே
அப்போகடோர்க்கசனும் அபிமனைத்தான்பார்த்து
ஆகாவழிப்பயலேஉன் வங்கிஷத்தைசொல்லுகைக்கு
வெட்குவையேயாமாகில் விளம்புகிறேன்கேளடா நீ
என்னோடேசொல்லாதே எதிர்மரத்தில்சொல்லுமென்றார்
சட்டையற்றுவாளபிமர் சதிராகவீற்றிருந்தார்
காலைமுகம்பார்த்துக் கடோர்க்கசனே துரைப்பான்

## கடோர்க்கசனும் அபிமன்னனும் சமாதானமாவது.

---

தர்மர்பெரியப்பன் தமக்கிளையான்என்தகப்பன்
அர்ச்சுனன்சிற்றப்பன் அவர்க்குமூத்தோனென்தகப்பன்
நகுலசகாதேவர் நல்லதொருசிற்றப்பர்
ஐவருக்குந்தேவி அழகானதுரோபதையாள்
எந்தனுக்குஆச்சியென்று எடுத்துரைத்தான்கடோர்க்கச
உறங்குவான்ஓராண்டு உருட்டுவான்தென்மலையை [னும்
இணங்காமலைகளெல்லாம் எள்ளுப்பொடியாகும்
விடங்குமான் நஞ்சையுண்ட வீமனேயென்தகப்பன்
என்மாதாகமலகன்னி யென்பேர்கடோர்க்கஜன்காண்
என்றுசொல்லகடோர்க்கஜனும் ஏங்கியேவாளபிமன்
கேட்டிருந்தபாலன் திடுக்கிடென்றுதானடுங்கி
கடகுவாள்விட்டெறிந்து கடோர்க்கசன்மீதுவந்து [ன்
மூகத்திலறைந்துகொண்டு மூர்ச்சையாய்த்தான்விழுந்தா
மூர்ச்சைதெளிந்தபிமன் முகம்பார்த்துயே துரைப்பான்
அண்ணேகடோர்க்கஜனே அறியாக்கொடுமைசெய்தேன்
அண்ணரோடமற்பொருதியனேகதோஷம்வந்ததுகாண்
தமயனோடமற்பொருதி சாமத்துரோகியானேன்
என்று-பச்சைத்தழையொடித்து பாதத்தின்மேல்போட்டு
ஐவர்குலத்தில்வந்த அழகான அண்ணாவே
அர்ச்சுனனார்பிள்ளை அபிமன்னன் நான்தானே
என்தாயார்சுபத்திரையாள் என்தகப்பன் அருச்சுனனார்
இருவரும்ஒருகுலத்தி லிருக்கவிருந்தோமே
என்றுசொல்லி அப்போ இருவருந்தானழுது
கட்டி அணைத்து கனிவாயைமுத்தமிட்டு
அப்பா நீயெங்கேவந்தாய் அபிமன்னராசாவே
வல்லரக்கன்கையிலே மாளத்திரிந்தாயே
மெத்தவிசாரமிட்டு வெகுவாய்மனமுருகி
வந்தவகையெந்தனுக்கு வகையாகச்சொல்லுமென்றான்
சிந்தையுடன்கலியாணச் சேதியெல்லாம்சொன்னானே
அப்படியேஆகுதுகாண் அபிமன்னராசாவே
ஒப்பமுடன்சொல்லி உரைத்தான்கடோற்கசனும் [று
அம்மானைத்தானெடுத்து அடக்கம்பண்ணவேண்டுமென்

பட்டமரங்கள் பருங்கட்டையுள்ளதெல்லாம்
எடுத்துவைத்துமூட்டி எரிதணலுமிட்டார்கள்
கொள்ளியும்வைத்து குடமும்உடைத்தார்கள்
செய்யும்வரிசையெல்லாம் செய்துமுடித்தார்கள்
ஆற்றிலேவந்தவர்கள் அல்றத்தலைமுழுகி
சத்திசிவபூசையெல்லாம் தப்பாமல்தான்முடித்து
வந்தார்கள்கஞ்சியண்டை பாலனும்கடோர்க்கஜனும்
கஞ்சியும்லக்கிரியும் கண்டான் அபிமாசன்
ஏதடா அண்ணுவே இலைக்கறியும்கஞ்சிகளும்
என்று அபிமன்கேட்க எடுத்துரைத்தானப்போது
அம்மாள்கமலகன்னி அனுப்பிவைத்தாளண்ணனுக்கு
கொண்டுவந்துவைப்போம் குடிப்போம்வாதம்பியென்று
அப்படியேஅண்ணுவே அமர்ந்துகுடியுமென்றுன் (ன்
இன்பமுடன்கொப்பரையை எடுத்துவந்துவைத்தானே
பின்னையொருமுச்சாய்க் குடியுமென்றுதான்வார்த்தானே
அஞ்சிசிரங்காகஞ்சி அபிமன்னன்குடித்தபின்பு
கஞ்சிகவனம் தெளிந்துகளையாடி
கொப்பரையில்கஞ்சிஎல்லாம் குடியுங்காணண்ணுவே
இலைக்கறியுங்கஞ்சி எல்லாம குடித்துவிட்டான்
வந்தார்கள் ஆற்றிலே வாய்களைத்தான்கழுவி
கொப்பெனவேதானுங் கூடியிருவருமாய்
அம்மாள்கமலகன்னி அரண்மனைக்குத்தான்வரவே
வந்தார்இருவருமாய் மலைமறைவில்வந்துநின்றுர்
பாலன்அபிமன்னன் பதில்வார்த்தைகூறலுற்றுன்
அண்ணுவேநானும் அரண்மனைக்குவாறதில்லை
என்னையும்கொல்லுமென்று சொல்லுவாளேதாயாரும்
அம்மாள்மனதை அறியவேபோகாது
அண்ணுவேமுந்திபோய் அறிந்துநீர்வாருமென்றுன்
நல்லதுதம்பியென்று நடந்தான்கடோர்க்கசனும்
அம்மாள்கமலகன்னி ஆசாரச்சாவடியில்
கண்டானேதாயாரை கைகுவித்துதெண்டனிட்டான்
அப்பாமகனேநீ அம்மானைக்கண்டீரோ
நன்றுயிருக்கிறுனே நாயகமேஎன்பிறப்பு
உன்னம்மான்முகத்தே உறுதியாய்க்கண்டாயோ
காரியமாய்சொல்லுமென்று கமலகன்னிதான்கேட்டாள்
மாதாவும்சொல்ல மறுவார்த்தைகூறலுற்றுன்

அம்மானைக்கொன்றானடி அபிமன்னராசாவும்
பாலனைக்கொன்றானடி வல்லரக்கன்உங்களண்ணன்
இருவரும்பட்டு யெமலோகம்போனார்கள்
என்றுசொல்லிதானுரைத்தான் இவன்மனதைதானறிய
அவ்விசேடம்கேட்டபின்பு அம்மாள்கமலகன்னி
அடித்துப்பிரண்டு அறைந்துகொண்டாள்மார்மேலே
அபிமன்னராசாவை யவன்கொல்லக்காரியமேன்
அறியாதபாலகனை அடித்திழுத்துப்போட்டானே
பாவிப்பழிக்காரன் பாலகனைக்கொன்றானே
ஆகாதவல்லரக்கன் அவன்செத்தாலாகாதோ
பாலனபிமன்னன் மாண்டால்மனம்பொறுக்கேன்
சாவேன்கெடுவேன் சமுத்திரத்தில்போய்விழுவேன்
அபிமன்னன்தன்னுடனே ஆவிதனைப்போக்கிடுவேன்
மகனையிழந்துநான் மண்ணிலிருப்பதில்லை
ஐவர்வெளியாகி அருச்சுனரும்கேட்டாக்கால்
வல்லரக்கன்கையிலே மகன்மாண்டானென்றாக்கால்
எந்தனுக்குபேச்சு மிடையூறும்வந்துவிடும்
அபிமன்னன்தன்னுடனே என்னுயிரைபோக்கிடுவேன்
அப்போமடியாதே ஐவர்முகம்பார்த்து
இப்போமடிந்திடுவேன் என்மகனார்தன்மகனே
வாடாமகனே வளர்த்திவிடு அக்கினியை
என்றுகமலகன்னி யெழுந்தாள் துயரமுடன்
அம்மாள்மனதை அறிந்துகடோர்க்கஜனும்
தம்பிசெத்ததில்லையம்மாள் தாயாரேஎன்றுசொன்னான்
உன்குணத்தைநானறிய உரைத்தேன்காண்தாயாரே
தம்பிசுகமாக தாயாரேவந்தான்காண்
என்றுசொல்லிமன்னன் இருபாதம்தெண்டனிட்டான்
தெண்டனிட்டதன்மகனை தீவிரமாய்த்தானெடுத்து
பாலனெங்கேயென்று பரிவுடனேதான்கேட்டாள்
இட்டுவருகிறேன் என்தாயேமாதாவே
வந்தான்கடோர்க்கஜனும் வாளபிமன்தன்னுடனே
அம்மாளழைத்து ஆதரவாய்சொன்னதுவும்
அண்ணனைவிட்டு அபிமன்னனைக்காட்டென்றாள்
இட்டுவாவென்றுசொல்லி என்னையனுப்பினதும்
பாலனுக்குச்சொல்லியப்போபட்சமுடன்தானுரைத்தான்
நல்லதுயென்றுசொல்லி நடந்தார்இருவருமாய்

தமையனுந்தம்பியும் சந்தோஷமாகவேதான்
அம்மாளைசுத்திவந்து அடிவணங்கிதெண்டனிட்டார்
தெண்டனிட்டபிள்ளையைத்தான் தீவிரமாய்தானெடுத்து
பாலனபிமன்னனைத்தான் பட்சமுடன்தானெடுத்து
மகனேமகனேயென்று வாய்திறந்துமுத்தமிட்டு
உச்சிமுகந்து உடம்பெல்லாம்தான்தடவி
வல்லரக்கன்காட்டு வழியாகயேன்வந்தாய்
வல்லரக்கன்கையிலே மாள்வாயேஎன்மகனே
அத்தஅரக்கன்மெத்த ஆகாதபாவியடா
பொல்லாதராட்சதனை போராடிகொன்றுயே
ஐயோமகனே அவன்கொன்றல்என்னசெய்வோம்
தாரார்புகழ்வேந்தன் தர்மருக்கேதுசொல்வேன்
ஆணலழகுமன்னன் அருச்சுனருக்கேதுசொல்வேன்
நாமக்கொடிவேந்தன் நகுலருக்குயென்னசொல்வேன்
சாத்திரத்தில்மிகுந்த சகாதேவர்க்கென்னசொல்வேன்
தோராவடிவழகி துரோபதைக்குயென்னசொல்வேன் [ன்
தொடிவளையல்முன்கை சுபத்திரைக்குயென்னசொல்வே
என்றுகமலகன்னி இருந்தாளாமப்பொழுது
கண்டான்அபிமன்னன் கமலக்கன்னிஆதரவை
கொண்டாடிகொண்டாடி குறைகளெல்லாந்தான்தெளிந்
அபிமனைத்தான்பார்த்து ஆயிகமலகன்னி [தான்
எங்குவந்தாய்என்மகனே இந்தஅடவியிலே
வந்தவகையென்னுடனே வகையாயுரையுமென்றாள்
சொல்லுகிறேன்தாயாரே துரிதமாய்வந்ததெல்லாம்
மாயன்பெருமாள் மகளானசுந்தரிக்கு
பங்கமற்றசண்டாளன் பாவிதுரியோதனனு
எனக்கென்றிருந்தபெண்ணை எட்டுதலைலக்குணற்கு
கொடுக்கவிசைந்தானுங் குருட்னிடபோனுக்கு
நாளைக்குகல்யாணம் நல்லமுகூர்த்தமிட்டு
பகல்முகூர்த்தமென்றுசொல்லி பாக்கும்பருந்தார்கள்
அந்தவிசேடம் அதுகேட்டுசுந்தரியும்
சாவேன்கெடுவேன். சமுத்திரத்தில்போய்விழுவேன்
அத்தைமகன்வாராவிட்டால் அலைந்துவிழுவேனென்

வாளாலபிமன்னன் மணவாளனென்றுசொல்லி
வளர்த்தசரீரத்தை மண்ணுக்கிரைசெய்வேன்
வந்தாலபிமன்னரும் மத்தியானத்துக்குள்ளாக
என்றுபிழைப்பேநான் அபிமன்னுவென்றுசொல்லி
வக்கணையுமொப்பனையும் வைத்துயெழுதினுள்
எந்தனுக்குவோலை யெழுதிவாவிட்டாள்காண்
அந்தநல்லவோலைதன்னை அம்மாளிடம்கொடுத்தேன்
சிந்தையுடன்பார்த்து சிவசிவாவென்றுசொல்லி
எந்தனைத்தான் அனுப்ப யிணங்காமல்தானிருந்தாள்
அந்தமனதை அறிந்தேன் அடியேனும்
ஆருமறியாமல் அங்கொருவர்காணுமல்
மனதிருக்கமாட்டாதே வந்தேன் அடவியிலே
வழியும்தெரியாதே வல்லரக்கன் தன்வனத்தே
வந்துதிகைத்து வழியறியமாட்டாதே
பயந்துநடுங்கியந்த பாறையின்மேல்நான்படுத்தேன்
அப்போவந்துவல்லரக்கன் அடித்துமுழுங்கவந்தான்
இந்திரனைத்தோத்தரித்து எங்கள் அப்பா ஆயுதத்தை
தாவென்றுவாங்கியம்மா சண்டைபண்ணநான்கெலித்தே
பின்னையும்உண்டான பேச்சுவகையுள்ளதெல்லாம் [ன்
ஒன்றுங்குறையாமல் உரைத்தான் அபிமராசன்
தாயார்கமலகன்னி சந்தோஷந்தானுகி
அபிமனைக்கட்டி அணைத்துமுத்தந்தானுமிட்டாள்
ஆணுலழகுமன்னன் அருச்சுனனுர்தன்தேவி
நாககன்னிபுத்திரன் நல்லாவான்என்ருெருவன்
உந்தனுக்குத்தம்பி உடற்பிறப்புநல்லாவான்
பாலனுக்குநேர்மூத்தோன் பட்சமுள்ள அண்ணனவன்
அவனுடனேமூவரும்போய் ஆயன்மனைபுகுந்து
தம்பி அபிமன்னனைத் தலைமறைவாயங்கேவைத்து
நீங்கள் இருவருமே நீறுபொடிதூளாக்கி
சுந்தரியைதாலிகட்டி சுகமாக்வாங்களென்று
நாகக்கன்னிசொற்படியே நடவுங்கள்பிள்ளைகளே
என்றுகமலக்கன்னி யெடுத்துரைத்தாள்வாசகங்கள்
நல்லதுயென்றுசொல்லி தாயாருக்குத்தெண்டனிட்டார்
தெண்டனிட்டபிள்ளைகளை சீராகத்தானெடுத்து
வாழ்த்திவிடைகொடுத்து மாதாவும் அனுப்பினுள்

## கடோர்க்கஜனும் அபிமன்னனும் கமலகன்னியின் அண்டை விடைபெற்று வருகிறது.

---

கடோர்க்கனும்பாலனுமே கடுகிநடக்கலுற்றார்
காடுகடந்து கரியமலைதான்கடந்து
ஆறுகடந்து அரியசுனைகடந்து
நாடுகடந்து நல்லமலைதான்கடந்து
இஞ்சிவனங்கடந்து எலுமிச்சையுட்புகுந்து
அருச்சுனபுரத்துக்கு அவர்வழியேகேட்டுவந்தார்
வாரவரும்போரவரும் மட்டிடப்போகாது
கலியாணம்போவாரைக் கணக்கிடப்போகாது
கடுகிநடந்தார்கள் கனமானராஜாக்கள்
அங்கேரெண்டுமகாமலைகள் ஆகாயம்அளாவிநிற்கும்
வல்லரக்கன்போலே மதவீமன்தெண்டதுபோல்
வானத்தைமூடி வளர்ந்திருப்பான்நல்லரவான்
ஒருமலைமேல்சார்ந்துகொண்டு ஒருமலைமேல்கால்நீட்டி
இப்படியேதானிருந்தான் இடும்பன்அரவானும்
வந்தார்இருவருமே மலைமறைவில்நின்றார்கள்
தேசத்தில்உள்ளவர்கள் துரியோதனன்கூட்டமெல்லாம்
கிருபன்கிருபாச்சாரி கீர்த்தியுள்ளவீஷ்டுமரும்
தோராதஅசுவத்தாமன் துரைமன்னரெல்லோரும்
பதினெண்படைத்தலைவர் படைமன்னரெல்லோரும்
எத்திசையும்தானாளும் இயலானராசாக்கள்
சட்டைகழட்டாத தார்வேந்தரெல்லோரும்
போட்டசட்டைவாங்காத துடுகர்ஒருகோடி
நாமமுடிமன்னரெல்லாம் நடந்தார்கள்காலின்கீழ்
கர்னன்விகர்னனும் காங்கேயன்தேசத்தரசன்
மன்னர்குருக்களும் மகாசேனையுள்ளதெல்லாம்
நல்லரவான்கால்கீழே நடந்தார்அனைவோரும்
மலையடியண்டையிலே மன்னரிருவோரும்
நின்றுமேதான்பார்த்தார் நீட்டினகால்வாங்காண்
நல்லரவான் அண்டையிலே ஞாயமாய்நின்றுகொண்டு

## அரவானோடு கடோர்க்கசனும் அபிமன்னனும் யுத்தம்செய்தல்.

ஆரடாராட்சதனே அப்பாலேகால்வாங்கும்
பாரடாயெங்களுக்குப் பயணம்துரிதமென்றார்
பார்த்தானே நல்லரவான் பசங்களிட வார்த்தைதன்னை
இப்பெரியசேனையிலும் இவர்கள்மெத்தசேவகரோ
ஆனைகுதிரையில்லை அரசமன்னர்தானுமில்லை
காலாளாய்வந்திருவர் கால்வாங்குமென்றார்கள்
இவர்கள்சவுரியத்தை இப்போஅறிவோமென்று
போங்களடாகால்கீழே போகவழியில்லையடா
நோக்கமுடன்வந்தீரோ நுழையவழியில்லையோ
போக்கற்றுவந்தீர்களோ போகத்தெரியாதோ
கால்வாங்கச்சொன்னதென்ன கனமானமன்னவரே
அப்பாலேபோங்களடா அடிபடப்போறீர்கள்
துரைமன்னராசாக்கள் சும்மாநுழைந்தார்கள்
மானிடத்தோலோடே மனிதர்நுழைந்தார்கள்
நீங்கள்-வீணுக்குவந்தீர்கள்வெட்கங்கெட்டுபோவீர்காண்
சும்மாநுழையுங்கள் சுறுக்காகமன்னவரே
என்றுசொல்லிநல்லரவான் எடுத்துரைத்தானப்பொழுது
அவ்விசேஷம்கேட்டு அபிமன்னராசாவும்
கோபித்துக்கண்சிவந்து கோவைப்பழம்போலே
தெண்டைசுழட்டி திருப்பிவிட்டான்கால்முறிய
ஏதடாஇங்கே எறும்புகடித்ததென்றான்
குதித்துக்கதும்பி அவன் கோடையிடிபோல்நகைத்து
கண்கள்சிவந்து கடுங்கோபமாகியவன்
வில்லைவளைத்து அம்பு தொடுத்துவிட்டான் அரவானும்
கடோர்க்கஜனும்கண்டுமதைக் கையாலேதட்டிவிட்டான்
ஐந்நூறுபாணம் அனல்பாணம்விட்டானே
பாலனதுகண்டு வாளாலேதடுத்துவிட்டான்
ஒருவர்க்கொருவர்சண்டை உக்கிரமாய்கோபமுடன்
அட்டதிக்குபாலர்களும் அதிர்ந்துநடுங்கிடவே
சந்திரரும்சூரியரும் தானோடிப்போனார்கள்
தேவேந்திரனும் திகைத்துமுகம்பார்க்க
இப்படியாக இணைபிரியாசண்டைபண்ணி
கண்கள்சிவக்கிறதும் கடுங்கோபமாகிறதும்

52067



மீசை துடிக்கிறதும் மூன்கோபமாகிறதும்
பிடி அம்புதான்தொடுத்து விட்டான் அரவானும்
கடோர்க்கஜனுந்தெண்டாலே கடிகிதடுத்துவிட்டான்
சரமாரிசரம்பொழிந்தான் சமர்த்தன் அபிமராஜன்
பாணமும்பாணமும் பரவிப்போர்செய்யுதங்கே
ஒருவர்க்கும்தாங்காமல் ஓடியேபோகுதுகாண்
பாணப்புகையிலே மடியுதேபட்சிகளும்
பார்த்தானேநல்லரவான் பசங்களிடசத்துவத்தை
ஆரோதெரியாது அறிந்திடுவோமென்றுசொல்லி
கேட்டானேநல்லரவான் கிளிபவளவாயாலே
தம்பிசிறுவரே சவுரியத்தில்வல்லவரே
உங்களிடவங்கிஷத்தை உரையீர்எனக்கென்றான்
படுகளத்தில்ஒப்பாரி கேட்பாரோபார்வேந்தா
உன்னாலேஆன உயுத்தியமேசெய்யுமென்றான்
ஆனால்கேள்தம்பியரே நான் அதைசொல்லுகிறேன்
கேளுங்கள்தம்பியரே கெலிப்பாகச்சொல்லுகிறேன்
என்தகப்பன் அருச்சுனனார் என்பேரோநல்லரவான்
என்-தாயார்பேர்நாககன்னி தர்மரிடவங்கிஷங்காண்
இப்படியாய்ச்சொல்லி எடுத்துரைத்தான் நல்லரவான்
அந்தவிசேடம் அடவாகக்கேட்டிடுவோம்
எங்களிடவங்கிஷத்தை கேளீர்நீர் அண்ணாவே
என்தகப்பன்வீமனுமாய் என்பேர்கடோர்க்கஜனும்
தாயார்கமலகன்னி தர்மரிடவங்கிஷங்காண்
தம்பி அபிமன்னன் தனஞ்சயனார்பிள்ளையடா
அர்ச்சுனனார்பெற்றெடுத்த அபிமன்னன் இவன்தாண்டா
சுபத்திரையாள்பெற்றெடுத்த துய்யநற்பாலனிவன்
இப்படியாய்சொல்லி இருவர்உரைக்கலுற்றார்

நல்லரவானும் கடோர்க்கஜனும் அபிமன்னனும்
சமாதானமாய்ப் போகுதல்.

---

உண்மைகளைச்சொல்லி உறவுகொண்டாடினபின்
எடுத்தவில்போட்டரவான் இன்பமுடன் ஓடிவந்து
கட்டி அணைத்து கனிவாயைமுத்தமிட்டு
அண்ணனையும்தம்பியையும் அரவான்எடுத்தணைத்து
தாழஉட்கார்ந்து தம்பியைமடிமேல்வைத்து

கேட்டானே நல்லரவான் கிளிபவளவாயாலே
அப்பா அபிமன்ன அர்ச்சுனனார்புத்திரனே
எங்குவந்தாய்தம்பியரே யெனக்கரியசொல்லுமென்றான்
அண்ணே கடோர்க்கஜனார் அறியவேசொல்லுமென்றார்
அவ்விசேடம்கேட்டு அபிமன்னராஜாவும்
சுந்தரியையெந்தனுக்குச் சொல்லியிருந்தாரே
பெண்சாதியென்றுசொல்லி பெரியோர்முன்னாளிலே
அந்தநாள்முதலாய் அமர்ந்திருந்தகாரியத்தை
கள்ள துரியோதனன் தன்மகன்லக்குணற்கு
செல்வக்கலியாணம் செய்யவேபோறானும்
அந்தவிசேடம் அதுகேட்டுசுந்தரியும்
எந்தனுக்குஓலை யெழுதிவரவிட்டாள்காண்
பின்னையும்உண்டான பேச்சுவகைஉள்ளதெல்லாம்
நன்றாயெழுதி அனுப்பினாள் நாயகியும்
அதுகண்டு அண்ணாவே அடியேன்புறப்பட்டேன்
மனம்பொறுக்கமாட்டாமல் வந்தேன்கானண்ணாவே
வல்லரக்கன் தன்வனத்தில் வழிதப்பிவந்துவிட்டேன்
கொல்லத்துணிந்தானே கொடும்பாவிவல்லரக்கன்
வல்லரக்கன் தன்னுடனே வருத்தமாய்ச்சண்டைபண்ணி
கொன்றேன் அவனை கொடுமையுள்ளராட்சதனை
அவ்விசேடம்தான்கேட்டு அண்ணன்கடோர்க்கஜனும்
என்னையறியாமல் என்மேலேசண்டைசெய்தார்
அண்ணனும் நானுமாய் ஐந்தாருநாழிமட்டாய்
சண்டைகள்பண்ணிமெத்த தான்தோர்வையில்லாமல்
வங்கிஷங்கள்பேசி அறிந்தோங்கானண்ணாவே
பின்னையுமெத்த பேச்சுவகையுள்ளதெல்லாம்
ஒன்றுங்குறையாமல் உரைத்தானேபாலனுமே
அம்மாள்கமலகன்னி அனுப்பிவித்தபூஷணமும்
அண்ணனையும்கூட்டி அனுப்பிவைத்தஆண்மைகளும்
உன்னுடனேபேசி உங்களம்மாள்நாககன்னி
தன்னுடனேயித்தையெல்லாம் தப்பாமல்தானுரைத்து
உன்னுடனேமூவரும்போ யுறுதியுடன்சண்டைபண்ணி
சுந்தரியைத்தாலிகட்டி சுகமாகவாங்களென்று
அனுப்பினாள்கமலகன்னி அண்ணாவேயிங்கேவந்தோம்
என்றுசொல்லிபாலனுமே எடுத்துரைத்தான்உள்ளதெல்
நல்லதென்றுதான்கேட்டு நல்லரவானப்பொழுது [லாம்.

சந்தோஷப்பட்டுத் தலையசைத்துக்கொண்டானும்
நல்லதென்றுமூவருமாய் நடந்தார்களப்பொழுது
தாயிருக்கும்பாதாள லோகந்தடமறிந்து
நாககன்னிபக்கலுக்கு நடந்தார்கள்மூவருமாய்
அம்மாளிருக்குமந்த ஆசாரச்சாவடியில்
கண்டார்கள்தாயாரை கைகுவித்துதெண்டனிட்டார்
மூக்கால்வலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டார்
பிள்ளைகளைவாழ்த்தி பெருமையுடன்தானெடுத்து
ஏதடாநல்லரவான் இவர்கள்யாருடையவங்கிஷங்காண்
சொல்லடாவென்று செவிகொடுத்துதான்கேட்டாள்

நல்லரவான் அபிமன்னன் சேதியைத்

தாயாருக்குக் கூறுதல்.

---

வெற்றிமதயானை வீமன்குமாரனம்மா
தாயார்கமலகன்னி தன்மகன்கடோர்க்கஜன்காண்
ஆணழகுமன்னன் அருச்சுனனுர்பெற்றபிள்ளை
உந்தன்புருஷனுக்கு உத்தமகுமாரனம்மா
சுபத்திரைக்குப்பிள்ளையம்மா சுந்தரிக்குமாப்பிள்ளைகாண்
சுந்தரியைத்தாலிகட்ட வந்தானபிமனுமே
என்றுசொல்லிநல்லரவான் எடுத்துரைத்தானப்பொழுது
காரியமாய்வந்த கலியாணபேச்சையெல்லாம்
பூரணமாய்ச்சொல்லியப்போ போதித்தான்நல்லரவான்

நாககன்னி கூறுவது.

---

அந்தவசனங்கேட்டு அம்மாள்எறிபறந்து
கோபித்துக்கண்சிவந்து கூறியவாளெடுத்து
துரியோதனன்சேனை தேசத்திலுள்ளதெல்லாம்
அதிரவேவெட்டி ஆகாயம்போக்கிடுவான்
என்றுசொல்லிசபதமிட்டு எழுந்தாளேநாககன்னி
கண்டானேநல்லரவான் காலிலேபோய்விழுந்து

நல்லரவான் கூறுவது.

---

நானிருக்கநீபோக ஞாயமோதாயாரே
சிமிட்டிவிழிப்பளவில் துரியோதனன்சேனையெல்லாம்
அமட்டிஅரைட்சணத்தில் ஆவிபெலிகொண்டிடுவேன்

எட்டி அடித்து யெமலோகம்போக்கிடுவேன்
தூக்கிஅடித்தவரைச் சுந்தரிக்குமாலையிட்டு
தம்பிகையில்மங்கிலியம் தரிப்பித்துநான்வாறேன்
எனக்குவிடைகொடம்மாள் என்தம்பிதன்னுடனே
என்றுசொல்லிநல்லரவான் எடுத்துரைத்தான்தாயார்க்கு
தாயார்மனங்குளிர்ந்து சம்மதித்தாளப்பொழுது
கோபந்தணிந்தபின்பு கொம்பனையாளேதுரைப்பாள்
அரவான்கடோர்க்கஜனும் அவர்முகத்தைதான்பார்த்து
என்பிள்ளைபாலனைத்தான் இங்கேயிருக்கவைத்து
அங்கேயிருவரும்போய் அருச்சுனபுரம்புகுந்து
பங்கப்படவடித்து பதாக்கிதூற்றிவித்து
துவாரகாபுரியைமிகச் சுட்டுக்கரியாக்கி
சுந்தரியைபல்லக்கில் சுகமாயெடுத்துவந்து
என்முன்னேதான்விடுங்கள் எதிரில்லாமக்களேநீர்
என்றுசொல்லிஅப்பொழுதுஎடுத்துரைத்தாள்நாககன்னி
தம்பியிருவரும் சாஷ்டாங்கதெண்டனிட்டு
உத்தமியேயென்தாயே ஒருவார்த்தைசொல்லுகிறோம்
தம்பியையிங்கேவைத்து தாமேகொண்டாருவோம்
சுந்தரியைக்கொண்டுவந்தால் சூதாயிருக்குதம்மா
களவிலேகொண்டுவந்தால் கள்ளனென்றுசொல்வார்கள்
பந்தலிலேதானிருந்து பார்த்திருக்கத்தாலிகட்டி
விந்தையுடன்மன்னவர்கள் வெட்கிதலைசாய்த்திருக்க
மங்கிலியம்தரித்து வாவேணும்தாயாரே
என்றுசொல்லிநல்லரவான் இதமாய்எடுத்துரைத்தான்
அந்தவிசேஷம் அதுகேட்டுநாககன்னி
நல்லதப்பாயென்மகனே நாயகமேநீர்கேளும்
இராஜமுடிமன்னனை ரணமுகத்தில்காட்டாதே
மறைவாகத்தான்வைத்து மகாசண்டைநீங்கள்பண்ணி
தண்டுமுறித்து தளங்கள்கழிந்தபின்பு
சுந்தரிக்குமங்கிலியம் சுகமாய்த்தரியுங்கோள்
என்று-பெட்டியைத்தான்திறந்துபுலிவர்ணபட்டெடுத்து
திட்டமுடன்மங்கிலியம் திரள்பூஷணமுள்ளதெல்லாம்
பட்டுரவிக்கைகளும் பருமுத்துத்தாவடமும்
சுட்டிதலைக்குப்பி சுந்தரிக்குஆனதெல்லாம்
திட்டமுடன்பெட்டிகட்டி சீராகத்தான்கொடுத்தாள்

சொன்னபடிசெய்யுமென்று சொல்லிவிடைகொடுத்தாள்
அப்படியேநல்லதென்று அதையெடுத்துக்கொண்டார்கள்
அம்மாளைசுத்திவந்து அடிவணங்கிதெண்டனிட்டார்
தெண்டனிட்டமக்கள்தனை சிரகத்தாலெடுத்து
வாழ்த்திமனமகிழ்ந்து மாதாவுமப்பொழுது
வேலவரைத்தோத்தரித்து போய்வாருமக்களென்ருள்
போய்வாரோமென்று போனார்கள்மூவருமாய்
வாசற்கடந்து மண்டபங்கள்தான்கடந்து
நாடுகடந்து நகரியெல்லாம்தான்கடந்து
சாத்திரக்கொடிவேந்தன் சகாதேவன்மகனர்
தொந்திசெட்டிவீற்றிருக்குந் துய்யமலைதன்மகனர்
அந்தவனத்தில் அழகானதொந்திசெட்டி
உயர்ந்தமலைமீதிருந்து ஒருகையில்தராசிகொண்டு
மற்றொருகையிலே மலைபிடுங்கிகுண்டாக்கி
வருவாரைப்போவாரை மறித்துதராசில்வைத்து
நிறுத்துநிறைக்கொரு நிண்ணயப்பொன்வாங்கி
வாங்கியபொன்னையெல்லாம் மலைபோலேதான்குவித்து
இன்னம்வருவார்க்கு எதிர்பார்த்து அங்கிருந்தான்
அரவான்கடோர்க்கஜனும் அபிமனுமங்குவந்து
சகாதேவன்தன்மகனர் சாத்திரவான்தொந்திசெட்டி
வாரபேர்தங்களைத்தான் வங்கிஷரென்றறியாமல்

தொந்திசெட்டி யுத்தம்.

---

கண்டந்தமூவரையும் கானகத்துதொந்திசெட்டி
கைவீசுக்காசுக் கடுகெனவேதாருமென்ருன்
காளையரவானும் கடோர்க்கஜனுமேதுரைப்பார்
ஆரடாபையலே ஆகடியம்பேசுகிருய்
வழியில்தராசுதனை வாங்கடாநாங்கள்போக
பாரடாபையலே பயணம்துரிதமடா
தராசுதனைவாங்கடா சலுதியிலேபோகவேணும்
கேட்டந்ததொந்திசெட்டி கிளிபவளவாயாலே
ஆரடாமானிடரே அடிபடப்போகிறீர்கள்
துரியோதனனுடைய சேனைபரிகலமும்
பதினெண்படைத்தலைவர் பாங்காய்நிறுத்தேனே
அவர்களிலும்பெரியவரோ ஆண்மையுள்ளவீரியரோ
அரவான்கடோர்க்கஜனும் அபிமன்னராஜாவும்

சீறியெறிபறந்து சிங்கக்குட்டிபாய்ந்ததுபோல்
அதுகண்டுதொந்திசெட்டி அவனும்எழுந்திருந்து
மூவருடன்போர்பொருத மூடிகினன்தொந்திசெட்டி
அபிமன்னராசாவை அமர்த்தியிருவருந்தான்
தெண்டுடனேவில்லுகளும் தீவிரமாய்த்தானெடுத்து
தொந்திசெட்டிமேலே தொடுத்தார்கள்பாணசரம்
அவனும்எதிர்த்து அப்போ ஆயுதத்தைத்தானெடுத்து
மூவருடனே அவன் மூடிகி அப்போசண்டைபண்ணி
பாணங்கள் அப்பொழுது மழைமாரிபோல்பொழிய
பூமிகிடுகிடென்ன பூலோகம்தானதிர
மலைகள்பருவதங்கள் மகாமரங்கள் அற்றுவிழ
எதிரானதன்மலையை யிருபிளவாய்த்தான்பிளக்க
இப்படியாக யிவர்கள்சண்டைபண்ணுகையில்
பாணங்கள்வாரதெல்லாம் வலமாகசுத்திவந்து
பாதத்தில்தான்பணிந்து பக்கத்தில் நின்றிடுமாம்
இப்படியாக யிருசாமம்சண்டைபண்ணி
ஒருவர்க்கும்காயம் உறுதியுடன்பட்டதில்லை
இந்தபுதுமை யேதென்றுதொந்திசெட்டி
நம்மிடவங்கிஷத்து ராசமன்னர்தான் இவரே [டி
அறிந்திடுவோமென்றுசொல்லி ஆணழகன்தொந்திசெட்
மன்னவரோராஜரே நீர் வழிபட்டமூவருந்தான்
ஆருடவங்கிஷங்காண் அறியவுரையுமென்றான்
படுகளத்திலொப்பாரி கேட்பாரோதார்வேந்தர்
சண்டைமுனையிலே தாவுதரிகேட்பாரோ
கத்திமுனையிலே கனவுறவுகேட்பாரோ
என்று அரவான் யிடும்பானவார்த்தைசொன்னான்
சொன்னவிசேடமது தொந்திசெட்டிதான்கேட்டு
மூவரையும்தான்பார்த்து மூடிமன்னன்தானுரைப்பான்
நீங்களுரையாமல் நிண்ணயமாய்தானிருந்தீர்
நானுரைப்பேன்கேளுமென் நவின்றானேதொந்திசெட்டி
பாண்டுமகாராசன்குலம் பாண்டவர்ஐவர்களில்
என்பிறப்பைசொல்லி எடுத்துரைப்பேன் நீர்கேளீர்
தருமருக்குநேரிளையான் சகாதேவர்என்தகப்பன்
நகுலரும்அர்ச்சுனரும் நல்பெரியவீமருந்தான்
தாரார்தனஞ்செயனார் தருமர்பெருமாளும்

நால்வருமெந்தனுக்கு நல்லபெரியப்பன்மார்
ஐவரிடவங்கிஷங்காண் என்தாயும்வீரகெங்காள்
என்றுசொல்லிதொந்திசெட்டி எதிரானமூவருந்தான்
கையாயுதத்தை கடுகெனவேதாழவைத்து
மோசம்வரப்போகுதென்று மூத்தோன்கடோர்க்கஜனும்
அரவான்கடோர்க்கஜனும் அண்டையிலேதான்வந்து
கட்டிஅணைத்தவனை கண்மணியேநாங்களுந்தான்
பஞ்சவர்கள்தங்களிட பாலரென்றுதான்கூறி
கடோர்க்கசனும்தானும் கனிவாயெடுத்துரைப்பான்
தர்மர்பெரியப்பன் நமக்கிளையார்என்தகப்பன்
தெண்டாயுதம்படைத்த திறல்வீரன்என்தகப்பன்
என்தாயார்கமலகன்னி என்பேர்கடோர்க்கஜன்தான்
அருச்சுனரும்சிற்றப்பன் அவர்குமாரர்தானிருவர்
நாககன்னிதன்மகனும் நல்லரவான்தானுமிவன்
சுபத்திரையாள்தன்னுடைய துய்ய அபிமன்னனிவன்
என்றுகடோர்க்கஜனும்எடுத்துரைத்தான் அப்பொழுது
அதுகேட்டுதொத்திசெட்டி அண்ணன்தம்பிஎன்றரிந்து
மூவரும்நீங்களிங்கே மூடிகிவந்தீரிப்பொழுது [கேட்க
சொல்லுமண்ணுவென்றுசொல்லி தொந்திசெட்டிதான்
அப்போகடோர்க்கஜனும் அரவானும்தானுரைப்பான்
தம்பிஅபிமருக்கே தாரமென்றேசுந்தரியும்
மாயன்பெருமாள் மகளார்இருந்தாளே
அவளைத்-துரியோதனனும் தன்மகன்லக்குணர்க்கு
கொள்ளவேவந்து குலப்பெருமாள்தன்னுடனே
நாளுமுகூர்த்தமிட்டு நலமாயிருக்கையிலே
அந்தவிசேடம் அதுகேட்டுதம்பியுமே
அவன்வந்தான்பயணம் வல்லரக்கன்தன்வனத்தை
அவனை-சண்டைகொடுத்து சங்கரித்தான் அம்மானே
அந்தச்சமயத்தில் அடவியிலேநான்போனேன்
கண்டேன் அபிமறையும் கலந்துஉறவாடியங்கே
என்தாயார்கமலகன்னி தன்மனைக்கியிட்டுவந்தேன்
அவளும்இதுகேட்டு அனேகமாய்க்கொண்டாடி
தாலியுங்கூரையும் தங்கப்பொன்பூஷணமும்
இருவருங்கூடி யிப்பால்வருகையிலே
அரவானுங்கண்டு அறியஉறவாடி
மூவரும்கூடியப்போ மூர்க்கமுள்ளநாககன்னி

அம்மாளைக்கண்டு அடிவணங்கித்தெண்டனிட்டு
கல்யாணக்காரியத்தைக் காதலுடன் நாங்கள்சொன்னோம்
அப்போ-அவளறிந்து ஆணிப்பொன்பூஷணமும்
செம்பணிதிபட்டு திரளாய் அவள்கொடுத்தாள்
அண்ணன் அவர்களையும் அனுப்பிவிடைகொடுத்தாள்
மூவருமாய்க்கூடி முனைந்துவந்தோம்யிப்பொழுது
என்றுசொல்லக்கேட்டு எழுந்திருந்துதொந்திசெட்டி
வாருங்கள்என்றுசொல்லி மாதா அரண்மனைக்கு
அழைத்துவந்துவிட்டு அம்மாளைத்தெண்டனிட்டு
மூவர்வந்தசேதியெல்லாம் மூடிய அவனுரைத்தான்
கைகட்டிவீற்றிருந்தான் காவலர்கள் தங்களுடன்
மக்களைப்பார்த்துமப்போ மனமகிழ்ந்துவீரகெங்காள்
வாழ்த்தியெடுத்து மடிமேலேதானிருத்தி
உச்சியைமுகந்து உகமைசொல்லிமுத்தமிட்டு
தாதிகளை தானழைத்து சமையலதுபண்ணிவைத்து
மயிர்கோதியெண்ணையிட்டு வரிசையுள்ளமக்களுக்கு
தலைமுழுக்குபண்ணிவித்துச் சமையலதுபண்ணிவைத்து
அடக்காய்சுருள்கொடுத்து ஆபரணம்தான்எடுத்து
பிள்ளைகள்தங்களுக்கு பெரும்பணிதிதான்பூட்டி
மக்களுக்குவத்ததொரு வரிசைபணிபூட்டி
ஆபரணம்பூட்டி அழகாய் அலங்கரித்து
அபிமன்தனக்குமே அதிகபணிபூட்டி
பட்டுப்பலகணியும் பாலனுக்குத்தான்கொடுத்து
அரவான்கடோர்க்கஜனை அவள்மகனைத்தானழைத்து
சுந்தரிக்குமாலையிட்டு சுகமாக நீங்கள்போய்
அறியாதபாலகனை அபிமன்னராசாவை
துரியோதனனுடைய திரள்தனையேகாட்டாதே
ஆனைபடைசேனைகளை அவன்கண்ணில்காட்டாதே
பாலால்அபிமனும் படைமுகங்கள்பார்த்தறியான்
தாகங்குடித்தறியான் சண்டைசெய்துதானறியான்
அபிமன்னராசாவை அப்பால்நிறுத்திவைத்து [து
துரியோதனன்சேனையெல்லாம்செண்டாடித்தான்கெலித்
மாற்றான்பகையாளி மாபாவிசத்துருக்கள்
அவன்-ஆனைக்குதிரைகள் அவனியிலேமடியடித்து
மாயன்மகள்சுந்தரியை மணஞ்செய்துவாருமென்று
பூமியைக்கிள்ளி பொருதவேகாப்புமிட்டு

வாளபிமர்தன்னையே மகன்கையிலொப்பிவித்து
போய்வாருமென்று போற்றிவிடைகொடுத்தாள்
அங்கேவிடைகள்பெற்று அலைகெங்கைதன்னோடே

நால்வரும் துவாரகாபுரிக்கு வருவது.

---

அப்போது நால்வருமாய் ஆயன்பதிநோக்கி
இரவுபகலாக இராஜர்கள்தானடந்தார்
காடுகடந்து கடிகிவனந்தான்கடந்து
கானாறுதோப்புகளும் கடந்துவழிநடந்து
இஞ்சிவனங்கடந்து இருவாட்சியுட்புகுந்து
கொஞ்சிவனங்கடந்து குழவிவனம்புகுந்து

நால்வரும் ஔவையார்வீட்டில் வந்து இறங்கினது.

---

ஔவையார்தன்வனத்தில் அரசமக்கள்போய்புகுந்தார்
தாரார்தனஞ்சயனார் தருமரிடசத்திரமாம்
ஏராளமாக எத்தனைபேர்வந்தாலும்
நாழியரிசி சமைத்திடுவாள் நாயகியும்
அப்படிக்கொத்த ஔவையார்தன்மாளிகையில்
போனார்கள்நால்வருந்தான் புதுமையுள்ளராசாக்கள்
கண்டாளேஔவையாரும் காரணமாய்வந்தவரை
வந்தவரைக்கண்டவ்வையார் வாங்களிருங்களென்றாள்
எந்தவூரெந்ததேசம் எனக்கறியக்கூறுமென்றாள்
அப்பொழுதுநால்வரும் அறியவுரைப்பார்கள்
காசிவளநாடு கலியாணம்பார்க்கவந்தோம்
இந்தவனத்திலே இருப்பானேன்பாட்டியரே
மெத்தப்பசிக்குதம்மா வெம்பிவிடாய்த்துவந்தோம்
பாட்டிக்கிழவி பழஞ்சோறுமுண்டோதான்
நல்லக்கிழவியரே நாணயக்காரியரே
பசிக்குதுஔவையாரே பாலமிர்தம்வேணுமென்றார்
பழஞ்சோறேன்பிள்ளைகளே பரமர்கிருபையினால்
நாலாயிரம்பொன்னீந்தால் நற்போசனமிடுவேன்
இன்னொருவரில்லாமல் எதிர்பார்த்துநிற்கிறேன்
நீங்களும்வந்தீரே நீலவர்னர்புண்ணியத்தால்
சமைக்கஒருநாழிசெல்லும் தம்பியரேயென்றுரைத்தாள்

## ககஉ அபிமன்னன் சுந்தரிமாலை.

சுந்தரிக்குபூமாலை தொடுத்துவைத்தபிற்பாடு
அப்போசமைத்திடுவே னென்றாளே ஔவையாரும்
அந்தவிசேஷம் அதுகேட்டுபாலனுமே
சுந்தரிக்குப்பூமாலை தொடுத்துதருகிறேனன்
எங்களுக்குநீசமைத்து இடுங்கா ணும்பாட்டியரே

ஔவையார் அபிமன்னனுக்கு புட்பம்
கொடுப்பது.

---

அப்படியேநல்லதென்று ஔவையாரும்சம்மதித்து
மல்லிகைமுல்லை மருக்கொழுந்துசெண்பகமும்
சொற்பெரியகுங்குமப்பூ சூரியகாந்திப்பூவும்
நன்றாய்பரிமளிக்கும் நந்தியாவட்டையுந்தான்
பாதரிப்பூசெவ்வலரி பாரிசாதபுட்பங்களும்
எந்தெந்தபுட்பமெல்லாம்எடுத்துவந்துதான்கொடுத்தாள்

அபிமன்னன் சுந்தரிக்குப்பூமாலைதொடுப்பது.

---

பார்த்தான் அபிமன்னன் பாட்டிதந்தபூவையெல்லாம்
வகையாலொருசெண்டுகளும் மாலைகளும்கட்டலுற்றான்
பொன்னிழைத்தநாருலே பூச்செண்டுகட்டலுற்றான்
ஐந்நூற்றுநாலுவகை ஆனசெண்டுமாலைகளும்
நிகநிகென்றுதான்மின்ன நிதானமிட்டுகட்டினான் [ம்
மல்லிகைப்பூசெண்டதிலே தாங்கள்வந்தவயணமெல்லா
சொல்லியொருசீட்டிலே சுருக்காகத்தானெழுதி
கணையாழிமோதிரத்தைக் கழட்டி அதற்குள்ளேவைத்து
பூமாலைதான்கழட்டி பூப்பெட்டியுள்ளேவைத்து
ஔவையாரைத்தானழைத்து ஆச்சுதுபூமாலையென்றான்
பசிக்குதுபாட்டியரே பசியாரவே ணுமென்றான்
அப்படியேயாகுதென்று ஔவையாருஞ்சம்மதித்து
முழுகிக்குளித்து முகம்கழுவிபூசைபண்ணி
எழுந்திருங்கோளென்று மனங்குளிரச்சொன்னாளே
ஆசனம்பொருந்துமென்று ஔவையாரழைக்கலுற்றாள்
சாணுக்குமூன்றடிதான் தள்ளாடிதானடந்தாள்
அசட்டுகிழவியிவள் ஆசனமெங்கேபோடுவாள்
மாற்றான் துரியோதனன் வைத்தானோநாமறியோம்
எண்ணியிந்தநால்வருமாய் ஏகாந்தம்பேசிருந்தார்

மாற்ருன்பகையாளி மாபாவிமைந்தனவன்
தேசத்தழகன் துரியோதனன்பாவி
அண்ணேயிவன்செய்தவினை அறியீரோ அண்ணுவே
நச்சுமுள்ளை தான்பரப்பி நடக்கும்வழிதனிலே
கொல்லத்துணிந்தானே குருடன்மகனுரும்
ஆயனருளாலே அன்றுபிழைத்துவந்தார்
பஞ்சவரைவரையும் பாக்கமுள் நாட்டிவைத்து
அரக்குமாமாளிகையில் அனலடைத்துதீக்கொளுத்தி
மடிக்கத்திரிந்தானே மாபாவிசத்துருக்கன்
அன்றுபிழைத்தார்களாயன் திருவுளத்தால்
காளையபிமருடன் கடோர்க்கஜனே துவைப்பான்
நல்லதுதம்பியரே நம்பவேஔவையாரை
ஆக்கினசாதம் அடவானகாய்கறிகள்
கொண்டுவந்துவட்டியுங் கிழவியெனவுரைப்போம்
கூட்டிஒருஉண்டை தின்னுமென்றுகைக்கொடுப்போம்
மருந்தானுள்தின்னுள் மயங்குவாள்கூன்கிழவி
மற்றச்சோருனுக்கால் வாரிமுழுங்கிடுவாள்
தின்னுதேபோனுல் தெண்டால்நுறுங்கடிப்போம்
எண்ணியிந்தநால்வருமாய் ஏகாந்தம்பேசியபின்
ஔவையாரிடவாசலிலே அரசமக்கள்வந்துநின்று
பாட்டியாரைத்தான்பார்த்து பசிக்குதெனவுரைத்தார்

ஔவையார் நால்வரை இலைபறிக்கச்சொன்னது.

அப்போது அவ்வையார் அரசமக்கள்தன்னைப்பார்த்து
வாழையிலைபோட்டால் மறித்தெடுப்பாருமில்லை
இருநூற்றுக்காதவழி யெல்லையுள்ள தூரமெல்லாம்
ஒருசுரைமுத்தியெங்கும் ஓங்கிவளர்ந்ததுகாண்
அரவானைப்பார்த்திந்த ஔவையார்கிழவிசொல்வாள்
நாலுயிலைகிள்ளி நால்வரும்வாங்களென்ருள்
சுருக்கானபையலே சுரைகிள்ளிவாருமென்ருள்
என்னக்கிழவியரும் எழுந்திருந்து நல்லரவான்
இருநூற்றுக்காதவழி படர்ந்தசுரையுள்ளதெல்லாம்
அப்போ அரவானும் அடியோடேதான்பிடுங்கி
வேரோடேதான்பிடிங்கி வேந்தன்மலைபோல்சுருட்டி
வைத்துத்தலைமேலெடுத்து வாரானே நல்லரவான்
சுருட்டிவருந்தம்பிதன்னை திரைமன்னர்தான்பார்த்து

சீதைசிறையிருக்க ஸ்ரீராமர்படைகூட்டி
இலங்கைபுகுந்து இராமர்படைவெல்லும்போது
மாற்றான்கை அம்பாலே மடிந்தார்கள்வானரர்கள்
அப்போதனுமார் அவிழ்தத்தைக்கொண்டுவர
சஞ்சீவிகொண்டுவர தாண்டியேபோம்போது
மருந்துடையபேர்மறந்து மலையோடேபிடுங்கிவந்தார்
இமயமலையிலே யிருக்குதென்றுசஞ்சீவி
அனுமார்மலைபிடுங்கி அன்றெடுத்துவந்தாற்போல்
அரவான்கறைபிடுங்கி ஒளவையயார்முன்போட்டான்

கிழவி விசனப்படுவது.

---

கண்டாளேஒளவையாரும் கைநெறித்துக்காலசைத்து
அண்டாதராட்சதனே அடியோடேயிச்சுரையை
மொண்டாய்ப்பிடுங்கிவந்து மோடியாய்ப்போடுவையோ
ஆகாயம்பூமியுள்ள அன்றுமுதலின்றளவும்
எப்போதுமிச்சுரைதான் என்றுமிருந்ததுகாண்
தர்மர்கையால்வைத்தசுரை சத்திரத்துக்கேற்றதுகாண்
அந்தச்சுரையை அடியோடேபிடுங்குவையோ
கையைநெறித்தவ்வையார் கற்சுவரில்சார்ந்துகொண்டு
என்றுபுலம்பியிருந்தாளே அவ்வையாரும்

அபிமன்னன் சுரையிலையை நடுவது.

---

அவ்வையழுகிறதை ஆனசிறுபாலன்கண்டு
நல்லரவான்பிடுங்கினதை நட்டிடுவோமென்றுசொல்லி
பாதாளந்தான்பறித்து பருவேரைஉள்ளேவிட்டு
தருமரைத்தானினைந்து தள்ளிமண்ணை நிறைத்தான்
எப்போதும்போலே இலையுங்கொடியாகி
எங்கும்படர்ந்து இருந்ததுகாணச்சுரையும்
கண்டாளவ்வையாரும் கைகொட்டித்தானகைத்தாள்
நகைத்துமேஒளவையாரும் நால்வருக்கும்பந்திவைத்து

ஒளவையார் நால்வருக்கும் அன்னமிடுதல்.

---

சுரையிலையைப்பூமியிலே துலக்கமுடன்படுத்து
இலையிலேநீர்தெளித்து ஏதுசெய்தாளவ்வையாரும்
ஆயிரம்பொறிக்கறிகள் அமுதுகறியுள்ளதெல்லாம்
கொண்டுவந்துபோட்டாள் கூட்டித்திரட்டினார்



பதருதேககடோற்கஜனே பாம்புகுட ந்தானிதுகாண்
ஔவையார்க்குஒருஉண்டைஅள்ளியிட்டுபோர்ப்போமென்
என்னவிதமானாலும் எனக்குச்செறித்துவிடும் [ருர்
எங்களையர்மதவீமர் இளையாமல்நஞ்சையுண்டார்
எழுசாடி நஞ்சையுண்டார் எங்களையர்மதவீமர்
அன்றுவிடம்செறிக்கிலையோ ஆயனருளாலே
மேகத்துமின்னலது வித்தையதுபாரீரோ
அம்பிகுழவிபோ லாடுகிறதுபாருமென்று
கையாலேகாட்டின கனவீமன்என்தகப்பன்
என்று-சுரையிலையும்சோறும் சுருட்டிமுழுங்கலுற்ருன் [ர்
பார்த்திருந்தமூவருந்தான்பசித்திருந்தாரண்ணேயென்ரு
மூவரும்பேசி முகம்பார்த்துஇருக்கலுற்ருர்
பார்த்தானே-நல்லாவான் பற்கடித்துகண்சிவந்து
கோடையிடிபோலே கொக்கரித்துகண்சிவந்து
ஔவையாரேஎங்களுக் கமுதெங்கேயென்றுரைத்தான்
ஔவையாருமங்கே அவன்கோபந்தான்கண்டு
குறுணிபிடிக்குமந்த கூடையிலேகொண்டுவந்தாள்
வயிர்நிறையவுங்களுக்கு வடித்திடுவேன்உண்ணுமென்ரு
அப்படியேபோடுமென்ருன் அபிமன்னராசாவும் [ள்
போட்டாளேஔவையரும் பொறிக்கறியும்போசனமும்
உண்ணுங்களென்று உபசரித்தாள்பாட்டியரும்
அத்தனையுமூண்டு ஔவையாரைத்தான்பார்த்து
பாட்டிக்கிழவியரே பழஞ்சோறுமீந்திருந்தால்
கொண்டுவாபாட்டியரே குறையரைகளுள்ளதெல்லாம்
என்னக்கிழவியுமே ஏங்கிநடுக்கெடுத்து
ஆயிரம்பொறிக்கறிகள் அமுதுகளைத்தான்முழுங்கி
இன்னம்பழஞ்சோறு இவர்கேட்டாலென்னசெய்வேன்
இருநூறுகாதவழி படர்ந்தசுரையிலையும்
ஒக்கமுழுங்கி ஒருவருக்கும்போதாதென்ருல்
இன்னம்பசியா இருக்குதென்ருலென்னசெய்வேன்
ஆரோயெவரோ அறியாமல்சோறுசொன்னேம்
வில்லில்மிடுக்குடையா உனக்கெத்தனைசோர்வேணுமடா
எங்களண்ணருட சோற்றிலே அத்திரட்டிவேணுமடி
தொந்திப்பெரியதம்பி உனக்கெத்தனைசோர்வேணுமடா
எங்களண்ணரிருவரிலும் அதிகமாகவேணுமென்ருன்
சுறுக்காய்சுரைபிடிங்கி எத்தனைசோர்வேணுமடா

எங்களண்ணருடசோற்றிலேயும் அதிகமாய்வேணுமென்
பார்த்தாள்கிழவி பசங்கள் நம்மைக்கொல்வாரென்று [ரூர்
இவர்களுக்குசோறிட்டு நான்பிழைக்கமாட்டேனென்று
நம்மையுங்கொன்று மூழங்குவாரென்றுசொல்லி
நெருப்பெடுக்கபோறவள்போல் நீண்டாள்பதிநோக்கி
குந்திவழிநடந்து கொப்பெனவேஓடலுற்றாள்
போகாதேபாட்டியென்று பின்பிடித்தானல்லரவான்
எடுத்துமுழுங்கவந்தார் என்றேமிகப்பயந்து
ஆற்றருகேயோடிவந்து ஔவையுமேதுரைப்பாள்
புரமர்திருமுடியி லிருக்குமந்தபார்வதியே
எங்கும்நிறைந்தாளே என்பங்கில்மாதாவே
மயேஸ்வரியேதாயேநீ மாயன்றிருத்தங்கையரே
மகாதேவர்திருச்சடையில் மங்கையரேகெங்கையரே
ஆரோதெரியாது அறியேனோராட்சதரை
என்னைமுழுங்கவந்தார் என்செய்வேன்மாதாவே
ஆபத்தைக்காருமம்மா ஆகாயக்கெங்கையரே
பாலர்பசிதீராய் பார்வதியேநான்பிழைக்க
ஆதிகெங்கைபாதம் ஔவையாருந்தெண்டனிட்டு
சோறுங்கறியுந் துலங்கியவெண்தயிரும்
ஆற்றிலுள்ள நீரையெல்லாம் அடிசில்கறியாக்குமம்மா
பார்வதியேயென்று பணிந்தாளேகூன்கிழவி
ஔவையார்நினைத்தபடி அப்படியேஉண்டாச்சு
பார்த்தாளேஔவையரும் பசங்களண்டைஓடிவந்து
ஆசனம்சமைத்தேனடா அப்பாவேவாருங்கோள்
இட்டுவந்துநால்வரையு மிறங்குமென்றாளாற்றிலே
ஆற்றிலிறங்கிநீங்கள் அசனம்பொசியுமென்றாள்
வயிர்நிறையஉண்ணுங்கோள் மக்களேஎன்றுரைத்தாள்
அரசமக்கள்நால்வருமாய் ஆற்றிலேபோயிறங்கி
கச்சைகளைந்துவைத்து கனக்கவேநீராடி
அசனம்பொசித்தபின்பு அரசமக்கள்கைகழுவி
வெள்ளிலைக்கற்பூரம் வேண்டினதுதானருந்தி
சந்தனம்கஸ்தூரி சாந்துமிகவணிந்து
ஔவையார்வாசலிலே அரசமக்கள்வந்துநின்றார்
அப்போதுஔவையாரும் அசனம்புசித்தபின்பு
தாகமதுதீர்ந்து தனித்திருந்தாளவ்வையாரும்
அப்போது அங்கே ஆயன்படைவீட்டில்

## கக௮ அபிமன்னன் சுந்தரிமாலை.

மேளவகைசத்தமது வெகுவாய்முழங்குதங்கே
தாரைவிருதுகளும் தப்புமுழங்குறதும்
மத்தளங்கொட்ட வலம்புரிநின்றூத
பேரிகைசத்தம் பெருக்கமுழங்குறதும்
வேந்தரிந்தநால்வரும் வினவாகக்கேட்டிருந்து
வித்தைமுழங்குறதை விசாரிப்போமென்றுசொல்லி
ஆச்சிகிழவியரே ஔவையாரே நீர்கேளீர்
இசைவானமேளசத்தம் எங்கேநீர்சொல்லுமென்றார்
அரசமக்களைப்பார்த்து ஔவையாருமேதுரைப்பாள்
மாயன்மகள்சுந்தரியை வாளபிமர்க்கென்றபெண்ணை
தென்னமுடிவேந்தன் துரியோதனப்பெருமாள்
தன்-மைந்தனிலக்குணர்க்கு மாலையிடவாரானும்
ஆகையினால்முழங்குது அனந்தவகைமேளமெல்லாம்
அபிமனை நீரும் அறிவீரோ ஆச்சியரே
சொன்னாலறிவேன்காண் சொற்பெரியவீரியனே
சுந்தரிக்குமாப்பிள்ளைதான் சுபத்திரையாள்பெற்றபிள்ளை
அறிவேன்காண்பிள்ளைகளே அடையாளம்சொல்கிறேன்
கேளுங்கள்பிள்ளைகளே கிளைசூழ்ந்துவாழ்ந்திருப்பீர்
தாரார்புகழ்வேந்தன் தர்மரண்டைதானிருப்பேன்
அப்போதறிவேன்காண் அபிமப்பெருமாளை
தர்மரைநீரறிந்தால் சற்றுகுறிசொல்லுமென்றார்
தருமர்க்கடையாளந் தார்துடையில்மச்சமென்றாள்
ஒக்குமோடியாச்சியென்று ஓடிவந்துதெண்டனிட்டார்
தெண்டனிட்டபிள்ளைகளை சென்றவ்வையார்தானெடுத்து
நீங்களாரடாதம்பியரே அறியவேசொல்லுமென்றாள்
வீமருடபிள்ளை பிலவான்கடோர்க்கஜனும்
ஔவையாருடனே அடையாளமேதுரைப்பான்
தருமர்க்கிளைய தாக்குடையவீமசேனன்
என்பேர்க்கடோர்க்கஜன்தான் என்னாச்சிகமலகன்னி
அருச்சுனனார்புத்திரனார் அரவானிவன்காணீர்
சகாதேவன்புத்திரனார் தாக்குடையதொந்திசெட்டி
என்றுசொல்லக்கேட்டு எழுந்துவந்துஔவையாரும்
கட்டியெடுத்தணைத்து கனிவாயைமுத்தமிட்டு
எங்குவந்தீர்மக்களே இத்தனை தூரமென்றாள்
அருச்சுனனார்புத்திரனு மாவானுங்கூறுவான்
மாயன்மகள்சுந்தரியை மணஞ்செய்யவந்ததொரு

மாப்பிள்ளையாகவந்த வாளபிமன் தானேயிவன்
வாளபிமனென்றலுமே வாரியெடுத்தணைத்து
வாரியெடுத்து மடிமீதில்கொண்டுசென்று
ஐவரையுங்கண்டதுபோல் ஆச்சுதுகாணிப்பொழுது
மாயனருளாலே மக்களைக்கண்டோமே
தன்னுடையசிங்கா தனத்தருகேகொண்டுசென்று
உட்காருமென்று உபசாரணைசொல்லியபின்
மணஞ்செய்யவேணுமென்று வந்திரோமக்களே
ஆனையணியும் அரசமக்கள்வந்ததுண்டோ
குதிரையுடனே குலமன்னர்வந்ததுண்டோ
வீமன்மகனுர் பிலவான்கடோர்க்கஜனும்
வாராய்நீமாதாவே மாயன் துணையாகவந்தோம்
இதுபுதுமைஇதுபுதுமை யென்ருளேஔவையாரும்
மாயன்தயவாலே வார்த்தைநடந்ததுண்டோ
துரியோதனன்சேனை திரள்வருகுதென்ருக்கால்
பருந்துதன்கூண்டதனில் பருங்கோழிக்குஞ்சிருந்து
அதிகாரம்பண்ணுற்போல் அல்லவரும்வாராராம்
முப்பதடிவாயிலே முதிர்ந்தவெள்ளாட்டுமயிர்
அமர்த்திநிறுத்தி லதுவுமது அக்ரோணி
அப்படிபதினொரு அக்ரோணிசேனையுடன்
ஆனைகுதிரையது எழுநூறு அக்ரோணி
எத்தனைசேனையுடன் எம்பெருமாள்தன்பதிக்கு
வாரான் துரியோதனனும் மகுடவர்த்தனர்கூடி
என்றுகேட்டேன்காண் என்னுடையபிள்ளைகளே
ஆனல்கேளென்றுச்சி அடியேங்கள்சேவகத்தை
யானைத்திரளெல்லாம் அண்ணர்கடோற்கஜர்க்கும்
சேனைத்திரளெல்லாம் செல்வன்தொந்திசெட்டியற்கு
மாப்பிள்ளைராயனுமே வாளபிமன்கைவசங்காண்
இதுவோசிலபாரம் என்றீரோஎன்பாட்டி
மாயன்மகள்சுந்தரியாள் வார்த்தைதெரியவில்லை
வாளபிமன்மைந்தனுக்கு வாழாளோயில்லையோ
ஆமல்லோவென்றுசொல்லி அறிந்துவா ஆச்சியரே
தர்மரைப்பற்றியொரு தனித்தூதுபோய்வருவீர்
என்னக்கிழவியரும் ஏங்கிமிகச்சிறித்து
எவலில்காரியப்பேர் என்னையேயோகவொட்டார்
எப்படியாகிலும் இப்போஒருதூது

போய்வாரும் ஆச்சியென்று போற்றியே தெண்டனிட்டார்
அப்படியே யாகுதென்று ஆச்சியந்த அவ்வையாரும்
கந்தையுடுத்தி கையிலே கோலூன்றி
பக்கத்தில் பூப்பெட்டிக் கழலாமல் தான் தூக்கி
போய்வாரேன் மக்களென்று புறப்பட்டாளவ்வையாரும்
அப்போகடோர்க்கஜனும் ஒளவைமுகம்பார்த்து
நாயகமாம்சுந்தரிக்கு நாலுபேர்மாமியர்கள் [தார்
பொன்னாலே பூஷணங்கள் பொற்கொடிகள் தான்கொடுத்
நாங்களுங்கொண்டுவந்தோம் நாயகிக்குப்பூஷணங்கள் [தார்
கொண்டுபோய்ப்பூட்டுமென்று கொற்றவரும்தான்கொடுத்
அப்போஒளவையாரும் அரவானைப்பார்த்துரைப்பாள்
மாற்றானுடமையென்று வாங்காளே சுந்தரியும்
என்றுசொல்லக்கேட்டு இயலபிமன்கூறுவான்
பள்ளிக்கிருக்குமப்போ பாடங்கொடுப்பாள்காண்
அப்போகழட்டியிட்ட அம்பொன்திருவாழி
பூச்செண்டுதன்னிலே போதவேகட்டிவைத்தான்
அந்த அடையாளம் ஆரணங்கேகாட்டுமென்றான்
பூச்செண்டுஉள்ளிருக்கும் பொன்திருவாழிதன்னை
ஒளவையார்க்குகாட்டினான் ஆனந்தவாழ்மார்பன்
நல்லதென்றுசொல்லி நகைத்தாள்கிழவியரும்
அப்பா நீங்களிங்கே அடவிவிட்டுப்போகாதீர்
நாராயணர்பதிக்கு நான்போய்வருமளவும்
இங்கேயிருமென்று எழுந்திருந்தாளவ்வையாரும்
சானுக்குமுன்றடியாய் தள்ளாடிபோய்நடந்தாள்
ஒளவையுடதன்னுடையை அபிமன்னன்தான்பார்த்து
ஒளவையார்நடக்கவே ஆறுமாதஞ்செல்லுமென்று
நால்வருஞ்சொல்லி நகைத்துமிருக்கையிலே

ஒளவையார் சுந்தரிக்கு ஓலைகொண்டுபோவது.

---

வாயிலடித்தாற்போல் மாயன்பதிநோக்கி
ஓடினாள்காணவ்வை ஒருநொடியில்மாயர்பதி
அப்போதுமாயவனார் அலங்கரிப்பார்தன்பதியை
பவழத்தால்கால்நிறுத்தி பந்தலதுபோட்டுவிப்பார்
சொச்சியின்சந்தனத்தால்கோடுங்கையதுபோட்டுவிப்பார்
சப்பிரங்கண்ணாடிவைப்பார் தலைவாழைகட்டிவைப்பார்
எட்டுத்திசையிலேயும் இயல்பெண்கள்நின்றாட

கண்ணாடிகட்டி கவுரீயலங்கரித்து
மண்டபங்கள்தோறும் மகாதோரணங்கள் தூக்கி
எலுமிச்சைவெட்டிவேர் எத்திசையும்வீசிவிட
முத்தால்மணல்பரப்பி முழுவயிரக்கால்நாட்டி
தண்ணீர்தெளித்து சாம்பிராணி தூபமுடன்
ஐந்துதலைநாகத்தின்மேல் அமர்ந்திருந்தார்மாயவரும்
அப்போது அவ்வையாரும் அங்கேவருவாளே
குத்திரும்பலாயிருப்பி கூன்கிழவிவந்தாளே
தடியைத்தரையில்வைத்து சற்றேஉட்கார்வாள்
முந்தாணிபோட்டு முடங்கிப்படுத்தெழுந்து
மெள்ளவருகிறதை மேகவர்னர்தான்பார்த்து
அபிமருடதூதர் ஔவையாரும்வாராளே
குலுங்கநகைநகைத்து கோவிந்தரென்னசொல்வார்
வாசலதுகார்ப்பாரை மாயவருந்தாமழைத்து
காசானவனத்திலே கடுங்கானகத்திலே
தர்மரிடசத்திரத்தில் தான்வாழும்அவ்வையாரும்
கோலமொழிசுந்தரிக்கு கொண்டைமுடிக்குகைக்கு
இப்போவருவர் ளினிசற்றுநேரத்திலே
அவளைத்தடுத்தவரை ஆக்கினைகள்பண்ணிவைப்பேன்
அப்படியேஆகுதென்று அருந்தூதர்தெண்டனிட்டார்
அப்போது அவ்வையாரும் அசைந்துதடியூன்றி
சாணுக்குமூன்றடியாய்த் தள்ளாடித்தானடந்தாள்
அங்கிருக்குந்தூதுவர்கள் ஔவையாரைத்தான்பார்த்து
எங்குநீவந்தாய்காண் இனியகிழவியரோ
காசான்வனத்திருந்து கரியமால்புத்திரிக்கு
கொண்டைமுடிக்கவே கொப்பனவேவந்தேனென்றாள்
ஆகையினால்வந்தேன்காண் ஆரியரேஎன்றுரைத்தாள்.
இடுப்பில்தடியேது என்னயிதுமூட்டை
அவலோபலாவிரையோ அள்ளியிடுமெங்களுக்கு
வடதோசைசக்கரையோ மற்றுமதிரசமோ
என்னஇதுதானே எங்களுக்குகொடுத்துவிட்டு
பின்னைநடவுமென்றார் பேரறியஎல்லோரும்
என்னக்கிழவி இவர்களைத்தான்பார்த்து
அல்லகாண்ஆரியரே ஆயன்மகள்சுந்தரிக்கு
பின்னையென்னகொண்டுவந்தேன் பெருமாளுடமகட்கு
வாணங்காண்மாதாவே வழிவிட்டோம்போமென்றார்

௧௨௨ அபிமன்னன் சுந்தரிமாலை.

அப்போதுஔவையாரும் அரமனையில்போய்ப்புகுந்தாள்
ஓராம்படித்தளமாம் ஓலைப்பூமண்டபமாம்
இரண்டாம்படித்தளமாம் இரத்தினக்கால்மண்டபமாம்
மூன்றாம்படித்தளமாம் முத்துக்கால்மண்டபமாம்
நான்காம்படித்தளமாம் நாகரத்தினச்சாவடியாம்
ஐந்தாம்படித்தளமாம் பஞ்சரத்தினமண்டபமாம்
ஆறாம்படித்தளமாம் யானைகட்டுஞ்சாவடியாம்
ஏழாம்படித்தளமாம் எண்ணெய்க்கால்மண்டபமாம்
எட்டாம்படித்தளமாம் குதிரைகட்டுஞ்சாவடியாம்
ஒன்பதாம்படித்தளமாம் ஓலைப்பூமண்டபமாம்
பத்தாம்படித்தளத்தில் வந்தாளேஔவையாரும்
அப்போதுதாதியர்கள் அங்கேயிருந்தார்கள்
வாங்களடிதாதியரே மாயன்மகளெங்கேயென்றார்
ஏழாந்தளத்திலே யியலானபெண்களுடன்
அம்மானார்பந்துகழல் அபிமருடபோலே
அத்தைமகன்போலே ஆடுகிறாள்பாருமென்றார்
தாதியர்கள்சொல்லலுமே தரியாளேஔவையாரும்
ஆயன்மகளாரும் அம்மானார்தானிறுத்தி
பலகணிதான்திறந்து பார்த்தாள்திசைதோறும்
மைத்துனனார்வாளபிமன் வாராரேயென்றுசொல்லி
பார்த்தாள்திசைதோறும் பங்கயஞ்சீர்கண்ணாளும்
பார்த்தவழிகளெல்லாம் வேற்றுவழியாச்சுதல்லோ
பார்த்தன்மகனேயின்னம் பார்க்கவிதியில்லையோ
முத்துமுலைதனங்கள் சொருகுதடாமைத்துனரே
மோகனசிங்காரம் அழியுதடாவாளபிமா
சொல்லுமிழந்தேன் சிலவழிந்தேன்மைத்துனரே
வில்விஜயன்தன்மகனே வேந்தர்பெருமாளே
சிங்கவெள்ளானையுள்ள தேவேந்திரன்போல
உன்-மாதுபடுந்துயரம் மாற்றாயோமைத்துனரே
ஆலைக்கிடுகரும்பாய் அங்கங்குலைந்தேனே
வேழமுண்டவிளாவின் கனியானேன்மைத்துனரே
மத்துக்குளகப்பட்ட தயிரானேன்மைத்துனரே
ஆயன்மகளாரும் அழுதுநெடுநேரம்
தன்னைவளர்த்தெடுத்த தாதிமடிமேலே
பொய்யுறக்கமாயிருந்து பொற்கொடியும்பள்ளிகொண்டு
சொற்பனங்கள்கண்டுமே சுந்தரியுமப்பொழுது

தோகைநல்லசுந்தரியும் திடுக்கென்றெழுந்திருந்து
கனவுகண்டெழுந்திருந்து தாதியர்க்குச்சொல்லிடவே
அப்போதுதாதியர்கள் அரிவையைதானோக்கி
என்னகினவுகண்டாய் என்தாயேசொல்லுமென
என்கொழுநர்மூவருமாய் ஏலாலபிமருடன்
மாற்ருன்தண்டுதனில் மகாராஜர்போய்புகுந்து
மகுடமுடிவேந்தர்களை மண்மேலெறிந்தாப்போல்
உயர்ந்தனைமேற்காகம் உட்கார்ந்திருந்துகொண்டு
கழுத்தைவளையாமல் காகமுதிராமுண்ண
காகமுதிராமுண்ண கண்டேன்காண்சொற்பனங்கள்
தேர்புரவிகாலாளும் தெர்ப்பையாய்தான்மிதக்க
மாண்டுமே அப்பொழுது மன்னவர்தான்மிதக்க
கொள்ளவந்தலக்குணனை குடுமைவைத்துதலைசிரைத்து
அரசாணிகாலுடனே அவனையும்கட்டிவைத்து
சாணிதிரட்டிவைத்து தலைமேல்விளக்கேற்றி
இரட்டைமணைமேலே யேலாலபிமருடன்
ஒக்கயிருந்துகொண்டு ஓமங்கள்தான்வளர்த்தி
மங்கிலியங்கட்டி மகிழ்ந்திருக்கக்கண்டேனே
அபிமரைக்கைப்பிடித்து அரசாணிசுத்திவந்தேன்
ஐயனார்நீர்வார்க்க அபிமனார்கைப்பிடிக்க
இப்படிக்கண்டேன்காண் என்தாயேயென்றுரைத்தாள்
இப்படியாக யிருக்குமந்தவேளையிலே
அப்போதுஔவையாரும் ஆயன்மகள்முன்னேவந்தாள்
ஆயிரம்பெண்களிலே எங்களபிமருடதேவியெங்கே
என்றவ்வையார்கேட்கலுமே எழுந்துலந்துசுந்தரியும்
பூவாழைஎண்ணெய்தனை பொற்கொடியுங்கொண்டுவந்து
அபிமருக்கேயொக்குமென்று ஆழிக்கியெண்ணெயிட்டு
எலுமிச்சங்காய்பிழிந்து இணையாழிதான்துலக்கி
சீக்காய்நெல்லி சிறுபருப்புங்கஸ்தூரி
பச்சிலைமஞ்சள் பன்னீரால்த்தான்திமிரி
சாந்துகஸ்தூரி தடவிச்சிணுக்கறுத்து
மல்லிகைமுல்லை யிருவாட்சிதான்சூழ்ந்து
சம்பிரமத்தின்மீதில் தடமொக்கதான்பரப்பி
மெத்தைமடித்திட்டு மேலேஅணைகோலி
பட்டைமடித்தேறிட்டு பலபுஷ்பம்தான்பரப்பி
வெள்ளிலைகற்பூரம் வேணபெண்கள்நின்றெடுக்க

ஆழிஅபிமனென்று அணைத்துடனேபள்ளிகொண்டாள்
உண்மையடையாளம் உண்டோதான்கிழவியரே
மற்றுமடையாளம் வாங்கிவந்ததுண்டோதான்
மாயன்மகளுடைய மனதறியவேண்டுமென்று
அடையாளம்நானறியேன் ஆரையும்நான்காணேன்
பெருமாள்மகளாரே பூஷணங்கள்பூட்டுமென்றாள்
சுந்தரியும்கோபமதாய் தோழியரைத்தான்பார்த்து
இந்தக்கிழவியரை இழுத்துதூரத்துமென்றாள்
தாதிகளோடிவந்து தாறுமாறாயிழுப்பாராம்
அனியாயம்கொள்ளையிது யாருமில்லையோவெனக்கு
வாராய்நீசுந்தரியே உன்மனதறியச்சொன்னேனான்
பாலாலபிமருடன் பள்ளிக்கிருக்கும்போது
பார்த்தன்மகன்கைதனிலே பாடங்கொடுப்பீராம்
அப்போதுனக்குத்தந்த ஆழியடையாளம்
இப்போதந்தமாலையிலே இருக்குதடிசுந்தரியே
ஆழியென்றபோதேநீ எங்களத்தையாமென்றுசொல்லி
சுந்தரியுமோடிவந்து தொழுதிரங்கதெண்டனிட்டாள்
மாமியார்க்கொக்குமென்றுமறித்தொருக்கால்தெண்டனிட்
தெண்டனிட்டசுந்தரியைதீவிரமாய்எடுத்தணைத்து[டாள்

ஔவையார் சொல்வது.

மாலையில்தானிருக்கு மணிவயிர ஆழிதன்னை
ஆழியைத்தானவிழ்த்து ஆயன்மகள்கைக்கொடுத்தாள்
இருகையிலுமேந்தி யெடுத்தணைத்துகண்ணிலொத்தி

சுந்தரி சொல்வது.

வாடிநீதோழியரே என்மைத்துனரும்வந்தார்காண்
ஆழிவந்தபோதேயிப்போ அபிமரிங்கேவந்தார்காண்
ஆழியைக்கையிலிட்டு அரண்மனையினுட்புகுந்து
மஞ்சநீர்சாலையிலே மாயன்மகள்போய்ப்புகுந்து
நான்தான் அவ்வையாரே நல்லபிமன்தேவியென்றாள்
நான்தான்காணென்றதுமே நகைசெய்துஔவையாரும்
மாலைகொண்டுவந்தேனம்மாள் வாளபிமன்தேவியரே

சுந்தரிக்கு ஔவையார் பூமாலையைக் கொடுப்பது.

---

மாலையென்செண்டேன்காண்என்மைத்துனரில்லாதே
உன்கணவன்வாளபிமன் என்மனையில்வந்தான்காண்

தாலிகூறைவந்ததுகாண் தர்மர்மகன்வந்தார்காண்
கட்டுவடம்மூத்துவடம் கனபதக்கம்வந்ததம்மா
மூன்கைமுகதாரி மோகனமாலைகளும்
கந்தைவிரித்தவ்வையார் கரியமால்புத்திரிக்கு
இந்தாருமென்று யெடுத்துமுன்னேவைத்தாளே
பூஷணத்தைத்தீண்டாதே பொற்கொடியுமேதுரைப்பாள்
கட்டிப்பிடித்து கனமார்புடன்சேர்த்து
தூங்கியெழுந்திருந்து சுந்தரியுமேதுரைப்பாள்
ஔவையார்கால்தனிலே அரிவையரும்போய்பணிந்து
தெண்டனிட்டசுந்தரியை சென்றவ்வையார்தானெடுத்து
வ்ராய்மருமகளே வாளபிமன்தேவி
தூதுவந்தயென்னை தொந்தாவுபண்ணாதே
அத்தையுன்மைந்தன் அபிமரிங்கேவந்ததே
அபிமரிடவாழிதனி லாறினேனென்குறையை
அத்தையுன்மைந்தனிப்போ ஆனைகுந்திக்குள்ளிருந்து
உந்தன்மடத்திருந்து உம்மைவரவிட்டாரோ
எங்கிருந்துதூதுவிட்டா ரெனக்கறியச்சொல்லுயென்று
என்மண்டபத்திருந்து என்னைவரவிட்டாள்காண் [ள்
ஆனாலுமத்தையரே அபிமர்க்குப்படைத்துணையாய்
யார்துணையாகவந்தார் அத்தையெனக்குரையாய்
உங்களத்தைகமலகன்னி அவள்மகன்கடோர்க்கஜனும்
நாககன்னிபெற்றெடுத்த நல்லரவான்வந்தான்காண்
வீரகங்காள்பெற்றெடுத்த மிடுக்குடையதொந்திசெட்டி
மூத்தார்கள்மூவருடன் முன்மூதல்வனபிமருடன்
வந்திருந்துஎன்வீட்டில் வரவிட்டீரென்னையிப்போ
என்-மூத்தார்மார்வந்தாலே முகூர்த்தமுடியுமென்றுள்
கொழுநன்மார்வந்தாலே கூடுமுகூர்த்தமென்றுள்
ஆயன்மகளுடனே அவ்வையும்யேதுரைப்பாள்
உன் மூத்தாருடனுரைக்க வார்த்தைவிசேடமென்ன
கொழுநன்மார்தன்னுடனே கூறும்விசேடமென்ன
சொல்லுமென்றுகேட்கலுமே சுந்தரியுமேதுரைப்பாள்
கொழுநன்மார்தன்பாதம் கோடித்துதெண்டனிட்டேன்
மூத்தார்கள்மூவருக்கும் மூக்கால்வலம்வந்தேன்
கொண்டபெண்ணைவிட்டாலும் குறித்தபெண்ணைவிடலா
காணியானன்கைதனிலே காட்டிக்கொடுப்பாரோ [மோ

மாற்ருனேகொள்ளவந்தால் மானங்கொடுப்பாரோ
எந்தன்கொழுநர்களை இப்போவரச்சொல்லும்
என்கொழுநன்மாருடனே என்விரதம்சொல்லாயோ
இலக்குணர்க்குமாலையிட என்றதொருநாள்முதலாய்
பச்சிலைமஞ்சள் பழுக்கக்குளித்தறியேன்
பாரக்குழல்கோதி பாங்கிமுடித்தறியேன்
வெள்ளிலைக்கற்பூரம் மென்றறியேன் அத்தையரே
வண்ணானுக்கிட்ட துயில் வாங்கிஉடுத்தறியேன்
அத்தைமகன்தன்னினைவா யனந்தலிலும்கண்வளரேன்
ஏழுபனையோலையெல்லாம் எழுதிவரவிட்டாலும்
என்விரகந்தீராது என்னுடைய அத்தையரே
நாளைவரச்சொல்லும் ராமர்மருமகனை
அகலஅழைத்துபோ யபிமர்க்குரையுமென்ருள்
அக்கினியில்வேகாம லனுப்புமம்மாமச்சினரை
அன்றுகழட்டியிட்ட அபிமரிட ஆழியிதோ
ஆழிஅடையாளம் அபிமன்னர்கைக்கொடுங்காண்
ஆயன்மகளாரும் அத்தைபோய்வாருமென்ருள்

சுந்தரி ஒளவையாரைப் பயணப்படுத்தி

அனுப்பினது.

---

ஒளவைபயணமிட்டு அசைந்துவழிநடந்தாள்
கிழவிமடந்தேடி குந்திநடையாய்நடந்து
வாடிமனந்தளர்ந்து வருவாளைப்போல்வருவாள்
ஒளவைவருகிறதை அரசமக்கள்பார்த்திருந்து
அரசர்கள்நால்வருமாய் நடந்துயெதிர்வருவார்
ஒளவைக்கெதிராக அரசமக்கள்பார்த்திருந்து
மாயன்மகள்சேதிதனை மாதாவேசெப்புமென்ருர்
என்னவென்றுசொல்வேனன் என்னுடையபிள்ளைகளே
மாற்ருனிலக்குணனும் மாயன்மகள்சுந்தரியை
மாயன்மகள்சுந்தரியை மணஞ்செய்துபோனானும்
என்றுசொல்லக்கேட்டு ஏங்கினின்ருன்வாளபிமன்
அண்ணன்கடோற்கஜன் அபிமனைத்தான்பார்த்து
வாராய்நீதம்பியரே மாயன்மகள்சுந்தரிக்காய்
பெண்ணுக்குயேங்கினல் பெருமாளும்யேசுவார்காண்
கலங்காதேதம்பியென்று கடோர்க்கஜன்தானெழுந்து

முன்னூறுமுழக்கச்சை மூன்றுசுற்றாய்த்தானிறுக்கி
தெண்டெடுத்துதோளில்வைத்துதென்னன்கடோர்க்கஜ
பாவிதுரியோதனனார் பட்டணமேபோய்புகுந்து [னும்
யானைகுதிரைகளை அத்தனையும்தான்மடித்து
சுந்தரியாள்பாடிசென்று தூக்கமுதுகில்கட்டி
கொண்டுவந்துகூட்டினால் குலமேசுமென்றுசொல்லி
மற்றுமுள்ளராசாக்கள் மனைகளிலேபெண்தேடி
வாளபிமாதம்பியரே மணஞ்செய்துவைக்கிறண்டா
என்றுசொல்லக்கேட்டு எழுந்திருந்துநல்லரவான்
அப்படியேசெய்யவல்லா யண்ணேகடோர்க்கஜனே
ஒளவைக்கிழவிமனம் அறிந்தபின்புஆகுதென்று
மாதாவேயாச்சியரே மணஞ்செய்துவைக்கிறண்டா
மாற்றானிலக்குணர்க்கு மாலையிட்டாளென்றீரே
மெய்யானவுரைதானோ மேன்மையுள்ளமாதாவே
மாயன்மகளாரும் மணஞ்செய்ததுண்டானால்
நாங்கள்கொடுத்ததொரு நற்பூஷணங்களெங்கே
தாருமம்மாவென்றுசொல்லி தர்மர்மகன்கேட்கலுமே
ஆச்சிகிழவியிவள் ஒளவையுமேதுரைப்பாள்
மாலைக்குழலாளை மணஞ்செய்துபோகிறவர்
வழியில்மறித்துயென்னை மகாபூஷணம்பறித்தார்
என்றுசொல்லக்கேட்டு எழுந்துவந்துநல்லரவான்
வாடாநீவாளபிமா மசக்கிருளவ்வையாரும்
தொத்தியள்நம்முடனே திரியாவரமுரைத்தாள்
அவள்-கந்தையுரிந்தாக்கால் கலகந்தெளியுமென்று
கந்தையைக்கைப்பற்றி உரியவந்தானல்லரவான்
ஒளவையுமப்பொழுது அரவான்முகம்பார்த்து
பசங்களிவர்பொல்லாதார் பறிப்பார்கள்கந்தைதன்னை
ஆழியெடுத்தவ்வையார் அபிமனார்கைக்கொடுத்தாள்
வாங்கினான்வாளபிமன் வயிரமணியாழிதனை
அண்ணரிந்தமூவரையும் அடிபணிந்துவாளபிமன்
திருவாழிதந்தாளே சுந்தரியுமென்றுசொன்னான்
ஆழிவந்தபோதுனக்கு ஆச்சிமுகூர்த்தமென்றான்
ஆச்சிநீரெங்களுடன் ஆகடியஞ்சொன்னதென்ன
மாதாவேயென்னுடனே மர்மமாய்ச்சொன்னதென்ன
வாருங்கள்மக்களே மாற்றான்துரியோதனன்றான்
மாயன்மகள்சுந்தரியை மணஞ்செய்தானென்றாக்கால்

மடங்கியேபோவீரோ வழிமறிச்சிநிற்பீரோ
உங்கள் நினைவறிய உரைத்தேன் காண்பிள்ளைகளே
மைத்துனனார்வந்தாரென்று மாயன்மகளுக்குரைத்தேன்
கொழுநன்மார்வந்தீரென்று கொம்பனையுந்தான்மகிழ்ந்தா
தென்னவர்கள்வந்ததே திருவாழிகண்டதே [ள்
எனக்குமனமுருகி என்னெண்ணஞ்சித்தியாச்சு

ஔவையார் நால்வருக்குச்சொல்வது.

---

எந்தன்கொழுநர்களுக்கு இரட்டைசரணமென்றாள்
கொண்டபெண்விட்டாலும் குறித்தபெண்விடலாமோ
ஏலாலபிமனையும் என்கொழுநன்மார்களையும்
கடுகவரச்சொல்லுமென்றாள் கரியமால்புத்திரியும்
என்றந்த அபிமன்னன் இசையவேதானழைத்து
என்தேவிசுந்தரியாள் எனக்கென்னாசொன்னாள்காண்
மாற்றான்மணஞ்செய்ய வந்ததொருநாள்முதலாய்
பச்சிலைமஞ்சள் பழுக்கக்குளித்தறியேன்
சாரக்குழல்கோதி பந்தாய்முடித்தறியேன்
வண்ணானுக்கிட்ட துயில் வாங்கிஉடுத்தறியேன்
வெள்ளிலைகற்பூரம் மெல்லவில்லைமெல்லியரும்
அபிமாஉன்னினைவாலே அன்னம்பொசிக்கவில்லை
ஏழுபனையோலை எழுதினாலென்துயரம்
ஆறாதுகாணுமிப்போ தவ்வையாரேஎன்றுரைத்தாள்
தம்பினேனுன்மகனை நாளையனுப்புமென்றாள் [ல்லி
என்மைத்துனனார்சொன்னதொருவாசகங்களென்றுசொ
நாளை-மணம்போகவேணுமென்றாள்ஔவையாரும்
அகமெழுகிக்கோலமிட்டு ஆவின்பால்கொண்டுவந்து
சென்னலரிசிகொட்டி தென்கதிரோன்பொங்கலிட்டு
வாளபிமன்றனையழைத்து மணைமேலுட்காரவைத்து
மன்னவர்கள்மூவரையும் வரிசையுடனிருத்தி
வெள்ளிலைக்கற்பூரம் வேணதெல்லாம்தான்கொடுத்து
மக்களிந்தநால்வருக்கும் வரிசையசனமிட்டு
மணம்போவோம்வாருமென்றுவாழ்த்தியேஔவையாரும்
ஆயுதங்கள்கைப்பிடித்து அரசமக்கள் நீங்கள்வந்தால்
துரியோதனனுடைய சேனைகள்எத்திசையும்
எச்சரிக்கையாயிருப்பார் எல்லோருமென்றுசொல்லி
ஆயுதங்கள்தங்களையே ஔவையாருந்தாருமென்றாள்

எடுப்பாயோபாட்டியரே எங்களுடஆயுதத்தை
இந்தாருமென்று எடுத்துவைத்தாராயுதத்தை
திருநீறுதான்சபித்து தெறித்தந்தஆயுதத்தில்
கந்தையில்தான்சுருட்டி கக்கத்திலேயிடிக்கி
கடோர்க்கஜன்தெண்டவ்வையார் கையில்தடியாயூன்றி
வீசிநடந்தாளே வேந்தர்மக்கள்பார்த்திருக்க
வழியிலிதுஎன்னவென்ருல் மாதாவேஎன்னசொல்வான்
கடோர்க்கஜன்தெண்டென் கையில்தடியென்பேன்
அரவான்கைவில்லெனக்கு அவ்வைகோல்தானென்பேன்
காளையபிமர்கைவாள் கண்ணுக்குப்புல்லறுகு
புல்லறுக்கும்வாளென்று பெருமையுடனுரைப்பேன்
வாருங்கள்தம்பியென்று மாதாவுமுன்னடந்தாள்
கூன்கிழவிநம்மை கொஞ்சமேபண்ணுளே
கூன்கிழவிவாருமென்று குலுங்கவேதானகைத்தான்
ஔவையாருமுன்னடக்க அரசமக்கள்பின்னடக்க

ஔவையார் நால்வருக்கும் துவாரகை சிறப்பைக்
காட்டி வருவது.

---

மாயனுடபூங்காவில் மன்னவரைகொண்டுசென்று
மாயன்படைவீட்டை மன்னவர்க்குகாட்டலுற்ருள்
செப்புமதிலுகளும் சிங்காரத்தோப்புகளும்
கன்னல்கதலிகளும் கரும்புவிளாயிஞ்சிகளும்
உப்பரிகைமெத்தைகளும் உயர்ந்ததொருமண்டபமும்
வாழைக்கமுகுகளும் மாமரத்தோப்புகளும்
தென்னமரச்சாலைகளும் தேக்குமரச்சோலைகளும்
புன்னைமரச்சாலைகளும் புளியமரச்சோலைகளும்
பாளைமணம்வீசப் பச்சைக்குயில்கூவ
பச்சைத்துளசிப் பரிமளிக்கும்எத்திசையும்
பாருங்கோள்மக்களே பாராந்தான்றன்பதியை
துரியோதனனுடைய தண்டிறங்குமிவ்வனத்தில்
ஊருக்குத்தெற்கே ஒருமாமாங்குளமும்
உயர்ந்ததொருமாமரமும் ஒருநாழிவழிநிழலும்
அந்தமரத்தருகே ஔவையாரும்வந்துநின்ருள் [டார்
அரசமக்கள்நால்வருந்தான் ஔவையாற்குதெண்டனிட்
ஔவையாரெடுத்தணைத்து அள்ளியேமுத்தமிட்டாள்

வாழ்த்தியந்தவாயுதத்தை மக்கள்கையில் தான்கொடுத்தா
மக்களே நீங்கள்மனம் பூரித்துவாங்கவென்றாள் [ள்
வாழ்த்தியந்தவாயுதத்தை மக்கள்கையில் தான்கொடுத்தா
மாமாத்தின்கீழே மன்னவர்கள்வீற்றிருந்தார் [ள்
இப்படியாகவே யிவரிருக்கும்வேளையிலே
கலியாணம்போகிறவர் கணக்கிடவேகூடாது
அண்டத்தினட்சத்திரம் அளவிட்டுக்கூறலாம்
தேசத்தழகுமன்னன் துரியோதனன்சேனை
பதினெண்படைத்தலைவர் படைமன்னரெல்லோரும்
கர்ணன்விதுரன் காங்கேயன்தேத்தராசன்
மன்னர்குருக்கள்மார் மகாசேனைவாராரோ
அந்தவழியிடையர் அடிக்கிவந்தார்பாற்குடங்கள்
ஆயிரங்காவடியி லடிக்கிவைத்தபாற்குடத்தை

## அரவான் யாதவர்களை மிரட்டுவது.

---

அரவானெழுந்திருந்து அதட்டி இடையர்களை
இறக்கடாபாற்குடத்தை யென்றுகொடிபிடிங்கி
மாறியடித்தரவான் வழிமறித்துநிற்கலுற்றான்
அடிக்குப்பொறுக்காமல் அதிர்ந்துகுடமிறங்கிநின்றார்
பாற்குடத்திலுள்ளே பாய்ந்திருந்தநால்வருமாய்
வாய்சாறுகையேந்தி மன்னர்குடித்தபின்பு
பால்-குடித்ததுபோதாமல் பறித்தார்களுள்ளதெல்லாம்
குட்டிதெப்பைகோடாலி கோலோடணைகயிறு
உப்புகட்டிவாய்க்கரிசி உடுத்தகம்பிளியுடனே
பிச்சைசெருப்பும் பிதிர்ந்ததொருநாற்சிலையும்
கட்டும்அருணவும் கையில்முழுக்களியும்
மாயரிடையர்கையில் வகைவகையாய்த்தான்பறித்து [ரர்
அடித்துத்துரத்தியுங்கள் ஆண்டவர்க்குச்சொல்லுமென்
ஓடிஉரையுமென்று ஓட்டித்துரத்திவிட்டார்
பாலைபரிகொடுத்து பகைத்தந்தயிடையரெல்லாம்
தலைமேலேகையைவைத்து தாணியளந்தோன்பதிக்கு
அப்பயமப்பயமென்று அலறியேஓடலுற்றார்
கெருடனும்வந்துநின்று கிருஷ்ணரைத்தெண்டனிட்டா
பஞ்சவர்கள்பிள்ளைகள் பசங்களிங்கேவந்தார்கள் [ன்
எங்கேயிருக்கிறார்கள் இப்போஅறிவோமென்று
கெருடனுமப்பொழுது கேசாத்தில்தானெழும்பி

கோவில்குளங்கள் குன்றுகள் தான்தேடி
பூங்காவனந்தேடி பொன்மதில்கள் தான்தேடி
எங்கெங்குந்தேடி இனியதொருமாப்பிள்ளையை
ஒருமாமரத்தருகே ஓடிவந்தார்கெருடனுமே
மன்னவர்கள் நால்வருமே மாயவரைப்பாடலுற்றார்
கெருடனுமப்பொழுது கிளைமேலேஉட்கார்ந்தார்
தர்மரிடபிள்ளைகளே தப்பாதுயென்றுசொன்னான்
மாயவர்க்குப்போயுரைத்து வருவோமேயென்றுசொல்லி
கெருடனுமோடிவந்து கிருஷ்ணருக்குப்போயுரைத்தான்
ஆயனெழுந்திருந்து அரண்மனையினுட்புகுந்து
பசங்களிந்தநால்வருக்கும் பாங்காயமுதனுப்பி
வாழைப்பழமும் வகையாய்ப்பலாச்சுளையும்
மாம்பழமும்பாலும் வடிதயிர்சர்க்கரையும்
கொம்பில்சிறுதேனும் கோதுபடாசர்க்கரையும்
வெள்ளிலைபாக்கும் மிகுந்தபூச்சந்தனமும்
ஆயிரங்காவடியி லடிக்கிஅனுப்பலுற்றார்
வந்ததொருகாவடியை மாமரத்தின்கீழிறக்கி

நால்வருக்கும் அன்னமிடுவது.

---

மாயன்மருகருக்கும் மற்றபேர்மூவருக்கும்
மாம்பழமுந்தேனும் வடிதயிரும்சர்க்கரையும்
தேனுடனேபாலுந் தெவிட்டாதமுப்பழமும்
வாரியமுது படைத்தார்கள்மன்னவர்கள்
அமுதுண்டுநால்வருமாய் ஆயாசந்தீர்ந்தபின்பு
பூமுடித்துச்சந்தனங்கள் பூசினார்மார்நிறம்ப
வெள்ளிலைகற்பூரம் வேண்டும்படிதிமிர்ந்து
மன்னர்மனமறிந்து மரத்தின்கீழ்வீற்றிருந்தார்

அஸ்தினாபுரத்து வேடிக்கைகள்.

இனி-அஸ்தினாபுரத்து அடைவுகளை நீர்கேளும்
அப்போதுரியோதனன் அஸ்தினாபுரிதனிலே
கலியாணபந்தலுட காட்சிபெருமைகேளும்
பவழத்தால்கால்நிறுத்தி பச்சைவடிப்புசெய்து
இட்டதொருபந்தல் எலுமிச்சம்வேர்பரப்பி
வாழைக்கமுகுநாட்டி மகாதோரணங்கள்சூட்டி
கண்ணாடிகட்டி கவுரியலங்கரித்து

## ௧௩௨ அபிமன்னன் சுந்தரிமாலை.

எட்டுதிசையு மியலானசப்பிரத்தேர்
சப்பிரத்தேர்களெங்குந் தனித்தனியேதானிருத்தி
தூணுக்குத்தூணொருபெண் சோபனங்கள்பாடிநிற்க
வீதியிருபக்கலிலும் வேசியர்களாடிநிற்க
பூவாலேதோரணங்கள் போடுவித்துஎத்திசையும்
பந்தலுக்குப்பந்தல் பரிவட்டம்கட்டிவைத்து
பந்தல்திசைதோறும் பட்டாலலங்கரித்து

பந்தல் வேடிக்கைகளை துரியோதனன் பார்க்கிறது.

---

பந்தல்பெருக்கத்தை பார்த்தான் துரியோதனனும்
பவுஞ்சிதிரள்காலாளும் பார்க்கவேதானெழுந்தான்
அருச்சுனபுரியேறி ஆற்றில்வடக்காக
கூடாரம்போடுமென்று கொற்றவனும்வந்துநின்று
கருணனைத்தானழைத்துக் கணக்கிடுமானைகளை
நம்மானைக்கூட்டத்தில் ரணம்செய்யுமானைகளில்
எத்தனையானைக் கடகமிருக்குதென்றான்
கணக்கரைத்தானழைத்து கருணனுங்கூறலுற்றான்
ஆனைக்கணக்கெழுது மையாயிரங்கணக்கர்
ஓடிவந்து அக்கணக்கர் ஒப்பமிட்டாரானைகளை
பதினாயிரங்கோடி பந்திக்கடகத்தேர்காண்
பந்திமறிந்து பவுஞ்சுகட்டிவந்தேன்காண்
யானையணியுள்ளதெல்லாம் அழைத்துபவுஞ்சுந்தீர்ந்து
குதிரையணியுள்ளதெல்லாம் கொண்டுவந்துவிட்டார்கள்
ஆசாரியர்கள்தம்மை யழைத்துவரச்சொல்லுமென்றான்
தேரைநடத்துமென்றான் தென்னன்துரியோதனனும்
சிங்கம்புலியாளி தேரிலலங்கரித்து
அழகுசுருணிவைத்து அரக்குமேலேயெழுதி
தேருக்கலங்காரி தேத்தாசனையனுப்பி

துரியோதனன் ராசாக்களெல்லோரையும்
அழைக்கச் சொல்லுகிறது.

---

பரிசையணிக்காரருக்கு பார்த்துவிடைகொடுத்து
வில்லாளிக்காரரெல்லாம் விதம்விதமாய்தானழைத்து
வில்லணிக்குகர்த்தனும் விதுரனைத்தானழைத்து
ஈட்டிமன்னர்காளாளும் இருநூறுகோடிலட்சம்

பாணவகைக்காலாளும் பந்திபந்தியாயனுப்பி
சேரனும்சோழனுந் தேசமன்னபாண்டியரும்
சோழியர்சோனகருந் துலுக்கர்மலையாளர்
தினமன்னர்காலாளர் சேர்ந்தபரிசனங்கள்
லாடர்கவுண்டர் ராகுத்தர்கிங்கிலியர்
கொங்கணர்கன்னடியர் குச்சிலியர்மராட்டியர்கள்
குறவர்மலைநாடர் குருநாடர்வேடர்களும்
அன்பத்தாறுதேசம் அரசமன்னர்தானனுப்பி
சேனையணியுள்ளதெல்லாம் தேர்மன்னன்தானனுப்பி
கணக்கரைத்தானழைத்து கடுகச்சீட்டெழுதுமென்றான்
தேசத்தழகன் துரியோதனப்பெருமாள்

துரியோதனன் சொற்படி கணக்கர்கள் ஓலை
எழுதுகிறது.

---

தன் மைந்தனிலக்குணன் மணம்போருனென்றுசொல்லி
மலைநாட்டிலெல்லாரும் வரிசையனுப்பினதும்
மலையென்றுரைத்தேன் மாம்பழங்களுள்ளதெல்லாம்
வாழைப்பழம்தேங்காயு மாங்காய்பலாக்கனியும்
கத்தரிக்காயும் கரியவெள்ளரிக்காயும்
பாலுந்தயிர்க்குடமும் பந்திபலாப்பழமும்
பதினுயிரக்கலம் பாளைசம்பா அரிசியுந்தான்
மூவாயிரக்கலம் மூளைப்பயறுந்தேங்காயும்
பந்தலுக்கெண்ணெய் பதினுயிரக்கலமும்
நெய்சிந்தை ஆயிரம் நிண்ணயமாய்த்தான்பிடித்து
இந்தப்படியா யிராச்சியத்திலுள்ளவர்கள்
பட்டணங்களுள்ளவர்கள் பலவரிசைகொண்டுவர
அன்பத்தாறுதேசத்து அரசமக்களுள்ளவர்கள்

துரியோதனன் மல்லர்கள்கையில் ஓலை
கொடுப்பது.

---

தேசங்களுள்ளதெல்லாம் சீட்டெழுதிப்போகவிட்டு
மற்றுமுள்ளசீமையிலே மனிதர்களைப்போகவிட்டு
கலியாணம்நாளையென்று கடுக அனுப்புவதும்
அனுப்பாமலேயிருந்தால் அந்தந்தராச்சியத்தில்
வைத்த அதிகார மாற்றிவைப்போமென்றுசொல்லி

வைக்கஒருலட்சம்பொன் வாங்கிடுவேன்தப்பாது
என்றுசொல்லிசீட்டெழுதி ஏழாயிரந்தூதர்களை
அப்போதுஓடவிட்டு ஆனதுரியோதனனும்
மாளிகையில்போய்ப்புகுந்து மைந்தனிலக்குணர்க்கு
அப்போதிலக்குணர்க்கு ஆனமணப்பொங்கலிட்டு
திருஷ்டிசுத்திபண்ணுமென்று சிரித்துமனமகிழ்ந்தான்
அப்போதுதாதியர்கள் அசனமமைந்ததென்றார்
சொன்னதுகேட்டு துரியோதனன்சொல்வானே
பாரமுடிமன்னவர்கள் பந்திக்கெழுந்திரென்றான்
படைமன்னர்க்கெல்லாம் பந்திக்கமர்த்திவைத்து
ஆனகறிசோறும் அன்பானபாயசமும்
பொரித்தபொறிக்கறியும் பொன்போல்சிறுபருப்பும்
புத்துருக்குநெய்வார்த்து போதவேஉண்ணுமென்றான்
உண்டெழுந்தபிற்பாடு உலப்பைகள்கொண்டுவந்தார்
கருணர்முகம்நோக்கி கட்டுலப்பைஉன்வசங்காண்
உலப்பைகொண்டுவந்தவரை ஒருபந்திவையுமென்றான்
அசனங்கள்நீர்படைத்து அனுப்பிவையும்ஊரையென்றா
பாரமுடிவேந்தன் பந்தலிலேவந்திருந்து [ன்
தேசத்துமன்னவரைச் சேரவரவழைத்து
பாரமுடிமன்னரெல்லாம் பந்தலிலேதானிருந்தி [தார்
முடிமன்னரெல்லோரையும் மொய்யெழுதுமென்றுரைத்

### அரசர்கள் மொய்யெழுதுவது.

---

பாரமுடிமன்னவர்கள் பதக்கங்கள்மொய்யிடுவார்
கோலமன்னரெல்லோரும் கொலுசுகள்மொய்யிடுவார்
யானைகள்மொய்யிடுவார் ஆனந்தவாழ்மார்பர்
குதிரைகள்மொய்யிடுவார் கோடிபேர்முடிமன்னர்
பட்டுபட்டாவளியும் பாங்கானசேனைகளும்
இழையாயிரம்பொன்பெற்ற இந்திரவர்னச்சேலைகளும்
முத்துப்பதக்கங்களும் மோகன்மாலைகளும்
வச்சிரப்பதக்கங்களும் வைடூரியமாலையுந்தான்
பட்டுச்சுருட்டியுந்தான் பருமுத்துதாவடமும்
கோடிமுடிமன்னர் கொண்டுவந்துமொய்யிடுவார்
மூவாயிரக்கல மொய்யிட்டபொன்னளந்தார் [ர்கள்
மொய்யிட்டபொன்னையெல்லாம் மொண்டளந்துபார்த்தா
பூஷணங்கள்மொய்யாவும் பொன்னாயிரக்கலமாம்

சேனைகள்மொய்யாவுஞ் சேனை நூருயிரமாம்
ஆனைகள்மொய்யாவும் ஆயிரம்கோடிலட்சம்
குதிரைகள்மொய்யாவும் கோடிலட்சம்பேரணியாம்
உக்கிராணகணக்கர்கையில் ஒப்பிவையுமென்றுரைத்தான்
எழுநூறுஒட்டகம்பொன் னெடுமென்ருராயர்பதி
ஆயிரம்பெட்டிகளி லானபட்டாடையுந்தான்
ஐயாயிரம்பெட்டிகளி லானபட்டாடையுந்தான்
மாவுங்கழுநூலும் மஞ்சளுடன்நெல்விரையும்
மூளைப்பாக்கும்வெத்திலையும் மொத்தப்பழத்துடனே
ஆயிரந்தோணியிலே அமர்ந்தபொதிபாக்கு
மாலையுஞ்சந்தனமுப் மங்கிலியநெய்குடமும்
வெற்றிலைகட்டுகளும் மிகுந்தகாசுண்டையுடன்
மங்கிலியமாலைகளும் மங்கையர்கள்கொண்டுவா
மேளவகையாய் விதவிதமாய்த்தான்முழங்க
எட்டுத்திசையிலேயும் ராஜகொடிமுழங்க
வெற்றியிலக்குணரும் வேந்தருந்தேரேறி
மாயன்பதிநோக்கி மணம்போகத்தானெழுந்தார்

கருணரை துரியோதனன் அத்திபுரத்திலே
நிறுத்துவது.

---

கருணமகாராஜன் கடிகியேயோடிவந்து
துரியோதனனுடைய செவியிலேயேதுரைப்பான்
மணக்கோலம்போனல் மாயன்கபடுசெய்வான்
இந்தப்பெண்போனல் இனியபெண்கிடையாதோ
ஆளப்பிறந்த அபிமப்பெருமாளுக்கு
அர்ச்சுனபுரியை அமர்ந்துபட்டம்கட்டுமென்பார்
மெய்தான்கருண விளம்பிஞயிப்பொழுது
யாரை நிறுத்திவைப்போம் அர்ச்சுனபுரிதனிலே
கருணரே நீரிருந்தால் காரியமாகுமென்ருர்
இதுவோநமக்குறையும் இனித்திருந்தோம்நிஷ்டூரம்
பட்டணத்தில்வைத்திருந்தால் பாரமூடிகருணனப்போ

துரியோதனன் துவாரகைக்கு வருவது.

---

கருணனைத்தானனுப்பி காவலனும்போய்நடந்தான்
தென்னன்துரியோதனனும் துரோணர்முகம்பார்த்து
வழிநிமித்தம்பாருமையா வள்ளல்மணம்போக

கஙௌ அபிமன்னன் சுந்தரிமாலை.

தொல்லைசபையிலே துரோணருந்தான்கேட்டு
வழிநிமித்தம்பார்த்து மன்னன் துரோணாச்சாரியரும்
சாரைகுறுக்கிடுமாம் சந்திரன்மேல்பல்லிசொல்லும்
கூனிகுறுக்கிடுவாள் குகைஓரிஊளையிடும்
குந்திப்பிடித்தாப்போல் கோட்டானும்ஓலமிடும்
பச்சைமரத்தேறி பசித்திருந்தகாகமது
பட்டமரத்தேறி பளபளென்றுகூறிடுமாம்
வடக்கேயிருந்துகொண்டு வடகாகமோடிவந்து
கிழக்காகநின்றுகொண்டு கூறிடுமாமப்பொழுது
இந்தநிமித்தமெல்லாம் இனியகுருக்கள்கண்டு
சொல்லாதிருந்தால்நமக்கு தோஷங்கள்வந்துவிடும்
துரியோதனன்செவியில் துரோணரும்கூறுவார்
கண்டநிமித்தமெல்லாம் காவலர்க்குஆகாது
பார்த்தநிமித்தமெல்லாம் படைமன்னர்க்காகாது
என்றுசொல்லக்கேட்டு இனியதொருராசாவும்
துரோணர்முகம்நோக்கி துரியோதனனுரைப்பான்
எள்ளுப்போட்டாஎள்ளுவிழா யென்சேனைபோகையிலே
நிமித்தங்கள்குற்றமென்று நீர்உரைத்தீர்ஐயாவே
ஆகாசகுணமதை அறிந்துவருவேனென்று
தம்பிமார்தன்னுடனே தார்வேந்தன்போய்நடந்தார்
மைத்துனன்மார்தன்னுடனே மாயன்பதிபோக
செந்தூள்பறந்திடவே துரியோதனனுமப்போ
பாமுடிமன்னனையும் பவுஞ்சுடனேநடவுமென்றார்

ஆறடைத்துக்கொள்வது.

---

துரியோதனன்வரவே திருமால்மிகவறிந்து
சும்மாநாம்வாருமென்று சொன்னோம்ஒருவார்த்தை
சேனைப்பெருக்கமுடன் திரளோடேவாரான்காண்
மன்னர்க்கெதிராக வழிமறிக்கவேண்டுமென்று
வற்றிக்கிடந்த வருபுனல்ஆறுதன்னை
மெத்தப்பெருக்கவென்றார் வேதநாராயணரும்
பெருமாளுரைத்திடவே பொங்கும்புனலாறு
கரையைவிட்டுநாற்காதம் கடுகிப்பெருகிடுமாம்
நிறைந்துவருமாறுதான் துரியோதனன்பார்த்து
துரோணனிடநிமித்த மத்தித்தோமேஆறுதனில்
கூடாரம்போட்டு குதிரையைநிறுத்துமென்றான்

ஆறுவடியவே ஐந்தாறுநாட்செல்லும்
மாயவரும்கோபிப்பார் மணமுகூர்த்தம்போச்சுதென்று
துரியோதனன் ஆற்றில் நடந்து கரையேறுவது.

---

இங்கிருக்கவொண்ணாது என்றேஎழுந்திருந்து
ஆர்கடக்கவென்றான் அரவக்கொடிவேந்தன்
யானையணியுள்ளதெல்லாம் மாற்றில் நிறையுமென்றான்
தோணியுள்ளதெல்லாம் திரளாற்றில் நிறுத்துமென்றான்
குதிரையணியெல்லாம் குறையாற்றில் நிறுத்துமென்றான்
ஆற்றிலேதானிறுத்தி அக்கரையேறுமென்றான்
யானைகுடித்ததுவும் அக்கரைபட்டதுவும்
தேர்காலில்பட்டு சுவறின நீரதுவும்
குதிரைகுடித்ததுவும் குலமன்னர் நீந்ததுவும்
காலாள்குடித்ததுவும் காலிளருதேறினதும்
வந்தநீரெல்லாம் மண்ணில்சுவறினதும்
தூளாய்ப்பறந்துமணல் சூரியனைப்போய்மறைக்க
துரியோதனன் துவாரகைக்கு வந்துவிட்டது.

---

ஆறுவடிந்து அரசர்கள்கரையேறி
சேனைத்திரள்ராஜாக்கள் தெருவீதிதான்பிரிந்து
கடையும்கடைத்தெருவும் கன்னருலக்கடமும்
அரிசிகடலைபய ரானகச்சாயமுடன்
கஞ்சாவும்எள்பொறியும் கலந்தபொரியவலும்
தேங்காய்பலாக்காயும் சீனைவிளாங்காயும்
வெற்றிலைபாக்குகளும் விற்பார்கடைபோட்டு
மட்டுபடாசேனையெல்லாம் வந்துகரையேறி
தென்னன் துரியோதனனும் சேர்ந்த இலக்குணனும்
தமையன்மார் நூற்றுவரும் தக்கதுரைகளுடன்
ஆற்றில்மணல்சுடவே அரசர்கள்தேரேறி
மாயர்பதிநோக்கி மன்னர்முகம்நோக்கி
செந்தூள்பறக்கத் தீவிரமாய்த்தானடந்தார்
செந்தூள்கருந்தூளும் சூரியனைப்போய்மறைக்க
சுந்தரி தோழிகளுக்குச் சொல்லுவது.

---

அப்போதுவாரகையி லாயனரண்மனையில்
மாயன்மகளார் மருதவல்லிசுந்தரியாள்

ஏழாந்தளமேரி இயலானசுந்தரியும்
பலகேணித்தாள் திறந்து பார்த்தாள் திசைதோறும்
துரியோதன னுடைய சேனைவரவுதனை
பார்த்துஇருகண்ணாலும் பாங்கியுட னுரைப்பாள்
வாராய்நீசெங்கமலாய் மாற்றான்பெருக்கமிதோ
எத்தனைசேனையுட னென் னுயிரைமாய்க்கவந்தான்
குறையில்லாசேனையுடன் என்கொழுநர்படைவெல்லுவா
தாவுமுடிந்ததடி தகப்பனிட தீங்கலவோ [ரோ
பெண்ணாய்ப்பிறந்தகளை போதுமடி தாதியரே
இருக்கமுடியாதேடி இராமரிட்ட தீயெனக்கு
தங்கமுடியாதேடி தகப்பனிட்ட தீயெனக்கு
என்றுசொல்லித்தோழியரை இளங்கொடியுந்தானழைத்
யாருமறியாமல் அக்கினியைவளர்த்துமென்றாள் [து
சட்டையரைச்சட்டை தையுமென்றாள் தார்குழலும்
புற்றும்புதுமுறமும் பொற்கொடியாள் தாருமென்றாள்
சற்றேதடிகயிறு சார்த்துமென்றாள் தார்குழலும்
சேஷைஅரிசி திருமுடியின்மீதில்வைத்து
மாயன்மகளாரும் மனதுதுணிந்திருந்தாள்

அரவான்முதல் நால்வரும் துரியோதனன்படை
யையும் அசட்டை செய்தது.

---

அப்போதரவானு மபிமன்கடோர்க்கஜ-னும்
தொந்திசெட்டிதன் னுடனே துரைமன்னர்நால்வருந்தா
மாமரத்தின்மீதேறி மாற்றான்படைபார்த்து [ன்
பஞ்சவர்கள்புத்திரர்கள் பயந்துமரயேறினார்கள்
துரியோதன னுடைய சேனைப்பெருக்கமெல்லாம்
பார்த்தார்திசைதோறும் படைமன்னர்தண்டெல்லாம்
மாமரத்திலேறினதை மாயவரும்பார்த்தாக்கால்
என்றுசொல்லியேசுவர்க ளிழிவோம்நாமென்றுசொல்லி
அப்போதபிமனும் அண்ணர்முகம்பார்த்து
தருமரப்பாதன்றனக்கும் தாயாதி நூற்றுவர்க்கும்
பாதிஅரசு பகுந்தரசுஆளாமல்
வனவாசம்போனதென்ன மாற்றானாசாள்வதென்ன
என்றுசொல்லக்கேட்டு எழுந்துகடோர்க்கஜனும்
அப்படியேசெய்ததுவும் ஆயர்செய்ததீங்கல்லவோ

துரியோதனன் ஆளும் சீமைகளத்தனையும்
நம்முதேயாக்கிடுவோம் ராசர்களைச்செயித்து
அரவான்கடோர்க்கஜனும் அபிமனுக்குத்தானுரைப்பார்
அண்ணன்முகநோக்கி அபிமனுந்தானுரைப்பார்
துரியோதனன்கூட்டந் திரளானசேனைகளை
மாவென்றுசொல்லுவார்கள் மகுடமுடிமன்னவர்கள்
என்றிவர்பேசி யிருந்தார்கள் நால்வருமாய்
அங்கேதுரியோதனனும் அரசரைத்தானழைத்து

துரியோதனன் கூடாரம்போடச்சொன்னது.

---

கூடாரம்போடுமென்றான் குலமன்னராசர்களை
துவாரகாபதியே தூரவெளிதனிலே
கூடாரம்போடலுற்றார் கொற்றவர்கள்மன்னவர்கள்
வேந்தருக்கும்வேடருக்கும் வேறேயொருபுறமும்
வேசியர்கள்வீதியங்கே வேறேயொருபுறமும்
யானைகள்கூடாரம் அதுவுமொருபுறமும்
கடையுங்கடைத்தெருவுங் காவலர்கள்வீதிகளும்
நட்டுவர்வட்டுவனார் நாடகரொருபுறமும்
வீதிக்குவீதி பிறந்தந்தவேந்தருடன்
மன்னவர்கள்தன்னுடனே மகுடமுடியோனும்
கேளிக்கைபார்த்திருந்தான் கிளிபவளவாயானும்

அரவான் ஆலமரமிரங்கினது.

---

அப்போதரவானும் ஆலமரமிறங்கி
அரவானுமப்போது ஆற்றிலேயோய்முழுகி
பாற்குடங்களத்தனையும் பாரித்துநீர்நிரப்பி
குடமேற்குடம்நிறுத்தி கோபுரம்போலடுக்கி
ஆற்றில்முழுகியந்த ஆதித்தனைதோத்தரித்து
கொங்காணிமேல்போட்டு கோமணச்சீலைகட்டி
கழிகோலணைக்கயிறும் கையில்குடுவையுடன்
பட்டைபட்டையாக பன்னிரண்டுநாமமும்
இட்டதிருநாம மெத்திசையுஞ்சோதிவிட
ஏற்றியந்தபாற்குடத்தை ஏற்றித்தலையில்வைத்து

அரவான் அண்ணரண்டை வருவது.

அண்ணரிருக்குமந்த ஆலமரத்தருகே
வீசிநடந்தாவான் மிடுக்காகஓடிவந்து

அண்ணருக்குதெண்டனிட்டு அகலவேபோயிருந்தான்
ஏண்டாஇடையா எனக்குவந்துதெண்டனிட்டாய்
என்றுகடோர்க்கஜனும் இடையனைக்கேட்கலுமே
அல்லகானண்ணாவே அரவான் நானென்றுரைத்தான்
ஏதுக்காய்தம்பியரே இவ்வேடங்கொண்டதென்னு
அண்ணர்முகம்நோக்கி அரவானுமேதுரைப்பான்

அரவான் அண்ணரண்டை விடைபெற்றுக்கொண்டு
துவாரகாபுரிக்கு வருவது.

---

துரியோதனனுடைய சேனைத்திரளுள்ளதெல்லாம்
குத்தும்படையிதுவோ கூலிபடைதானோ
பார்த்துவருகிறேன் பவுஞ்சிட்டமன்னவரை
கண்டுகடோர்க்கஜனும் கண்ணுருசுத்திவிட்டு
குங்குமத்திண்டோளன் குலுங்கமிகநகைத்து
போய்வாருந்தம்பியென்று போற்றிவிடைகொடுத்தான்
அப்போதரவானும் ஆயன்வடிவுகொண்டு
தண்டுநடுவேபோய் தார்வேந்தரைப்பார்த்து
தென்னன் துரியோதனனும் சேத்தரசன்மைத்துனரும்
தம்பிமார் நூற்றுவரும் தனையனிலக்குணனும்
கூத்துகள்பார்த்திருந்தார் குலமன்னரெல்லோரும்

அரவான் கூடாரத்தருகில்வந்து அரசர்களை
மிரட்டுவது.

---

அந்தப்பெருக்கத்தி லரவானும்வந்துநின்று
பார்த்தானேபாலகனும் பங்கயஞ்சீர்கண்ணாலே
உற்றுற்றுப்பார்த்தான் ஒளிபிறந்தகண்ணாலே
யானைகுதிரைகளும் அரசமக்கள்வீற்றிருப்பும்
ஆடுமாடாக அரவான்மனதிலெண்ணி
கண்டானரவான் கனக்கவேகோபமெய்தி
கூலிப்படையிதுவோ குத்தும்படைதானோ
பார்ப்போநாமென்றுசொல்லி பார்த்தன்மகனும்
கையில்தடியிடுப்பில் கட்டழகன்தானன்றி
ஒருகால்மூடிக்கி உயர்ந்தமுழங்காலில்வைத்து
கோடையிடிதான் குமறினதுபோலாக
டேயோடேயோவென்று தீவிரமாய்க்கூச்சலிட்டான்

### அரசர்களெல்லோரும் அரவானிட்ட கூச்சலைக் கண்டு ஓடுவது.

---

அரவானுடசத்தம் அரிபரிவாரமெல்லாம்
யானைகள் தும்பறுந்து அரசர்கள்மேலோடுவதும்
குதிரைகள் தும்பறுந்து குலமன்னர்மேலோடுவதும்
வில்பிடித்தமன்னரெல்லாம் வீதிவிட்டோடலுற்றார்
ஈட்டிபிடித்தமன்னர் எறிந்துவிட்டோடலுற்றார்
கத்திபிடித்தமன்னர் கைசோர்ந்துவிட்டுவிட்டார்
ஓடிஒளிப்பாரும் உடனேவிழுவாரும்
வந்தானேவாளபிமன் வாளுலழிக்குகைக்கு
என்றேஅரசர் இடிந்துவிழுவாரும்
இதோவந்தான்வாளபிமன் என்றேபயத்தோட
அதோவந்தானென்று அலறிவிழுவாரும்
கண்டான்துரியோதனன் காதிரண்டுஞ்செவிடுபட்டு
கோடையிடியோ குமிறினதுயென்றுரைத்தான்
கோடையிடியல்ல கோனூரிடகூந்தல்

### துரியோதனன் அரவானை யழைத்துவரச் சொன்னது.

---

அழைத்திங்கேவாருமென்று அரசன்துரியோதனனும்
யானைத்திரளுள்ளவர்கள் அரவானருகில்வந்து
வாடாயிடையா வரிசைகொண்டுவந்தாயோ
மன்னன்துரியோதனனார்'வரவழைத்தார்வாருமென்றான்
தலைமேலேபாற்குடங்கள் தரிக்கமுடியாது
இறக்குவாரில்லையோஉங்களிழவுக்கோகொண்டுவந்தேன்
தலையெரியப்பார்த்தீர்கள் தாழவிறக்குமென்றான்

### துரோணர் தூதர்களை யழைப்பது.

---

தொல்லைசபையில் துரோணரதுவறிந்து
தூதரைத்தானழைத்து சொல்லுவார்தானுமப்போ
உலுப்பைகள்வந்திருக்கும் உக்கிராணந்தன்னருகே
பாற்குடத்தைத்தானிறக்கப் பதியவேதானிறுத்தி
இடையனைத்தானழைத்து இங்கேவாவென்றுரைத்தான்
ஆயனிடையன் ஆள்பேருடன்நடந்து
பாற்குடத்தைத்தாங்கி யிறக்கவந்தார்பார்மன்னர்

## அரவான் பாற்குடங்களை உடைத்து விடுவது.

அரவானும்பாற்குடத்தை அசட்டாகவிட்டுவிட்டான்
பாலாறுபோலே பரவுதேகுடமுடைந்து
உக்கிராணத்திலுள்ள உலுப்பைகளத்தனையும்
மாங்காயுந்தேங்காயும் வாழைக்காயும்பழமும்
பாற்குடமுந் தானுடைந்து பாலாறுபோலோட
அதிலிருந்தகாய்கறிகள் அலைந்தோடிப்போய்விடுமாம்
ஆயிரமல்லர்களை ஆற்றிலடித்தோட
கெடுத்தானிடையனென்று கொடியமன்னரோடலுற்றார்
மாயனிடையனிவன் வழிநெரியேவாராமல்
கையில்தடிபிடித்து காவலர்கள்மேல்விழுந்தான்
மாறியடித்து வழியாக்கியேநடந்தான்
துரியோதனனிருக்குஞ் சேனைநடுவாக
கூத்துநடுவே குலமன்னன்போய்புகுந்து
துரோணர்முகம்நோக்கி துரைமன்னன்தெண்டனிட்டு
அரவானேயென்றறிந்து ஆசீர்வாதமென்றான்
இடுப்பில்தடிபிடித்து ஏகாந்தமாயிருந்து
அரவான் துரியோதனனை யாரென்றுகேட்கலுற்றான்
அரவான்வினவலுமே அரசன் துரியோதனனும்
ஏண்டாயிடையா உனக்கித்தனைகோபமடா
ஆயனிடையனென்ற தாலையினாற்பொறுத்தேன்
மற்றொருவரானாலே மாறியடித்திடுவேன்
என்னத்துரோணர் இராஜர்முகம்நோக்கி
பெருமாள்இடையனுக்கு வெகுமானம்கொடுத்தனுப்பும்
என்றுசொல்லக்கேட்டு இராசன் துரியோதனனும்
சாமந்தரையழைத்து தார்வேந்தன்கூறுவான்
மாயனிடையனுக்கு மரியாதைபண்ணுவிப்போம்
கொண்டுவாபச்சைவடம் கொடுபாக்குவெற்றிலையும்

## அரவானுக்கு துரியோதனன் வெகுமதிசெய்வது.

இழையாயிரம்பொன்பெற்ற யிந்திரவர்ணப்பட்டெடுத்து
கொண்டுவந்தாரப்பொழுது கொற்றவனார்தன்னருகே
துரியோதனனெடுத்து திருமாலிடையனுக்கு
இந்தாடாவென்று யெடுத்துகொடுக்கவந்தான்
பார்த்தன்மகனாரும் பச்சைவடம்வாங்காமல்

குடுவையைக்கைப்பிடித்து கோலையவனீட்டினன்
துரோணர்முகம்நோக்கி துரியோதனனுரைப்பான்
இந்தயிடையனம்மை யெண்ணமல்செய்ததுபார்
என்னத்துரோணர்கிட்ட அடுத்ததுகோல்குடுவை
அல்லவென்னலாமோ அரசர்துரியோதனனே
என்னத்துரியோதனனும் இசைந்துமனமகிழ்ந்து
குடுவையில்பாக்கிலையை குலவேந்தன்தானடைத்து
தடிமேலேபச்சைவடம் தார்வேந்தன்போடலுற்றான்
வாங்கி அரவானும் வட்டமணல்மேல்விரித்து
ஆட்டுக்குசீலையிட அடுக்கடுக்காய்கிழிக்கலுற்றான்
மூகத்துமேல்சீலையென்று முடிமன்னன்கிழிக்கலுற்றான்
பாக்கிலையைவாங்கி பாறையின்மேல்வைத்து
வாய்த்தம்பலமென்று மன்னனுரைக்கலுற்றான்
குலமன்னர்நூற்றுவர்க்கும் குடிப்பிறந்தபிள்ளைநான் [ன்
குடமுடைக்கவேணுமென்று குடுவையைபோட்டுடைத்தா

துரியோதனன் சொல்வது.

---

துரியோதனனுக்கு திக்கென்றுகோபம்வந்து
குருக்கள்முகம்பார்த்து கொற்றவனும்கூறலுற்றான்
இந்தஇடையனம்மை எண்ணமல்செய்ததுபார்
என்றுஅரவான் இராஜன்முகம்நோக்கி
சித்திரைவெய்யலிலே சினைப்பசுக்களத்தனையும்
தண்ணீர்கிடையாமல் தவித்துவிடும்பொழுது
அள்ளியிந்ததம்பலத்தை ஆவினுடவாயிலிட்டால்
தண்ணீர்சுரக்குங்காண் தார்வேந்தா அவைகளுக்கு
பட்டைக்கிழித்துப் பரிகாசஞ்செய்ததெல்லாம்
வெள்ளாடுஈன்று மிகுத்துமேபால்சுரந்தால்
ஆட்டுக்குச்சீலையிட வாகுமென்றுநான்கிழித்தேன்

அரவான்சேனைகளை அடிப்பது.

---

அரவானுந்தன்னுடைய ஆடுமாடுதேடுவார்போல்
கோடையிடியிடித்து குலவேந்தர்மேல்விழுந்து
கால்வாரிகைப்பிடித்து கனக்கவேதானறைந்தான்
மண்டைசித்றவே மண்ணில்விழவடித்தான்
தலையுடைந்துமன்னவர்கள் தரணிமேல்தான்விழவே
கைதப்பிப்போனவரைக் கைகோலால்வீசலுற்றான்

# கஜுச அபிமன்னன் சுந்தரிமாலை.

மாறியடித்தானே மன்னவர்களுள்ளவரை
மாட்டைமடக்குராற்போல் அரசர்கள்மேலடித்தான்
அண்டம்பிளந்ததுபோல் அரவானும்கூச்சலிட்டான்
டேயோடேயோவென்று திரளாகக்கூச்சலிட்டான்
அப்போதுசேனைகள் அதிர்ந்துநடுங்கிடவே
கூவினசத்தம் குலமன்னர்காதடைந்து

துரியோதனன் சேனைகள் ஓடுவது.

---

ஊரைவிட்டுவோடுவாரும் தெருவைவிட்டுவோடுவாரும்
தேரைவிட்டுஓடுவாரும் தெருவைவிட்டுவோடுவாரும்
கூலியாள்நாங்களென்று கும்பிட்டுநிற்பாரும்
கத்திசெடியில்வைத்து கைகட்டிநிற்பாரும்
ஈட்டிசெடியில்வைத்து இடையவந்துநிற்பாரும்
பாங்குசெடியில்வைத்து பயந்துவந்துநிற்பாரும்
நாமத்தைக்காண்பிப்பாரும் நான்தாதனென்பாரும்
பூனூலைக்காண்பிப்பாரும் பிராமணனென்பாரும்
வடுகரெல்லாம் நீளென்பார் வண்டமிழர்தண்ணீரென்பார்
துலுக்கரெல்லாம்பாணியென்றுசொல்கிறதேபாளையங்கள்
இரத்தாறுஓடவே இரணமுண்டங்கொக்கரிக்க
அமிஞ்சாகளங்களை அழைத்துவந்தானென்பாரும்
பிச்சையெடுக்கப் புறப்பட்டோமென்பாரும்

அரவான் நகைப்பது.

---

ஆனைகுதிரை அலைந்தோடிப்போகிறதும்
கண்டானரவானும் கலீரென்றுதானகைத்தான்
கூட்டும்படையழைத்துக் கோடிசேரநின்றானே
ஏரடிக்குங்காவலரை யிட்டுவந்தான் துரியோதனன்
கைகொட்டிநல்லரவான் காவலரைத்தான்பார்த்து
மூத்துவிரல்சுழட்டி மூக்குமேல்கையைவைத்து
அதிர்ந்துநகைத்தானே அரசர்கள்தானடுங்க
காவலர்களெல்லோரும் கேளந்துசெவிடுபட்டு
மூர்ச்சைதெளிந்து முடிமன்னர்தானெழுந்து
மாயன்கிலாரியென்று மரியாதைசெய்தாக்கால்
கொற்றவர்கள்முன்பாக கூவலாமோ இடையா நீ



## அரவான் சொல்வது.

அரசர்முகம்நோக்கி அரவானுங்கூறுவான்
அறுபதினாயிரங்கோடி ஆனதொருபாற்பசுக்கள்
எழுபதினாயிரங்கோடி இளங்குட்டிவெள்ளாடாம்
என்மனிதர்நாலாயிரம் இடையரிங்கேமேய்க்கிறார்
திருமால்மகளார்க்கு சீதனந்தான்கொடுக்க
ஓட்டிவாவென்றுசொன்னார் ஓட்டிவந்தேனிப்பொழுது
கறுத்துவெளுத்திருக்கும் காவலரை நான்பார்த்தேன்
மாலைக்கண்ணுகையினால் மாடென்றுநானிருந்தேன்
தேடிவந்துகூவினேன் துரியோதனனென்றான்
மாயன்கிலாரிநான் மந்தையில்பால்சுமப்பேன்
மாயன்மனையில் வளர்ந்தேன்காண்மன்னவனே
ஆயன்மனையில் அநேகநாள்நான்வளர்ந்தேன்
இடையரிலேநான்பெரியோன் என்பெருக்கம்நீர்கேளீர்
வேணலட்சமாடு மேய்ப்பேன்மலைதனிலே
கொல்லிமலைநடுவே கோவுக்குநீர்தாண்டி
காட்டில்கிடைகட்டிக் காத்திருப்பேன்நானிடையன்
நடுக்காட்டுத்தியாகியென்று நான்பேர்படைத்தேன்காண்
வந்தார்க்குஅசனமிட்டு வருவார்க்குஇலையமர்த்தி
அன்புமிகஉண்டாக்கும் ஆயன்கிலாரிகண்டாய்
பெருமாள்தான்சோறிடுவார் நீங்கள்பிண்டுவிழுந்தீர்கள்
தோகையிளமயிலாள் சொகுசானசுந்தரியை
மாலையிட்டுகொள்ளவந்த மாப்பிள்ளையைநான்பார்க்க
கன்னிமணவாளனை காட்டுங்கள்நான்பார்க்க

## அரசர்கள் சொல்வது.

மகாராஜன்மைந்தனுங்கள் மாப்பிள்ளைலக்குணனை
காணவந்தபேருக்கு கண்ணாயிரம்வேணும்
என்ன அரவானு மிகட்சிபண்ணியேநகைத்து
ஆயிரங்கண்ணோ அதுவோசிலபாரம்
நான்மேய்க்கும்பால்பசுவில் நாலாயிரங்கண்ணிருக்கும்
பார்க்கவென்றால்நாளை பகலைக்குவாருமென்று
சாணத்திம்மாவென்று சந்தோஷத்துடனெழுந்து
மாப்பிள்ளைலக்குணனை மாட்டிடையாபாருமென்றார்
பார்த்துசிரித்து பார்த்தன்மகன்கூறுவான்

பொட்டிட்டுபட்டுடுத்தி பொன்சிலதுபூண்டாலும்
கட்டழகிசுந்தரியாள் கால்தூசுக்கொவ்வாது
மாதுக்குவொப்பான மாப்பிள்ளையைக்கட்டிவைப்போம்
என்றுசிரித்து இடையனும்போகலுற்றான்
யானைதேர்குதிரையும் அண்ணருடன்தெண்டுக்காம்
காலாள்களெல்லாம்நமது கைவில்லுக்கிரையாகும்
தோற்றோடிபோனதெல்லாம் தொந்திசெட்டிகைவசங்கா
விளையாடப்போறவன்போல் மேடுபள்ளமாராய்ந்து [ண்

அராவான் அண்ணரண்டை வருவது.

---

ஆராய்ந்துநல்லராவான் அண்ணரைத்தேடிவந்து
அண்ணன்கடோர்க்கஜருக்கு அராவானுந்தெண்டனிட்டா
வாழ்த்தியந்ததம்பியரை மாற்றான்படைநடுவே [ன்
போனீரேதம்பியரே புதுமையுண்டோதம்பியென்றான்
என்னபுதுமையண்ணே நான்போனதண்டிலே
கூவினேனொருசத்தம் கூவினபோதவர்கள்
யானைமுறிந்தோடி அரசமக்கள்பட்டார்கள்
குதிரைமிரண்டோடி குலமன்னர்பட்டார்கள்
ஈட்டிபிடிமன்னர் எறிந்துவிட்டுவோடலுற்றார்
யானைகுதிரையெல்லாம் அண்ணேஉன்சேனைக்கு
காலாள்பரிசனங்கள் என்கைவில்லுக்கொப்பமிட்டேன்
தோற்றோடிபோனதெல்லாம் தொந்திசெட்டிகைவசங்கா

அபிமன்னன் அராவானுக்குச் சொல்வது. [ண்

---

என்னஅபிமன்னன் எழுந்தராவானைப்பார்த்து
அண்ணேஎன்மந்திரவாளுக் காருமிரையில்லையே
வாருமப்பாதம்பியரே மாப்பிள்ளையாகையினால்
ரணமுகம்பாராதே ரத்தந்தெரியாதே
இங்கேயிருந்துகொண்டு யாரிங்கேவந்தாலும்
கட்டிப்பிடித்துஇங்கே காவலில்வையுமென்றான்
அப்போதுரியோதனனு ராயன்மகள்சுந்தரிக்கு
மல்லரைத்தானழைத்து மாயன்மகள்சுந்தரிக்கு
மாயன்மகள்சுந்தரிக்கு மகாராசன்போகவிட்டான்
ஆயனரண்மனைக்கு அத்தூதர்கொண்டுவந்து
திருமால்மகளாருஞ் சேதியதுதான்கேட்டு
மாற்றான்பணிதி வரவிட்டான்தோழியரே

என்னங்கமிருக்க அடவல்லவேதோழியரே
மாற்றானிலக்குணர்க்கு வாழ்க்கைப்படுவதிலும்

சுந்தரி அக்கினியில் விழப்போகிறது.

---

அக்கினியைமூட்டி அனலுக்கிரையாவேன்
மஞ்சனச்சாலையிலே மகாதீர்த்தமாடிவந்து
மஞ்சள் துவைந்தபட்டை மாயன்மகளுடுத்தி
பூச்செண்டெலுமிச்சை பெருமாள்மகள் கைபிடித்து
கண்ணாடிகைப்பிடித்து கட்டழகிசுந்தரியும்
அக்கினிமுன்பாக ஆனைமுகசாலையின்மேல்
சேஷை அரிசி திருமுடியின்மீதில்வைத்து
சாகத்துணிந்து தார்குழலும்வீற்றிருந்தாள்
தாதியவள்செங்கமலம் சற்றுமனங்கொள்ளாமல்
பதறாதேசுந்தரியே பார்த்தன்மகன் தான்வாரான்
என்றுசொல்லி அப்போது ஏங்கிமனந்தளர்ந்து
அப்போதுதாதியவள் அரிவையருந்தானெழுந்து
இங்கேயிருமென்று ஏந்திழைக்குகாவல்வைத்து

பெருமாளண்டை தாதிவருகிறது.

---

மாயனருகாக மங்கையரும்ஓடிவந்து
மங்கைநல்லாள்சுந்தரியும் மாளவேதீவளர்த்தி
சாகத்துணிந்தாள் தரணியளந்தவரே
என்னப்பெருமாளும் எழுந்துமிகநகைத்து
இனியொருநாழிகைதான் என்மகளார்சுந்தரியை
பத்திரமாய்வைத்திருங்கள் பாங்கியரேஎன்றுரைத்தார்
முகூர்த்தங்கள்தப்பாமல் முடிமன்னர்பாடுசென்று
மாப்பிள்ளையைக்கொண்டு வாவழைத்துவாருமென்றார்
பூஷணப்பெட்டியெல்லாம் புழக்கடையில்போட்டுவைத்
மாயவர்வரச்சொன்னார் வாருமென்றுபோயழைத்தாள் [து
துரியோதனன்மகிழ்ந்து சேனைகளைவாருமென்று
அப்போதுரியோதனனும் அவன்மகன் இலக்குணரை
யானையலங்கரித்து ஆனைசிம்மாதனத்தில்
யானைமேல்சிம்மாதனந் தனியேயலங்கரித்து
வெற்றியிலக்குணரை வெள்ளானைமேலேற்றி
சேனைபரிவாரமெல்லாம் நேராககொண்டுவந்து
குதிரைமேல்ராஜாக்கள் குலுங்கியேதான்வருக

யானைமேல்ராசாக்கள் அலறியேதான்வருக
ஒட்டகத்தின்மேலாக உயர்ந்துமேதான்வருக
காலாள்பரிவாரமெல்லாம் கடுகியேதான்வருக
நட்டுவர்கைக்கொட்டிவர நாடகங்களாடிவர
வெண்கலக்கொம்பூத வெற்றிமுரசறைய
வேசியர்கள்கோடி தெருவீதியாடிவர
நாகசுரமூதிவர நாட்டியங்களாடிவர
ஏகமேளமுழங்கிவர எக்காளமூதிவர
பேரிகைகொட்டிவர பெரியதப்புமுழங்கிவர
பூரிகைகொட்டிவர பெரியடமாவோலமிட
தப்புமுழங்கிவர தவில்முரசுகொட்டிவர
செப்புமுரசுகள் சேரமுழங்கிவர
மேளமுழங்கிவர விண்மண்டலமசைய
தாளமுழங்கிவர தரணிமன்னர்தாம்நடுங்க
சல்லரிகைகொட்டிவர சற்சரிகைகொட்டிவர
மல்லரிகொட்டவே மத்தளங்கள்கொட்டிவர
வீணைமுழங்கிவர வேந்தர்நடந்துவர
தண்டுமுழங்கிவர தார்வேந்தரோடிவர
மாப்பிள்ளையிலக்குணரும் மணக்கோலம்வாராணும்
அப்போநடக்கிற அதிசயத்தைத்தான்கேளும்

பஞ்சவர் புத்திராள் துரியோதனன்
சேனைகளிடத்தில் வருவது.

---

பஞ்சவர்கள்புத்திரர் பராக்கிரமந்தான்கேளும்
அப்போகடோர்க்கஜனும் அரவானுந்தொந்திசெட்டி
மாயன்பெருமாளை மனதிலேதானினைந்து
ஆயன்பெருமாளே அடியார்கள்பங்காக
வில்லெடுத்துவாளெடுத்து வேந்தர்கெதையெடுத்து
வாரார்களப்பொழுது மாயனைமனதிலெண்ணி
வடக்கேகடோர்க்கஜனும் தெற்கே அரவானும்
கிழக்கே அபிமன்னனும்மேற்கேதொந்திசெட்டியுந்தான்
இப்படியாகவே இருந்தார்களப்பொழுது

கடோர்க்கஜன் சண்டை.

---

வடக்கேகடோர்க்கஜனும் கனகதெண்டுகைப்பிடித்து
யானையணியிலே யதிவீரன்போய்ப்புகுந்து

கரும அபிமன்னன் சுந்தரிமாலை.

ஒட்டகசேனையிலும் உற்றகுதிரையிலும்
கட்டழகன்போய்புகுந்து கதித்துக்கொதித்தெழுந்து
அண்டங்கிடுகிடென்ன ஆகாயந்தத்தளிக்க
பூமிகிடுகிடென்ன பூலோகந்தானதிர
வாரானே அப்பொழுது மாகெதையைதானேந்தி
தெண்டைச்சுழ்ட்டி தீவிரமாய்விட்டானே
சத்தசமுத்திரம் சலம்வற்றியுள்ளடங்க
தேவாதிதேவரெல்லாம் திகைத்துபயந்தோட
கெற்பங்கலங்கவே கிறிகள்மிக குலுங்க
மந்திர தூபமிட்டு வாங்கிச்சுழட்டிவிட்டான்
வருகிறதேகோதண்டம் மதயானைக்கூட்டத்தில்
யானைத்தலையை அடைவாய்ப்பிளக்கிறதே
குதிரைத்தலையை குறிப்பாய்ப்பிளக்கிறதும்
யானையதுவீறிட அரசர்கள்பயந்தோட
துரியோதன னுடைய சேனைப்பரிகலமும்
கர்னன்விதுர னுங் கனத்தசபைமன்னர்களும்
மன்னர்குருக்கள் மகாசேனையுள்ளவரும்
கண்டுபயந்தார்கள் கடோர்க்கஜனென்றறிந்தார்
யானைமேலிருந்ததுரை யபயமிட்டுமண்ணில்விழ
குதிரைமேலிருந்ததுரை கொக்கரித்துமண்ணில்விழ
ஒட்டைமேலிருந்ததுரை ஓலமிட்டுகீழ்புரள
காளைகடோர்க்கஜனும் கனகசண்டைசெய்யலுற்ருன்
நான்குநாள்மட்டும் நல்லசண்டைசெய்தானே

கடோர்க்கஜன் சண்டையை தேவர்கள்
கொண்டாடல்.

---

தேவாதிதேவரெல்லாம் சொல்வாரொருவார்த்தை
இராமரதுசண்டைஎன்பார் இராவணன்சண்டைஎன்பார்
இந்திரசித்துசண்டைஎன்பார்லட்சுமணர்சண்டைஎன்பார்
சூரபத்மன்சண்டைஎன்பார்சுப்ரமணியர்சண்டைஎன்பார்
வீரபத்திரன்சண்டைஎன்பார் தக்கனதுசண்டைஎன்பார்
கடோர்க்கஜன்போல்சண்டைசெய்வார்யாருமில்லைஎன்பா
இப்படியாகவே இவர்கள்சொல்லும்வேளையிலே [ர்கள்
காளைகடோர்க்கஜனும் கனத்தபடைமுகத்தில்
முன்பின்னும்பாராமல் மூனைவீரன்சாடுகையில்

மாளும்ஜனங்களெல்லாம் மட்டுமிதங்களில்லை
செத்தஜனங்களென்றால் சொல்லமுடிபோகாது
யானைமேலிருந்தவர்கள் அறுந்துவிழுவாரும்
குதிரைமேலிருந்தவர்கள் கொக்கரித்துவிழுவாரும்
ஒட்டகத்தின்மேலிருந்தோர் ஓலமிட்டுவிழுவாரும்
ஈரல்குடல்சரிந்து இருநிலத்தில்விழுவாரும்
மணிக்குடல்கள்தான்சரித்து மண்ணில்புரளுவாரும்
சண்டைசெய்யமாட்டாமல் சலாஞ்செய்துஓடுவாரும்

துரியோதனன் சேனைகள் ஓடுவது.

ஊரைவிட்டுவோடுவாரும் உறவைவிட்டுவோடுவாரும்
தேரைவிட்டுஓடுவாரும் தெருவைவிட்டுவோடுவாரும்
கூலியாள்நாங்களென்று கும்பிட்டுநிற்பாரும்
கத்திசெடியில்வைத்து கைகட்டிநிற்பாரும்
ஈட்டிசெடியில்வைத்து இடையவந்துநிற்பாரும்
பாங்குசெடியில்வைத்து பயந்துவந்துநிற்பாரும்
நாமத்தைக்காண்பிப்பாரும் நான்தாதனென்பாரும்
பூணூலைக்காண்பிப்பாரும் பிராமணனென்பாரும்
வடுகரெல்லாம்நீளென்பார் வண்டமிழர்கண்ணீரென்பார்
துலுக்கரெல்லாம்பாணியென்று சொல்கிறதேபாளையங்க
இரத்தாறுஓடவே இரணமுண்டங்கொக்கரிக்க [ள்
அமிஞ்சாகளங்களை அழைத்துவந்தானென்பாரும்
பிச்சையெடுக்கப் புறப்பட்டோமென்பாரும்
இப்படியாக இவன்சண்டைசெய்கையிலே

அரவான் சண்டை.

அர்ச்சுனனார்பெற்றெடுத்த அரவானும்தானெழுந்து
தெற்குமுகமாகி தேர்விஜயன்தன்மகனும்
வில்லைவளைத்து விஜயன்மகன்நாணேற்றி
அம்புதொடுத்தானே அரசமன்னர்மேலாக
அண்டங்கிடுகிடென்ன ஆகாயம்தானதிர
பூமிகிடுகிடென்ன பூலோகம்தானதிர
அக்கினிபாணங்கள் அநேகம்தொடுத்தானே
வாயுவுபாணங்கள் வருணனதிபாணங்கள்
ராமருடபாணங்கள் இலட்சுமணர்பாணங்கள்
சாங்கோபசாங்கமாய் சரமாரிதான்பொழிந்தான்

## கருஉ அபிமன்னன் சுந்தரியாலே

ஆகாயமுள்ளதெல்லாம் அம்பாலேபந்தலிட்டான்
பாணசரத்தாலே பந்தலிட்டானப்பொழுது
பாணம்வரும்விதங்கள் பார்க்கமுடியாது
அம்புவரும்விதங்கள் ஆர்க்கமுடியாது
ஐப்பசிமாதத்திலே அடர்ந்தமழைவந்ததுபோல்
புரட்டாசிமாதத்திலே பெருமழைவந்ததுபோல்
கார்த்திகைமாதத்திலே கனத்தமழைவந்ததுபோல்
சோனைமழைபோலே சொரிகிருள்பாணங்களை
இப்படியாக இவன்சொரியும்வேளையிலே
மாண்டசெனங்களென்றால் மட்டுமுடியாது
செத்தசெனங்களெல்லாம் செப்பமுடிபோகாது
தேர்மேலிருந்தவர்கள் சிதறிவிழுவாரும்
பார்மேலிருந்தவர்கள் பதறிவிழுவாரும்
சாகிறஉணிபோலே தரையில்நசுங்குவாரும்
நிலப்பூச்சிபோலே நிலத்தில்நசுங்குவாரும்
கால்போனமன்னர்சிலர் கைபோனமன்னர்சிலர்
தாள்போனமன்னர்சிலர் தலைபோன்மன்னர்சிலர்
மூக்கறுந்துபோவாரும் மூளைமுகத்திற்சாவாரும்
ஓடியொளிப்பாரும் உதைபட்டுநிற்பாரும்
ஆனைமேலிருந்தவர்கள் அபயமிட்டுமண்ணைக்கௌவ
குதிரைமேலிருந்தவர்கள் கொக்கரித்துமண்ணைக்கௌவ
ஒட்டைமேலிருந்தவர்கள் ஓலமிட்டுமண்ணைக்கௌவ
ரத்தாறுஓடினதே ரணமூண்டங்கொக்கரிக்க
கல்யாணம்பார்க்கவந்தோர் கைலாயஞ்சேர்ந்தார்கள்
மணஞ்செய்யவந்தவர்கள் வைகுந்தம்சேர்ந்தார்கள்
வெற்றிவெற்றியென்றுசொல்லி வெற்றிநகாடிபடுது
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைநகராடிபடுது
ரணங்கள்ரணங்களென்று ரணபேரியடிபடுது
தேசத்தழகுமன்னன் துரியோதனனுடைய
பதினெட்டுஅக்ரோணி படைமன்னரெல்லோரும்
மாண்டஜெனங்கள்போக மற்றவர்களெல்லோரும்
சண்டைபண்ணமாட்டாமல் சலாம்பண்ணியோடலுற்றார்
நாமத்தைக்காண்பிப்பாரும் நான்தாதனென்பாரும்
பண்டாரமென்பாரும் பரதேசியென்பாரும்
பூணூலைக்காண்பிப்பாரும் பிராமணனென்பாரும்
திருநீற்றைக்காண்பிப்பாரும் சிவனடியாரென்பாரும்

## தொந்திசெட்டி சண்டை.

மேற்குமுகம்நோக்கி வேந்தர்களோடிவாரார்
ஓடவுந்தேடி ஒருவழியுங்காணுமல்
தொந்திசெட்டிவீற்றிருக்கும் தெருவீதியோடிவந்தார்
வாரமனிதருக்கும் மகாபயம்தீர்த்தவன்போல்
ஓடிப்பிழைப்போரைக் கோணிக்குள்பூருமென்ருன்
அப்போதுமன்னவர்கள் அடைவாகவந்தார்கள்
கோணிக்குள்பூருமென்று கொற்றவனும்சொன்னுனே
கோணினிறைய குலமன்னர்சேர்ந்தார்கள்
அப்போதுமன்னவனும் அடைவாகத்தான்பார்த்து
வாரிப்பிடித்துமன்னன் மண்ணுேடேஜாடலுற்ருன்
மாளப்பொருதலுற்ருர் மகாசேனையத்தனையும்
நெஞ்சறுந்துவிழுவாரும் நிலத்தோடேசாய்வாரும்
மண்டைபிளந்து மண்மேலேசாய்வாரும்
வயிறுகிழிவாரும் மணிக்குடல்சரிவாரும்
காலோய்ந்துகைமடங்கி கண்பிதுங்கிசரிவாரும்
ஐயோவிதியேயென்று அலறிவிழுவாரும்
குய்யோமுறையோவென்று கூச்சலிட்டுசாய்வாரும்
வைக்கல்போர்செய்தாற்போல் மனிதரைப்போற்குவித்தா
கூடிவந்தமன்னவரை கொன்றுபோர்செய்யலுற்ருன்[ன்
தலையற்றமன்னவர்க்கு தரிக்கவிடமில்லாமல்
துரியோதனனுடனே திரைமன்னர்நூற்றுவரும்
வீஷ்மர்துரோணரும் விதுரன்சகுனியரும்
மாப்பிள்ளைலக்குணரும் மன்னர்துரைகளெல்லாம்
நட்டுமுட்டுக்காரர்களும் நாடகசாலைகளும்

## துவாரகாபுரிக்கு அரசர்கள் ஓடிவருகிறது.

மாயன்பதிநோக்கி மன்னவர்களோடலுற்ருர்
ஆயனதுவறிந்து ஆனமணிதருடன்
பசங்கள்மெத்தப்பொல்லாதார் பறித்தார்கள்நம்பதியை
உங்களைமாயவனு ரிங்கேவாவேண்டாமென்று
சாற்றிக்கதவடைத்து தாள்போட்டுதூதுவரும்
துரியோதனனுக்கெதிரே தூதுவரும்ஓடிவந்து
மாயன்பதிநோக்கி வந்தீரேயாமாகில்
பஞ்சவர்கள்புத்திரர்கள் பதைபதைக்கக்கொல்வார்கள்

## கருசு அபிமன்னன் சுந்தரிமாலை.

வரவேண்டாமென்று வழிமறித்துபோகுமென்றுர்
மற்றவழிதேடி மாவின்கீழ்போய்பிழைப்பேன்
தேசத்தரசன் துரியோதனப்பெருமான்
இனிஎன்செய்வேனென்று ஏங்கிமனந்தளர்ந்து
மாமரத்தைநோக்கி வருவார்திரளுடனே

அபிமன்னன் அரசர்களைப் பிடித்துக்கட்டுவது.

---

அங்கேயபிமன்னன் அதட்டியேவந்துங்ன்று
வாளுருவிகைப்பிடித்து வாளபிமனேதுரைப்பான்
பெரியப்பாசிற்றப்பா பேர்பெரியபாட்டனுமே
செல்வயிலக்குணனும் தெருவீதிகோலம்வந்து
மாயன்மகளாரை மணஞ்செய்யவந்தீரோ
வாருமிங்கேவென்றுசொல்லி மாரிக்கொடிபிடுங்கி
தாமணியாய்ச்சேர்த்து தார்வேந்தர்நூற்றுவரை
இருபக்கம்பார்க்க இராசர்களைநிறுத்தி
குருக்கள்துரோணரும் கொற்றப்பிராமணரை
அழகியசீர்சுந்தரியை அபிமருக்குமாலையிட்டு
மாயவனைக்கட்டி வருவோம்வாதம்பியரே
என்றுஇவர்பேசி எண்ணமிட்டுயிருக்கையிலே

சுந்தரிக்குத் தோழிகள்சொல்வது.

---

கண்டார்கள்தாதியர்கள் கடுகவேயோடிவந்து
சுந்தரியாள்தன்னுடனே சொல்லலுற்றுர்தாதியர்கள்
ஓடிப்போகும்குருக்கள்தம்மை உன்புருஷன்வாளபிமன்
துரியோதனனுடைய திரளானநூற்றுவரை
மாயவரைத்தான்பிடிக்க மன்னவர்கள்வாரார்கள்
என்றுசொல்லிதாதியர்கள் எடுத்துரைத்தார்சுந்தரிக்கு
அந்தவிசேஷம் அதுகேட்டுசுந்தரியும்
சந்தோஷப்பட்டு தலையசைந்துசுந்தரியும்
குஞ்சிரிப்புகொண்டு குலுங்கநகைநகைத்து
ஊழியப்பேரையெல்லாம் ஓடியழையுமென்றுள்

தோழிகள் பந்தலலங்கரிப்பது.

---

அப்படியேதாதியர்கள் அழைத்துவந்துவிட்டார்கள்
வந்துநின்றுஊழியப்பேர் வஞ்சியர்க்குதெண்டனிட்டார்
என்தகப்பன்வாசல் என்வாசலுள்ளதெல்லாம்



# கருசு அபிமன்னன் சுந்தரிமாலை.

பந்தல்கள்போட்டு பட்டாலலங்கரித்து
அந்தமுள்ளசுந்தரியாள் அலங்கரிச்சொன்னுளே
நல்லதம்மாவென்று நடந்தார்களோடியப்போ
அப்படியேஊழியப்பே ரலங்கரித்துவந்தார்கள்
பார்க்கமுடியாது பந்தலிட்டசிங்காரம்

சுந்தரி ஓலையெழுதுகிறது.

---

இப்படியாயிங்கே இருக்குமந்தவேளையிலே
சுந்தரியாள்நால்வருக்கும் தூதோலைதானெழுதி
நால்வருக்குந்தெண்டனிட்டேன் நானடியாள்சுந்தரியும்
நானினைத்தகாரியத்தை நன்ருய்முடித்தீரோ
என்சபதந்தப்பாமல் இப்போமுடித்தீரோ
மன்னவரேஉங்களிட வல்லமைகண்டேனே
என்றெழுதிவோலைதன்னை எழுதிவாவிட்டாளே
அபிமன்னராசாவே அவ்வோலைவாசியென்ருர்
அப்படியேநல்லதென்று அபிமன்னன்தானெடுத்து
ஒப்பமுடன்ஓலைதனை உள்ளபடிவாசித்தான்
நல்லதென்றுதூதுவரை நலமுடனனுப்பிவிட்டார்
தூதுவரும்ஓடிவந்து சுந்தரிக்குதெண்டனிட்டு
ஓலைகொடுத்து உரைத்ததொருவாசகத்தை
சொல்லியேசுந்தரிக்கு தூதுவருந்தாமுரைத்தார்
சந்தோஷமாகவே தானிருந்தாள்சுந்தரியும்
இப்படியாகவே இருக்குமந்தவேளையிலே

பெருமாள் வருவது.

---

மாயன்மனமகிழ்ந்து மண்டபத்தைவிட்டிறங்கி
பசங்கள்மெத்தபொல்லாதார் பரிகாசம்பண்ணுவார்
பரிகாசம்செய்வாரே பார்வேந்தரப்பொழுது
நாமும்எதிரே நடந்துபோய்காண்போமென்று
கோபாலர்கோடி குதிரையின்மேலேறிவர
ஆனந்தமார்பர் ஆனையின்மேலேறிவர
மாயரதமேறி மன்னவர்கள்தம்முடனே
வேசியர்களாடிவர வேந்தர்புடைசூழ
தப்புமுழங்கிவர தாதர்களாடிவர
மல்லரிகொட்ட மணித்தாளமுன்முழங்க
மேளவகையானதெல்லாம் விதவிதமாய்த்தான்முழங்க

# அபிமன்னன் சுந்தரிமாலை. கருள

மாமரத்தின்கீழாக மாயவரும்வந்தமர்ந்தார்
பாராளந்தாரிங்குவராப் பஞ்சவர்கள்புத்திரரும்
நால்வரும்வந்துநின்று நமஸ்காரம்பண்ணுரே

பெருமாள் நால்வரையும் வினவுதல்.

---

வந்துபணிந்தவரை வகைவகையாய்ச்சென்றெடுத்து
ஏன்காணும்தம்பியரே இப்பொழுதேவந்தீரோ
துரியோதனனுடைய சேனைப்பெருக்கமெல்லாம்
வேதங்களோதுமென்று வேந்தனுங்கூறினான்
சகுனியும்தேத்தராசன் சல்லியனும்மற்றவரும்
மாறுபாடாக மரத்தோடேதான்சேர்த்து
அவரவர்கச்சைகளை அவிழ்த்துயபிமனுமே
தூக்கிவிட்டுவாளபிமன் துண்டுபோல்போட்டுவைத்தான்
மாப்பிள்ளைலக்குணரை மடல்விரியக்கட்டினான்
பூண்டபணிதியெல்லாம் பூரிப்பாய்தான்கழட்டி
வாளபிமன்பூண்டுகொண்டு மாற்றானிலக்குணனை
மாயன்மகளாரை மணஞ்செய்யவந்தவனை
சிற்றெரும்புகட்டெரும்பு சேர்த்தவிடந்தனிலே
குண்டுகட்டாய்கட்டி கொற்றவனைப்போட்டுவைத்து
அரசர்கள்முன்பாக அருச்சுனனார்புத்திரனும்
அரசர்நடுவே அபிமன்னராசாவும்
கொலுவாகவீற்றிருந்தான் குலமன்னன்தன்னுடனே
வட்டுவர்பாடவே வளர்கடாய்போராட
செட்டிகள்மற்பொருதுஞ் செடில்கட்டியாடிவர
வேந்தர்சமூகத்தில் வேதியர்களாடிநிற்க
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
அங்கேரணக்களத்தி லரசர்கள்மூவருந்தான்
வெட்டிப்பொருதினதும் வேந்தர்மடிந்ததுவும்
ஆனைகுதிரை அரசமக்கள்பட்டதுவும்
ரத்தாறுவோடிவர ரணத்தில்முண்டங்கொக்கரிக்க
கூளிகுடல்பிடிக்க குலையானைதான்மிதக்க
குத்துயிரோடே குலமன்னரோலமிட
பருந்துகழுகுகள் பசிதீர்ந்துஏப்பமிட
பூதப்பிரேதங்கள் போதநின்றாடிடுமாம்
தேர்புரவியானையுடன் தெர்ப்பைபோல்தான்மிதக்க
உயர்ந்தபனைமேற்காகம் உதிரமதுதானுண்ண

# கருஅ அபிமன்னன் சுந்தரிமாலை.

ஓடும்உதிரத்தில் உத்தமர்கள் தான்மூழ்கி
அரவானும்தொந்திசெட்டி அண்ணன்கடோர்க்கஜனும்
தாமரைப்பொய்கையிலே தார்வேந்தர்போய்மூழ்கி
ஆயுதங்கள் தான்கழுவி அரசர்திரும்பிவந்து
மாமரத்தின்கீழாக வாளபிமனைத்தேடி
வார்த்தைகள்பேசியே வாரார்கள்ராஜாக்கள்
அபிமனுர்வீற்றிருக்கும் அம்மரத்தினருகில்வந்தார்
கண்டானபிமன் காவலர்கள்வருகிறதை
அபிமர்எழுந்திருந்து அண்ணர்க்கெதிராக
அண்ணமார்மூவருக்கும் அடிவணங்கிதெண்டனிட்டு
பணிந்ததொருதம்பியரை பரிவாயெடுத்தணைத்து
இவர்களெங்கேசிக்கினர் எழில்விஜையன்புத்திரனே
மன்னவரைத்தேடிப் பிடித்தீரோவாளபிமா
எங்கேயகப்பட்டார்க ளிராசமுடிமன்னவனே
அண்ணர்முகநோக்கி அபிமனுங்கூறுவான்
எங்கெங்குந்தான்திரிந்து இருக்கயிடமில்லாமல்
மன்னன் துரியோதனனும் மாப்பிள்ளையிலக்குணரும்
தாயாதிநூற்றுவரும் சகுனியுடன்தேத்தாசன்
வீஷ்டுமர்துரோணர் விளங்கும்துரைமன்னவரும்
வாடிமனந்தளர்ந்து வந்தார்மரத்தருகே
வழிதப்பியிங்கே வந்தார்மரத்தருகே
ஏதென்றுசொல்லிவிட்டு இராசமுடிவேந்தன்
இடும்பரைக்கூட்டி எடுத்தணைத்துதார்வேந்தர்
நாங்கள்படைபொருதி ராமர்மருமகனே
மூட்டைசுமப்பாரும் முடிபொறுக்குங்கொல்லர்களும்
அமிஞ்சிக்கிவந்தவரை அவர்கள் நிபந்தர்களை
கூலிப்பரிதேசிகளை கொன்றான்காண்வாளபிமா
உம்மைப்போலிந்தவிதம் ஒருவரும்தானறியார்

நால்வரும் ஆலோசனைசெய்வது.

---

முடிமன்னர்நூற்றுவரை முதலானவன்னியரை
உயிரோடேகட்டிப் பிடித்தீரோமன்னவனே
என்றுமனமகிழ்ந்து இராசாக்களேதுரைப்பார்
நாமிங்கேவந்து நெடுநேரமாச்சுதல்லோ
மாயவரும்நம்மை மதியாமலேயிருந்தார்
அமராபதிபுகுந்து ஆனையைக்கட்டிவைத்து

மாளப்பொருதினீரே மகாபாவஞ்செய்தீரோ
சேனைகளைக்கொன்றீரோ திரள்பாவஞ்செய்தீரோ
என்ன அரவான் இராமர்முகம்நோக்கி

அரவான் சொல்வது.

---

எங்களுக்குத்தோஷமில்லை ஏழுலகையாண்டவரே
மாண்டவர்கள்பாவமெல்லாம் மாயவரேயும்முதுகாண்
செத்தவர்கள்பாவமெல்லாம் திருமாலேயும்முதுகாண்
என்னவேமாயவரும் இருதோளும்பூரித்து
ஒன்றுக்குநூறு உரைப்பார்கள்மக்களென்று
ஆயன்பெருமாளும் ஆலோசனையாகி
பாவங்கழிக்குகைக்கு பசுக்கள்கொண்டுவாருமென்றார்
மந்தையில்பசுக்கள் மடக்கிவைத்தார்மெய்யிடையர்
ஆயிரம்பால்பசுவை அந்தணற்குத்தானமிட்டார்

பெருமாள் துரியோதனனை வினவல்.

---

கட்டுண்ட துரியன்பக்கல் கபடானமாயவரும்
முன்னாகவந்துநின்று முகம்பார்த்துயேதுரைப்பார்
வாருங்கள்ராஜாக்கள் மாப்பிளையார்சொல்லுமென்றார்
துரியோதனாரே சீக்கிரமாய்சொல்லுமென்றார்
பரிகாசம்பண்ணவந்தீர் பைங்கொடியைகொள்ளவென்று
எழுத்தாளிபண்ணவந்தீர் என்மகளைக்கொள்ளவென்று
முகூர்த்தமிருக்குதுகாண் முடிமன்னாயிப்பொழுது
வணங்காமுடியோனே மாப்பிள்ளையார்சொல்லுமென்றார்
இப்போதுசொல்லுமென்றார் இராசாக்கள்முன்பாக

துரியோதனன் நாணிச்சொல்லுதல்.

---

என்ன துரியோதனனும் ஏங்கியனந்தளர்ந்து
மற்றொருவார்த்தைசொன்னால் மதியார்பசங்களென்று
மாயன்பெருமாளே மருமகனைக்காணீரோ
என் தம்பிமகனார்க்கு தரியுமுகூர்த்தமென்றான்
என்-மைந்தர் அபிமருக்கு மணஞ்செய்யுமென்றானே
ஆயர்பெருமாளே அபிமர்க்குச்செய்யுமென்றான்
மாயனதுகேட்டு வன்னியரைச்சாட்சிவைத்து

# கசுo அபிமன்னன் சுந்தரிமாலை.

பெருமாள் அபிமன்னனுக்குக்கூறல்.

தக்கிற்றுஉடமையென்று சபதமுடிந்ததென்று
மன்னுபூவாளபிமா மணமுடிந்துபோகுதுகாண்
சீக்கிரமாய்வாருமையா சுந்தரியைமாலையிட
முந்திவாவாளபிமா முகூர்த்தமிருக்குதுகாண்
வாளபிமாவாருமென்று வாகனம்ஏறுமென்றார்

அபிமன்னன் ஊர்வலம் வருவது.

---

இலக்குணனேறிவந்த யானைகொண்டுவந்தார்கள்
யானையின்மீதில் வாளபிமன் ஆனையின்மேல்
எக்காளமூதிவர இராசாக்கள்தன்னுடனே
யானையுந்தேர்புரவி அதின்பின்னடந்துவர
மல்லரிகொட்ட மணித்தாளமுன்முழங்க
விருதுமுழங்கிவர வெண்சாமரம்வீச
கடோர்க்கஜனுந்தொத்திசெட்டிகருத்துள்ளநல்லரவான்
துரியோதனனுடனே திரள்மன்னர்நூற்றுவரை
தேத்தரசன்மைத்துனனை திரளானவன்னியரை
வீஷ்டுமருந்துரோணரும் மிகுந்ததொருராசாக்கள்
துரோணர்அசுவத்தாமர் சொல்பெரியமன்னருடன்
வெற்றியிலக்குணனை வேந்தர்நடுவாக
தாமணியாய்க்கட்டி தடுமாறிபோல்மடக்கி
பின்கட்டுடனே பிணைமாடுபோல்மடக்கி

அபிமன்னன் மாமியாரை வணங்குவது.

---

சேர்ந்துதுவாரகையில் திருமாலரண்மனையில்
வந்திறங்கிவாளபிமன் மாயனதுமாளிகையில்
அந்தப்புரம்புகுந்தார் அபிமனுடன்நால்வருமே
மாமியார்லட்சுமிக்கு வாள்பிமன்தெண்டனிட்டான்
அத்தையார்பாத மடிவணங்கிதெண்டனிட்டான்
வந்துபணிந்த மருமகனைச்சென்றெடுத்து
வாயாரவாழ்த்தி மகிழுகத்தைமுகந்துகொண்டு
முறையில்லாதந்தை முதல்வாருநாதா
என்-முந்தாணிக்குள்ளே மூடிகிவளர்ந்தமன்னு
அணைத்துமருமகனை அரண்மனையில்கொண்டுசென்று
வயிரமணிமண்டபத்தில் வாளபிமன்வந்திருந்தான்
அரவான்கடோர்க்கஜனும் அபிமன்னன்பக்கம்நின்றார்.

ஆயன்மகளாரும் அபிமன்வரவுகண்டு
வற்றிக்கிடந்த வருள்பெரியகாவேரி
மெத்தப்பெருகி கரைபுரண்டுவந்தாற்போல்

சுந்தரிக்குத் தாதிகள் அலங்கரிப்பது.

---

திரேகங்குளிர்ந்து இருதோளும்பூரித்து
பூரித்திருதோளும் பொன்னுதிரப்பூஷணங்கள்
ஆலித்துசுந்தரியும் அபிமனைப்பார்க்கவென்று
மஞ்சனச்சாலையிலே மங்கையரும்போய்புகுந்து
சலக்கமதுவாடி தார்குழலும்பட்டுடுத்தி
மஞ்சள்குளித்து வரிவிழிக்குமையெழுதி
இட்டிருநாமம் ஏழுலகந்தான்பெறவே
கஸ்தூரிப்பொட்டுமிட்டுக் கார்குழலுங்கொண்டைகட்டி
கொண்டைக்குப்பூமுடித்து கொம்பனையும்பொன்பூண்டு
முத்தாபரணமும் மோகனமாலைகளும்
கொலுசுபதக்கங்களும் கோர்வைமுத்துமாலைகளும்
அஸ்தகடகம் அரப்புசரிவளையல்
மூக்குத்திசிந்தாக்கு முன்கையில்பொன்வளையல்
பட்டுடுத்திநலமருங்கும் பாடகக்கால்சிலம்பும்
பொன்பூண்டுபூமுடித்து பொற்கொடியாள்சுந்தரியும்

சுந்தரியை தாதியர்கள் கலியாணவாசலிலே
யிட்டு வருவது.

---

தாதிமாரிட்டுவர தங்கப்பொன்பந்தலிலே [ள்
கொழுதன்மார்மூவருக்குங் கொம்பனையுந்தெண்டனிட்டா
அபிமனைப்பார்த்து அழகுநல்லசுந்தரியும்
அத்தைமகனுர்க்கு அடிவணங்கிதெண்டனிட்டாள்
இருந்தாளிடப்புறத்தே இருடாலும்ஒருடாலாய்
ஆயிரங்கன்னியர்கள் ஆலாத்தியேந்திநிற்க
பேரிகைகொட்ட பெருஞ்சங்குநின்றூத
மல்லரிகொட்ட மணித்தாளமும்முழங்க
தோழியரைசோழைத்து சுந்தரியும்கூறுவாள்
செங்கழனிதன்னுடனே தோஙகசிலதுரைப்பாள்
அப்பொழுதுசெங்கழனி அடவுடனே தான்கேட்டு

# கசுஉ அபிமன்னன் சுந்தரிமாலை.

செங்கழனிதாதி அரவானண்டை வருவது.

அரவானருகாக அரிவையரும்ஓடிவந்து
வணங்கியெழுந்திருந்து வார்த்தைசொல்வாள்செங்கழனி
சுந்தரியாள்சொன்ன வார்த்தையதுகேளுமென்றாள்
என்னென்னகாரியங்கள் எனக்கறியசொல்லுமென்றான்
மாப்பிள்ளையிலக்குணனை மடல்விரியக்கொண்டுவந்து
அரசாணிகாலுடனே அவனையேகட்டிவைத்து
அஞ்சுகுடுமைவிட்டு அழகாய்தலைசிரைத்து
நல்லாவின்சாணி நடுத்தலையிலப்பிவைத்து
ஆயிரம்பெருவிளக்கை அவன்தலையிலேற்றிவைத்து
காடைவிளக்கெரிய கன்னிநல்லாள்பார்த்திருக்க
சபதனிறைவேற்றுமென்று தார்குழலும்தெண்டனிட்டாள்
என்ன அரவான் எழுந்துமிகநகைத்து [ன்
அப்படியேயாகுதென்று அரவானெழுந்திருந்து

அரவான் இலக்குணனைப்பிடித்துக் கட்டுவது.

---

என்றே அரவான் இலக்குணனைக்கொண்டுவந்து
செஞ்சொல்மொழிநாவிதனே தேடியழைத்துவந்து
அஞ்சுகுடுமிவைத்து அழகாய்தலைசிரைத்து
அரசாணிக்காலுடனே அசையாமல்கட்டினான்
ஆவினுடசாணம் அவன்முடியின்மீதில்வைத்தான்
ஐங்கலநெய்பிடிக்கும் அகலமுள்ளகொப்பரையை
லக்குணன்முடிமீதி லிருத்தியாவானும்
ஆயிரம்திரிபோட்டு அழகாகஏற்றிவிட்டான்
நட்டுவர்வட்டுவர்கள் நாடகங்கள்செய்துவர
தாசியர்களாடிவர தார்வேந்தர்பாடிவர
தாளங்கள்மேளங்கள் தம்பட்டம்நாகசுரம்
புள்ளாங்குழலூத பெரியடமாரான்முழங்க
துரோணர்கிருபர் சொல்பெரியவீஷ்டுமரை
மூவரையுந்தானழைத்து முதலோமம்செய்யுமென்றார்
ஆயிரம்வேதியர்கள் அடவாகவேள்விசெய்ய
மற்றுப்பிராமணர்கள் வரிசைசடங்குசெய்ய

பெருமாள் ஓடிவந்துவிடுவது.

---

அந்தச்சமயம் அதுபார்த்துமாயவரும்
காவலர்கள்நூற்றுவரை கட்டவிழ்க்கவேணுமென்று

துரியோதனன்மனதை சிக்கறுக்கவேணுமென்று
நல்லாவான்சேவகத்தை நாமறியவேண்டுமென்று
மாயன்பெருமாளு மறைந்தோடிப்போகலுற்ருர்
அப்போது மாயவரும் ஆலோசனைசெய்வார்
ஐவரையும்இட்டுவர ஆலோசனையாகி

பெருமாள் பிராமணவேடந்தரிப்பது.

---

வேதநாராயணரும் வேதியரைப்போல்வடிவாய்
பஞ்சாங்கங்கைப்பிடித்துப் பார்ப்பாரவேடமுடன்
பிறற்குடைபிடித்து பிறந்ததுயிலுடுத்தி
வனத்தைதமிகநோக்கி மாயவரும்தானடந்தார்
காடுகடந்து கடியவனங்கடந்து
பஞ்சவர்கள் தானிருக்கும் பாரவனந்தனிலே
மாயன்பெருமாளும் மறையவரைப்போல்வருவார்
கண்டார்திருமாலுங் காவலர்களைவரையும்
ஆர்காணுந்தம்பியர்கள் அடவியில்வீற்றிருந்தீர்
என்று வழியுந்தெரியாதே உங்கள்வனமருகேவந்துவிட்
கொற்றவர்கோமானே கூவுறதுகேழ்க்கிலையோ [டேன்
ஆனந்தவாழ்மார்பா அழைக்கிறதுகேழ்க்கிலையோ
வழிதப்பிவந்தவர்போல் மன்னரண்டைவந்துநின்ருர்
தாரார்புகழ்வேந்தர் தர்மரெழுந்திருந்து

தருமர் பிராமணரைக் கேழ்ப்பது.

---

ஆர்காணும்ஐயரே அடவியில்வந்துவிட்டீர்
மாயன்பெருமாளோ மறையவன்போலேவந்தீர்
ஐவருந்துரோபதையும் ஐங்கால்வலம்வந்து
பதின்கால்வலம்வந்து பன்னிருகால்தெண்டனிட்டு
ஆயன்பெருமாளே அறிந்ததுகூறுமென்ருன்
மாயன்பெருமாளே மர்மமாயிருப்பானேன்
அல்லகாண்தம்பியரே ஆயன்மகள்சுந்தரியை
மாயன்மகள்சுந்தரியை வாளபிமற்கென்றபெண்ணை
தென்னமுடிவேந்தன் துரியோதனப்பெருமாள்
தன்மைந்தனிலக்குணற்கு மாலையிடப்போருராம்
துவாரகைக்குப்போனக்கால் துரைமன்னரங்கிருப்பார்
தேக்கு அமுதுபடி கொடுப்பார் ஆனந்தவாழ்மார்பர்
ஆகையினுல்போகவுந்தன் அடவியில்வந்துவிட்டேன்

எனக்கு-வழியுந்தெரியவில்லை மன்னவரேயென்செய்வே
துவாரகைக்குப்போகவழி சொல்லியனுப்புமென்ருர் [ன்
ஐவருமப்போது ஆலோசனையாகி
மாயவரே தப்பாது மறையவர்போலேவந்தீர்
ஆயன்பெருமாளை அடிபணிந்துயே துரைப்பார்
காரியங்கள்சொல்லி அறிக்கையிடவந்திரோ
ஏதுகருமம் எங்களுக்குச்சொல்லுமென்ருர்
ஐவருந்தெண்டனிட்டு அடிபணிந்துகேழ்க்கலுற்ருர்
ஆச்சிதுரௌபதையும் அடிபணிந்துகேழ்க்கலுற்ருர்
மாயன்பெருமாளும் மர்மமாயே துரைப்பார்
தேசத்தழகன் துரியோதனப்பெருமாள்
தன்-மைந்தனிலக்குணற்குமணஞ்செய்யவேண்டுமென்று
பெண்தேடவேண்டுமென்று பிரியத்துடனப்பொழுது
மாமன்சகுனியரை வரவிட்டானென்னருகே
மாமன்சகுனியரும் வந்துவணங்கிநின்று
துரியோதனன்மகனர் செல்வனிலக்குணற்கு
பெண்தரவேணும் பெருமாளேஎனமொழிந்தான்
நாக்கறுப்பேன்மூக்கறுப்பேன் நாணங்குலேத்திடுவேன்
வார்த்தைகள்சொன்னதொரு வாயைக்கிழித்திடுவேன்
என்னசகுனியருமெழுந்துமிகவணங்கி
நான்வந்ததொருகாரியத்தை மாயவரேகேளுமென்ருன்
ஏதுகருமம் எனக்கறியக்கூறுமென்றேன்
பணத்தின்பெருமையினல் பாவிதுரியோதனனும்
பெண்கேட்டுவாருமென்ருன்பெருமாளேயிங்குவந்தேன்
மன்னன்துரியோதனனர் மதத்தையடக்குகைக்கு
பாவிதுரியோதனனர் பணமெல்லாம்வாங்குகைக்கு
பெண்கொடுக்கசம்மதியும் பெருமாளென்மொழிந்தான்
நல்லதுபெண்தருவோம் நம்மனதில்சந்தோஷந்தான்
துரியோதனனுரை சீக்கிரமாய்வாருமென்றேன்
மாமன்சகுனியரு மறிந்தப்போயே துரைப்பான்
பெண்கொடுக்கசம்மதித்தார் பெருமாளென்மொழிந்தார்
பரியம்பொருந்துகைக்கு பாளந்தான்தன்பதிக்கு
துரியோதனனுரைக்கச் சீக்கிரமாயே துரைப்பான்
தேசத்தழகன் துரியோதனனும்
யானைத்திரளுடனே அப்பொழுதேவந்துவிட்டான்
பரியம்பிடியுமென்று பதறிஅவனுரைத்தான்

துரியோதன னுடைய திரவியங்களத்தனையும்
பரியம்பிடித்தேன்காண் பாலனபிமர்க்கென்று
அரையன் துரியோதனன் அப்போமனமகிழ்ந்து
ஏழாநாள்வாருமென்று இன்பமுடனுரைத்தேன்
ஆளப்பிறந்தோன் அபிமப்பெருமாளுக்கு
தோகைநல்லாள்சுந்தரியுந் தூதோலைதானனுப்பி
ஆளப்பிறந்தவர்க்கு அறிக்கையிடுவித்து
அனைகுந்திதன்னைவிட்டு அபிமப்பெருமாளும்
தாயுடனேசொல்லாமல் தனிவழியேவந்துவிட்டான்
ஆற்றில்விழுந்து மூழுகிக்கரையேறி
வல்லரக்கன்தன்வனத்தில் வாளபிமன் தூங்கையிலே
வல்லரக்கன்தன்வனத்தில் வாளால்தறித்துவிட்டான்
கடோர்க்கஜன் தன்னுடனே காளையுறவாடி
கமலவல்லியார்வீட்டில் கலந்தேயமுதுகொண்டு
அங்கேவிடைகள்பெற்று அபிமர்க்கடோர்க்கஜனும்
அரவான்வனத்திலே அங்கேஉறவாடி
நாககன்னியார்வீட்டில் நல்லவிருந்துமுண்டு
அங்கேவிடைகள்பெற்று அலர்கெங்கைநன்னுடர்
வீசிநடந்துவந்தார் வீரகெங்காள்தன்வனத்தில்
தொந்திசெட்டிதன்னுடனே துரைகளுறவாடி
வீரகெங்காள்தன்புரத்தில் விருந்தமிர்தந்தானுமுண்டு
அங்கேவிடையருள ஔவைவனத்தில்வந்து
ஔவைவனத்தில் அரசர்விருந்துமுண்டு
அழகியசீர்சுந்தரிக்கு ஔவையைத்தூதனுப்பி
ஒருமாமரத்தருகே உத்தமர்கள்வந்துநின்று
துரியோதனனுடனே சேனைப்பெருக்கமெல்லாம்
அரவான்போய்ச்சோதித்து அவன்வந்தபிற்பாடு
துரியோதனனும் சேனைப்பெருக்கமுடன்
மணக்கோலந்தான்வரவே மன்னன்பயணமிட்டான்
அந்தச்சமயத்தி லரவான்கடோர்க்கஜனும்
தொந்திசெட்டிதன்னுடனே துரைமன்னர்போய்புகுந்து
மன்னன் துரியோதனன் மகாசேனையுள்ளதெல்லாம்
மாளப்பொருதி மடித்தார்கள்சேனையெல்லாம்
ஆயிரங்கோடி அரசமக்கள்பட்டார்கள்
ஏழாயிரங்கோடி படைமன்னர்பட்டார்கள்
அப்போதரசரெல்லா மலைந்துவழிதேடி

## ௧௬௬ அபிமன்னன் சுந்தரிமாலை.

ஒற்றைமரத்தருகே ஓடிவரும்பபோது
அங்கே அபிமர் அதட்டிக்கொடிபிடுங்கி
தாமணியாய்ச்சேர்த்து தறிமாடுபோல்மடக்கி
துரியோதனனுடனே திரள்மன்னர் நூற்றுவரை
மற்றுமுள்ளமன்னவரை வாளபிமன்கட்டிவைத்து
என்னையும்கட்டத் துணிந்தார்களப்பொழுது
சீக்கிரமாயோடிவந்து சேனையுடனாக
வந்துவினவினேன்காண் வாளபிமன்தன்னுடனே
மன்னர்சபைநடுவே வாளபிமன்முன்பாக
பெண்ணெவர்க்குவென்று பிரிவித்துகூறினேன்
துரியோதனனுரை சீக்கிரமாய்ச்சொல்லுமென்றேன்
வாளபிமர்க்கென்று வசனமவனுரைத்தான்
அப்படியேஆகுதென்று அரண்மனையில்போய்புகுந்து
ஆளப்பிறந்த அரவானெழுந்திருந்து
காவணக்காலுடனே கட்டினான்மன்னவரை
இலக்குணனைக்கொண்டுவந்து இராஜாக்கள்முன்பாக
ஐந்துகுடுமைவைத்து அம்பலத்தில்தலைசிரைத்து
சாணியைவைத்து தலையில்விளக்கேற்றினான்
வாளபிமன்தன்னுடனே மங்கைநல்லாள்சுந்தரியும்
மணையிலுட்கார்ந்து மணஞ்செய்யும்வேளையிது
தாமிஷங்கள்பண்ணாதே தருமப்பெருமாளே
ஐவருடனாக அலங்காரத்துரோபதையும்
என்-தங்கைதுரோபதையும் தார்வேந்தரைவருமாய்
சீக்கிரமாய்வாருமென்று ஸ்ரீராமர்தானழைத்தார்
அப்போதுதருமரும் அடைவுடனேதான்கேட்டு
மாயன்பெருமாளே வார்த்தையொன்றுகேளுமையா
பாவிதுரியோதனனர் பார்த்தானேயாமாகில்
மறித்துவனம்போமென்று வழக்குரைப்பான்தப்பாது
எப்படிநாம்வருவோம் எங்கள்பெருமாளே
தருமமுடியோனே தருமரேநீர்கேளும்
வேதியரைப்போலாக வேடங்கள்மாற்றுகிறேன்
காசிப்பிராமணர்போல் கனவேடம்போட்டாரே
ஐவருக்குவேடம் மாற்றினார்மாயவரும்
மாதுதுரோபதையும் வடிவெடுத்தாளப்படியே
அங்கிருந்துமாயவரும் அழைத்துவருகலுற்றார்
காடுகடந்து கடியவனந்தான்கடந்து

நாடுகடந்து நகரிபலகடந்து
அவராகரபதியருகே சென்றுரேமன்னவர்கள்
அங்கொருசாவடியில் ஐவரையுந்தானிருத்தி
அரவானையிங்கே அனுப்புகிறேனென்றுசொல்லி
சீக்கிரமாய்வந்து திருமாளிகையிலுட்புகுந்தார்
அரசாணிமுன்பாக வந்தாரே ஆயனுமே
கட்டுண்டமன்னவரைக் காவலரைத்தான்பார்த்து
கண்டாரிலக்குணனை கையால்வாய்மூடினூர்
ஐயோமகனே ஆபத்துவந்ததென்ன
காரணமோஉங்களுக்கு கட்டுண்டிருப்பானேன்
தலைமேலேசாணிவைத்து சாஞ்சியிருப்பானேன்
பணமும்பறிகொடுத்து பரதேசியானீர்களோ
என்றுசொல்லியெம்பெருமான் இல்லாவிசாரமிட்டார்
குருக்கள்மார்தங்களண்டை கோபாலர்வந்துநின்று
இந்த அவதிகளேனையாவந்ததென்றூர்
தலையிலெழுத்துப்படி தப்புமோமாயவரே
கலியாணமென்றுசொல்லிக் கண்குளிரப்பார்க்கவந்தோம்
அனியாயமாக அகப்பட்டுக்கொண்டோமே
இனியென்னசெய்வது யெங்கள்பெருமாளே
ஆனபடிசெய்யுமென்றூர் அந்தக்குருக்களுமே
என்றுசொல்லிமாயவரும் இருக்கட்டுமென்றுசொன்னூர்
மாயன்பெருமாளும் மகாதேவரேதுசொல்வார்
கட்டுண்டமன்னவரை கட்டவிழ்க்கவேண்டுமென்று
நல்லரவான்சேவகத்தை நாமறியவேண்டுமென்று
அசைந்தாற்போலாக ஆயருந்தான்மறைந்தார்
மாயனரண்மனையில் வாளபிமன்சுந்தரியும்
இருவருமோருடலா யிருந்தார்களப்பொழுது
உத்தமர்கள்வேதியர்கள் ஓமவிதிகள்செய்ய
வெற்றிப்பிராமணர்கள் வேதங்களோதிநிற்க
ஆளப்பிறந்த அரவான்முகம்நோக்கி
மாயன்பெருமாளே வரவழைத்துவாருமென்றூர்
அரவானுமாயவனை அதட்டியாய்தானழைத்தான்
சுத்தித்திரும்பி திசைதோறும்பார்க்கலுற்றுன்
பராளந்தமாயவனைப் பந்தலிற்காணுமல்
எங்கெங்குந்தேடி இராஜர்முடிவேந்தன்
வேந்தர்பெருமாளும் வெளியேபுறப்பட்டார்

அஞ்சனதிருஷ்டியிலே அரவானும்பார்க்கலுற்றான்
மண்டபத்தைவிட்டு வருகிறார்மாயவரும்
கண்டானரவான் கடுகப்பிடிக்கவென்று
மாயன்பெருமாளும் மச்சவடிவுகொண்டு
அரவானும்விச்சுளியாய் ஆயனைப்பாயலுற்றான்
மாயன்பெருமாளும் மறைவாகவோடிவந்து
அரவானெதிராக ஆண்சிங்கம்போல்வருவார்
சிங்கவடிவாகவேதான் சீறிவருகிறதை
கண்டானரவான் கடுகெனவேதான்பார்த்து
சிம்புள்வடிவாகிச் சிவுக்கென்றுமேல்குதித்தான்
அப்போதுமாயவரும் அரவானைதப்பிவந்து
மாயவருமப்பொழுது மான்வடிவாயோடலுற்றார்
பார்த்தானே நல்லரவான் பதுங்கியெழுந்திருந்து
சிவிங்கிவடிவாய்த் துரத்திப்பிடிக்கலுற்றான்
அப்போதுதப்பிவந்து ஆயருமேதுசெய்தார்
ஆயன்பெருமாளும் ஆமைவடிவெடுத்து
புதருஞ்செடியருகே போய்புகுந்தார்மாயவரும்
அஞ்சனதிருஷ்டியிலே அறிந்தானேமாயவரை
ஆனந்தவாழ்மார்பன் அரவான்குறவனைப்போல்
சில்லாக்கோல்கைபிடித்து சிக்கெனவேகுத்தலுற்றான்
அப்போதுமாயவரும் அரவானெதிரில்வந்து
காட்டிலொருபன்றியைப்போல் கடுகியேயோடலுற்றார்
பார்த்தானரவான் பன்றியாயோடுவதை
வேட்டைநாய்போலரவான் பீஜத்தைப்போய்பிடித்தான்
ஆயனும்முன்னிழுக்க அரவானும்பின்னிழுக்க
ஆயன்பெருமாளுக்கு ஆபத்தேயாச்சுதப்போ
தவித்துத்தடுமாறி தப்பித்துமாயவரும்
கொக்காய்வடிவுகொண்டு கோபாலரோடலுற்றார்
அஞ்சனதிருஷ்டியிலே அறிந்தானேமாயவரை
சீக்கிரமாய்நல்லரவான் டேகையைப்போல்வடிவுகொண்டு
துரத்தியேமாயவரை சீக்கிரமாய்ப்போயறைந்தான்
கீழேவிழவறைந்து கெட்டியாய்ப்போய்ப்பிடித்தான்
வேதநாராயணரும் மெத்தெனவேதப்பிவந்து
எலிபோல்வடிவுகொண்டு இயல்வளையில்தானுழைந்தார்
அரவானதுகண்டு அப்புறமேபோய்ப்பதுங்கி
பூனைவடிவாகி பதுங்கியிருக்கலுற்றான்

பெருமாளுமங்கிருந்து போனானேயைலென்று
எட்டியேபார்க்கலுற்றார் எலிபோலேமாயவரும்
ஒளித்திருந்துநல்லாவான் மென்னியைப்போய்ப்பிடித்தா
உறுதியாய்ப்பிடித்திடவே உள்ளம்நடுங்கிடவே [ன்

பெருமாள் சொல்வது.

மண்டைபிதிங்கிடவே மேகவர்ணன் தான்பார்த்து
மெச்சினேன்மருமகனே விடுவிடுயெனவுரைந்தார்
விட்டால்வருவீரோ விண்ணளந்தமாயவரே
வருகிறேனென்றுசொல்லி மாயவரும்போய்மறைந்தார்
பார்த்தானேநல்லாவான் பார்வேந்தரெங்கேயென்று
திகைத்தானேநல்லாவான் திருமாலைக்காணாமல்
அப்போதுமாயவரும் ஆயனிடையனைப்போல்
எம்பெருமாளப்பொழுது இடையனைப்போல்வந்தார்
கண்டானேநல்லாவான் கடுகெனவேயோடிவந்து
பாளையக்காரனைப்போல் படபடென்றோடிவந்து

அரவான் சொல்லுவது.

இடையனைக்கட்டிப் பிடித்தந்தநல்லாவான்
அரண்மனைவாசலுக்கு ஆட்டுக்கிடாவேண்டுமென்று
பாலுந்தயிரும் பதிங்கலம்வேண்டுமென்று
கொண்டுவாயிடையா நீ கொப்பெனவேயென்றுசொல்லி
அண்ணாந்தாள்போட்டு அடித்தானே நல்லாவான்
பாரங்கல்தானெடுத்து பாளந்தார்மீதில்வைத்து
தலையெடுக்கவொட்டாமல் தார்வேந்தனடிக்கலுற்றான்
அறிந்தாரேமாயவரும் அரவான்சவுரியத்தை
மெச்சினேன்நல்லாவான் விடுவிடுமென்றுரைத்தார்
இனிவிடும்நல்லாவான் இப்பொழுதேநான்வாரேன்
என்றலுமேநல்லாவான் இராமரைக்கைபிடித்து
மாயவரைப்பற்றி யிழுக்கலுற்றானப்பொழுது

பெருமான் சொல்லுவது.

அப்போதுமாயவரும் அரவானுக்கேதுரைப்பார்
மனிதரைக்கொன்று மகாபாதகஞ்செய்தீரோ
மனிதரைக்கொன்றரவான் மணஞ்செய்யக்கூடாது
பாதகமிருந்ததுகாண் பந்தலிலேயிப்பொழுது

காசியிலேபோய்முழுகி கலியாணஞ்செய்யவேணும்
அப்பாதகத்தீரு மதுவுமேதண்ணீரிலே
காசிப்பிராமணரைக் கலியாணப்பந்தலிலே
இட்டுவந்துவிட்டாக்கால் என்மகளைத்தருவேனப்போ
அல்லாதுபெண்கொடுக்கேன் அரசர்கள்தானறிய

அரவான் சொல்லுவது.

---

என்ன அரவானும் இராமர்முகம்நோக்கி
காசிப்பிராமணர்கள் வேண்டுமென்றீர்காவலரே
இப்போதுவேதியர்கள் எங்கிருப்பார்சொல்லுமென்றான்
மாயன்பெருமாளும் மறைவாகயேதுரைப்பார்
காசிக்குப்போய்வருவார் காவலனேவேண்டியபேர்
வழியிலொருமடத்தில் வந்திருப்பார்வேண்டியபேர்

அரவான் காசிப்பிராமணரைக்கண்டுபிடிப்பது.

---

அப்போதுநல்லரவான் ஆக்கரித்துப்பற்கடித்து
பந்தலைவிட்டு பார்மன்னன்வெளியேவந்து
எங்கெங்குந்தேடி இராசமுடிவேந்தன்
அலைந்தெங்குந்தேடிவந்தான் ஆணழகன்புத்திரனும்
ஊருக்குமேற்கே ஒருமண்டபம்தானிருக்கும்
மண்டபமொன்றிருக்கும் மாயனருளாலே
பஞ்சவர்களைவரும் பார்ப்பாரைப்போலாக
காசிப்பிராமணர்போல் காவலர்கள்அங்கிருப்பார்
கண்டானரவானும் கடுகவேயோடிவந்து
மண்டபத்தைநோக்கி வரலுற்றான்மன்னவனும்

காசிப்பிராமணரை அரவான்கேட்பது.

---

காசிப்பிராமணரை கண்டானரவானும்
மண்டபத்தைச்சேரவந்து வணங்கியெழுந்திருந்து
ஐவரையுந்தெண்டனிட்டு அரவானுங்கூறலுற்றான்
ஆர்காணும்ஐயரே அரியபிராமணரே
எங்கிருந்துயெங்குவந்தீர்எனக்கரியச்சொல்லுமென்றான்

காசிப்பிராமணர் சொல்லுவது,

---

மாயப்பிராமணரும் வார்த்தையங்கேதுரைப்பார்
காசிக்குப்போய்தாங்கள் வந்தேன்காண்காவலனே

எங்கிருந்துஇங்குவந்தாய் என்னகாரியம்சொல்லுமென்
ஆர்காணுந்தம்பி அறியவுரையுமென்றார் [றார்
ஆளப்பிறந்த அரவானுங்கூறுவான்

அரவான் சொல்லுவது.

---

ஐவருடபுத்திரன்காண் அர்ச்சுனனென்தகப்பன்
என்பேரரவான்காண் என்னாச்சிதுரோபதைகாண்
மாற்றான்பொருட்டால் வனம்போனார்பாண்டவர்கள்
ஆயன்மகள்சுந்தரியை அபிமருடதேவியரை
மாற்றான்கன்மைந்தருக்கு மணஞ்செய்யவந்தார்கள்
அந்தவிசேஷம் அடியேங்கள்தர்மறியோம்
மாயன்மகள்சுந்தரியை வாளாலபிமருக்கு
கலியாணம்செய்யவந்தோம் கரியமால்புத்திரியை
காசிப்பிராமணர்கள் கரியமால்வேண்டுமென்றார்
ஆகையினால்வந்தேன் ஐயரேவாருமென்றான்
ஐவரையும்கண்டாற்போ லாச்சுதுகாணிப்பொழுது
வாருமையாவென்று வணங்கியெழுந்திருந்தான்
ஆனால்கேள்தம்பியரே அப்படியேநாம்வருவோம்
பாவங்கள்உண்டானால் பரிகரித்தால்நாம்வருவோம்
இப்படிக்குச்சம்மதித்தால் இப்போதேநாம்வருவோம்
ஆளப்பிறந்த அரவானுங்கூறுவான்
அப்படியேயாகுதென்று அரவானழைத்துவந்தான்

காசிப்பிராமணர் வருவது.

---

மாயனரண்மனையில் மாணிக்கப்பந்தலிலே
ஐவருமாச்சியரும் அரியபிராமணர்போல்
கண்டாரேமாயவரும் கடுகியெழுந்திருந்து
பந்தலிலேவந்திருந்து பார்த்தார்திசைதோறும்
காசிப்பிராமணர்க்கு கைதொழுதார்மாயவரும்
தரணியளந்தவர்க்கு தருமருந்தெண்டனிட்டார்
பார்த்தாரேதருமரிந்த பந்தல்திசைதோறும்

காசிப்பிராமணராகிய பாண்டவர்வந்து
பெருமாளைக்கேட்பது.

---

இதுபுதுமைஇதுபுதுமை இவ்வுலகில்கண்டதில்லை
சொல்லுமையாமாயவரே துவாரகையிலிப்படியோ

மன்னவரேஉங்களிலே மணஞ்செய்வதிப்படியோ
அரசாணிதன்னுடனும் ஆனைபந்தக்காலுடனும்
கட்டிவைத்துயிவ்வுலகில் கலியாணஞ்செய்வதுண்டோ
மனிதரைக்கட்டி மணம்செய்ய க்காரணமோ
அரசாணிக்காலண்டை ஆர்காண்சிறுவனிவன்
தலையைமழுங்கடித்தீர் சாணிதலைமீதில்வைத்தீர்
அவனுருடையபிள்ளை அறியவுரையுமென்றார்

பெருமாள் சொல்லுவது.

---

மாயன்பெருமாளு மறையவர்க்குயேதுரைப்பார்
காவணக்காலண்டை கட்டுண்டோனுரென்றீர்
துரியோதனன்மகன்காண் செல்வனிலக்குணனும்
துரியோதனனுர்காணுந் தெரியவுரையுமென்றார்
இதோ-பந்தலிலேகட்டுண்ட பாரமுடிமன்னவனும்
துரியோதனப்பெருமான் சீமைக்கதிகாரன்
இந்த-மன்னவர்களெல்லாம் மகாராஜன்தம்பிமார்
இவருடையமைந்த னிலக்குணர்காணுமிவன்

காசிப்பிராமணர் சொல்லுவது.

---

என்னபிராமணரும் இராமர்முகம்நோக்கி
மணையினில்உட்கார்ந்த மாப்பிள்ளையார்காணும்
விண்ணளந்தமாயவரும் வேதியர்க்குயேதுரைப்பார்
பாண்டவர்ஐவருண்டு பாருலகோர்தாமறிய
தருமரென்றும்வீமரென்றும் தாஷ்டீகவிஜையனென்றும்
நகுலசகாதேவர் ராஜாக்களைவருண்டு
ஐவர்நடுவில் அருச்சுனனுர்புத்திரன்காண்
அருச்சுனனுர்புத்திரன் அபிமனிவர்காணும்
மணைமேல்உட்கார்ந்த வாளபிமன்தான்காணும்
மாயப்பிராமணரும் மாயவர்க்குயேதுரைப்பார்
துரியோதனனுர்க்கும் திரள்குமாரர்பஞ்சவர்க்கும்
உறன்முறைதத்துவங்க ளுண்டோநீகூறுமென்றார்

பெருமாள் சொல்வது.

---

மறையவர்கேட்கவே மாயவருமேதுரைப்பார்
துரியோதனனுர்க்கும் திரள்வீரர்பஞ்சவர்க்கும்
பங்காளிதத்துவத்தால் பகையுண்டுகாவலர்க்கு

தம்பிமகன்தேவியரை தமயன்மகன்கொள்ளவந்தான்
ஆகையினுல்கட்டிவைத்தார் அரியபிராமணரே
காசிப்பிராமணர் சொல்லுவது.

---

மாயப்பிராமணரும் மறுவார்த்தையேதுரைப்பார்
அறியாப்பசங்களுக்கு அறிந்துரைத்துபுத்திசொல்ல
பஞ்சவர்களிங்கிலேயோ பாரளந்தமாயவரே
பஞ்சவர்களிங்கிலேகாண் பாரவனம்போனுர்கள்
இட்டுநீர்வார்க்கவும் இங்கிலேயோபஞ்சவர்கள்
பெரியப்பாரல்லவோ பெருக்கமுடன்செய்யவேண்டும்
த்கப்பன்மாரில்லாமல் தரிப்பாரோமங்கிலியம்
தம்பிமனமெரிய தான்மணம்செய்வாரோ
பாவமிதுபாவம் பந்தலிலேநாங்களிரோம்
அறியாமல்வந்துவிட்டோம் அதிகாரபந்தலிலே
ஆடாபையல் அழைத்துவந்தாய்யெங்களை நீ
தோஷமிதுதோஷம் சொல்லாமலிட்டுவந்தாய்
இங்கிருக்கப்போகாதென்று எழுந்திருந்தார்வேதியர்கள்
பெருமாள் சொல்லுவது.

---

அப்போதுமாயவரும் அரவானுடன்வதுரைப்பார்
வேதியர்கள்போனுக்கால் விஜயன்மகனுர்க்கு
பெண்கொடுப்பதில்லையென்று பெருமாளுங்கூறலுற்ருர்
கடோர்க்கஜன் சொல்லுவது.

---

அப்போகடோர்க்கஜனும் அரவான்முகம்நோக்கி
தம்பியரேநீகேளாய் சமையத்துக்கேற்றபடி
ஆயனுர்சொற்படிக்கு அரவானேசெய்யுமென்ருன்
ஆனந்தவாழ்மார்பன் அரவானெழுந்திருந்து
மாயப்பிராமணரை வணங்கியெழுந்திருந்து
வேதியரேஉங்கள்மணம் வேணபடிசெய்கிறேன் [ன்
மறையவரேநீங்களிப்போ மணமுடிக்கவேண்டுமென்ரு
பெருமாள் சொல்லுவது.

---

வேதப்பிராமணரும் வேதியருங்கூறுவார்
பந்தலிலேகட்டிவைத்த பாரமுடிமன்னவரை
கட்டவிழ்த்துவிட்டுக் கலியாணஞ்செய்யுமென்ருர்

# களச அபிமன்னன் சுந்தரிமாலை.

காலாலேகட்டிவைத்த காளையிலக்குணனை
கட்டவிழ்த்துவிட்டுக் கடுகமுழுக்காட்டி
ஆனபொன்பணிதியிட்டு யழைத்துவந்துவையுமென்றார்
அப்படியேயாகுதென்று அரவானுமோடிவந்து
துரியோதனனுடனே திரள்மன்னர் நூற்றுவரை

ஆரவான் துரியோதனன் முதலானவரைக்
கட்டவிழ்த்து விடுவது.

---

கட்டையவிழ்த்துவிட்டுக் கருத்துள்ள நல்லரவான்
மாற்றானிலக்குணனை வரிந்தகட்டைத்தானவிழ்த்து
விளக்கையெடுத்து வேந்தனைத்தானெழுப்பி
தாதியரைத்தானழைத்து சலக்கங்கள்வாருமென்றான்
பொன்பூட்டுபட்டுடுத்தி பூவையிலக்குணர்க்கு
கொண்டுவந்துவிட்டார்கள் கொற்றவனிலக்குணனை
ஆனந்தவாழ்மார்பன் அரவானதுபார்த்து
தம்பியிலக்குணனே சதிராயிருமென்றான்
காசிப்பிராமணருங் கலியாணப்பந்தலிலே
மாயனருகாக மறையவருந்தானிருந்தார்
தென்னமுடிவேந்தன் துரியோதனன்மனதில்
காசிப்பிராமணர்கள் கட்டவிழ்த்தபுண்ணியத்தால்

ஊர்வலம் வருவது.

---

துரியோதனனும் திரள்தம்பி நூற்றுவரும்
மாமன்சகுனியும் மைத்துனன்தேத்தாசன்
காசிப்பிராமணர்க்கு கைகுவித்துதெண்டனிட்டார்
மற்றுமுள்ளமன்னவரும் வணங்கியெழுந்திருந்து
துரோணர்கிருபர் சொல்பெரியவீஷ்டுமரும்
ஐவரேயென்றறிந்து ஆசீர்வாதமென்றார்
மாயன்மகளை மணஞ்செய்யுமென்றுரைத்தார்
பேரிகைகொட்ட பெருஞ்சங்குநின்றூத
மல்லரிகொட்ட மணித்தாளந்தான்முழங்க
ஒற்றைச்சங்கூத வொளிகள்பணிமாற
வேதங்களோதிவர வேதியர்கள்பாடிவர
தாதைகளூதிவர தார்வேந்தர்பாடிவர
வெற்றிமுரசறைய வேந்தர்களோடிவர

தப்பட்டைகொட்ட தாரைகளூதிவர
நட்டுவர்வட்டுவர்கள் தாளங்கள்கொட்டிவர
வேசியர்களாடிவர வேந்தர்கள்கொட்டிவர
தத்தோடிங்காவென்று தாளங்கள்போட்டுவர
மத்தளங்கள்கொட்டி மணிமுரசுஊதிவர
அம்பிக்குழலி அரசாணிமுன்பாக
சாலுக்காகமும் சந்திரர்முன்பாக
மங்கிலியப்பெண்டுகள் வந்துமுளைதெளிக்க
மேளவகையானதெல்லாம் விதவிதமாய்த்தான்முழங்க
மங்கிலியந்தேங்காயும் மணப்பாக்குவெற்றிலையும்
மறையோர்கள்வேதியர்கள் மங்கிலியப்பெண்டுகளும்
மங்கிலியந்தொட்டு மணம்வந்துவாழ்த்தினார்
துரியோதன னுடனே திரள்தம்பி நூற்றுவரும்

மாயப்பிராணர்களைவருந் துரியோதனாதிகளும்

மங்கிலியம் தொடுவது.

---

மாயப்பிராமணர்கள் மன்னவர்களைவர்களும்
மாது துரோபதையும் மங்கிலியம்தொட்டபின்பு
மாயன்பெருமாளும் மங்கிலியம்தொட்டபின்பு
மற்றுமுள்ளராசாக்கள் மன்னரெல்லாம்தொட்டபின்பு
வேதப்பிராமணரும் விண்ணவரும்சாட்சியென்று
மங்கிலியம்தானெடுத்து வாளபிமன்கைக்கொடுத்து

அபிமன்னன் சுந்தரிக்கு மாலையிடுவது.

மாயவரைத்தெண்டனிட்டு மங்கையற்குத்தான்தரித்தான்
சூரியனைத்தெண்டனிட்டு சுந்தரிக்குத்தான்தரித்தான்
அரகராவென்று அழுக்கினான்மங்கிலியம்
மும்மூர்த்திகளைத்தானினைந்து மூன்றுமுடிபோட்டானே
சுந்தரிக்குவிபூதி தரித்தான் அபிமன்னனும்
மாயன்பெருமாளும் மனமகிழ்ந்துயேதுரைப்பார்
சுரும்புகுழலாளை சோலைமயில்சுந்தரியை
தோகையிளமயிலாளை சுந்தரியைஉந்தனுக்கு
தந்தோமுனக்குமப்பா தனஞ்செயனார்புத்திரனே
இந்தாருந்தம்பியென்று இராமரும்நீர்வார்த்தார்



பெருமாள் கடோர்க்கஜனுக்குச் சொல்வது.

கரியபெருமாளும் கடோர்க்கஜனைத்தானழைத்து
தகப்பன்மாரிங்கிலையோ தார்வேந்தாஉங்களுக்கு
பெரியப்பாவல்லவோ பெரிய துரியோதனனும்
எழுப்பியழைத்துவந்து ஏலாலபிமருக்கு
இட்டுநீர்வார்ப்பீரென்று இராமருங்கூறுவார்

கடோர்க்கஜன் வருவது.

---

காளைகடோற்கஜனும் கடுகியெழுந்திருந்து
துரியோதனனருகே சேரவந்துயேதுரைப்பான்
பெரியகுடியில் பெரியப்பா நீரலவோ
ஆளப்பிறந்த அபிமப்பெருமாளுக்கு
இட்டுநீர்வாருமையா யெங்கள்பெருமானே
எழுந்திருந்துவாருமையா எங்கள்பெருமானே
தேசத்தழகன் துரியோதனனும்
மெள்ளவெழுந்திருந்து மேகமலைபோலே
மாற்றானபிமருக்கு மணமிடவென்றுசொல்லி
நின்றுநடுங்கி நெடுமூச்செரியலுற்றான்

துரியோதனனைக் கடோர்க்கஜன் குத்துவது.

---

கண்டான்கடோர்க்கஜனும் கண்கள்மிகச்சிவக்க
ஏண்டாபெரியப்பா யெறிந்தாய்பெருமூச்சி
மூறிக்கிவிட்டஆடதுபோல் மூடாகநிற்கின்றாய்
மூழங்கையையேநோக்கி இடித்தான்நடுமுதுகில்
கடுக்கென்றுகூன்வளைந்து காளையபிமர்கையில்
இரங்கியேநீர்வார்த்தான் ஏலாலபிமருக்கு
மறையோரெழுந்திருந்து வாழ்த்தியேசேஷையிட்டார்
ஆயன்பெருமாளும் அள்ளியேசேஷையிட்டார்
ஐவரையவரும் அள்ளிய்சேஷையிட்டார்
வீஷ்மர்துரோணர் வில்விதுரர்தன்னுடனே
இருந்தசபையோரும் எல்லாரும்சேஷையிட்டார்
துரியோதனனும் திகைத்தாற்போல்தானிருந்தார்
காளைகடோர்க்கஜனும் கனகோபந்தானுகி
பின்கைநோக்கி பிடரியிலேமோதலுற்றான்
சேஷையிட்டுமீண்டுவந்தான் துரியோதனனும்

அபிமருஞ்சுந்தரியும் அரசாணிமுன்பாக
சுந்தரியைவாளபிமன் சுண்டுவிரல்தான்பிடித்து
அபிமருஞ்சுந்தரியும் அரசாணிசுற்றிவந்தார்
அருந்துதிப்பார்த்து அனைவோருமனமகிழ்ந்து
அபிமருஞ்சுந்தரியும் அரண்மனையேபோய்புகுந்து
மன்மதனுடரதியும்போல் வாழ்மனையில்வீற்றிருந்தார்
இராமர்காணென்பாரும் இந்திரன்காணென்பாரும்
சந்திரர்சூரியர்கள் தம்பிமகனென்பாரும்
மங்கைநல்லாள்சுந்தரிக்கு மைத்துனன்காணென்பாரும்
மாயன்மருகன்காண் வாள்விஜயன்தன்மகன்காண்
அபிமருக்குஞ்சுந்தரியும் அழகியசேர்ப்பந்தலிலே
கலியாணம்வாழ்த்தியே காவலர்கள்கொண்டாட [அ
பெண்ணாய்ப்பிறந்தவர்கள் பெருமைசொல்லக்கேட்டிருந்
அரவானெழுந்திருந்து அழகுமணப்பந்தலிலே
மணப்பாக்கும்வெற்றிலையும் மறையோர்க்குத்தான்வழங்கி
மன்னவர்கட்கெல்லாம் வரிசைப்படிவழங்கி
சந்தனங்கள்பூசியே தார்வேதரெல்லாரும்
பாக்குகள்வெற்றிலையும் பலபேர்க்குத்தான்வழங்கி

பெருமாள் காமதேனுவை யழைப்பது.

---

கலியாணம்பார்க்கவந்த கனமானமன்னவர்க்கு
போசனங்களிட்டுப் பூரிக்கவேண்டுமென்று
மாயன்பெருமாளு மனதிலேதானினைந்து
காமதேனுவென்னுங் கனமானபசுக்கள்தம்மை
வருகவருகவென்று வரவழைத்தார்மாயவரும்

காமதேனுவருவது.

---

வந்ததேகாமதேனு மாயவரைத்தெண்டனிட்டு
என்னையழைத்தபணி ஏதுகருமமென்றார்
கேட்டதேகாமதேனு கிருபையுள்ளபெருமாளை

பெருமாள் கூறுவது.

---

மாயன்பெருமாளும் மறுவார்த்தைசொல்லலுற்றார்
திக்குத்திசையார்க்கும் துரியோதனன்சேனைக்கும்
மற்றுமுள்ளராசாக்கள் மன்னவர்கள்தங்களுக்கும்
யானைகுதிரைகளும் ஆள்பெருஞ்சேவகர்க்கும்

போசனமும்நல்ல பொறிக்கறியும்பச்சடியும்
பருப்பும்புளிக்கறியும் பாயாசமும்பச்சடியும்
அறுபத்துநாலுவகை யதிரசமுமுப்பழமும்
கற்கண்டுசர்க்கரையும் காட்டுப்பலாப்பழமும்
வாழைப்பழமுடனே மாங்கனியுந்தேங்காயும்
பாலும்தயிருடனே பகுத்துவிடச்சொன்னரே

காமதேனு விருந்திடுவது.

---

அந்தமொழிகேட்டு அன்புடனேகாமதேனு
வந்தமன்னரத்தனைக்கும் வாசலிலேபந்திவைத்து
சொன்னபடிவிருந்து தொடுத்துவரவிட்டதுகாண்
பாலாறும்நெய்யாறும் பந்தலிலேதாம்வழங்கி
போசனங்களருந்திப் புறப்பட்டார்தார்வேந்தர்
யானைகுதிரையுடன் ஆள்பெருங்கூட்டமுடன்
நாரையெருதுகள்நாலுலட்சம் அஞ்சுலட்சம்
மிகுத்திருந்தகால்நடைக்கு வேணுமென்றதீனியெல்லாம்
காமதேனுந்தான்கொடுத்து கடக்கப்போய்நின்றதுகாண்
மாயர்பெருமாளும் வரிசையெல்லாந்தான்பார்த்து
சந்தோஷப்பட்டுத் தலையசைத்தார்மாயவரும்
காமதேனைப்பார்த்து கரியமாலேதுரைப்பார்
நாளையொருபொழுது நானழைத்தால்வாருமென்றார்
நமஸ்காரம்பண்ணி நடந்ததேகாமதேனும்

துரியோதனன் அரசர்கள் மகிழுவதும் புகழுவதும்.

---

அந்தயிரவில் அரசமன்னராசாக்கள்
தென்னமுடிவேந்தன் துரியோதனன்குருக்கள்
மற்றுமுள்ளமன்னவரும் வகைவகையாயிருந்துகொண்டு
குருக்களுடனுரைப்பான் கோமான்துரியோதனன்
கண்டீரோஇப்பொழுது காமதேனுவந்ததுவும்
வேணுமென்றபாக்கியத்தை விருந்திடச்சொன்னதுவும்
பெருமாள்பிரதாபம் கண்டீரோபெரியவரே
மாயன்தபசுநிலை மனமரியப்போகாது
பத்துலட்சம்தாதியர்கள் சமைத்தால்விருந்தாமோ
நம்முடையசேனைக்கு நல்விருந்துசெய்தாரே
அவருடன்சரியானபேர் யாருமில்லைவையகத்தில்

நாம்-நினைத்தால்தான்வருமோ நலமானகாமதேனும்
இப்படியாய்ச்சொல்லி யுரைத்தான்குருக்களுடன்

குருக்கள் சொல்வது.

---

அந்தவிசேஷ மதுகேட்டு அக்குருக்கள்
சொன்னாரேமாயரிட சூத்திரங்களுள்ளதெல்லாம்
வைகுண்டவாசன்காண் மாயமாய்வந்தவதரித்தார்
பூமிபாரந்தீர்க்கப் பிறந்துவந்தார்மாயவரும்.
மானிடசென்மமென்று மனதில்நினைக்கவேண்டாம்
பஞ்சவர்களைவரையும் பாரளந்தாருண்டுபண்ணார்
மாயனருளாலே வந்துபிறந்தார்கள்
பஞ்சவர்கள்தங்களுடன் பகைபண்ணிக்கொள்ளாதே
வனவாசம்போனவரை மன்னவரவழைத்து
பாதியரசு பாண்டவர்க்குநீகொடுத்து
கூடியேவாழ்ந்தாக்கால் குலமன்னர்மெச்சுவார்காண்

துரியோதனன் சொல்வது.

---

குருக்களுரைக்கலுமே கோமான்துரியோதனன்
மறுவார்த்தைசொல்லி யுரைக்கலுற்றான்மன்னவனும்
பாண்டவரைநாமழைத்துப் பாதியரசாளுமென்று
நாமமுடையார்க்கு நல்லவன்போல்நாமானேம்
மாமன்சகுனியுட வார்த்தையைநாம்கேட்டு
நியாயங்கள்பேசி நலந்தப்பிநின்றேனே
என்னசெய்வோமென்று ஏங்கிமனந்தளர்ந்து
மகனைத்தலைசிரைத்து வாசலிலேகட்டிவைத்து
காலோடேகட்டி கலியாணஞ்செய்ததுவும்
வெட்கமும்கெட்டு விருதாவாய்ப்போனதுவும்
எப்போதெளியுமையா ஈஸ்வரனேஎந்தனுக்கு
என்றுவிசாரமிட்டு எழில்வீரன்தான்படுத்தான்
எல்லாருமப்படியே எண்ணிவிசாரமிட்டார்

அரவான்முதல் நால்வருஞ்சொல்வது.

---

படுத்தார்களெல்லோரும் படைமன்னர்தான்கூட
நல்லரவான்தொந்திசெட்டி நற்பாலன்கடோர்க்கஜனும்
பேசினார்நால்வருமே பெருமாள்சௌரியத்தை
அம்மான்சௌரியத்தை அனைவோரும்பார்த்தோமே

நம்மாலேதாம்வருமோ நல்லவிருந்திடவே
என்றவர்கள்பேசி யிருந்தார்கள் நால்வருந்தான்
பொழுதுவிடிந்ததுகாண் புறப்பட்டான்சூரியனும்
ஆயன்பெருமாளு மப்போதெழுந்திருந்து
ஸ்தானங்கள்பண்ணி சதிரானமாயவரும்
காலைக்கடன்கழித்து கனமானமாயவரும்
அரவானைத்தானழைத்து ஆயன்பெருமாளும்
துரியோதனனூர்க்கும் தேசத்திலுள்ளவர்க்கும்
பகல்விருந்துசொல்லுமென்றார் பரிவாகமாயவரும்
அப்படியேசொல்லிவந்தான் அரவானவர்கட்கு

துரியோதனன் பயணப்படுவது.

தென்னமுடிவேந்தன் துரியோதனன்பார்த்து
நல்லரவான்தன்னுடனே ஞாயமாய்ச்சொன்னானே
கலியாணக்காரியமும் கனவிருந்துமாச்சுதே
நாலுநாளாச்சுதே நாங்களுமிங்கேவந்து
ஊருக்குப்போய்வாரோ மென்றான் துரியனுமே
பூணிக்கையாகவே போய்வாரோமென்றானே

அரவான் தடுப்பது.

அவ்விசேஷம்கேட்டு அரவானுங்கோபமதாய்
போகிறவர்தங்களையே பிளந்திடுவேன்தடியாலே
ஊருகோலம்வந்து உறவாடிமொய்யெழுதி
தேருதலைசெய்வித்து உங்கள்சீமைக்குப்போமென்றான்
அவ்விசேடங்கேட்டு அடங்கினான் துரியனுமே
வந்தானேநல்லரவான் மாயவர்க்குதெண்டனிட்டான்
அவ்விசேஷமெல்லாம் அரவானுரைத்தானே

பெருமாள் மறுபடியும் விருந்திடுவது.

---

சந்தோஷப்பட்டு தலையசைத்துமாயவனார்
கார்வண்ணரப்போது காமதேனையழைக்க
வந்ததேகாமதேனு மாயவரைத்தெண்டனிட்டு
என்னையழைத்தவகை யேதென்றுகேட்டதுகாண்

பெருமாள் சொல்வது.

---

மாயன்பெருமாளும் மறுவார்த்தைசொன்னாரே
அன்னமும்பாலும் அமுதுடனேநெய்மோரும்

ஏனவகையுடனே இனியக்குறிகளெல்லாம்
ஒன்றுங்குறையாமல் உடனேபடையுமென்றார்
அப்படியேகாமதேனும் அங்கேநினைத்ததுகாண்

அரவான் சொல்வது.

---

அரவானெழுந்திருந்து ஐவரையும்பந்திவைத்து
வேண்டுமென்றகாய்கரிகள் விருந்துகளிட்டாரே
நெய்யாறும்பாலாறும் நிகராம்பொறிக்கறியும்
கையாரஉண்டு களைதீர்த்தார்மன்னவர்கள்
பொழுதும்விழுந்ததுகாண் புதுநிலவுதானெறிக்க

ஊர்கோலம் வருவது.

ஊர்கோலம்வரவே உத்தாரமிட்டார்கள்
யானைகுதிரைகளும் முழுவயிரக்கால்குடையும்
பத்தரைமாற்றுப்பொன் பவழநெடுங்குடையும்
பட்டுக்கொடையும் பசும்பொன்முழுக்குடையும்
வட்டக்குடையும் மாணிக்கக்கால்குடையும்
திட்டமுடனாலவட்டம் திரள்கோடிதான்முழங்க
வெண்சாமரம்வீச வேணதெல்லாம்தான்பிடிக்க
பட்டுக்கொடிசீலைப் பத்துலட்சம்தான்பிடிக்க
முத்துக்கொடிச்சீலை மூன்றுலட்சம்தான்பிடிக்க
தீவட்டிக்காரர் திரளாய்க்கொளுத்துமென்றார்
முத்தாலேஆலாத்தி மூன்றுலட்சம்தான்பிடிக்க
பொன்னாலேதீவட்டி பெரியவர்கள்தான்பிடிக்க
தேர்விளக்குப்பந்தங்கள் திரளாகத்தான்பிடிக்க
அடித்தார்கள்மேளவகை அண்டங்கிடுகிடென்ன
ஆனையின்மேலே அடித்தார்களைந்துலட்சம்
நற்பேரிகைமேலாக நாகசுரமூதிவர
பொற்காளையூதிவர பூமிகிடுகிடென
ஆகாயபாணம் அதிர்புருசுசக்கரமும்
பூச்சக்கிரபாணங்கள் பூமியெல்லாம்தானிறைய
இடியம்புபாணங்கள் எட்டுலட்சம்தான்கொளுத்த
பகல்வத்திபூவத்தி பகல்போலேதானெரிய
ஆகாயம்பூமியெல்லாம் அதிர்ந்துநடுங்கிடவே
அபிமன்னராசாவும் ஆனையின்மேலேறிவர
ரத்தினத்தில்தானிழைத்த நலமானதண்டிகைமேல்

ஏறினாள் தண்டிகைமேல் எல்லவரும்தான்வாழ்த்த
முத்துக்குதிரைக்காரர் மூன்றுலட்சம்தான்பிடிக்க
வெற்றியுடன்சுந்தரியும் ஏறிவெளியேவந்தாள்
ஆயிரம்தாதியர்கள் அருகேநடந்துவர
ஆடும்பெண்களாயிரம் அருகேநடந்துவர
பாடும்பெண்களாயிரம் பக்கத்தில்நடந்துவர
உள்ளங்குளிர்ந்திடவே ஊர்கோலம்வாரார்கள்
வாரதொருவைபோகம் மகாதேவர்கற்பனைபோல்
துவாரகாதன்பதியே சுற்றியேவந்தார்கள்
வீதிக்குவீதி விளக்குகள்வைப்பாரும்
ஆலாத்திகாட்டுவாரும் அமர்ந்துஇருப்பாரும்
தேங்காய்கொடுப்பாரும் திருச்சின்னமூதுவாரும்
இவரார்காணென்பாரும் இந்திரன்காணென்பாரும்
மாயன்பெருமாள் மருமகன்காணென்பாரும்
அர்ச்சுனனார்பெற்றெடுத்த அபிமன்காணென்பாரும்
சுபத்திரையாள்பெற்றெடுத்த துய்யபாலனென்பார்
திருஷ்டிகழிப்பாரும் சேலைசுற்றிப்போடுவாரும்
இந்திரன்போலேயெங்கும் ஊர்கோலம்வந்தார்கள்
வந்தார்களப்பொழுது மாயனரண்மனையில்
ஆனையிறங்கினான் அபிமன்னராஜாவும்
தண்டிகையிறங்கினாள் தையல்நல்லாள்சுந்தரியும்
மாப்பிளையும்பெண்ணும் வரிசையுடனின்றார்கள்
ஆலாத்திகொண்டுவந்து ஆயிரம்பேர்தானெடுத்தார்
முத்தாலேஆலாத்தி மூப்பியர்கள்தானெடுத்து
கற்பூரஆலாத்தி கன்னியர்கள்தானெடுத்தார்

### காப்பு களைவது.

---

மாப்பிள்ளையும்பெண்ணும் மணவரையிலுட்கார்ந்தார்
காப்புகளைந்தார்கள் காளைஅபிமருக்கு
சுந்தரியாள்கைகாப்பு துரைமன்னன்தான்புனைந்தான்
படைமன்னராசாக்கள் பந்திபந்தியாய்நின்றார்கள்
மொய்பணமும்ரத்தினமும் மூன்றுலட்சமிட்டார்கள்
வந்திருக்கும்மன்னவர்க்கு வரிசையுடன்பாக்கும்
சந்தனமும்குங்குமமுஞ் சாந்துகள்பன்னீரும்
அந்தமுடன்மன்னவர்க்கு ஐவர்க்குத்தான்பூசி

# அபிமன்னன் சுந்தரிமாலை.

மஞ்சாவசந்தங்கள் மன்னவர்கள் தானாடி
சந்தோஷவார்த்தைசொல்லி பெருமாள்தயவுடனே
பெருமாள் சொல்லுவது.

---

வந்தவரைப்போங்களென்று மாயன் அனுப்பிவிட்டான்
துரியோதனனுடைய சேனைபரிகலமும்
பயணம்புறப்பட்டார் பாங்குடையமன்னவர்கள்
ஆனந்தவாழ்மார்பன் அரவானும்தானினைந்து
கட்டைதுளைத்தாலும் காணியாளனாகாது
மன்னவர்களைவரையும் வனத்திலேதுரத்திவிட்டேன்.
துரோபதையைகொண்டுவந்து துயிலைஉரிந்துவைத்தான்
மாதுதுரோபதையை மயிரைவிரிக்கவைத்தான்
வாளபிமன்தேவியாரை தன்மைந்தனுக்குநேமித்தான்
துரியோதனனுடனே திரள்மன்னர்நூற்றுவரை
மாளப்பொருதிட்டு மடிப்பேனென்றெழுந்தான்
ஆயன்பெருமாளும் அரவானினைவறிந்து
பெருமாள் அரவானண்டைவருவது.

---

ஆயர்அரவானை அழைத்தேதுகூறலுற்றார்
தானையினிபாரதத்தில் ராஜாக்கள்மாளுவது
கல்யாணப்பந்தலிலே கலக்கமிட்டாலாகாது
மன்னவரையெல்லாம் வழிவிட்டுஅனுப்புமென்றார்
அரவான்கடோர்க்கஜனு மானதொந்திசெட்டியுடன்
துடைதட்டிகொக்கரித்து தூத்திமூடுக்கலுற்றார்
அடித்துவிழுந்ததென்று அலறியேஓடுவாரும்
இடிவிழுந்துதென்று இளைத்தோடிப்போவாரும்
பின்திரும்பிமுன்னோடி பிழைத்தோமேயென்பாரும்
தலைதடவிக்கொண்டுமன்னர் தப்பினோமென்பாரும்
இன்றுபெற்றாளென்மாதா இனிபிழைத்தோமென்பாரும்
இப்படிச்சொல்லி இராசாக்களோடலுற்றார்
தேசத்தழகன் துரியோதனராசன்
கைசோர்ந்துமெய்சோர்ந்து கனத்தமுடிசோர்ந்து
எங்குந்திருமுகத்தை யேறெடுத்துப்பாராமல்
தகப்பனார்வார்த்தைகளை தள்ளிநடந்ததினால்
சகுனிநமக்கு சத்துராதியாயிருந்தான்
இனியென்னசெய்வோமென்று எண்ணிவழிநடந்தான்.

ஐயோசிவனேயென்று அழுதுவழிநடந்தான்
மார்பளவுகண்ணீரை வழித்தெறிந்துதானடந்தான்
கூட்டிவந்தசேனையெல்லாம் கொள்ளைகொடுத்துவிட்டு
எப்படிப்போயிருப்பேன் இனியதொருபட்டணத்தில்
என்றுபுலம்பியே நடந்தான் துரியோதனன்
பஞ்சவர்களைவரும் பாஞ்சாலி துரோபதையும்
மைந்தர்மருமகளை வாழ்த்திமனமகிழ்ந்து
ஆயன்பெருமாளை அடிபணிந்துதெண்டனிட்டு
எங்களுக்குஇங்கே இருக்கவேநீதியல்ல
வேதநாராயணரே விடைதாருமென்றுரைத்தார்
மாயன்பெருமாளும் வார்த்தையவர்க்குரைத்தார்
ஏழமைவந்து இளைத்தோமென்றெண்ணாதீர்
மாளுவார்நூற்றுவர்கள் வையகத்தையாண்டிடுவீர்
மாது துரோபதையும் மயிர்முடிப்பாள்தப்பாது
மன்னவரேநீங்கள் வனம்போய்வாருமென்றார்
மாயன்பெருமாளும் வழிவிட்டுதான்வருவார்
அந்தநாள்போக்கி மறுநாள்கழிந்தபின்பு
அரவான்கடோர்க்கஜனும் ஆனதொந்திசெட்டியரும்
ஆயன்பெருமாளை அரசமக்கள்தெண்டனிட்டு
மாயவரேயெங்களிட வங்கிஷத்துமகாதுரையே
ஆயரேயெங்களைநீர் அனுப்பிவிடைதாருமென்றான்
அப்படியேயாகுதென்று ஆயனுஞ்சம்மதித்து
மாயன்மனமகிழ்ந்து மருமகன்மார்தனக்கு
பட்டுசால்வைபச்சைவடம் பாங்காய்கிரிகிடமும்
கடுக்கன்கொலுசுகளும் கனமானமோதிரமும்
வேண்டும்பணிதியெல்லாம் வெகுமானம்தான்கொடுத்து
தோகைநல்லாள்சுந்தரிக்கு சீதனமாகவென்று
நாற்பதினாயிரங்கோடி நடையானபாற்பசுவும்
அடியார்கள்தோழியார்கள் ஆயிரந்தான்கொடுத்து
ஆனைகுதிரை ஐந்துலட்சம்தோணியும்
பல்லக்குத்தண்டிகை பசும்பொன்னாலிழைத்ததுகாண்
சீதனங்கள்தான்கொடுத்து திருமால்மகள்தனக்கு
மாப்பிள்ளைக்கும்பெண்ணுக்கும் வரிசையுடன்ஒப்பாக

# கஅசு அபிமன்னன் சுந்தரியாலே.

## அபிமன்னன் சொல்வது.

அப்போதுவாளபிமன் ஆயனைத்தெண்டனிட்டு
பெருமாளேஎங்களுட பெரியப்பன்தந்ததெல்லாம்
எழுநூறெட்டகம்பொன் யானைசுமந்ததனம்
பரியம்பொருந்தினீரோ பாரளந்தமாயவரும்
பேதைஎன்றுசொல்லியே பெண்கொடுக்கமாட்டோமே
எங்கள்-பாட்டனார்தேடும் பழம்பொருளேயித்தனையும்
மூலைப்பாலுக்கூலியொரு முப்பதுபொன்னுண்டுமக்கு
முப்பதுபொன்னை முதலெடுத்துக்கொள்ளுமையா
மற்றப்பொன்பூஷணமும் மாறுமல்பொதிபிடித்து
ஆனைகுந்திபட்டணத்தே யனுப்புமென்றான்வாளபிமன்
தப்பாதேஅனுப்பிவிடுந் தரணியளந்தவரே
உடமைகொடுத்து உறவாடுமென்றுரைத்தான்

## பெருமாள் சொல்வது.

என்னப்பெருமா ளிருதோளும்பூரித்து
தங்கைமகனுரைக்க தரணியளந்தவரும்
மருமக்களைல்வரையும் மகளானசுந்தரியும்
வாழ்த்திவிடைகொடுத்தார் மாளிகையினுட்புகுந்து
மாமியார்லட்சுமியை மன்னவர்கள்தெண்டனிட்டார்
மங்கைநல்லாள்சுந்தரியும் மாதாவைதெண்டனிட்டாள்
மருமக்கள்நால்வரையும் வாழ்த்தியெடுத்தணைத்து
மகளாரைசென்றெடுத்து வாயாரவாழ்த்தலுற்றாள்
மங்கிலியமுண்டாவீர் மைந்தனைப்பெற்றிடுவீர்
பூமியையாண்டிடுவீர் புத்திரரையுற்றிடுவீர்
வாயாரவாழ்த்தி மதிமுகத்தைமுகந்துகொண்டு
போய்வாருமென்று விடைகொடுத்தாள்பொற்கொடியும்
அங்கேவிடைகள்பெற்று ஆயனைத்தெண்டனிட்டு
துவாரகாபதியைவிட்டு துரைமன்னர்தானடந்தார்

## ஔவையார்வீட்டிற்கு வருவது.

ஔவைவனந்தேடி அரசமக்கள்போய்நடந்தார்
பேரிகைகொட்ட பெருஞ்சங்குநின்றூத
மல்லரிகொட்ட மணித்தாளமும்முழங்க

ஒற்றைச்சங்கூத ஒளிகள்பணிமாற
தெய்வரம்பைபாடிவர தேவடிமாராடிவர
ஔவைமடத்தருகே அடுத்தார்கள்மன்னவர்கள்
அபிமர்வருகிறதை ஓதையறிந்துகொண்டு
மக்களெதிராக மாதாவருகலுற்ருள்
ஔவையார்பாதம் அடிபணிந்துதெண்டனிட்டார்

ஔவையார்பாதம் சுந்தரியாள்பணிவது.

---

தோகைநல்லாள்சுந்தரியும் தோழிமார்தன்னுடனே
தண்டிகைதானிறங்கி தார்குழலும்ஒடிவந்து
மாமிசரணமென்று வணங்கியேதெண்டனிட்டாள்
ஔவைமனமகிழ்ந்து அணைந்தெடுத்துமுகந்துகொண்டு
வாயாரவாழ்த்தி மடத்தருகேகொண்டுசென்று
அன்னங்கறிகாய் அடைவாகவேசமைத்து
மக்களுக்கும்மங்கையற்கும் வரிசையசனமிட்டு
வெள்ளிலைகற்பூரம் மிகுந்தக்காய்சுண்டையுடன்
அள்ளியவர்க்களித்து ஔவையாருமப்பொழுது
வாழ்த்திவிடைகொடுத்து வழிவிட்டனுப்பலுற்ருள்

ஔவையார் வழிவிட்டனுப்புவது.

---

அங்கேவிடைகள்பெற்று அலைகெங்கைநன்னுடர்
ஔவைவனங்கடந்து அப்புறமேவருகலுற்ருர்
காடுகடந்து கடியவனந்தான்கடந்து
நாடுகடந்து நற்பொழில்கள்தான்கடந்து
இஞ்சிவனங்கடந்து இருவாட்சியுட்புகுந்து
மஞ்சள்வனங்கடந்து மருக்கொழுந்துதோப்புவிட்டு

வீரகெங்காளண்டை தொந்திசெட்டிவருகிறது.

---

வீரகெங்காள்பட்டணத்தே விருப்பமுடன்வந்தார்கள்
மூந்திபோய்தொந்திசெட்டி முருகுழலைதெண்டனிட்டு
மணஞ்செய்துவாளபிமன் மங்கைநல்லாள்சுந்தரியை
அண்ணமாரிப்போ அழைத்துவந்தார்பாருமென்ருன்
மைந்தனுரைக்கலுமே மாதாவும்வதுரைப்பாள்
பாங்கியரைச்சேரழைத்து பைங்கொடியுங்கூறுவாள்

# ௧அஅ அபிமன்னன் சுந்தரிமாலை.

வீரகெங்காள் சொல்வது.

---

வீட்டைமெழுகி விநாயகக்கோலமிட்டு
சாந்தால்தரைமெழுகி சந்தனத்தால்கோலமிட்டு
கஸ்தூரிதான்கரைத்து கடுகதெளியுமென்றாள்
ஆலாத்திபெண்களொரு ஆயிரம்பேர்வாங்களென்றாள்
மைந்தர்க்கெதிராக மங்கையரும்போகவென்று

வீரகெங்காள் மைந்தர்களண்டைவருவது.

---

பல்லக்குமீதேறி பைங்கொடியும்எதிர்நடந்தாள்
மாதாவருகிறதை கண்டந்தமன்னவர்கள்
ஆனைவிட்டுதானிறங்கி அரசமக்கள்மூவரும்
சூழவலம்வந்து சுற்றிவந்துதாயாரை
மாதாவின்பாதம் மலர்தூவிதெண்டனிட்டார்
பைங்கொடியாள்சுந்தரியும் பல்லக்குவிட்டிறங்கி
அத்தையாள்பாதம் அடிபணிந்துதெண்டனிட்டாள்
வந்துபணிந்த மருமகளைச்சென்றெடுத்து
வாரியெடுத்தணைத்து மாளிகையில்கொண்டுசென்று
வாழ்த்திமனமகிழ்ந்தாள் மாதாவும்வீரகெங்காள்
ஊர்கோலம்செய்யவே உத்தமியாள்தானினைந்து
மைந்தன்தொந்திசெட்டியுடன் மாதாவுரைத்தாளே
அப்போதுதொந்திசெட்டி அரண்மனையில்உட்புகுந்து
உக்கிராணம்போய்புகுந்து ஒருபெட்டிதான்திறந்து
எண்ணைகொண்டுவாருமெனஏழாயிரம்பொன்கொடுத்தான்
பாணவகைகொண்டுவர கொடுத்தான்திரவியத்தை

ஊர்வலம் வருவது.

---

பல்லக்குமேல்சிலபேர் படைமன்னரேறிவர
வீதியலங்கரித்து விளக்கேற்றிஎத்திசையும்
ஆயன்மகள்சுந்தரியும் ஆனபொன்தண்டிகைமேல்
வேந்தர்பெருமாளும் வீதிபவனிவந்தார்
வெண்சாமரம்வீச வெள்ளைக்குடைகவிய
செட்டித்தெருகடந்து சீர்கருணர்வீதிபுக்கி
ராஜர்நெடுந்தெருவே நடந்தார்கள்மன்னவர்கள்
பாணமுழங்கிவர பைங்கொடிமாராடிவர
யானைகுதிரையேறி ராசாக்கள்வீதிவந்தார்

பார்த்தன்மகனும் பாரளந்தார்தன்மகளும்
காளையரவானும் கடோர்க்கஜன்தன்னுடனே
ஊரைவலமாக ஊர்கோலம்வந்தார்கள்
கண்டாளேவீரகெங்காள் கண்கள்களிகூர
ஆலாத்திகாட்டுமென்றுள் அபிமருக்கும்சுந்தரிக்கும்
அப்படியேதாதியர்கள் அன்பாயெழுந்திருந்து
முத்தாலேஆலாத்தி மூப்பியர்கள்கொண்டுசென்று
திஷ்டிகழித்தார்கள் சீராயிருவருக்கும்
அபிமனும்சுந்தரியும் அம்பொன்மணிகைப்பிடித்து
மாளிகையினுட்புகுந்தான் வாளபிமன்தேவியுடன்

## அபிமன்னன் மணக்கோலத்தோடு வீரகெங்காளிடம் வந்தது.

---

பந்தலிலேவந்துநின்று பாரமுடிமன்னவனும்
அரசாணிமுன்பாக அபிமனும்சுந்தரியும்
மணைமேலேஉட்கார்ந்தான் வாளபிமன்தேவியுடன்
ஆனதொருவேதியர்கள் அள்ளியேசேஷையிட்டார்
அபிமருஞ்சுந்தரியும் அரசாணிசுத்திவந்தார்
அரசாணிசுத்திவந்து அரண்மனையினுட்புகுந்து
பாலிகைப்பாய்மீதில் பரிந்தேயுட்கார்ந்தார்கள்
பாலும்பழமும் பனிவெள்ளைசர்க்கரையும்
கூட்டிக்குழப்பி கொடுத்தார்கள்தாதியர்கள்
வாங்கியமுதுண்டார் வாளபிமன்சுந்தரியும்
ஊர்கோலம்வந்து உள்ளூரார்மொய்யெழுதி
பாக்கிலையும்வாங்கிப் பரிமளமுமேற்பூச
அன்னங்கரிகாய் அடைவாகவேயளித்து
உண்டெழுந்துபோனபின்பு உத்தமர்கள்வீரியர்கள்
வாளபிமன்தேவியுடன் மகிழ்ந்திருந்தானங்கொருநாள்
அந்தநாள்போக்கி மறுநாளகழித்தபின்பு
அரவான்கடோர்க்கஜனும் அபிமருந்தானெழுந்து
ஆச்சிநல்லவீரகெங்காள் ஆதீனத்தின்சேரநின்று
மாதாவுக்கேற்ற மலர்தூவிதெண்டனிட்டார்
வந்துபணிந்ததொரு மக்களைசென்றெடுத்து
வாயாரவாழ்த்தி மதிமுகத்தைமுகந்துகொண்டாள்
ஆச்சிநீர்கேளீர் அடியேங்கள்விண்ணப்பம்

# ௧௯௦ அபிமன்னன் சுந்தரிமாலை.

ஆச்சிசுபத்திரையும் அபிமனைத்தேடியேதான்
அனேகநாள் ஆருதுகாணுயன்பதிக்குவந்து
விடைதாருமாச்சியென்று விடுதிக்குப்போகவென்ருன்
வீரகெங்காள் சொல்வது.

---

சிரித்துமனமகிழ்ந்து செட்டிமகள்வீரகெங்காள்
மக்களைப்பார்த்து மனமகிழ்ந்துவீரகெங்காள்
போசனச்சாலையிலே பொற்கொடியும்போய்புகுந்தாள்
மக்கள்மருமகட்கும் வரிசைப்படியாக
பொறித்தபொறிக்கறியும் பொன்போல்சிறுபருப்பும்
புத்துருக்குநெய்தளிக்கப் போதமிகப்படைத்து
அசனமுண்டபிற்பாடு அள்ளியிலைப்பாக்குமிட்டு
மருமகள்சுந்தரிக்கு வரிசைப்பணிதியுடன்
தோழிமாராயிரஞ் சுந்தரிக்குத்தான்கொடுத்து
மைந்தனபிமருக்கு வரிசைப்பணிதியுடன்
யானைகுதிரையுடன் அடியார்களாயிரமும்
வேண்டும்படிகொடுத்து வீரகெங்காளப்பொழுது
வாழ்த்திவிடைகொடுத்து வழிவிட்டனுப்பலுற்ருள்
அங்கேவிடைபெற்று அலைகெங்கைநன்னுடர்
இரவுபகலும் இளைப்பாறிவழிநடந்தார்
இளைப்பாறிவழிநடந்தார் இரவும்பகலாக
நடந்தார்களப்பொழுது நாககன்னிபட்டணத்தில்
நாடுகடந்து நகரிபலகடந்து
காடுகடந்து கடுகவழிகடந்து
கானகத்தைவிட்டு கடுகெனவேவாரார்கள்
நாககன்னிவீற்றிருக்கும் நல்லதொருபட்டணத்தே
பாதாளலோகத் தடவரையில்வந்துநின்ருர்
காளையரவானும் கடுகியேமுன்ஞேடி
முன்னுலேயோடி முகத்தெதிரில்வந்துநின்று
சுத்தியேவந்துநின்று சுறுக்காகத்தெண்டனிட்டு
அன்னையார்பாதத்தில் அரவானும்தெண்டனிட்டான்
தெண்டனிட்டப்போது திடுக்கிட்டெழுந்திருந்து
அபிமன்கடோர்க்கஜனும் அன்பானதொந்திசெட்டி
சுந்தரியாள்தானுஞ் சுறுக்காவந்தாள்காண்
வந்தாரிதோபாரும் மாதாவேயெனமொழிந்தான்
மக்கள்வரும்சேதி மாதாவுந்தான்கேட்டு

பாங்கியரைச்சோரமைத்து பைங்கொடியுங்கூறுவாள்
வீடுமெழுகி விநாயகக்கோலமிட்டு
கஸ்தூரிகொண்டுவந்து கரைத்துத்தெளியுமென்ருள்
குத்துவிளக்கெங்கும் கொழுந்துபடவேற்றுமென்ருள்
மாணிக்கத்தீபங்கள் வையுமென்ருளெத்திசையும்
இரத்தினகம்பளியை எத்திசையும்போடுமென்ருள்
ஆலாத்தியேற்றுமென்ருள் ஆயிரம்பெண்கள்தனை
மாதாவும்நாககன்னி மைந்தர்க்கெதிராக
பாதாளலோகம்விட்டு பார்த்தனுடதேவியரும்
பல்லக்குமீதேறி பைங்கொடியுந்தான்வருவாள்
மாதாவரவுதனை மன்னவர்கள்கண்டுகொண்டு
யானைகுதிரை அரசமக்கள்விட்டிழிந்து
மாதாவுக்கெதிராக மன்னவர்கள்வந்துநின்று
மாதாவின்பாதம் மலர்தூவிதெண்டனிட்டார்
வந்துபணிந்தவரை வாரியெடுத்தணைத்தாள்
ஆயன்மகளாரும் அன்பானசுந்தரியும்
பல்லக்கைவிட்டிழிந்து பார்த்தன்மருமகளும்
அத்தையார்பாதம் அடிபணிந்துதெண்டனிட்டாள்
மாமிசரணமென்று வணங்கினுள்சுந்தரியும்
வந்துபணிந்த மருமகளைச்சென்றெடுத்து
வாழ்வீர்வளருவீர் மைந்தனைப்பெற்றிடுவீர்
சீமையை ஆளுகைக்கு செல்வரைப்பெற்றிடுவீர்
வாயாரவாழ்த்தி மதிமுகத்தைமுகந்துகொண்டு
ஆலாத்திகாட்டுமென்ருள் ஆனந்தவாழ்மார்பி
மாணிக்கஆலாத்தி மங்கையர்கள்காட்டினர்
பாதாளலோகத் தடவரையிலுட்புகுந்து
மாளிகையில்கொண்டுசென்று மைந்தனையும்சுந்தரியும்
ஆசாணிமுன்பாக அபிமருக்கும்சுந்தரிக்கும்
மைந்தனுக்கும்சுந்தரிக்கும் வாரியேசேஷையிட்டார்
அபிமரையும்சுந்தரியும் அரண்மனையில்கொண்டுசென்று
பாலும்பழமும் கொடுத்தாளேபைங்கொடியும்
அபிமருடசேனைக் கமுதுபடிகொடுத்து
நெய்பால்தயிருடனே நேரிழையாள்கொடுத்து
மைந்தனைச்சோரமைத்து மாயன்மகளுடனே
அமுதுண் ணுமண்டபத்தே ஆரிழையும்போய்புகுந்தாள்
பொன்போல்சிறுபருப்பும் புத்துருக்குநெய்பாலும்

பச்சடியும் துவையலும் பழவரிசைபோஜனமும்
மக்களுடனுக யாதாவும் அசனமுண்டு
வெற்றிலைக்கற்பூரம் வேண்டும்படியருந்தி
சந்தனங்கஸ்தூரி சாந்துமிகவணிந்து
அந்தநாள்போக்கி மறுநாள்கழிந்தபின்பு
அபிமனெழுந்திருந்து ஆச்சிக்கும்போய்பணிந்து
ஆச்சியரே நீர்கேளும் அடியேன் தன்விண்ணப்பம்
மாதாசுபத்திரையும் வழிபார்த்திருப்பாள்காண்
தேடிதிகைப்பாள்காண் திருமாலுடன்பிறந்தாள்
சொல்லாமல்வந்துவிட்டேன் தோகையரேயிப்பொழுது
வாழ்த்திவிடை தாருமம்மா மாதாவேளந்தனுக்கு
அப்படியேயாகுதென்று ஆனந்தவாழ்மார்பி
மைந்தரபிமருக்கும் மருமகள்சுந்தரிக்கும்
பாரப்பணிதிகளும் பாங்கிமார் ஆயிரம்பேர்
ஆனைகுதிரைகளும் ஆயிரம்பேர்தாதிகளும்
சீதனமாகக் கொடுத்தாள் திருவனையும்
மக்களைப்பார்த்து மனமகிழ்ந்துமங்கைநல்லாள்
அமுதுண்ணுமண்டபத்தே ஆரிழையும்போய்புகுந்து
முப்பழமும்பாலும் முடுகுபலாப்பழமும்
வாழைப்பழமும் மதுரமுள்ளமாம்பழமும்
வெள்ளிலைக்கற்பூரம் வேண்டும்படியளித்து
சந்தனமுங்குங்குமமும் சாந்துபரிமளமும்
மன்னர்பெருமாளே வாழ்வீரெனவளித்து
மருமகள்சுந்தரியை வாழ்வாயெனவளித்து
வாழ்த்திவிடைகொடுத்து வழிவிட்டனுப்பலுற்ருள்
மகனை ஆரவானை மங்கையருந்தானழைத்து
அபிமனைக்கொண்டுபோய் ஆச்சிகையிலொப்பிவித்து
ஐந்தாருநாளிருந்து அப்பா நீவாருமென்றுள்
மன்னவரும்சேனையுடன் வாகனங்கள்தானேறி
பாதாளலோகத் தடவரையைவிட்டகன்று
காடுகடந்து கடியவனங்கடந்து
கொல்லிமலைகடந்து குடகுமலை தான்கடந்து
காணுறுதோப்புகளும் கமுகுவனங்கடந்து
கமலவல்லியாளிருக்கும் கதலிவனம்புகுந்தார்
முந்திகடோர்க்கஜனும் முடிகியேயோடிவந்து

வீதியும்வீதி தெருவும்பலகடந்து
கமலவல்லிதானிருக்கும் கனகமணிமண்டபத்தே
மாதாவுக்கேற்ற மலர்தூவிதெண்டனிட்டான்
கைகட்டிவாய்புதைத்து கடோர்க்கஜனேதுரைப்பான்
அபிமனும்சுந்தரியும் அரவானுந்தொந்திசெட்டி
சேனைத்திரளுடனே சென்றார்மனம்பொருந்தி
நம்முடையவனமருகே வந்தார்காணுச்சியரே
மைந்தர்வருஞ்சேதி மாதாவுந்தான்கேட்டு
ஆயிரம்பேர்ராட்சதரை அனுப்பினுள்எதிராக
அழைத்தோடிவாங்களென்று அனுப்பினுளப்பொழுது
அப்படியேவந்தார்களாயிரம்பேர்ராட்சதரும்
எதிராகவந்து யெழுந்திருங்கோளென்முரே
அப்படியேதானெழுந்து அனைவோரும்வந்தார்கள்
தாயார்கமலகன்னி சதிரிலேதானிருந்தாள்
ஆனைவிட்டுதானிறங்கி அபிமன்னராசாவும்
நல்லரவான்தொந்திசெட்டி நாலுபேர்தங்களுடன்
அம்மாளைசுத்திவந்து அடிவணங்கிதெண்டனிட்டார்
தெண்டனிட்டபிள்ளையை சீராயெடுத்தணைத்து
இருக்கச்சிங்காதனங்க ளிட்டாளெதிராக
ஆயன்மகளாரும் அழகுதண்டிதானிறங்கி
மாமிசரணமென்று மலர்தூவிதெண்டனிட்டாள்
வந்துபணிந்த மருமகளைத்தானெடுத்து
வாழ்த்தியெடுத்தணைத்து மாளிகையில்கொண்டுசென்று
பாலும்பழமும் பசுந்தேனும்சர்க்கரையும்
கூடக்கலந்து கொடுத்தார்கள்தாதியர்கள்
போசனநற்கறியும் போட்டுண்டாள் அப்பொழுது
கல்யாணக்காரியங்கள் காட்சிகளுள்ளதெல்லாம்
ஒன்றுங்குறையாமல் உரைத்தானே நல்லரவான்
அவ்விசேஷங்கேட்டு அம்மாள்கமலகன்னி
நகைத்துதலையசைத்து நன்றுச்சுதென்றாளே

அரவான் சொல்வது.

---

துரியோதனனுடனே சேரப்பிறந்தார்கள்
குருடனுடபுத்திரர்கள் கொற்றவர்களெல்லோரை
பாலனபிமனுமே பந்தியாய்க்கட்டிவைத்தான்
கொள்ளவந்தலக்குணனை குடுமைவைத்துதலைசிரைத்து

ஆயிரம்பெருவிளக்கை அவன்தலையிலேற்றிவைத்து
அாசாணிக்காலுடனே அவனையேகட்டிவைத்து
பார்த்திருக்கமங்கிலியம் தரிப்பித்தோம்மாதாவே
பின்னையுமுண்டான பேச்சுவகையுள்ளதெல்லாம்
ஒன்றுங்குறையாம லுரைத்தானராவாணும்

கமலகன்னி சொல்லுவது.

---

கேட்டாள்கமலகன்னி கிருபையுடன்தானகைத்து
சந்தோஷப்பட்டு தலையசைத்தாள்கமலகன்னி
அப்போ-பொழுதுவிடியவேபொற்கொடியுந்தானெழுந்து
பதினாயிரங்கோடி பத்துலட்சம்ராட்சதரை
உடனழைத்துதம்பியை ஊர்க்கோலம்காட்டுமென்றான்
கடோர்க்கஜனைத்தானழைத்து காரியத்தைப்பாருமென்று
ள், அப்படியேநல்லதென்று அரவான்கடோர்க்கஜனும்
பந்தங்கொளுத்துமென்றார் பட்டணங்கள்சுத்திவா
தீவட்டிகொளுத்துமென்றார் தெருவெங்கும்சுத்திவா
கோட்டைதிரள்மேளம் கோடையிடிபோலே
கொண்டுவந்தாாலவட்டங் கோடானகோடியுண்டு
யானைகுதிரைகளும் ஆள்பேரும்ராணுவமும்
சேனைபரிகலமும் சேர்ந்துவந்தாணுவமும்
எல்லோருங்கூடி இயல்கோலம்வந்தார்கள்

அபிமன்னனும் சுந்தரியும் அரண்மனைக்கு வருவது.

---

மாப்பிள்ளையும்பெண்ணும் மகிழ்ச்சியுடன்வந்தார்கள்
ஆச்சியுடன்வந்து அரண்மனையிலுட்புகுந்து
மாப்பிள்ளையும்பெண்ணும் வந்திருந்தார்மாளிகையில்
கமலகன்னிபட்டணத்தில் கனத்ததொருராட்சதரும்
சேஷைகளிட்டபின்பு திருவிளக்குமுன்னேவைத்து
போகமுடன்ராட்சதர்கள் மொய்வரிசையிட்டார்கள்
பாக்குடனேவெற்றிலையும் பலபேர்க்குதான்வழங்கி
ஆர்க்கமுடன்தான்கொடுத்து அனுப்பினாள்கமலகன்னி
மாப்பிள்ளையும்பெண்ணும் மணவரையைவிட்டிறங்கி

அபிமன்னனுக்கும சுந்தரிக்கும் பலதானமிடுவது.

---

கோபமுடனேபால்பழமும் குடித்தாரிருவருமே
தேர்ப்புடன்இராத்திரிக்கு நித்திரைகள்செய்தார்கள்

அபிமனும்சுந்தரியும் மங்கொருநாள்வாழ்ந்திருந்தார்
அந்தநாள்போக்கி மறுநாள்கழிந்தபின்பு
ஆச்சிமுகம்நோக்கி அபிமன்னன்கூறுவான்
ஆச்சிநீர்கேளீர் அடியேன்தன்விண்ணப்பம்
மாயன்சகோதரியாள் மாதாசுபத்திரையும்
மாயன்பதிக்குயென்னை வழிநோக்கிப்போகாமல்
மறையான்வசமாக மாதாவும்ஒப்பிவைத்தாள்
அங்கிருந்தபடியே அடியேனும்வந்துவிட்டேன்
ஆச்சிசுபத்திரையும் அலைந்தெங்குந்தேடுவாள்காண்
என்னையனுப்புமம்மா எனக்குவிடைதாருமம்மாள்
நல்லதுயென்றுசொல்லி நகைத்தேகமலகன்னி

கமலகன்னிசுந்தரிக்குச் சீதனங்கொடுப்பது.

---

தாதிகளாயிரமும் தங்கப்பொன்பெட்டிகளும்
மாணிக்கசேலை மங்கைநல்லாள்சுந்தரிக்குச்
சீதனமாகத் திரளுடனேதான்கொடுத்து
அமுதுண்ணுமண்டபத்தே அன்பாகயிட்டுவந்து
பாலுடனேதேனும் பதினெட்டுபச்சடியும்
புத்துருக்குநெய்வார்த்து போசனமுந்தான்படைத்தாள்
அரவான்கடோர்க்கஜனை அண்டையிலேதானழைத்து
என்-தங்கைசுபத்திரையாள் தானிருக்கும்பட்டணத்தே
கொண்டுபோய்நீங்கள்விட்டு குறிப்பெலாந்தானுரைத்து
சென்றுபுகுந்து சுபத்திரைக்குதெண்டனிட்டு
கல்யாணப்பேச்சுகளை காரியமாய்த்தானுரைத்து
ஊர்கோலம்வந்து உறன்முறைக்குப்பாக்குவைத்து
ஐந்தாறுநாளிருந்து அப்பாநீவாருமென்றாள்
அப்படியேநல்லதென்றார் அரவான்கடோர்க்கஜனும்
நல்லரவான்கடோர்க்கஜனும் நற்பாலன்தொந்திசெட்டி
நான்குபேர்சுந்தரியும் நர்ப்பியையைச்சுத்திவந்து
ஏகமாய்ச்சுத்திவந்து இருபாதம்தெண்டனிட்டார்
வாழ்த்திவிடைகொடுத்தாள் மாதுகமலகன்னி
கோடையிடிபோல குமுறுதேமேளசத்தம்
அட்டதிக்குந்தானதிர ஆகாசந்தானதிர
பட்டத்துயானையின்மே லேறினன்பாலனுமே
சுந்தரியும்தண்டிகைமே லேறிவெளியேவந்தாள்

நால்வருஞ் சுந்தரியும் நாட்டிற்கு வருவது.

நடந்துதேபாளையங்கள் நாலுதிக்குந்தானதிர
ஆனைகுந்திநாடி அப்போபயணமிட்டார்
காடுகடந்து கடுகிவனங்கடந்து
மேடுகடந்து மெள்ளனவேவாரார்கள்
மலைதோப்புதான்கடந்து மன்னவர்கள்வாரார்கள்
குன்றுபருவதங்கள் தான்கடந்தார்மன்னவர்கள்
கோயில்குளங்கடந்து கொற்றவர்கள்வாரார்கள்
வல்லரக்கன்வாழ்ந்த வனத்தருகேவந்துநின்றார்

அபிமன்னன் சொல்வது.

அப்போதபிமனும் அண்ணர்முகம்நோக்கி
கண்டாயோஅண்ணே கரியமலைபோல
அம்மானைக்கொன்றவிடம் அனைவர்க்குந்தான்காட்டி
அந்தவனத்தைவிட்டு அப்புறமேதானடந்தார்
காளிவனத்தருகே கனவீரர்வந்துநின்றார்
காளியைக்கண்டு கனமானதெண்டனிட்டார்
சுந்தரியாளப்போ சுருக்காகத்தெண்டனிட்டாள்
பூசைகள்பண்ணினார்கள் பொற்கொடிக்குமப்பொழுது
அர்ச்சுனனாயுதத்தை னம்மைகையிலொப்பிவைத்து
காளிவனத்தைவிட்டு கனவீரர்கள்வாரார்கள்
பம்பைக்கரைமேலே அல்லோரும்வந்துநின்றார்

ஆனைகுந்தியில் நடக்குஞ்சிறப்பு.

இப்படியாயங்கே இருக்குமந்தவேளையிலே
இனி-ஆனைகுந்திபட்டணத்து அதிசயத்தைநீர்கேளீர்
மாயன்சகோதரியாள் வாள்விஜயன்தேவியவள்
பெருமாளுடன்பிறந்த பெண்ணாள்சுபத்திரையும்
பலராமருடன்பிறந்த பத்தினியாள்சுபத்திரையும்
மகனைப்பிரிந்தமுதல் மங்கைநல்லாள்சுபத்திரையும்
பிள்ளைபோனநாள்முதலாய் போசனமும்வேண்டாதே
அன்னநடையாள் அழுகைதொழிலாகி
எட்டுநாளாச்சுதே என்மகனைக்காணேமே
பகையாளிசேனையிலே பார்த்தன்மகன்போய்புகுந்தால்
எதிராளிசேனையிலே என்மகனும்போய்புகுந்தால்
வாள்மாற்றிபோரெதிர்க்க மன்னன் துணையுமில்லை
அஞ்சாதேயென்றுசொல்ல ஆருமில்லையண்டையிலே
பண்டுபகையாளிமகன் யென்பானேதாயாதி

கொல்வாரேபாவிகள் குழந்தையென்றுபாராமல்
அறியாதபாலனென்று அஞ்சாமல்கொல்வார்கள்
குழந்தையென்றுபாராமல் கொல்லத்துணிவார்கள்
அறியாதபாலகனை அவர்களென்னசெய்தாரோ
என்செய்வேன்வாளபிமா எழில்விஜயன்தன்மகனே
காணும்படியில்லையோ காவலர்கள்வீரியனே
பார்க்கும்படியில்லையோ பார்த்தன்மகனாரே
என்றைக்குக்காண்பே னினிய அபிமர்தனை
மகனையிழந்துநான் மண்ணிலிருப்பதில்லை
மாளும்படியொழிய மண்ணிலிருப்பதில்லை
உன்னையிழந்துநான் உயிருடனே நிற்பேனோ
அக்கினியைக்கண்ட மெழுகதுபோல்தானுருகி
பார்த்தவழிகளெல்லாம் வேற்றுவழியாகி
கண்டவிடமெல்லாம் காளையபிமாவென்று
அபிமருடனிருக்கும் ஆயிரந்தோழர்களை
அந்தப்-பிள்ளைகளைக்கட்டி புலம்பிஅழுதுகொண்டு
இப்படியாக இருக்குமந்தவேளையிலே

தூதன் வருவது.

பம்பைநதிக்கரையில் பார்வேந்தர்தாமிருந்து
ஒரு-தூதனைத்தானும் துரிதமுடன்தானழைத்து
ஆச்சிசுபத்திரைக்கு அபிமர்வந்தசேதியைத்தான்
சொல்லுமென்றுசொல்லி சுறுக்காகத்தூதுவிட்டார்
அப்படியேநல்லதென்று ஆனதொருதூதனுமே
தூதுவனுமோடிச் சொன்னான்சுபத்திரைக்கு
கேட்டாள்சுபத்திரையும் கிரீடிமகன்வந்தசேதி
சந்தோஷமாகியே சதிராகவப்பொழுது
பந்தலலங்கரித்து பரிவாகயெத்திசையும்
மணக்கோலந்தான்வரவே மங்கைநல்லாள்செய்தாளே
ஆலாத்திதான்கரைத்து அடைவாகவைத்திடுவாள்
இப்படியாக இவளிருக்கும்வேளையிலே

அபிமன்னன் அரண்மனைசேர்ந்தது.

அங்கேயபிமனு மன்பானசுந்தரியும்
அரவான்கடோர்க்கஜனும் ஆனதம்பிநால்வருமே
காடுகடந்து கரியமலைதான்கடந்து
ஆனைகுந்திபட்டணத்தே அடைவாகவந்தமர்ந்தார்
சாம்புவனுமப்பொழுது சாட்டிப்பறையறைந்தான்

# கசுஅ அபிமன்னன் சுந்தரியாலே.

அபிமர்வந்தாரென்று அறைந்தான்பறையோசை
சுபத்திரையாள்கேட்டு சொகுசாய்மனமகிழ்ந்தாள்
பட்டணத்துள்ளோரெல்லாம் கேட்டுமனமகிழ்ந்தார்
ஆலாத்திகாட்டினுள் அபிமருக்கும்சுந்தரிக்கும்
ஆலாத்திகாட்டியபின் அழகியசீர்பந்தலிலே
அரசாணிமுன்பாக அபிமருக்கும்சுந்தரிக்கும்
சேஷை அரிசியிட்டு திசைமன்னரெல்லோரும்
காப்புகளைந்து களித்துடனேசேஷையிட்டு.
அம்மிமிதித்து அரசாணிசுத்திவந்து-
ஆச்சிசுபத்திரைக்கு அபிமனுந்தெண்டனிட்டான்
கண்ணில்லாளந்தனுக்கு கண்வந்ததென்றுசொல்லி
கட்டியெடுத்தணைத்து கனிவாயைமுத்தமிட்டு
அத்தையாள்பாதம் அடிபணிந்தாள்சுந்தரியும்
மாயன்மகளாரும் மாமிசரணமென்றாள்
வந்துபணிந்த மருமகளைச்சென்றெடுத்து
சமர்த்தும்பெருமையும் தாங்கிற்றேயுந்தனுக்கு
இட்டசபதம் ஈடேறவேமுடித்தாய்
என்று-வாழ்த்திமனமகிழ்ந்து மகிழ்ச்சியுடனுதரித்தாள்
அப்போ-அரவான்கடோர்க்கஜனுமானதொந்திசெட்டிய
மாதாசுபத்திரைக்கு வணங்கியேதெண்டனிட்டார் [ரும்
வந்துபணிந்தவரை வாழ்த்தியெடுத்தணைத்து
என்னைபெறுவீர் எதிர்த்தார்முடியறுப்பீர்
பிள்ளைப்பெறுவீர் போர்விஜயன்போரிடுவீர்
வாயாரவாழ்த்தி மதிமுகத்தைமுத்தமிட்டு
வாருங்கோள்தம்பியென்று மாளிகையிற்கொண்டுசென்று
பொரித்தபொறிக்கறியும் புத்துருக்குநெய்த்தெளியும்
வந்தமனிதருக்கும் மாதுநல்லாள்சுந்தரிக்கும்
மைந்தருக்குமிட்டு மாதாயமுதுண்டாள்

நால்வருஞ் சொல்வது.

அன்னநடையாளே அன்னையரே நீர்கேளீர்
வன்னக்குயிலாளே மாதாவிடைதாரும்
ஆச்சிமார்தேடாமுன் அனுப்புமம்மாயெங்களையே
அப்படியேயாகுதென்று ஆச்சிசுபத்திரையும்
அடிசில்சமையுமென்று ளானந்தவாழ்மார்பி
ஆக்கியடிக்கினு ராருயிரம்தோழிமார்
தோழிமாரோடிவந்து சுபத்திரைக்குதெண்டனிட்டு

அடிசில்சமைத்துவைத்தோ மாச்சியெனப்பணிந்தார்
மக்களைச்சேரழைத்து மாதா அமுதுமிட்டாள்
அமுதுண்டபிற்பாடு ஆரிழைமாரோடிவந்து
கைக்குநீர்வார்த்தார்கள் கலசத்திளமுலையாள்
வெள்ளிலைகற்பூரம் வேண்டும்படியளித்து
மக்களே நீங்களிப்போ மாளிகைக்குப்போய்வாரும்
வாழ்த்திவிடைகொடுத்து வழிவிட்டனுப்பலுற்றாள் [ன்
அபிமன்னரோடிவந்து அண்ணர்களைத்தெண்டனிட்டா
தெண்டனிட்டதம்பியரை தீவிரமாய்த்தானெடுத்து
வாயாரவாழ்த்தினார் மன்னர்கள்மூவருமாய் [ள்
கொம்பனையாள்சுந்தரியும் கொழுநற்குத்தெண்டனிட்டா
புத்திமதியுரைத்து பொற்கொடியை நில்லுமென்றார்
அங்கேவிடைகள்பெற்று அலைகங்கைநன்னாடர்
காடுகடந்து கடுகெனவேவாரார்கள்
தங்கள்தங்கள்வீட்டகத்தே தார்வேந்தர்போய்ச்சேர்ந்தார்
ஆச்சிசுபத்திரையும் அபிமனும்சுந்தரியும்
ஆனைகுந்திபட்டணத்தில் லாயனருளாலே
ஆயனருளாலே அழகாகவாழ்த்திவந்தார்
அபிமன்னன்மாலைதனை அன்பாகவச்சிவிட்டு
புவிமன்னரெல்லோரும் போதமிகப்படிக்க
குற்றங்கள்வாராமல் குறைவொன்றும்நேராமல்
இக்கதையைக்கற்றவர்க ளின்பமுடன்வாழி
ஆதிபரமசிவ னடியார்மிகவாழி
சோதிதிருமால் தொல்லுலகிலேவாழி
வாழிவாழியென்று வரமளித்தாரீசுரனார்.

---

வாழி விருத்தம்

மன்னவர்கள்வாழிவாழி மறையவர்தா னும்வாழி
தென்னவர்வாழிவாழி சிவனடியார்கள்வாழி
மன்னவர்வாழிவாழி மாதுசுந்தரியும்வாழி
உன்னிதஞ்செய்யுமாயோ னுறுபதம்வாழிவாழி.

அபிமன்னன் சுந்தரிமாலை

முற்றிற்று.

59069

SA
5-6

# புத்தக விளம்பரம்.

கீழ்கண்ட புஸ்தகமும் இன்னம் இதரபுஸ்தகங்கள் தேவையானவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதினுல் வீ. பீ. தபால் மூலியமாய் அனுப்பப்படும், தபால் சார்ஜ் பிரத்யேகம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| முதலாயிர திவ்ய ப்ரபந்தம் ... | 2 | 0 |
| நித்யாநுசந்தானம், ... | 1 | 9 |
| ஷை வடகலை ... | 0 | 12 |
| நித்யாநுஷ்டானவிதி ... | 0 | 8 |
| அற்புத பூலோகரம்பை ... | | |
| கதை படத்துடன் ... | 1 | 0 |
| சாதகாலங்காரம் மூலமும், ... | | |
| விரிவுரையுடன் ... | 2 | 0 |
| மணிமந்திர வைத்திய சேகரம் | 1 | 0 |
| கணித முருகசேகரம் ... | 1 | 0 |
| ஹோராசாஸ்திரம் ... | 1 | 0 |
| கௌசிகசிந்தாமணி 1-பாகம்... | 1 | 0 |
| ஷை 2-ம் பாகம் ... | 1 | 4 |
| ஷை 3-ம் பாகம் ... | 1 | 0 |
| ஆயுள்வேத சுருக்கம் ... | 0 | 12 |
| வைத்திய மூலிகை அகராதி ... | 1 | 8 |
| 18-சித்தர் நாடிசாஸ்திரம் ... | 1 | 4 |
| சோதிட நூலாதாரம் ... | 0 | 4 |
| சர்வ கனவின்பலன் ... | 0 | 4 |
| கனவுகாணும் சாஸ்திரம் ... | 0 | 4 |
| தாயுமான சுவாமிபாடல் ... | | |
| ஆட்பேப்பர் ... | 2 | 8 |
| ஷை திக்கு கலிகோ ... | 1 | 0 |
| மஸ்தான்சாகிபு பாடல் ... | | |
| ஆட்பேப்பர் ... | 2 | 0 |
| ஷை திக்கு கலிகோ ... | 1 | 0 |
| நீதிநெறி அரிச்சந்திர நாடகம் | 2 | 8 |
| சிவசாமி அரிச்சந்திர நாடகம் | 1 | 8 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| நிகண்டு 12-தொகுதியும் ... | 2 | 4 |
| 11-வது நிகண்டு ... | 1 | 0 |
| 12-தொகுதி திவாகரம் கிளேஸ் | 1 | 8 |
| ஷை திக்கு ... | 1 | 4 |
| விக்கிரமாதித்தன் கதை பெ. எ. | | |
| கிளேஸ் ... | 4 | 0 |
| ஷை திக்கு ... | 3 | 0 |
| ஷை தின் ... | 2 | 0 |
| நந்தனார் சரித்திரக்கீர்த்தனை ... | | |
| சிதம்பர சக்கரத்துடன் ... | 0 | 12 |
| ஷை தின் ... | 0 | 8 |
| பஞ்சபாண்டவர் வனவாசம்... | | |
| பெ. எ. திக்கு ... | 1 | 0 |
| ஷை தின் ... | 0 | 12 |
| அபிமன்னன் சுந்தரிமாலை ... | | |
| பெ. எ. திக்கு ... | 0 | 12 |
| ஷை தின் ... | 0 | 8 |
| கதிரேசன் ஆனந்தக்களிப்பு ... | | |
| பெ. எ. திக்கு ... | 0 | 4 |
| மதுரவீரசுவாமி கதை பெ. எ. | | |
| மந்திர சக்கரத்துடன் திக்கு | 0 | 4 |
| கிருஷ்ண சுவாமி தூது திக்கு | 0 | 8 |
| ஸ்ரீ செருடபுராணம் பெ. எ. தி | 0 | 8 |
| ஷை கிளேஸ் ... | 0 | 12 |
| ஆரெழுத்தந்தாதி மூலம் ... | 0 | 2 |
| ஷை விரிவுரையுடன் ... | 0 | 12 |
| திருப்புகழ் 151-பாட்டு தின் ... | 0 | 6 |
| ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம் ... | 2 | 0 |

எமது மேல்விலாசம்,

## டி. கோபால் அண்டு கோ.,

"கோன்டன் பிரஸ்,"

17/18, காளத்தியப்பமுதலி வீதி, மதராஸ், என். சி.